# விடுதலை

அன்ரன்
பாலசிங்கம்

கட்டுரைத் தொகுப்பு

கட்டுரைத் தொகுப்பு

கட்டுரைத் தொகுப்பு

# விடுதலை

கட்டுரைத் தொகுப்பு

அன்ரன் பாலசிங்கம்

## பதிப்பு விபரம்

தலைப்பு : விடுதலை
பதிப்பு : நவம்பர் 2003
பதிப்புரிமை : அன்ரன் பாலசிங்கம்
வெளியீடு : பெயர்மக்ஸ் பதிப்பகம்
அச்சுப்பதிப்பு : வாசன் அச்சகம்
கணினி வடிவமைப்பு : ரஞ்சித்

Title : LIBERATION
Author : Anton Balasingham
Publishers : Fairmax Publishing Ltd
P.O.Box 2454
Mitcham
Surrey CR4 1WB
England

Printed by : THE PRINT
45C Crusoe Road
Mitcham
Surrey CR4 3LJ
England

**ISBN NR : 1-903679-04-4**



Copyright Anton Balasingham 2003

All Rights Reserved. No part of this publication may be reproduced or utilised, stored in a retrieval system, or transmitted in any form or by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise, without prior written permission of the publishers.


## உள்ளடக்கம் பக்கம்


| | | |
|---|---|---|
| | முன்னுரை | I-II |
| 1. | எம்.ஜி.ஆரும் புலிகளும் | 1-52 |
| 2. | ரஜீவ் - பிரபா சந்திப்பு | 53-63 |
| 3. | மனிதனைத் தேடும் மனிதன் | 65-84 |
| 4. | கருத்துலகமும் வாழ்வியக்கமும் | 85-93 |
| 5. | மனப்புரட்சியும் மனித விடுதலையும் | 95-103 |
| 6. | உலக வரலாறும் மனித விடுதலையும் | 105-173 |
| 7. | பழமைக்கு எதிரான பண்பாட்டுப் புரட்சி | 175-185 |
| 8. | அதிகாரத்தின் அரூப கரங்கள் | 187-208 |
| 9. | தனிமனித தத்துவம் | 209-218 |
| 10. | அர்த்தமும் அபத்தமும் | 219-228 |
| 11. | மனிதத்துவம் | 229-256 |

# முன்னுரை

1990களின் முற்பகுதி. தமிழீழ விடுதலைப் போர் முனைப்புற்று வந்த காலம். தமிழர் தேசத்தின் விடுதலைக் குரலாக, போராட்ட வாழ்வின் மெய்யுண்மைகளைத் தரிசிக்கும் கலை, இலக்கியப் படைப்புகளைத் தாங்கிய வண்ணம் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்து கொண்டிருந்தது 'வெளிச்சம்' ஏடு. விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக் கழகத்தினாற் பிரசுரிக்கப்பட்டு வந்த இந்தக் கலை இலக்கிய ஏட்டிற்குத் திரு.கருணாகரன் அவர்கள் ஆசிரியராகவும் கவிஞர் புதுவை இரத்தினதுரை அவர்கள் நிர்வாக ஆசிரியராகவும் பணிபுரிந்து வந்தனர். 'வெளிச்சம்' இதழிற் கட்டுரைகளாக எனது படைப்புகள் வெளிவர வேண்டும் என எனது நண்பர் புதுவை வலியுறுத்தி வந்தார். அன்றைய சூழலில் அரசியல் வேலைப் பளுவுடன் எழுதுவது மிகவும் சிரமமாக இருந்தது. ஆயினும் புதுவையின் அன்புத் தொல்லைக்கும் அழுத்தத்திற்கும் விட்டுக் கொடுப்பதைத் தவிர வேறு வழி இருக்கவில்லை. ஆகவே, வெளிச்சத்திற்கு எழுதுவதெனத் தீர்மானித்தேன். ஆயினும் எதை எழுதுவது என்ற பிரச்சினை எழுந்தது. இளைஞர் பரம்பரையை - குறிப்பாக மாணவ சமூகத்தை புதிதாக, புரட்சிகரமாகச் சிந்திக்கத் தூண்டும் வகையில் ஏதாவது எழுதுங்கள் என்று பணித்தார் புதுவை. இறுதியாக எழுதினேன். 'பிரம்மஞானி' என்ற எனது பழைய புனைபெயரில், 'வெளிச்சம்' ஏட்டில் கட்டுரைகளாகவும் தொடர்கட்டுரைகளாகவும் எழுதினேன். அவற்றில் முக்கியமான கட்டுரைகளைத் தேர்ந்தெடுத்து, அவற்றைத் திருத்தியமைத்து, செப்பனிட்டு, சிலவற்றை விரிவாக்கம் செய்து இத்தொகுதியில் மறுபிரசுரம் செய்கிறோம். அத்துடன் நான் சமீபத்தில் புதிதாக எழுதிய அரசியற் கட்டுரைகளும் இதில் சேர்க்கப்பட்டுள்ளன.

இத்தொகுதியிலுள்ள கட்டுரைகள் பல்துறை சார்ந்தவை. அரசியல், சமூகவியல், உளவியல்,

பொருளியல், மெய்யியல், வரலாற்றியல், மானிடவியல் போன்ற பல்வேறு அறிவியற் பரப்புகளை இவை ஊடுருவி நிற்கின்றன. இவ்விசாரணைகள் அனைத்திற்கும் மூலப் பொருளாக விளங்குபவன் மனிதன். ஆகவேதான் மனிதன் பற்றியும் மனித மனம் பற்றியும் மனித உணர்வு பற்றியும் மனிதத்துவம் பற்றியும் மனித வரலாறு பற்றியும் மனித விடுதலை பற்றியும் ஆழமான விசாரணைகள் செய்த சிந்தனையாளர்கள் சிலரின் புதுமையான பார்வைகளை இக் கட்டுரைகள் வாயிலாக அறிமுகம் செய்து வைக்கிறேன். இந்த எழுத்துக்கள் யாரையாவது புதிதாகச் சிந்திக்கத் தூண்டும் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

அன்றைய போர்ச் சூழலில், அந்த நெருக்கடியான கால கட்டத்தில் என்னை எழுதத் தூண்டிய எனது நண்பர் புதுவை இரத்தினதுரை அவர்களுக்கும் இந்நூலை கணினியில் அச்சடித்து, பக்கங்களை கணினியில் வடிவமைத்து, மிகவும் பொறுமையுடன் பலமணி நேரத்தை எழுத்துப் பிழை பார்ப்பதில் செலவிட்டு அரும்பணி ஆற்றிய எனது அன்புத் தம்பி ரஞ்சித் அவர்களுக்கும் எனது நன்றியையும் பாராட்டுகளையும் தெரிவிக்க விரும்புகிறேன். அத்துடன் இந்நூலின் முழுமையான உருவாக்கத்திற்காக உழைத்த வாசன் அச்சக உரிமையாளரான திரு.வாசன் அவர்களுக்கும் அச்சக ஊழியர்களுக்கும் எனது நன்றியும் பாராட்டுகளும்.

# எம்.ஜி.ஆரும் புலிகளும்

## விடுதலைக்கு வித்திட்ட மாமனிதர்

அந்த வரலாற்றுக் காலகட்டத்தில், அந்த மனிதரிடம் தான் தமிழ்நாட்டை ஆட்டிப் படைக்கும் அரசியல் அதிகாரம் இருந்தது. அரசியல் அதிகாரத்துடன் பண பலமும் இருந்தது. இல்லாதோருக்கு வாரி வழங்கும் மன வளமும் இருந்தது. ஏழை மக்கள் அவரை ஒரு தெய்வமாகப் பூசித்தனர். மக்கள் திலகமென தமிழுலகம் அவரைப் போற்றியது. அவர் ஒரு அபூர்வமான மனிதர். அதிசயமான குணவியல்புகள் கொண்டவர். நெஞ்சில் உறுதியும் நேர்மையும் கொண்ட ஒரு உன்னதமான மனிதாபிமானி. அவரிடம் ஒரு புதுமையான மனிதம் இருந்தது. அந்த மனிதப் பண்பு மனிதர்களைக் கவர்ந்து இழுக்கும் சக்தி பெற்று விளங்கியது. அவர் மிகவும் கவர்ச்சி மிக்க தலைவராக விளங்கினார். அவர்தான் எம்.ஜி.ஆர் என அனைவராலும் அன்பாக அழைக்கப்படும் தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சர் திரு. எம்.ஜி.இராமச்சந்திரன் அவர்கள்.

எம்.ஜி.ஆர் அவர்களின் பெருமை பற்றி நான் நிறையக் கேள்விப்பட்டிருக்கின்றேன். அவரது திராவிட இயக்கப் பின்னணி பற்றியும் கலை உலக, அரசியல் உலக வாழ்க்கை பற்றியும் அறிந்திருக்கின்றேன். ஆயினும் அவரை சந்தித்துப் பழகும் வாய்ப்புக் கிட்டுமென நான் கனவுகூட கண்டதில்லை. என்றாலும் அந்த வாய்ப்புக் கிட்டத்தான் செய்தது. எதிர்பாராத விதமாக எம்.ஜி.ஆருக்கும் விடுதலைப் புலிகள் அமைப்பிற்கும் மத்தியில் ஒரு உறவு பிறந்தது. அது ஒரு வரலாற்று உறவாக மலர்ந்தது.

தலைவர் பிரபாகரனது புரட்சிகரமான வாழ்வும் வீர விடுதலை வரலாறும் எம்.ஜி.ஆரை வெகுவாகக் கவர்ந்தது.

அவர்கள் மத்தியிலான உறவு நல்லுறவாக வளர்ந்து, நட்புறவாகப் பரிணமித்தது. பிரபாகரன் தலைமையில் முன்னெடுக்கப்பட்ட தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்குத் தன்னாலான உதவிகளை வழங்க எம்.ஜி.ஆர் முன்வந்தார். பல வழிகளில் உதவியும் செய்தார். அவரது பேருதவிகள் எமது விடுதலை இயக்கத்தின் வளர்ச்சியிலும் விரிவாக்கத்திலும் என்றுமில்லாத ஒரு புதிய திருப்பத்தை ஏற்படுத்தின.

எம்.ஜி.ஆர் அவர்கள் எமது விடுதலைப் போராட்டத்திற்கு எந்த வழிகளில், எப்படியாக உதவினார்? எத்தகைய ஆபத்தான எதிர்விளைவுகளையும் பொருட் படுத்தாது எப்படியெல்லாம் துணிந்து அவர் காரியங்களைச் சாதித்தார்? எமது இயக்கத்திற்கு ஏற்பட்ட அழுத்தங்கள், நெருக்குவாரங்களிலிருந்து எவ்வாறு எமக்குக் கைகொடுத்து உதவினார்? இப்படியான பல விடயங்கள் காலத்தால் சாகாத நினைவுகளாக எமது போராட்ட வரலாற்றில் பதிவு செய்யப்பட வேண்டியவை. எம்.ஜி.ஆர் அவர்களை விடுதலைப் புலிகள் இயக்கம் சார்பில் முதன்முதலாகச் சந்தித்து உரையாடும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. அதனைத் தொடர்ந்து, தனித்தும் தலைவர் பிரபாகரனுடனும் பல சூழ்நிலைகளில் முதலமைச்சரை சந்தித்து உறவாடும் அரிய சந்தர்ப்பங்களும் எனக்குக் கிடைத்தன. அவற்றை எல்லாம் உண்மை வழுவாது சுருக்கமாக இங்கு பதிவு செய்துள்ளேன். தமிழீழ விடுதலை வரலாற்றில் ஆர்வமும் அக்கறையும் கொண்ட அனைவருக்கும் இக்குறிப்புகள் பயன்படும் என்பது திண்ணம்.

முதன் முதலாகத் தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர் அவர்களைச் சந்தித்த பின்னணி ஒரு சுவாரஸ்யமான கதை.

1984ஆம் ஆண்டு, ஏப்ரல் மாதம். அப்பொழுது நானும் எனது மனைவி அடேலும் சென்னை நகரப் புறத்திலுள்ள திருவான்மையூரில் விடுதலைப் புலிப் போராளிகளுடன் வசித்து வந்தோம். எமது இயக்கத்தின் தலைவர் பிரபாகரன் அவர்களும் மூத்த தளபதிகள் சிலரும்



போராளிகளும் எமது இருப்பிடத்திற்குச் சமீபமாகத் தங்கியிருந்தனர். இந்திய மத்திய அரசு இரகசியமாக ஒழுங்கு செய்த இராணுவப் பயிற்சி முடிந்தபோதும், தமிழக நாட்டுப் புறங்களில் பயிற்சிப் பாசறைகளை நிறுவி, புதிய போராளிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வந்தது. அடையா-றில் அமையப்பெற்ற விடுதலைப் புலிகளின் அரசியல் தலைமையகத்தில் நான் பணிபுரிந்து வந்தேன்.

அந்தக் காலகட்டத்தில், விடுதலைப் புலிகள் மட்டுமன்றி மற்றைய போராளி அமைப்புகளும் சென்னையைப் பிரதான பின்தளமாகக் கொண்டு இயங்கி வந்தன. தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ), ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ.பி.ஆர்.எல்.எவ்), தமிழீழ மக்கள் விடுதலை அமைப்பு (புளொட்), ஈழ விடுதலை அமைப்பு (ஈரோஸ்) ஆகியன, இந்திய இராணுவப் பயிற்சியை முடித்துக் கொண்டு தமிழ்நாட்டில் செயற்பட்டு வந்தன. பிளவுபட்டு, பிரிந்து நின்ற போராளி அமைப்புக்களை ஒரே இலட்சியத்தில், ஒரே அணியாக ஒன்றிணைத்தால் தமிழீழ விடுதலைப் போராட்டம் பலப்படும் என தமிழ் மக்கள் மத்தியில் அவ்வேளை பரவலாக கருத்தொற்றுமை நிலவியது. பல்வேறு வட்டாரங்களிலிருந்து ஒற்றுமை முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அமெரிக்காவில் வசித்த ஈழத் தமிழ் பிரமுகர்கள் சிலர் சென்னைக்கு வருகை தந்து விடுதலை அமைப்புக்களின் தலைவர்களைச் சந்தித்து ஒற்றுமையை வலியுறுத்தினர். தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் ஆர்வமும் அக்கறையும் கொண்ட தமிழ்நாட்டு அரசியல்வாதிகளும் இந்த ஒற்றுமை முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டனர். 1983ஆம் ஆண்டு ஜூலையில் தமிழர்களுக்கு எதிராகச் சிங்களக் காடையர்களால் கட்டவிழ்த்து விடப்பட்ட கொடூரமான இன ஒழிப்புக் கலவரத்தை அடுத்து தமிழ்நாடு எங்கும் தமிழர்களுக்கு ஆதரவான எழுச்சி கிளர்ந்தது. என்றுமில்லாத வகையில் தமிழின உணர்வு மேலோங்கி நின்றது. தமிழ்நாட்டில் தஞ்சம் புகுந்திருந்த போராளி அமைப்புகள் மீது அனுதாபமும் ஆதரவும் நிலவியது. ஈழ

விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவு நல்கி, தமிழ்நாட்டுத் தமிழரின் நல்லெண்ணத்தைப் பெற்றுவிட வேண்டும் என்பதில் தமிழ்நாட்டு அரசியல்வாதிகள் மத்தியில் போட்டியும் நிலவியது. இந்தச் சூழ்நிலையில்தான் ஒரு விசித்திரமான சம்பவம் நிகழ்ந்தது.

அப்பொழுது திரு.எம்.ஜி.இராமச்சந்திரன் அவர்கள் தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பதவி வகித்தார். ஈழ விடுதலை அமைப்புகள் ஒன்றுபட வேண்டும் என்பதை வலியுறுத்தி வந்த அவர், விடுதலை அமைப்புக்களின் தலைவர்களுக்கு ஒரு பகிரங்க அழைப்பையும் விடுத்தார். ஒரு குறிப்பிட்ட நாளில் ஈழ விடுதலை அமைப்புக்களின் தலைவர்கள் தம்மைச் சந்திக்குமாறு வேண்டிக்கொண்டார். திரு.எம்.ஜி.ஆர் அவர்களின் இந்த அழைப்பை தமிழ்நாட்டுத் தினசரிகள் முக்கியத்துவம் கொடுத்துப் பிரசுரித்தன.

இந்த அழைப்பு விடுக்கப்பட்ட மறுதினம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் திரு.மு.கருணாநிதி அவர்களிடமிருந்து இன்னொரு அழைப்பு வந்தது. திரு.எம்.ஜி.ஆர் அவர்கள் குறிப்பிட்ட தினத்திற்கு முதல்நாள் தம்மைச் சந்திக்குமாறு ஈழ விடுதலை அமைப்புகளின் தலைவர்களுக்கு திரு.கருணாநிதி வேண்டுகோள் விடுத்தார். கலைஞரின் அழைப்பினைத் தி.மு.க. பத்திரிகைகள் முக்கியமளித்துப் பிரசுரித்தன.

ஈழ விடுதலை இயக்கங்களின் ஒற்றுமை முயற்சியில் தமிழ்நாட்டின் இருபெரும் தலைவர்களும் போட்டியில் இறங்கியது எமக்கு ஒரு சிக்கலையும் சங்கடத்தையும் ஏற்படுத்தியது. தமிழ்நாட்டு அரசியலில் தலையிடுவதில்லை என்பது விடுதலைப் புலிகளின் நிலைப்பாடாக இருந்தது. தமிழ்நாட்டு அரசியலில் பக்கசார்பற்ற நிலையைப் பேணுவதும் எமது கொள்கையாக இருந்தது. அப்படியிருக்கும் பொழுது திராவிட இயக்கத்தின் இருபெரும் தலைவர்கள் மத்தியில் எழுந்துள்ள இப்போட்டி எமக்கு ஒரு புதிய சவாலாக அமைந்தது. திரு. பிரபாகரன் அவர்களுடன் இவ்விடயம் குறித்து கலந்துரையாடினேன்.

கலைஞரின் அழைப்பை ஏற்று அவரைச் சந்தித்தால்



எம்.ஜி.ஆரைப் பகைக்க நேரிடும், கலைஞரின் அழைப்பை நிராகரித்து, எம்.ஜி.ஆரைச் சந்தித்தால் கலைஞரைப் பகைக்க நேரிடும். இவ்விரு தலைவர்களினதும், அவர்கள் தலைமை தாங்கும் அரசியல் இயக்கங்களினதும் ஆதரவும் அனுதாபமும் எமக்கு அவசியம், எமது விடுதலைப் போராட்டத்திற்கு அவசியம். ஆகவே பக்க சார்பு நிலையெடுத்து யாரையும் பகைத்துக் கொள்ள நாம் விரும்பவில்லை. அத்துடன் எமக்கு இன்னொரு பிரச்சினையும் இருந்தது. எமது இயக்கத் தலைமையின் பாதுகாப்புப் பிரச்சினை அது. அக் காலகட்டத்தில் போராளி அமைப்புகள் மத்தியில் முரண்பாடும் பகைமையும் நிலவியது. குறிப்பாக விடுதலைப் புலிகளுக்கும் புளொட் இயக்கத்திற்கும் மத்தியில் மோதல் வெடிக்கும் அளவிற்குப் பகைமை இருந்தது. ஏற்கனவே, சென்னையிலுள்ள பாண்டி பஜாரில் புளொட் தலைவர் உமா மகேஸ்வரனுக்கும் பிரபாகரன் அவர்களுக்கும் மத்தியில் நிகழ்ந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தை அடுத்து, இரு அமைப்புகள் மத்தியிலும் விரோதம் முற்றியிருந்தது. அப்படியான சூழ்நிலையில் ஈழ விடுதலை அமைப்புகளின் தலைவர்கள் ஒரே இடத்தில் ஒன்றாகக் கூடுவது என்பது சாத்தியமற்றது. ஆபத்தானதும் கூட. ஒற்றுமையை வேண்டி நின்ற தமிழக அரசியல் தலைவர்களுக்கு எம்மிடையே நிலவிய முரண்பாடுகள், பகைமை உணர்வுகள் பற்றி எடுத்து விளக்கிப் புரிய வைப்பதும் சாத்தியமில்லை. இந்தச் சிக்கல்கள் எல்லாவற்றிற்கும் ஒரேயொரு தீர்வுதான் இருந்தது. அதாவது கலைஞரையும் எம்.ஜி.ஆரையும் சந்திக்காமல் தவிர்ப்பது. இந்த யோசனையைப் பிரபாகரன் ஏற்றுக் கொண்டார்.

கலைஞர் கருணாநிதி அழைப்பு விடுத்த நாள் வந்தது. விடுதலைப் புலிகளையும் புளொட் இயக்கத்தையும் தவிர ஏனைய அமைப்புகளின் தலைவர்களான திரு.பத்மநாபா (ஈ.பி.ஆர்.எல்.எப்), திரு.சிறீசபாரெத்தினம் (ரெலோ), திரு.பாலகுமார் (ஈரோஸ்) ஆகியோர் கலைஞரைச் சந்தித்தனர். திரு.பிரபாகரனும், திரு.உமா மகேஸ்வரனும் தமது அழைப்பை ஏற்று வரவில்லை என்பது

கலைஞருக்குக் கவலைதான். ஆயினும், எம்.ஜி.ஆரைச் சந்திப்பதற்கு முன்னராக ஏனைய ஈழ விடுதலை அமைப்புகளின் தலைவர்களைச் சந்தித்ததை அவர் ஒரு அரசியல் வெற்றியாகக் கருதியிருக்க வேண்டும். அதனால்தான் அந்த சந்திப்பை அவர் ஒரு முக்கிய அரசியல் நிகழ்வாக பெரிதுபடுத்திப் பத்திரிகைகளுக்கு பேட்டி அளித்தார். மறுநாள் அந்தச் சந்திப்பைத் தலைப்புச் செய்தியாகப் புகைப்படங்களுடன் தி.மு.க. பத்திரிகைகள் பிரசுரித்தன.

தான் குறித்த தினத்திற்கு முதல் நாளே, கலைஞர் கருணாநிதி மூன்று ஈழ விடுதலை அமைப்புகளின் தலைவர்களைச் சந்தித்து, ஒரு அரசியல் நாடகத்தை மேடையேற்றி, அதனை ஒரு முக்கிய அரசியல் நிகழ்வாகப் பத்திரிகைகளில் விளம்பரம் செய்தது எம்.ஜி.ஆருக்குக் கடும் சினத்தை ஏற்படுத்தியது. ஒரு நல்ல நோக்குடன் தான் மேற்கொண்ட ஒற்றுமை முயற்சியைச் சுயநல அரசியல் நோக்கத்திற்காகக் கலைஞர் குழப்ப முயற்சிக்கிறார் என அவர் எண்ணினார் போலும்.

அன்று மாலை, தமிழ்நாட்டு புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த உதவிப் பொலிஸ்மாஅதிபர் (D.I.G) திரு.அலெக்ஸாந்தர் அடையாறிலிருந்த எமது அரசியல் செயலகத்திற்கு வருகை தந்து என்னைச் சந்தித்தார். திரு.அலெக்ஸாந்தரை எனக்கு ஏற்கனவே தெரியும். பல தடவைகள் சந்தித்து உறவாடியதால் நல்ல பழக்கம். சென்னையில் எழுந்த சில பிரச்சினைகளை அவர் தலையிட்டுத் தீர்த்து வைத்து எமக்கு உதவியவர். முதலமைச்சர் எம்.ஜி.ஆருடன் நெருக்கமானவர் என்பதும் எனக்குத் தெரியும்.

“கலைஞர் கருணாநிதி மீதும், அவரைச் சந்தித்த போராளி அமைப்புகளின் மீதும் முதலமைச்சர் கடும் சினங்கொண்டிருக்கிறார். அந்த மூன்று அமைப்புகளின் தலைவர்களையும் தான் இன்று சந்திக்கப்போவதில்லை என்றும் முதல்வர் கூறினார். விடுதலைப் புலிகளை மட்டும் அவர் இன்று சந்திக்க விரும்புகிறார். இன்று மாலை



விடுதலைப் புலிகளை, சென்னை பறங்கிமலையிலுள்ள தனது இல்லத்திற்கு அழைத்து வருமாறு எனக்கு அவர் ஆணை பிறப்பித்து இருக்கிறார்” இவ்வாறு சொன்னார் திரு.அலெக்ஸாந்தர்.

எனக்கு என்ன சொல்வதென்று புரியவில்லை. எதற்கும் நான் தலைமைப்பீடத்துடன் கலந்துரையாடிய பின்னரே முடிவு எடுக்க வேண்டும் என்றேன். “முதலமைச்சர் உங்களை ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருப்பார். தயவு செய்து அவரை ஏமாற்றிவிட வேண்டாம். நீங்கள் முதலமைச்சரையும் தமிழ்நாட்டு அரசையும் பகைத்துக் கொண்டால் தமிழ்நாட்டில் செயற்படுவது கடினமாக இருக்கும்” என்று லேசாக ஒரு எச்சரிக்கையும் விடுத்தார். உமா மகேஸ்வரனையும் முதல்வர் சந்திப்பாரா என்று கேட்டேன். புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கும் புளொட்டின் தலைவர் உமாவுக்கும் மத்தியிலான பகை முரண்பாடு பற்றி அலெக்ஸாந்தர் நன்கு அறிவார். உமாவைப் பிறிதொரு தினத்தில் முதலமைச்சர் சந்திப்பார் என்றும், முக்கியமாகப் பிரபாகரனையும் விடுதலைப் புலிகளையும் சந்திப்பதையே அவர் பெரிதும் விரும்புகிறார் என்றும் அலெக்ஸாந்தர் சொன்னார்.

முதலமைச்சர் எம்.ஜி.ஆரைச் சந்திப்பது தவிர்க்க முடியாதது என்றாகிவிட்டது. முதல் சந்திப்பில் எமது இயக்கத்தை அறிமுகப்படுத்த வேண்டும். எமது இயக்கத்தின் போராட்ட இலட்சியத்தை எடுத்து விளக்க வேண்டும். ஆகவே, முதற் சந்திப்பிற்கு என்னைப் போகுமாறு பிரபாகரன் பணித்தார். எம்.ஜி.ஆர் வற்புறுத்தினால் பின்பு தாம் அவரைச் சந்திக்கலாம் என்றும் பிரபாகரன் முடிவு எடுத்தார். எனது தலைமையில் ஒரு குழுவாகச் சென்று அன்று மாலை முதலமைச்சரை சந்திப்பதென்று முடிவாயிற்று. என்னுடன் விடுதலைப் புலிகளின் மூத்த தலைவர்களில் ஒருவரான பேபி சுப்ர மணியம் (இளங்குமரன்), சமீபத்தில் வீரச்சாவு எய்திவிட்ட கேணல் சங்கர், அன்று ‘விடுதலைப் புலிகள்’ பத்திரிகையின் ஆசிரியராக பணிபுரிந்த திரு.மு.நித்தியானந்தன் ஆகியோர்



எம்.ஜி.ஆர்

அன்று மாலை முதலமைச்சர் எம்.ஜி.ஆரை அவரது இல்லத்தில் சந்தித்தோம்.

மிகவும் மகிழ்ச்சியுடன் காணப்பட்ட எம்.ஜி.ஆர் எம்மை அன்புடனும் பண்புடனும் வரவேற்றார். முதலில் நாம் எம்மை அறிமுகம் செய்து கொண்டோம். "உங்கள் தலைவர் பிரபாகரன் வரவில்லையா? அவரைச் சந்திக்க நான் ஆவலாக இருப்பதாகச் சொல்லுங்கள்" என்றார். "அவர் சென்னைக்கு வெளியே ஒரு பயிற்சிப் பாசறைக்கு அவசர அலுவலாக சென்றிருக்கிறார். அடுத்த தடவை நிச்சயமாக அவரை அழைத்து வருவோம்" என்றேன்.

"கலைஞர் கருணாநிதியின் அழைப்பை நீங்கள் ஏன் ஏற்கவில்லை? அவரை எதற்காகச் சந்திக்க மறுத்தீர்கள்?" என்று ஒரு சங்கடமான கேள்வியை எழுப்பினார் எம்.ஜி.ஆர்.

"ஈழ விடுதலை அமைப்புகள் ஒன்றுபட வேண்டும், ஈழ விடுதலைப் போராட்டம் வலுப்பட வேண்டும் என்ற உயரிய நோக்குடன் நீங்கள்தான் முதலில் ஈழ விடுதலை அமைப்புகளுக்கு அழைப்பை விடுத்தீர்கள். இன்றைய



நாளை சந்திக்கும் தினமாக குறிப்பிட்டிருந்தீர்கள். ஆனால் கலைஞர் கருணாநிதி வீம்பிற்காக தானும் ஒரு அழைப்பை விடுத்து ஒரு நாள் முன்கூட்டியே ஈழ விடுதலை அமைப்புகளைச் சந்திக்க விரும்பினார். கலைஞர் விடுத்த அழைப்பு ஒற்றுமை முயற்சியை நோக்காகக் கொண்டதன்று. அவர் உங்களுடன் போட்டி போட்டு அரசியல் இலாபம் தேட முயற்சித்தார். அதனால்தான் நாங்கள் அவரது அழைப்பை ஏற்றுக் கொள்ளவில்லை." என்று விளக்கினேன். முதல்வரின் முகம் மலர்ந்தது. "நீங்கள் தமிழ்நாட்டு அரசியலை நன்கு புரிந்து வைத்திருக்கின்றீர்கள்." என்று சொல்லிவிட்டுச் சிரித்தார்.

"ஈழ விடுதலைப் போராளிகள் ஐந்து அமைப்புகளாக ஏன் பிளவுபட்டு நிற்க வேண்டும். ஒரே அணியில் ஒன்றுசேர முடியாதா?" என்று கேட்டார் எம்.ஜி.ஆர்.

"ஒற்றுமைக்கு நாங்கள் எதிரானவர்கள் அல்லர். ஒரு உறுதியான, தெளிவான இலட்சியத்தின் அடிப்படையில்தான் போராளி அமைப்புகள் ஒன்றுசேர முடியும். ஆனால் விடுதலைப் புலிகளுக்கும் ஏனைய அமைப்புகளுக்கும் மத்தியில் கருத்து வேறுபாடு நிறையவுண்டு. நடத்தையிலும் வேறுபாடு உண்டு. விடுதலைப் புலிகள் தனித்துவமானவர்கள். தனித்துவப் பண்பியல்பு கொண்டவர்கள். ஒழுக்கம், கண்ணியம், கட்டுப்பாடு போன்ற உயரிய பண்புகளை இறுக்கமாகப் பேணுபவர்கள். சாவுக்குத் துணிந்தவர்கள். எதிரியின் கையில் உயிருடன் சிக்காதிருக்க நஞ்சுக் குப்பிகளை அணிந்திருப்பவர்கள். தமிழீழத் தாயக விடுதலை என்ற இலட்சியத்திற்காகத் தமது உயிரையும் அர்ப்பணிக்கத் தயாரானவர்கள். இந்த அற்புதமான பண்புகளும் இலட்சிய உறுதிப்பாடும் ஏனைய அமைப்பினரிடம் காணமுடியாது" என்று விளக்கினேன். மௌனமாக ஆச்சரியத்துடன் கேட்டுக் கொண்டிருந்தார் எம்.ஜி.ஆர். விடுதலைப் புலி வீரர்கள் கடைப்பிடிக்கும் பண்பியல்புகள் அவரை வெகுவாகக் கவர்ந்தன.

உமா மகேஸ்வரனைப் பற்றிக் கேட்டார். "அவரும் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவராமே? தனது இயக்கம்

தான் உண்மையான புலி இயக்கம் என்று சொல்லித் திரிகிறாராம். பிரபாகரனுக்கும் அவருக்கும் என்ன பிரச்சினை?'' என்று கேட்டார்.

"போராளி அமைப்புக்களைச் சேர்ந்த அனைவரையுமே ஈழத்துப் புலிகள் என்று தமிழ்நாட்டு மக்கள் அழைப்பது வழக்கமாகிவிட்டது. இந்தக் குழப்பத்தால் மற்றைய அமைப்புகள் புரியும் பாவம், பழி எல்லாமே புலிகள் இயக்கம் மீது விழுந்து விடுகிறது. உமா மகேஸ்வரனும் ஒரு காலகட்டத்தில் புலிகள் இயக்கத்தில் இணைந்திருந்தவர். இயக்கத்தின் ஒழுக்க விதிகளை மீறி ஒரு பெண்ணுடன் தகாத உறவு கொண்டதால் அவர் அமைப்பிலிருந்து விலக்கப்பட்டார். அதனைத் தொடர்ந்து அவர் புளொட் என்ற புதிய அமைப்பை உருவாக்கி விடுதலைப் புலிகளுக்கு எதிராகச் செயற்பட்டு வருகிறார். புலிகளின் தலைமையை அழிக்கவும் முயற்சி செய்து வருகிறார். அவர் ஒரு கொடிய மனிதர், தமிழ் நாட்டிலுள்ள அவரது பயிற்சி முகாம்களில் கொடுமைகள் நிகழ்வதாகச் சொல்லப்படுகிறது. அவை வதை முகாம்களாக மாற்றப்பட்டிருக்கின்றனவாம். பல அப்பாவி இளைஞர்கள் சித்திரவதைகளுக்கு ஆளாகிக் கொல்லப்பட்டிருப்பதாக நம்பகமான தகவல்கள் எமக்குக் கிடைத்திருக்கிறது'' என்று கூறினேன்.

"அப்படியான பேர்வழியா? எனக்கு அவர் பற்றி விபரமாகத் தெரியாது. அவரை நாளை சந்திப்பதாக நேரம் ஒதுக்கியிருக்கிறேன். அதை இரத்துச் செய்ய வேண்டும். இப்படியான பேர்வழியுடன் எந்த உறவும் வைத்திருக்கக் கூடாது'' என்றார்.

"விடுதலைப் புலிகளின் கொள்கை என்ன? அரசியல் சித்தாந்தம் என்ன? விடுதலைப் புலிகள் கம்யூனிசத் தீவிரவாதிகள் என்று எனது அமைச்சர் ஒருவர் சொல்கிறாரே, அது உண்மையா?'' என்று கேட்டார் எம்.ஜி.ஆர்.

"விடுதலைப் புலிகள் கம்யூனிஸ்டுகள் அல்லர். விடுதலைப் புலிகள் புரட்சிவாதிகள், சுதந்திரப் போராளிகள். தமது தாயகமான தமிழீழத்தின் சுதந்திரத்திற்காகப்



போராடுபவர்கள். சாதியக் கொடுமை, பெண் அடிமைத்தனம் மற்றும் சமூக முரண்பாடுகள் நீங்கிய சமத்துவமும் சமூக நீதியும் நிலவும் ஒரு உன்னதமான, சுதந்திரமான சமுதாயத்தைப் படைக்கவே நாம் போராடுகிறோம். இப்படியான எமது புரட்சிகரக் கொள்கையைப் புரிந்து கொள்ளாமல் எம்மைக் கம்யூனிசத் தீவிரவாதிகள் என சிலர் தவறாகக் கருதக்கூடும். ஏழைகளின் சுபீட்சத்திற்காகவும் ஒடுக்கப்படும் மக்களின் விடிவிற்காகவும் நாம் ஆயுதம் ஏந்திப் போராடுகிறோம். இரத்தம் சிந்தி, உயிரை அர்ப்பணித்துப் போராடுகிறோம். எமது இந்த இலட்சிய உறுதியை தீவிரவாதம் என்று சொல்ல முடியாது. விடுதலை வேட்கை என்று சொல்வதே பொருந்தும்.'' என்று விளக்கினேன். விடுதலைப் புலிகளின் கொள்கையையும் சித்தாந்தத்தையும் விபரிக்கும் போது கடினமான, சிக்கலான சொற்பிரயோகங்கள், கோட்பாடுகளைத் தவிர்த்து மிகவும் எளிமையாக அவர் புரிந்து கொள்ளக்கூடிய மொழியில் விளக்க முயன்றேன்.

"ஏழைகளின் நண்பனாக, தொழிலாளர்களின் தோழனாக, நசுக்கப்படும் மக்களின் நாயகனாக நீங்கள் திரையுலகில் நடித்து தமிழ் நாட்டில் சமூக விழிப்புணர்வை தட்டியெழுப்பவில்லையா? இதனால் தமிழ் மக்களின் இதயங்களில் ஒரு நிரந்தர இடத்தைப் பிடிக்கவில்லையா? இன்னும் தமிழகத்தின் முதல்வராக உயர் பதவி வகிக்கும் நீங்கள் ஏழைகளின் துயர் துடைக்கத் தொண்டாற்றவில்லையா? நீங்கள் சினிமா உலகில் சாதித்ததை விடுதலைப் புலிகள் நிஜவுலகில் சாதிக்கிறார்கள். உங்களுக்கும் புலிகளுக்கும் இலட்சியம் ஒன்றுதானே? கொள்கையளவில் நோக்கினால் உங்களையும் பிரபாகரனையும் சமூகப் புரட்சிவாதிகள் என்றுதான் சொல்லவேண்டும்.'' என்று விளக்கினேன். அவர் புன்முறுவலுடன் தலையசைத்த போது நான் கொடுத்த விளக்கம் அவருக்கு நன்றாகப் பிடித்துக் கொண்டது என்பது தெளிவாகியது.

அடுத்ததாக சிங்கள அரச பயங்கரவாதத்தின்

கொடுமைகளையும் ஈழத் தமிழ் மக்கள் அனுபவித்துவரும் தாங்கொணாத் துன்பங்களையும் எடுத்துக் கூறினோம். சிங்கள ஆயுதப் படைகள் தமிழர் தாயகத்தில் நிகழ்த்திய படுகொலைகளை விபரித்துக் கூறிய திரு. பேபி சுப்பிரமணியம், அந்தக் கொடூரக் காட்சிகளைச் சித்தரிக்கும் புகைப்படங்களை எம்.ஜி.ஆரிடம் காண்பித்தார். அந்தக் கொலைக் காட்சிகளை படங்களில் பார்த்ததுமே அவரது முகம் விகாரமடைந்தது. "இதைப் பார்க்க முடியவில்லையே. இப்படியெல்லாம் கொடுமை செய்வார்களா?" என்று கவலையுடனும் ஆச்சரியத்துடனும் கேட்டார்.

"ஈழத்தில் இனக்கொலை நடக்கிறது. எமது மக்கள் கொன்றொழிக்கப்பட்டு வருகிறார்கள். இந்தத் தமிழினப் படுகொலையைத் தடுத்து நிறுத்தி, எமது மக்களையும் மண்ணையும் மீட்கவே நாம் ஆயுதமேந்திப் போராடுகிறோம்" என்று விளக்கினேன்.

"இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிராக நடைபெறும் கொடுமைகளை இந்திய அரசு சும்மா பார்த்துக் கொண்டிருக்கிறதா? ஈழத்துப் போராளிகளுக்கு ஏதோ இரகசியமாக உதவி செய்வதாகக் கேள்விப்பட்டேன். இராணுவப் பயிற்சியும் ஆயுதங்களும் பணமும் கொடுப்பதாகச் சொல்லுறாங்க. உண்மையா?" என்று கேட்டார் முதலமைச்சர்.

"மிகவும் சிறிய அளவில் உதவி புரிகிறார்கள். யானைப் பசிக்குச் சோளப் பொரி போட்ட மாதிரி. எமது அமைப்பைச் சேர்ந்த இருநூறு போராளிகளுக்கு இராணுவப் பயிற்சி கொடுத்திருக்கிறார்கள். சிறிய தொகையில் பழைய துருப்பிடித்த ஆயுதங்களும் தந்திருக்கிறார்கள். இவற்றில் பல பாவனைக்கு உகந்தன அல்ல என்று எமது தளபதிகள் சொல்கிறார்கள். தமிழீழ மக்களின் அரசியல் விடுதலைக்காக இந்திய அரசு எமக்கு உதவி புரியவில்லை. தனது பூகோள - அரசியல் நலனுக்காகவே எமக்கு உதவி புரிகிறது. அதாவது மேற்குலக அரசியல் - இராணுவ வலைக்குள் சிக்குண்டு நிற்கும் இலங்கை அரசைத் தனது ஆதிக்க வியூகத்தினுள் கொண்டு வருவதற்கே இந்தியா முயல்கின்றது. இந்த நோக்கை அடைவதற்காகவே ஈழத்துப் போராளிகளை இந்தியா பகடைக் காய்களாகப் பாவிக்கிறது. இந்த இராணுவப் பயிற்சித் திட்டத்திலும் பாகுபாடு காட்டப்படுகிறது. ஆரம்பத்தில் விடுதலைப் புலிகளுக்கு இராணுவப் பயிற்சி மறுக்கப்பட்டது. ஆயினும் இந்திரா காந்தி அம்மையாரின் தலையீட்டின் பின்னரே இந்தப் பயிற்சித் திட்டத்தில் நாம் இணைக்கப்பட்டோம். அப்படியிருந்தும் எம்மைவிட மற்றைய அமைப்புகளுக்கே கூடுதலாகப் பயிற்சியும் ஆயுதங்களும் வழங்கப்பட்டுள்ளன. அவர்களுக்கு பணமும் வழங்கப்படுகிறது. எமக்கு நிதியுதவி எதுவும் வழங்கப்படவில்லை." என்று சொன்னேன்.



"என்ன காரணத்திற்காக இப்படிப் பாராபட்சம் காட்டுகிறார்கள்?" என்று கேட்டார் எம்.ஜி.ஆர்.

"நாம் தனித்துவமான போக்குடையவர்கள் என்பது இந்திய அரசுக்குத் தெரியும். அத்தோடு, வரித்துக்கொண்ட இலட்சியத்தில் நாம் உறுதியாக நிற்போம் என்பதும் அவர்களுக்குத் தெரியும். எல்லாவற்றிற்கும் மேலாக, இந்தியாவின் இரகசியத் திட்டங்களுக்கு இசைந்து போய் வளைந்து கொடுக்க மாட்டோம் என்பதும் அவர்களுக்குத் தெரியும். ஏனைய அமைப்புகள் அப்படியல்ல. அவர்களுக்கு உறுதியான இலட்சியம் எதுவுமில்லை. இந்திய அரசின் அழுத்தங்களுக்கு அவர்கள் பணிந்து சென்று வளைந்து கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள். இதன் காரணமாகவே ஏனைய போராளி அமைப்புகளை இராணுவ ரீதியாகப் பலப்படுத்தி விடுதலைப் புலிகளைப் பலவீனப்படுத்த இந்திய அரசு முனைகிறது." என்று விளக்கினேன்.

எல்லாவற்றையும் மிகவும் உன்னிப்பாகவும் பொறுமையாகவும் கேட்டுக் கொண்டிருந்த எம்.ஜி.ஆர், "எல்லாம் எனக்குப் புரிகிறது. இப்பொழுது நான் என்ன செய்ய வேண்டும்? எத்தகைய உதவியை என்னிடமிருந்து எதிர்பார்க்கின்றீர்கள்?" என்று கேட்டார்.

"எமது விடுதலைப் போராட்டத்திற்கு நீங்கள் கைகொடுத்து உதவ வேண்டும். இந்திய அரசு ஒழுங்கு செய்த பயிற்சி அறவே போதாது. இந்தியப் பயிற்சி பெற்ற

இருநூறு போராளிகளுடன் சிங்கள இராணுவத்தைச் சமாளிப்பது மிகவும் கடினம். நாம் தமிழ் நாட்டில் பயிற்சி முகாம்களை அமைத்து எமது போராளிகளுக்கு நாமே பயிற்சி கொடுக்கத் திட்டமிட்டிருக்கிறோம். குறைந்தது ஆயிரம் போராளிகளுக்கு இராணுவப் பயிற்சியளித்து அவர்களுக்கு ஆயுதம் தரிக்க விரும்புகின்றோம். இத் திட்டத்தை நிறைவு செய்யப் பண உதவி செய்வீர்களா? அப்படி உதவினால் அது எமது ஆயுதப் போராட்ட வரலாற்றில் ஒரு திருப்புமுனையாக அமையும். அந்த உதவிக்காக எமது மக்கள் என்றுமே உங்களுக்கு நன்றி உடையவர்களாக இருப்பார்கள்'' என்றேன்.

"அது சரி என்னிடமிருந்து எந்தளவு பணத்தை எதிர்பார்க்கிறீர்கள்?'' என்று கேட்டார் எம்.ஜி.ஆர். மிகவும் சங்கடமான கேள்வி. என்ன சொல்வதென்று தெரியாது தடுமாறியபடி, "பெரிய தொகையாகத் தேவைப்படும்'' என்று இழுத்தேன்.

"அது சரி. எந்தளவு தொகையை எதிர்பார்க் கிறீர்கள்?'' என்று மீண்டும் கேட்டார். நான் சங்கடப் படுவதைக் கண்ட கேணல் சங்கர் "குறைந்தது இரண்டு கோடியாவது தேவைப்படும். ஆயிரம் போராளிகளுக்குப் பயிற்சி அளிக்க ஒரு கோடியும், அந்த ஆயிரம் பேருக்கும் ஆயுதம் தரிக்க இன்னொரு கோடியுமாக இரண்டு கோடி தேவைப்படும்'' என்று சொன்னார்.

"ஆக இரண்டு கோடிதானா? நாளைக்கே கொடுத்து விடுகிறேன்'' என்று கூறிய முதலமைச்சர், என்னைச் சுட்டிக்காட்டி, மறுநாள் இரவு பத்து மணியளவில் ஒரு வாகனத்துடன் தனது வீட்டுக்கு வருமாறு கேட்டுக் கொண்டார்.

நாம் வாயடைத்துப் போனோம். அந்த நேரத்தில் இரண்டு கோடி இந்திய ரூபாய் என்றால் கனவிலும் நினைத்துப் பார்க்க முடியாத தொகை. அப்பொழுது எமக்கு பயங்கரமான பணப் பிரச்சினை. வெளிநாடுகளில் புலம் பெயர்ந்து வாழ்ந்து வந்த ஆதரவாளர்களிடமிருந்து கிடைத்த சிறு தொகைப் பணத்தில்தான் மிகச் சிரமத்துடன்



முழு இயக்கமும் ஓடிக்கொண்டிருந்தது. இப்படியாகத் திடீரென எம்.ஜி.ஆரின் உருவத்தில் அதிர்ஷ்ட தேவதை எம் மீது கருணை காட்டுவாளென நாம் எதிர்பார்க்கவில்லை.

எம்.ஜி.ஆருக்குப் புகழாரம் பாடி, விரைவில் தலைவர் பிரபாகரனுடன் வருவதாக வாக்குறுதி அளித்துவிட்டு விடை பெற்றோம். வெளியே வந்ததும், "இன்னும் கூடுதலாகக் கேட்டிருந்தால் கொடுத்திருப்பார் போலத் தெரிகிறதே'' என்று கேணல் சங்கரிடம் கேட்டேன்.

"முதலில் இந்தத் தொகை கிடைப்பதே பெரிய காரியம். தேவை ஏற்பட்டால் பின்பும் உதவி கேட்கலாம்தானே?'' என்றார் சங்கர். அவர் சொன்னது எனக்குச் சரியாகப் பட்டது.

தலைவர் பிரபாகரனுக்கு இந்த மகிழ்ச்சிகரமான செய்தியைத் தெரிவித்தபோது அவர் முதலில் நம்ப மறுத்துவிட்டார். கேலி செய்கிறோம் என்று எண்ணினார் போலும். பின்பு முழு விபரத்தையும் கூறினோம். மிகவும் பூரிப்படைந்த பிரபாகரன், சில தினங்களில் எம்.ஜி.ஆர் அவர்களை நேரில் சந்தித்து நன்றி தெரிவிக்கப் போவதாகச் சொன்னார்.

மறுநாள் இரவு சரியாகப் பத்து மணியளவில் ஒரு கயஸ்வான் வண்டியுடன் பறங்கிமலையிலுள்ள எம்.ஜி.ஆர் அவர்களின் வீட்டுக்குச் சென்றோம். ரகு என்ற போராளி வாகனத்தை ஓட்டி வந்தார். எம்மை எதிர்பார்த்தபடி அந்தப் பங்களாவின் முன் வாசலில் எமக்காகக் காத்து நின்றார் முதல்வர்.

வாகனத்தை வீட்டுக்கு ஓரமாக நிறுத்தும்படி சொல்லிவிட்டு என்னை மட்டும் வீட்டுக்குள் அழைத்துச் சென்றார். "யார் அந்தப் பையன்?'' என்று கேட்டார். "பிரபாகரனின் நம்பிக்கைக்கு உரியவர். ஒரு விடுதலைப் போராளி'' என்றேன்.

வீட்டுக்குள் ஒரு லிப்ட் (lift) இருந்தது. அதைத் திறந்து உள்ளே வர அழைத்தார். பாதாளம் வரை ஒரு தளத்துக்குக் கொண்டு சென்று அது திறந்து கொண்டது. அங்கு விரிந்து அகன்ற ஒரு அறை. அந்த அறை நிறையப்

பெட்டிகள். ஒன்றின் மேல் ஒன்றாக, நிரையாகப் பத்து அடி உயரம் வரை அடுக்கப்பட்டு இருந்தன. அது ஒரு பாதாளப் பண அறை. அந்த அறைக்குள் இரண்டு காவலாளிகள் ஓரமாக ஒதுங்கி நின்றனர். அவர்களிடம் இரு விரல்களைக் காட்டி மலையாள மொழியில் ஏதோ சொன்னார். பத்துப் பெட்டிகள் வரை எடுத்து வந்து லிப்டுக்குள் அடுக்கினார்கள். பின்பு வெளியே வந்ததும் பெட்டிகள் எமது வாகனத்திற்குள் அடுக்கப்பட்டன.

அந்த நள்ளிரவில் கோடிக்கணக்கான பணத்துடன் சென்னை நகரம் ஊடாக திருவான்மையூரிலுள்ள எமது வீட்டுக்குச் செல்வதில் சிக்கல்கள் எழலாம். சில சமயம் காவல்துறையினர் மறித்துச் சோதனையிட்டாலும் பிரச்சினை வரலாம். எம்.ஜி.ஆரிடம் விடயத்தைக் கூறினோம். எமக்குப் பாதுகாப்பு ஒழுங்கு செய்வதாகக் கூறிவிட்டு யாரிடமோ தொலைபேசியில் தொடர்பு கொண்டார். ஒரு சில நிமிடங்களுக்குள் இரு ஜீப் வண்டிகளில் ஆயுதம் தரித்த காவல்துறையினர் அங்கு வந்து சேர்ந்தனர்.

முன்பாக ஒரு ஜீப் வண்டியும், பின்னால் இன்னொன்றுமாக, ஆயுதம் தரித்த காவல்துறையினர் புடைசூழ நானும் ரகுவும், இரண்டு கோடி ரூபா அடங்கிய பெட்டிகளும் சென்னை நகர வீதிகளூடாகப் பவனி சென்று திருவான்மையூரை அடைந்தோம். எமது வீட்டில் தலைவர் பிரபாகரனும் நிதிப் பொறுப்பாளர் திரு. தமிழேந்தியும் கேணல் சங்கரும் மற்றும் சில போராளிகளும் எமக்காகக் காத்திருந்தனர். எமது இருப்பிடம் வந்தடைந்ததும் காவற்துறையினர் விடைபெற்றுச் சென்றனர். பணப் பெட்டிகள் வீட்டின் மேல்மாடியிலுள்ள எமது படுக்கை அறைக்குள் எடுத்துச் செல்லப்பட்டன. ஒவ்வொரு பெட்டியாகத் திறந்து நூறு ரூபா நோட்டுகள் அடங்கிய கட்டுகளை எடுத்து அடுக்கி எண்ணி முடிக்க விடிந்து விட்டது. அன்றிரவு தூக்கத்தைத் துறந்த போதும், திடீரென அதிர்ஷ்டம் ஏற்பட்டு துயரங்கள் தீர்ந்தது போன்ற குதூகலம் எல்லோரது முகத்திலும் தென்பட்டது. வெகு விரைவாக முதலமைச்சர் எம்.ஜி.ஆரைச் சந்தித்து நன்றி தெரிவிக்க



வேண்டும் என்றார் பிரபாகரன்.

ஒரு முக்கியமான வரலாற்றுக் காலகட்டத்தில் நிதி நெருக்கடியால் நாம் திணறிக் கொண்டிருந்த வேளையில் எம்.ஜி.ஆர் அவர்கள் செய்த பண உதவி எமது விடுதலை இயக்கத்தின் வளர்ச்சிக்கு ஆதாரமாக அமைந்தது. இராணுவ அரசியற் பிரிவுகளின் விரிவாக்கத்திற்கும், புதிய பயிற்சி முகாம்களை அமைக்கவும், நவீன ஆயுதங்களைக் கொள்வனவு செய்வதற்குமே எம்.ஜி.ஆர் அளித்த நிதியுதவியைப் பிரபாகரன் பயன்படுத்தினார்.

அந்த வாரமே பிரபாகரன் - எம்.ஜி.ஆர் சந்திப்பு நிகழ்ந்தது. நானும் பிரபாகரனுடன் சென்றிருந்தேன். பிரபாகரனின் வாழ்க்கைப் பின்னணி, அவரது போராட்ட வாழ்க்கை, ஈழத்து அரசியல் இராணுவ நிலைமை, தமிழீழ மக்கள் அனுபவித்து வரும் துயரங்கள், இந்தியப் புலனாய்வுத் துறை ஒழுங்கு செய்த இராணுவப் பயிற்சித் திட்டம், விடுதலைப் புலிகளுக்கும் ஏனைய போராளி அமைப்புகளுக்கும் மத்தியிலான முரண்பாடு போன்ற பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்பட்டன. எம்.ஜி.ஆர் காட்டிய ஆர்வத்தைப் பார்த்த பொழுது, தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் அவர் மிகவும் அக்கறை கொண்டுள்ளார் என்பது புலனாகியது. விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக நின்று, ஈழ மக்களின் சுதந்திரப் போராட்டத்திற்குத் தன்னாலான உதவிகள் செய்யத் தயாராக இருப்பதாகத் தலைவர் பிரபாகரனிடம் சொன்னார். முதற் சந்திப்பிலேயே பிரபாகரனை அவருக்கு நன்றாகப் பிடித்துக் கொண்டது. அன்றைய நாளில் ஒரு வரலாற்று நட்புறவுக்கு அடித்தளம் இடப்பட்டது.

எம்.ஜி.ஆர் அவர்கள் பழகுவதற்கு மிகவும் இனிமையானவர். குழந்தை உள்ளம் படைத்தவர். நண்பர்களுக்கு நண்பர். தனக்குப் பிடித்தவர்கள் மீது அளப்பரிய அன்பு காட்டுவார். ஒரு தடவை அவரது அன்புத் தொல்லையில் நான் சிக்குப்பட்டு இரு வாரங்கள் வரை ஒரு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு அவஸ்தைப்பட நேர்ந்தது. இதுவொரு சுவாரஸ்யமான சம்பவம்.

ஒரு நாள் காலை எம்.ஜி.ஆர் அவர்கள் என்னையும் பிரபாகரனையும் அவசரமாகத் தனது இல்லத்திற்கு வருமாறு அழைப்பு விடுத்திருந்தார். நாங்கள் அவரது வீட்டுக்கு விரைந்து சென்றோம். ஏதோ அதிமுக்கிய விடயமாக இருக்கலாமென எண்ணிக் கொண்டோம். அங்கு சென்றபோது, எம்.ஜி.ஆரின் செயலர் எம்மை வரவேற்றார். "எதற்காக எம்மை அழைத்திருக்கிறார்" என்று அவரிடம் கேட்டோம். "அப்படியாக ஒரு முக்கிய விடயமும் இல்லை. உங்களுடன் சேர்ந்து காலை விருந்து உண்ண விரும்புகிறார். தனக்குப் பிடித்தவர்களைக் காலை விருந்துக்கு அவர் அழைப்பது வழக்கம்." என்றார் செயலர். சாப்பாட்டு அறைக்கு அழைத்துச் செல்லப்பட்டோம். அங்கே முதல்வர் எமக்காகக் காத்திருந்தார். "வாருங்கள், வாருங்கள். உங்களுக்கென்று விசேடமாக காலை உணவு தயாரித்திருக்கிறோம்." என்று கூறிப் பெரியதொரு சாப்பாட்டு மேசையில் எம்மை அமரச் செய்தார்.

முதலில் இட்டலி, அதன் பின் தோசை, பின்பு பூரி, உப்பு மா, தயிர் வடை இப்படியாகச் சுடச் சுட வாழை இலையில் உணவு வகைகள் மாறி மாறிப் பரிமாறப்பட்டன. எம்.ஜி.ஆருக்கு ஈடாகப் பிரபாகரன் சுவைத்து ரசித்து சாப்பிட்டுக் கொண்டிருந்தார். இவர்களுக்கு ஈடுகட்ட முடியாமல் திணறிக் கொண்டிருந்தேன் நான். நீரிழிவு வியாதி இருப்பதால் எனக்கு உணவுக் கட்டுப்பாடு. அவசரத்தில் இன்சுலின் ஊசி ஏற்றாமல் வந்துவிட்டதால் அதிகமாகச் சாப்பிட முடியாத நிலை. சிறிய அளவாகத்தான் சாப்பிட முடிந்தது. எம்.ஜி.ஆரின் கழுகுக் கண்கள் அதனைக் கவனித்து விட்டன.

"எனது வீட்டிற்கு உணவருந்த வருபவர்கள் வயிறு நிறையச் சாப்பிட வேண்டும். தம்பி பிரபாகரன் நன்றாகச் சாப்பிடுகிறார். நீங்கள் சிரமப்படுவதுபோலத் தெரிகிறது. நிறையச் சாப்பிடுங்கள்" என்று கூறிச் சமையற்காரப் பையனிடம் சைகை காட்டினார். அவன் இட்டலி, தோசை, சாம்பாருடன் ஓடி வந்தான்.

"சார், எனக்கு நீரிழிவு வியாதி. இன்சுலின் ஊசியும்



ஏற்றவில்லை. உணவுக் கட்டுப்பாடும் இருக்கிறது. அதிகம் சாப்பிட முடியாது" என்றேன்.

"நீரிழிவு வியாதியைக் குணப்படுத்தலாம் அல்லவா? எனக்கும் நீரிழிவு இருந்தது. இப்பொழுது குணமாகிவிட்டது. நீரிழிவு இருந்தால் சாப்பிடக் கூடாது என்று யார் சொன்னார்கள். எந்த முட்டாளிடம் வைத்தியம் பார்க்கிறீர்கள்?" என்றார் எம்.ஜி.ஆர்.

எனக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை. வீணாக வம்புக்குள் மாட்டிவிட்டோம் போலத் தோன்றியது. எனது வாழையிலை மீது இட்டலிகள் குவிந்தபடி இருந்தன.

"நீரிழிவு வியாதியைக் கட்டுப்படுத்த இன்சுலின் ஊசி பாவிக்கிறேன். காலையும் இரவும் இரு தடவைகள் ஊசி ஏற்ற வேண்டும். இந்த ஊசியில்தான் உயிரே தங்கியிருக்கிறது. நீரிழிவு நோய் முற்றிவிட்டால் அதனைக் குணப்படுத்த முடியாது என்று லண்டனிலுள்ள மருத்துவ நிபுணர்கள் சொன்னார்கள் என்றேன்.

"நான் சொல்கிறேன் நீரிழிவு வியாதியைக் குணப்படுத்த முடியும். நான் குணப்படுத்திக் காட்டுகிறேன்." என்று சவால் விட்டபடி தனது சொந்த மருத்துவரை உடன் வருமாறு அழைப்பு விடுத்தார். எனது கெட்ட காலம், மருத்துவரும் உடனே அங்கு வந்து சேர்ந்தார்.

"வாருங்கள் டாக்டர். நீங்கள் ஒரு மருத்துவ நிபுணர். நீங்கள்தான் சொல்ல வேண்டும். தனக்கு நீரிழிவு வியாதி இருப்பதாகவும் அந்த வியாதியைக் குணப்படுத்த முடியாது என்றும் பாலசிங்கம் சொல்கிறார். நான் சொல்கிறேன் குணப்படுத்த முடியும் என்று. யார் சொல்வது சரி?" என்று கேட்டார் எம்.ஜி.ஆர்.

"சார் நீங்கள் சொல்வதுதான் சரி" என்று கூனிக் குறுகியபடி பதிலளித்தார் அந்த வயோதிப மருத்துவர்.

"நீரிழிவைக் குணப்படுத்த எவ்வளவு காலம் பிடிக்கும்? இரண்டு வாரங்கள் போதும் அல்லவா?" என்று முதல்வர் கேட்க, "ஆமா" போட்டார் அந்த டாக்டர். நான் வாயடைத்துப் போனேன்.

"உடனடியாக, இப்பொழுதே இவரை அழைத்துச்

சென்று அப்பலோ மருத்துவமனையில் சேர்த்து விடுங்கள். எனக்கு மிகவும் வேண்டியவர் என்று சொல்லுங்கள். நன்றாகக் கவனிப்பார்கள்.'' என்று மருத்துவரிடம் சொல்லிவிட்டு, என்னைப் பார்த்து, "உடனே புறப்படுங்கள்" என்று ஆணையிட்டார்.

நான் பரிதாபமாகப் பிரபாகரனைப் பார்த்தேன். சிரிப்பை அடக்கிக் கொண்டு, 'சீரியஸான' முக பாவனையுடன் "போய் வாருங்கள் அண்ணா'' என்றார் பிரபா-கரன்.

வீட்டுக்கு வெளியே வந்ததும் மருத்துவரின் காரில் ஏறினேன். "என்ன டாக்டர். வீணாக என்னை மாட்டிவிட்டீர்களே. இன்சுலின் ஏற்றுமளவுக்கு நீரிழிவு நோய் முற்றியிருக்கிறது. அப்படியிருந்தும் நோயைக் குணப்படுத்த முடியும் என்கிறீர்கள். உண்மையாக அப்படிக் கருதுகிறீர்களா?'' என்று ஆத்திரத்துடன் கேட்டேன்.

"முதலமைச்சர் சொல்வதற்கு மாற்றுக் கருத்து எப்படிச் சொல்வது. எதற்கு எனக்கு வீண் வம்பு. அப்பலோ மருத்துவமனையில் எல்லா வசதிகளுடனும் ஒரு தனி அறை ஒழுங்கு செய்து தரலாம். ஓய்வு எடுத்தால் உங்களுக்கு நல்லது. இரண்டு வாரங்கள் தானே. பொழுது போவது தெரியாது.'' என்று சொல்லிவிட்டுச் சிரித்தார். கன்னத்தைப் பொத்தி அறைய வேண்டும் போல இருந்தது.

எம்.ஜி.ஆரின் அன்புத் தொல்லையால் அப்பலோ மருத்துவமனையில் இரண்டு வாரம் சிறை இருந்தேன். மூன்று மாதங்கள் கழிந்த பின் ஒரு நாள் என்னையும் பிரபாகரனையும் காலை உணவருந்த அழைத்தார் எம்.ஜி.ஆர். இம்முறை இன்சுலின் மருந்தைக் கூடுதலாக ஏற்றிவிட்டுச் சென்றேன்.

என்னைக் கண்டதுமே, "சிகிச்சை எடுத்தீர்களா? நீரிழிவு நோய் குணமாகிவிட்டதா?'' என்று மிகவும் ஆர்வுமாகவும் கருணையுடனும் கேட்டார் முதலமைச்சர். "ஆமா சார். மிகவும் நன்றி'' என்றேன். இட்டலி, தோசை, வடை, பூரி என்று எனக்குப் படைத்ததை எல்லாம் வயிறு நிறைய விழுங்கினேன். எம்.ஜி.ஆருக்குப் பரம திருப்தி.



விடுதலைப் புலிகள் தலைமை தாங்கி முன்னெடுத்து வரும் தமிழீழ சுதந்திர இயக்கத்திற்கு எம்.ஜி.ஆர் அவர்கள் நல்கிய உதவி அளப்பரியது. எல்லாவற்றையுமே முழுமையாக இங்கு ஆவணப்படுத்த முடியாதபோதும், ஒரு சில முக்கிய சம்பவங்களையாவது பதிவு செய்வது வரலாற்று ரீதியாகப் பயன்படும் எனக் கருதுகிறேன். இப்பொழுது தமிழ்நாட்டில் விடுதலைப் புலிகள் என்ற சொல்லை உச்சரிப்பதே சட்டவிரோதமான ஒரு குற்றச் செயலாகக் கருதப்படுகிறது. எம்.ஜி.ஆர் அவர்கள் வளர்த்துவிட்ட அ.தி.மு.க கட்சியும், அதன் தலைமையும் இன்று விடுதலைப் புலிகளுக்கு எதிராகப் போர்க் கொடி உயர்த்தி நிற்கின்றன. ஆனால் அன்று எம்.ஜி.ஆர் அவர்கள் ஈழ மக்களின் விடுதலைக்காக மிகவும் துணிச்சலான காரி யங்களைப் புரிந்து எமக்கு கைகொடுத்து உதவியிருக்கிறார்.

ஒரு தடவை சென்னைத் துறைமுகம் ஊடாக ஆயுதங்களைத் தருவிக்க முயன்றோம். எமக்கான நவீன ஆயுதங்கள் அடங்கிய கொள்கலனுடன் வெளிநாட்டுக் கப்பல் ஒன்று சென்னைத் துறைமுகம் வந்தடைந்தது. துறைமுகம் ஊடாக ஆயுதக் கொள்கலனை வெளியே எடுக்க நாம் செய்த பகீரத முயற்சிகள் பயனளிக்கவில்லை. சரியாக ஒரு மாதத்திற்கு முன்புதான் உமா மகேஸ்வரன் ஒழுங்குசெய்த ஆயுதக் கப்பல் ஒன்று இந்தியப் புலனாய்வுத் துறையினரால் கைப்பற்றப்பட்டது. பல கோடி பெறுமதியான ஆயுதங்களைப் புளொட் இயக்கம் இழக்க நேரிட்டது. புலிகளுக்கும் இந்தக் கதி நேரக் கூடாதென விரும்பினோம். ஆயுதங்களை பறிகொடுக்காமல் வெளியே எடுப்பதற்கு எம்.ஜி.ஆரின் உதவியை நாடுவதே ஒரேயொரு வழியாக எனக்குத் தென்பட்டது. பிரபாகரனும் நானும், எம்.ஜி.ஆரிடம் சென்றோம். நிலைமையை எடுத்து விளக்கினோம்.

"நீங்கள் கொடுத்த பணத்தில் இந்த ஆயுதங்களை வாங்கியிருக்கிறோம். சென்னைத் துறைமுகத்தில், ஒரு கப்பலில், ஒரு கொள்கலனுக்குள் இந்த ஆயுதங்கள் இருக்கின்றன. எப்படியாவது அதனை வெளியே எடுத்துத் தரவேண்டும். நீங்கள் மனம் வைத்தால் முடியும்.'' என்று

கேட்டோம். எதுவித தயக்கமோ, பதட்டமோ அவரிடம் காணப்படவில்லை. "இதுதானா பிரச்சினை? செய்து முடிக்கலாம்'' என்று கூறிவிட்டு, துறைமுக சுங்க மேலதிகாரிகளுடன் தொலைபேசியில் கதைத்தார். பின்பு எம்மிடம், ஒரு சுங்க அதிகாரியின் பெயரைக் குறித்துத் தந்து, அவரைச் சந்தித்தால் காரியம் சாத்தியமாகும் என்றார் முதலமைச்சர். அவருக்கு நன்றி தெரிவித்து விட்டு நாம் மகிழ்வுடன் வீடு திரும்பினோம்.

சென்னைத் துறைமுகத்திலிருந்து ஆயுதக் கொள்கலனை மீட்டு வரும் பொறுப்பைக் கேணல் சங்கரிடம் கையளித்தார் பிரபாகரன். ஒரு சில தினங்களுக்குப் பின்னர் ஒரு நாள் இரவு தமிழ்நாட்டுக் காவற்துறையினரின் பாதுகாப்புடன் பாரம் தூக்கி பொருத்திய கனரக வாகனத்தில் எமது ஆயுதக் கொள்கலன் சென்னை நகரம் ஊடாகப் பவனி வந்து நாம் குறிப்பிட்ட ஒரு இடத்தில் இறக்கப்பட்டது. அதில் ஒரு தொகுதி ஆயுதங்கள் திருவான்மையூரில் நாம் வசித்த வீட்டில் குவிக்கப்பட்டன. ஏவுகணைகள், தானியங்கித் துப்பாக்கிகள், ரவைப் பெட்டிகள், கைக்குண்டுகளாக வீடு நிறைந்திருந்தது. அவை வீட்டிலிருந்து அகற்றப்படும் வரை என்னால் நிம்மதியாகத் தூங்க முடியவில்லை.

எந்தப் பிரச்சினையுமின்றி பாதுகாப்பாக ஆயுதங்களைப் பெற்றுத் தந்ததற்காக எம்.ஜி.ஆருக்கு நேரில் சென்று நன்றி தெரிவித்தார் பிரபாகரன். அந்தப் பேருதவியின் நினைவுச் சின்னமாக இறக்கப்பட்ட ஆயுதங்களிலிருந்து ஒரு புதிய ஏ.கே-47 ரக தானியங்கித் துப்பாக்கியை எம்.ஜி.ஆரிடம் கையளித்தார் பிரபா. அந்தத் துப்பாக்கியை கழற்றிப் பூட்டி அதன் செயற்பாட்டு இயக்கத்தையும் விளங்கப்படுத்தினார். எம்.ஜி.ஆருக்கு மட்டற்ற மகிழ்ச்சி.

இந்தச் சம்பவம் நிகழ்ந்து நீண்ட கால இடைவெளியின் பின்னர் ஒரு தடவை சுகவீனமுற்றிருந்த முதலமைச்சரை நான் சந்திக்கச் சென்றேன். பிரபாகரனைச் சுகம் விசாரித்தார். தமிழீழத்தில் சௌக்கியமாக இருக்கிறார்



என்றேன். அப்பொழுது தனது படுக்கையில் தலையணிக-ளின் கீழ் வைக்கப்பட்டிருந்த ஒரு ஏ.கே-47 துப்பாக்கியை எடுத்துக் காண்பித்து, "இது பிரபாகரன் தந்த நினைவுப் பரிசு'' என்று பெருமிதத்துடன் சொன்னார்.

எமக்குத் தேவை ஏற்பட்ட வேளைகளில் எம்.ஜி.ஆர் அளித்த நிதி உதவிகளை ஆதாரமாகக் கொண்டே இயக்கம் ஓடிக் கொண்டிருந்தது. ஒரு தடவை எமக்குப் பெருமளவில் நிதி தேவைப்பட்டது. தலைவர் பிரபாகரன் அவர்கள் என்னை எம்.ஜி.ஆரிடம் தூது அனுப்பினார். நான் எம்.ஜி.ஆரைச் சந்தித்த பொழுது முதல்வருடன் அமைச்சர் பண்டுருட்டி இராமச்சந்திரனும் இருந்தார்.

"இராணுவ - அரசியல் ரீதியாக எமது விடுதலை இயக்கம் பெருமளவில் வளர்ச்சி கண்டுவிட்டது. பல்வேறு வேலைத் திட்டங்களை நிறைவு செய்ய வேண்டி இருக்கிறது. இம்முறை பெரிய தொகையில் பணம் தேவைப்படுகிறது. தம்பி பிரபாகரன் உங்களைத் தான் நம்பியிருக்கிறார்'' என்றேன்.

"பெரிய தொகையா? எவ்வளவு தேவைப்படுகிறது?'' என்றார் முதல்வர்.

"ஐந்து கோடிவரை தேவைப்படுகிறது'' என்றேன்.

எம்.ஜி.ஆர் அவர்கள் திரு.பண்டுருட்டி இராமச் சந்திரனைப் பார்த்து, "மாநில அரசு மூலமாக ஏதாவது செய்யலாமா?'' என்று கேட்டார்.

அமைச்சர் சில வினாடிகள் வரை சிந்தித்து விட்டு, "போரினால் பாதிக்கப்பட்ட ஈழத்து மக்களுக்கென தமிழ்நாட்டு அரசால் திரட்டப்பட்ட நிதி இருக்கிறது. நான்கு கோடிக்கு மேல் வரும். அந்த நிதியை இவர்களுக்குக் கொடுக்கலாமே? ஈழ மக்களின் உரிமைப் போராட்டத்திற்கு இந்நிதி வழங்கப்படுவதில் தப்பில்லை அல்லவா?'' என்றார்.

"அப்படியே செய்யுங்கள். இந்த விடயத்தை உங்கள் பொறுப்பில் விடுகிறேன்'' என்றார் எம்.ஜி.ஆர்.

இதனையடுத்து அமைச்சர் பண்டுருட்டி இராமச்சந்திரன் அவர்களின் இல்லத்திற்கு இரவு பகலாக அலைய வேண்டியிருந்தது. "தமிழ்நாட்டு அரசின்

பொறுப்பிலுள்ள நிதி என்பதால், ஒழுங்கான முறையில் செய்ய வேண்டும். உங்களது தமிழர் புனர்வாழ்வு அமைப்பின் வாயிலாக அதிகாரபூர்வமான வேலைத்திட்டம் (project) ஒன்று தயாரித்துத் தாருங்கள். இத் திட்டம் நான்கு கோடி ரூபா வரையிலான செலவீனங்களைக் கொண்டிருக்க வேண்டும்." என்றார் அமைச்சர். அவர் கேட்டுக் கொண்டதற்கு இணங்க ஒரு மருத்துவமனை நிர்மாணத்திற்கான வேலைத்திட்டத்தைத் தயாரித்து தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் சார்பில் அமைச்சரிடம் கையளித்தேன். இறுதியாக ஒரு அரச செயலகத்தில் வைத்து நான்கு கோடி ரூபாவுக்கான காசோலை எனக்குக் கையளிக்கப்பட்டது. இந்நிதி விவகாரத்தில் அரச அதிகாரிகள் பலர் ஈடுபட்டதால், தமிழ்நாட்டு ஊடகங்களுக்குச் செய்தி கசிந்து விட்டது. மறுநாள் காலை 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' ஆங்கிலப் பத்திரிகையின் தலைப்புச் செய்தியாக இவ்விவகாரமும் அம்பலமாகியதும் அது ஒரு அரசியற் பூகம்பத்தைக் கிளப்பியது. விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டத்திற்கு தமிழ்நாட்டு அரசு நிதியுதவி செய்வதாகவும் தமிழக முதலமைச்சர் இலங்கையின் இறைமையை மீறுவதாகவும் ஜனாதிபதி ஜெயவர்த்தனா இந்தியப் பிரதமர் திரு.ரஜீவ் காந்தியிடம் கடுமையாக ஆட்சேபம் தெரிவித்தார். ரஜீவ் காந்தி உடனடியாகவே எம்.ஜி.ஆரிடம் தொடர்பு கொண்டு தமது ஆட்சேபத்தைத் தெரிவித்தார். அன்று மாலை தன்னை அவசரமாக சந்திக்குமாறு எம்.ஜி.ஆர் எனக்கு அழைப்பு விடுத்தார். கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லை என்ற கவலையோடு நான் முதலமைச்சரின் இல்லத்திற்குச் சென்றேன். அங்கு முதல்வருடன் அமைச்சர் பண்டுருட்டி இராமச்சந்திரனும் இருந்தார்.

ஆத்திரத்துடன் காணப்பட்டார் எம்.ஜி.ஆர். ஜெயவர்த்தனா ரஜீவிற்கு முறையிட்டதையும் ரஜீவ் தனக்கு ஆட்சேபனை தெரிவித்ததையும் விபரமாகச் சொன்னார். சிங்கள வெறியன் என்றும், ஈழத் தமிழர்களுக்குக் கொடுமை இழைப்பவன் என்றும் முதலில் ஜெயவர்த்தனாவைத் திட்டித்



தீர்த்தார். ரஜீவையும் விட்டு வைக்கவில்லை. துணிவில்லாதவர் என்றும் பயந்த பேர்வழி என்றும் ரஜீவிற்கும் திட்டு விழுந்தது. "ஈழத் தமிழர்களுக்கு திரட்டிய நிதியை அந்த மக்களின் உரிமைக்காகப் போராடும் விடுதலை இயக்கத்திற்கு கொடுப்பதில் என்ன தவறு? இதனைப் பிரதம மந்திரி புரிந்து கொள்கிறார் இல்லையே" என்று ஆதங்கப்பட்டார் முதல்வர்.

"அந்தக் காசோலையை வைத்திருக்கிறீர்களா? வங்கியில் போடவில்லை அல்லவா?" என்று கேட்டார்.

"அந்தக் காசோலை என்னிடம் தான் இருக்கிறது" என்றேன். அதனை அமைச்சரிடம் திருப்பிக் கொடுக்கும்படி சொன்னார்.

"நாளை இரவு வீட்டுக்கு வாருங்கள். எனது சொந்தப் பணத்திலிருந்து நான்கு கோடி தருகிறேன்" என்றார். போன உயிர் திரும்பி வந்தது போல இருந்தது. ஒரு நிம்மதிப் பெருமூச்சுடன் எம்.ஜி.ஆருக்கும் அமைச்சர் பண்டுருட்டிக்கும் நன்றி சொல்லிவிட்டுப் புறப்பட்டேன். வீடு திரும்பியதும், நடந்ததை எல்லாம் பிரபாகரனுக்கு எடுத்துச் சொன்னேன். முதல்வரின் பெருந்தன்மையைப் பாராட்டினார் பிரபாகரன். மறுநாள் இரவு எம்.ஜி.ஆரின் பாதாளப் பண அறையிலிருந்து நான்கு கோடி ரூபா புலிகளின் கைக்குக் கிட்டியது.

விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் தமிழ்நாட்டு அரசுக்கும் மத்தியில் நல்லுறவு நிலவியது. எமது இயக்கத்தின் மீதும் தலைவர் பிரபாகரன் மீதும் முதலமைச்சர் எம்.ஜி.ஆர் அவர்கள் கொண்டிருந்த அன்பும் மதிப்புமே இந்த நல்லுறவுக்கு ஆதாரமாக விளங்கியது. தமிழ் நாட்டில் எவ்வித குற்றச் செயல்களிலும் ஈடுபடாமல் எமது போராளிகள் நல்லொழுக்கத்தையும் கட்டுப்பாட்டையும் பேணிவந்தனர். இவ்விடயத்தில் திரு.பிரபாகரன் மிகவும் கண்டிப்பாக இருந்தார். ஆயினும் தமிழ்நாட்டில் செயற்பட்டு வந்த ஏனைய அமைப்புக்களைச் சேர்ந்த உறுப்பினர்கள் எவ்வித ஒழுக்கத்தையும் கட்டுப்பாட்டையும் பேணவில்லை. தமிழ் நாட்டில் இவர்களது குற்றச் செயல்களும், வன்முறைச் சம்பவங்களும், சமூக விரோதச்

செயற்பாடுகளும் தலைவிரித்தாடின. இதனால் தமிழ்நாட்டு மக்கள் மத்தியில் பொதுவாக ஈழப் போராளிகள் மீது வெறுப்புணர்வு வளரத் தொடங்கியது. பல்வேறான ஈழப் போராளி அமைப்புகள் பற்றியும் அவர்கள் மத்தியில் நில விய வேறுபாடுகளையும் புரிந்து கொள்ளத் தவறிய தமிழகப் பத்திரிகைகள் எல்லோரையுமே 'ஈழத்துப் புலிகள்' என்றும், 'ஈழத்துத் தீவிரவாதிகள்' என்றும் பொதுவாகக் கண்டனக் குரல் எழுப்பின. இதனால் எமது அமைப்பிற்குச் சிக்கல் எழுந்தது. பத்திரிகைகள் மட்டுமன்றித் தமிழகக் காவல்துறையினரும் இக் குழப்பத்திற்குள் சிக்கி எமக்கு விரோதமாகத் திரும்பினர். வன்முறைச் சம்பவங்கள் அதி-கரித்து தமிழ் நாட்டில் சட்டமும் ஒழுங்கும் பாதிக்கப்பட்ட பொழுது முதலமைச்சர் எம்.ஜி.ஆர் அவர்களுக்கும் இதுவொரு சவாலாக எழுந்தது.

ஏனைய அமைப்புகளின் வன்முறைச் சம்பவங்கள் தமிழ் நாட்டை ஆட்டிப் படைத்தன. உதாரணமாக 1984 ஆகஸ்ட் மாதம் தமிழீழ இராணுவம் என்ற குழுவின் தலைவர் தம்பாப்பிள்ளை மகேஸ்வரன், சிறீலங்கா எயர்லைன் விமானத்திற்கு குறிவைத்த வெடிகுண்டு, சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் தவறுதலாக வெடித்ததில் 30 பொதுமக்கள் கொல்லப்பட்டதுடன் 50 பேர் வரை படுகாயமடைந்தனர். இந்த வன்முறைச் சம்பவம் தமிழ்நாட்டை மட்டுமன்றி முழு இந்தியாவையுமே உலுப்பிவிட்டது. விடுதலைப் புலிகளைத் தவிர ஏனைய அமைப்புகள் இந்தியாவில் பயிற்சி எடுத்த போராளிகளை உடனடியாகத் தமிழீழக் களத்திற்கு அனுப்ப முடியவில்லை. அதற்கான போரியல் திட்டங்களும் அவர்களிடம் இருக்கவில்லை. அத்துடன் பெருந்தொகையான போராளிகளைப் பராமரிக்க அவர்களிடம் பண பலமும் இருக்கவில்லை. இதனால் சில அமைப்புகளின் கட்டுப்பாடு உடைந்தது. ஒழுங்கீனமும் சீர்கேடும் தலைதூக்கியது. இலக்கின்றி அலைந்த ஈழத்து இளைஞர்கள் சமூக விரோதச் செயல்களில் இறங்கினர். தமிழ்நாட்டுக் கிராமப் புறங்களிலுள்ள உள்ளூர் மக்கள் சிலர் கொல்லப்பட்டனர்.



வீடுகள் சூறையாடப்பட்டன. 1985 டிசம்பரில் வேதாரணியத்தில் ஆயுதம் தரித்த புளொட் உறுப்பினர்கள் உள்ளூர் விவசாயிகள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் ஒருவர் கொல்லப்பட்டும் பலர் படுகாயமடைந்தனர். எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்தது போன்று 1986ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதலாம் திகதி, தீபாவளித் தினத்தன்று சென்னை நகரின் மையத்தில் அமைந்திருக்கும் சூளைமேட்டில் ஒரு வன்முறைச் சம்பவம் நிகழ்ந்தது. இந்த வன்முறைச் சம்பவத்தின் கதாநாயகராக விளங்கியவர் டக்ளஸ் தேவானந்தா. இப்பொழுது சனநாயக வாதியாக வேடம்பூண்டு ஈ.பி.டி.பி இன் தலைவராக விளங்கும் இவர் அப்பொழுது ஈ.பி.ஆர்.எல்.எவ் இன் இராணுவப் பிரிவில் பணிபுரிந்தவர்.

ஈ.பி.ஆர்.எல்.எவ் இன் தலைமைச் செயலகம் சூளைமேட்டுப் பிரதான வீதியில் அமைந்திருந்தது. அன்று தீபாவளி பண்டிகை என்பதால் வீதியெங்கும் சனசமுத்திரம். நண்பகல் வேளை. ஓட்டோவில் தனது அமைப்பின் செயலகத்திற்கு முன்பாக வந்திறங்கினார் தேவானந்தா. ஓட்டோ கூலிக்கு பேரம் பேசியதில் எழுந்த சிறு தகராறு சொற் சண்டையாக வெடித்தது. "நான் யாரென்று தெரியுமா? காட்டுகிறேன் பார்" என்று மிரட்டியபடி தனது அமைப்பின் செயலகத்திற்குள் ஓடிய தேவானந்தா, ஒரு தானியங்கித் துப்பாக்கியுடன் திரும்பி வந்தார். துப்பாக்கியைக் கண்டதுமே ஓட்டோவை விட்டுவிட்டு ஓட்டம் பிடித்திருக்கிறான் ஓட்டோக்காரன். ஓடியவனை நோக்கித் தனது துப்பாக்கியால் தேவானந்தா சிலாவிச் சுட, துப்பாக்கி வேட்டுகள் வீதியால் சென்று கொண்டிருந்த அப்பாவிப் பொதுசனங்களைப் பதம் பார்த்தன. பத்துப் பேர் வரை படுகாயத்துடன் சாய்ந்தனர். ஒரு இளம் வழக்கறிஞர் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டார். சூளைமேடு அல்லோலகல்லோலப்பட்டது. தமிழ்நாடு எங்கும் கண்டனக் குரல்கள் எழுந்தன. ஈழப் போராளி அமைப்புகள் மீது கடும் நடவடிக்கை எடுக்குமாறு தமிழக ஊடகங்கள் வற்புறுத்தின. ஈழ விடுதலை அமைப்புகள் மீது பழிவாங்கத் தமிழக

காவற்துறையினருக்கு ஒரு அரிய வாய்ப்புக் கிடைத்தது.

எம்.ஜி.இராமச்சந்திரன் அவர்களின் நிர்வாக ஆட்சியில் சர்வ அதிகாரம் படைத்த உயர் அதிகாரியாக விளங்கியவர் பிரதிப் பொலிஸ் மாஅதிபர் திரு.கே.மோகனதாஸ். மிகக் குள்ளமாக இருந்தாலும் வல்லமை படைத்தவர். தமிழ் நாட்டில் சட்டம், ஒழுங்கிற்கு இவரே பொறுப்பதிகாரி. தமிழகப் புலனாய்வுப் பிரிவின் தலைவரும் இவரே. இவர் எம்.ஜி.ஆருக்கு விசுவாசியாகக் காட்டிக் கொண்ட போதும் இலங்கை அரசாங்கத்துடன் மிகவும் நெருக்கமான உறவை வைத்திருந்தார். ஈழப் போராளிகள் பற்றிய சகல விடயங்களையும் இலங்கைப் புலனாய்வுத் துறையினருக்குத் தகவல் கொடுத்து வந்தார். இலங்கை அரசுடன் மிகவும் நெருங்கியவர் என்பதால், ஈழப் போராளிகளுக்கு இந்திய மத்திய அரசு இராணுவப் பயிற்சி வழங்கி ஊக்குவிப்பது இவருக்குப் பிடிக்கவில்லை. இந்தியப் புலனாய்வுக் கட்டமைப்பின் உள்துறை (I.B), வெளித்துறை (RAW) பிரிவுகளைச் சேர்ந்த உயர் அதிகாரிகள் ஈழ விடுதலை அமைப்புகளுடன் இரகசியத் தொடர்புகளை வைத்திருப்பதையும் இவர் விரும்பவில்லை. எல்லாவற்றிற்கும் மேலாக முதலமைச்சர் எம்.ஜி.ஆர் அவர்கள் விடுதலைப் புலிகளுடன் கொண்டிருந்த நல்லுறவையும் இவர் வெறுத்தார். சூளைமேட்டு துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தை சாக்காக வைத்து, விடுதலைப் புலிகள் உட்பட சகல ஈழ விடுதலை அமைப்புகள் மீதும் பழிவாங்கும் நடவடிக்கையில் இறங்கினார்.

இது ஒருபுறமிருக்க, கர்நாடக மாநிலத்தின் தலைநகரான பங்களூரில் நவம்பர் 15-17 வரை சார்க் மாநாடு நடைபெறவிருந்தது. இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனா இம் மாநாட்டில் பங்குபற்ற இருந்தார். ஜனாதிபதி ஜெயவர்த்தனாவுக்கு ஈழத்துப் போராளிகளால் உயிராபத்து ஏற்படலாம் என அச்சம் கொண்ட இந்திய உள்துறை அமைச்சு தமிழ்நாட்டில் கடும் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தமிழக அரசைக் கேட்டுக் கொண்டது. இந்தக் கோரிக்கையும்



மோகனதாஸிற்கு ஒரு வாய்ப்பாக அமைந்தது. விடுதலைப் புலிகள் உட்பட தமிழ்நாடு அடங்கிலும் செயற்பட்டு வந்த சகல ஈழ விடுதலை அமைப்புகளையும் நிராயுதபாணிகளாக்க மோகனதாஸ் திட்டமிட்டார். தனது திட்டத்திற்கு "புலி நடவடிக்கை" (Operation Tiger) எனவும் பெயரிட்டார். தனது ஆயுதக் களைவு நடவடிக்கைக்கு இந்தியப் பிரதமர் ரஜீவ் காந்தியும், தமிழக முதல்வர் எம்.ஜி.ஆரும் முழு ஆதரவு தந்ததாகப் பின்பு எழுதிய ஒரு நூலில் (எம்.ஜி.ஆர் மறைந்த பின்பு, MGR: The Man and the Myth என்ற தலைப்பில் எழுதிய நூலில்) கூறுகிறார். மத்திய அரசின் அழுத்தத்திற்குப் பணிந்து ரஜீவ் காந்தியை திருப்திப்படுத்துவதற்காக மோகனதாஸின் ஆயுதக் களைவு நடவடிக்கைக்கு எம்.ஜி.ஆர் மிகவும் தயக்கத்துடன் இறங்கியதாகப் பின்பு அறிந்தோம். ஆயினும் இந் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட முறையும், தமிழகப் பொலிஸாரால் தலைவர் பிரபாகரனுக்கும் எனக்கும் இழைக்கப்பட்ட அவமானமும் எம்.ஜி.ஆரை ஆழமாகக் கவலை கொள்ளச் செய்தது.

1986 நவம்பர் 8ஆம் நாள் அதிகாலை ஆறு மணி இருக்கும். மோகனதாஸின் அதிரடிப் படைகள் ஈழப்போராளி அமைப்புகளை நிராயுதபாணிகளாக்கும் 'புலி நடவடிக்கையில்' குதித்தன. போராளிகளின் சகல வீடுகளும் பாசறைகளும் சூறையாடப்பட்டன. எனது வீட்டுக்குள் புகுந்த ஆயுதம் தரித்த காவல்துறை அணியொன்று, வீட்டைச் சல்லடை போட்டுத் தேடியது. எனது மனைவியின் கைத் துப்பாக்கியை மட்டும் அவர்களால் கைப்பற்ற முடிந்தது. தேடுதல் முடிந்ததும் என்னைக் கைது செய்து உள்ளூர் காவல் நிலையம் ஒன்றுக்கு அழைத்துச் சென்றார்கள். பல கோணத்தில் நிறுத்திப் படம் பிடித்தார்கள். கை ரேகையைப் பதிவு செய்தார்கள். தகாத வார்த்தைகளைப் பிரயோகித்து அவமானப்படுத்தினார்கள். உட்கார வைக்கவில்லை. தண்ணீர் கேட்டும் தரவில்லை. மோகனதாஸின் பணிப்பின் பேரில் திட்டமிட்டு இம்சைப்படுத்தியது போலத் தெரிந்தது. தலைவர் பிரபாகரனுக்கும் இதே கதிதான். அவரும் அவரது

வீட்டில் வைத்துக் கைது செய்யப்பட்டு வேறொரு காவல்நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார். படம் பிடித்து, கைரேகை பதிந்து, குற்றவாளியைப் போல விசாரிக்கப்பட்டு இழிவுபடுத்தப்பட்டார். பல மணி நேரமாக நிகழ்ந்த குறுக்கு விசாரணையின் பின்னர் எம்மை வீட்டுக்கு அனுப்பி வைத்தார்கள். வீட்டுக்கு முன்பாக ஆயுதம் தரித்த காவற்துறையினர் நிலையெடுத்து நின்றனர். நானும் பிரபாகரனும் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டிருந்தோம். ஆயுதக் களைவு பற்றியும், எனக்கும் பிரபாவுக்கும் இழைக்கப்பட்ட அவமானம் பற்றியும் எம்.ஜி.ஆருக்கு முறையிட நான் எடுத்த முயற்சிகள் பயனளிக்கவில்லை. எந்தக் காரணத்திற்காகவும் வீட்டை விட்டு வெளியேற முடியாது என்றார்கள். அன்றைய தினம் எம்.ஜி.ஆர் சென்னையில் இருக்கவில்லை. புதுடில்லியில் இருந்ததாகப் பின்பு அறிந்தோம்.

தலைவர் பிரபாகரன் மிகவும் கொதிப்படைந்தார். ஒரு குற்றவாளிபோல் காவல்துறையினரால் கைதாகி காவல் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு, அவமானப்படுத்தப் பட்டதை அவரால் ஜீரணிக்க முடியவில்லை. தனது சுயகௌரவத்திற்கு மட்டுமன்றி தமிழீழ மக்களின் சுதந்திர இயக்கத்திற்கும் ஏற்பட்ட இழுக்காகவும் இதனை அவர் கருதினார். தமிழ்நாட்டில் ஏனைய அமைப்புகள் புரியும் குற்றச் செயல்களுக்கும் அடாவடித்தனங்களுக்கும் விடுதலைப் புலிகள் இயக்கம் தண்டிக்கப்பட்டதை அவரால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. இந்தச் சம்பவத்தை அடுத்து தமிழ்நாட்டு அரசு மீது அவர் வைத்திருந்த நம்பிக்கை இடிந்து போனது. முதலமைச்சரின் அனுமதியின்றி இக்கைது நடவடிக்கையும் ஆயுதக் களைவும் நடைபெற்றிருக்க முடியாது எனப் பிரபாகரன் கருதினார். ஆயினும் காவல் நிலையத்தில் வைத்து பிரபாகரனையும் என்னையும் அவமானப்படுத்தியதில் மோகனதாஸிற்குப் பெரும் பங்குண்டு என்பதையும் அவர் அறிவார். எனினும் தொடர்ந்தும் தமிழ்நாட்டில் தஞ்சம் பூண்டிருப்பது ஆபத்தானது என்பதை உணர்ந்தார்.



ஈழ விடுதலை அமைப்புகளை நிராயுதபாணிகளாக்கி, அவ்வமைப்புகளின் தலைவர்களை வீட்டுக் காவலில் வைத்துவிட்டுப் பங்களூரில் சார்க் மாநாட்டிற்கான ஆயத்தங்களை செய்தது மத்திய அரசு. சார்க் மாநாட்டிற்கு ஜனாதிபதி ஜெயவர்த்தனா வருகை தர இருப்பதால் பங்களூரில் வைத்து இலங்கையின் இனப் பிரச்சினைக்கு தீர்வு காணும் ஒரு முயற்சியை மேற்கொள்வதற்கு ரஜீவ் காந்தி விரும்பினார். அக்காலகட்டத்தில் கிழக்கு மாகாணத்தை மூன்று கூறுகளாகப் பிரித்து அதிகாரப் பகிர்வு செய்யும் ஒரு தீர்வுத் திட்டத்தை இந்திய-இலங்கை அரசுகள் தயாரித்தன. தமிழ் மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட முடியாத இத்திட்டத்தைப் பங்களூரில் வைத்து விடுதலைப் புலிகளிடம் திணித்துவிட வேண்டும் என ரஜீவ் காந்தி திட்டமிட்டார். பங்களூர் மாநாட்டிற்கு ஒரு சில தினங்களுக்கு முன்பாக தலைவர் பிரபாகரனுக்கும் எனக்கும் போடப்பட்டிருந்த வீட்டுக் காவல் திடீரென நீக்கப்பட்டது. நவம்பர் 16ஆம் திகதி இரவு பிரபாகரனும் நானும் சென்னை விமான நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு அங்கிருந்த ஒரு விமானப் படை விமானத்தில் பங்களூர் கொண்டு செல்லப்பட்டோம்.

பங்களூரிலுள்ள ராஜபவனுக்கு நாம் போய்ச் சேர இரவு பத்து மணி ஆகிவிட்டது. அங்கு எம்மைச் சந்திப்பதற்காக இந்திய அரசாங்கத்தின் பிரமுகர்கள் பலர் காத்திருந்தனர். அமைச்சர் நட்வார் சிங், வெளிவிவகாரச் செயலர் வெங்கடேஸ்வரன், இலங்கைக்கான இந்தியத் தூதுவர் திரு. ஜே.என்.டிக்சிட், வெளிவிவகார அமைச்சைச் சேர்ந்த குல்திப் சகாதேவ், மற்றும் இந்தியப் புலனாய்வுத்துறை உயர் அதிகாரிகள் ஆகியோர் அங்கிருந்தனர். நாம் அங்கு சென்றதுமே முதலில் திரு. டிக்சிட் எம்மை வரவேற்று நாம் எதற்காக அழைக்கப்பட்டிருக்கிறோம் என்பதைக் கூறி, கிழக்கு மாகாணத்தைக் கூறுபோடும் தீர்வுத் திட்டம் பற்றி ஒரு விளக்கமும் தந்தார். ஏற்கனவே அவமானப்பட்டு நொந்து போயிருந்த எமக்கு, ஏற்கமுடியாத ஒரு தீர்வுத் திட்டத்தை

இந்தியத் தூதுவர் திணிக்க முயன்றது கடும் சினத்தை ஏற்படுத்தியது. கடுமையான தொனியில் ஒரே வசனத்தில் பதிலளித்தார் பிரபாகரன். "தமிழர் தாயகத்தைப் பிரிக்கவும் முடியாது, பிரிக்கவும் விடமாட்டோம்" என்று அடித்துச் சொன்னார். கிழக்கு மாகாண வரை படத்தைச் சுட்டிக் காட்டி, விளக்கங்கள் கூறி, ஏதோவெல்லாம் அலம்பிக் கொண்டிருந்தார் டிக்சிட். எதிலுமே அக்கறை காட்டாது, பதிலும் கூறாது, இறுக்கமாக மௌனம் சாதித்தார் பிரபா. இறுதியில் நான் குறுக்கிட்டு, "எமது இயக்கத்தின் நிலைப்பாட்டை இரத்தினச் சுருக்கமாகச் சொல்லவிட்டார் திரு.பிரபாகரன். தமிழர் தாயகத்தைக் கூறுபோடும் எந்தத் திட்டத்தையும் நாம் ஏற்கப்போவதில்லை. இது பற்றிக் கதைத்தும் பலனில்லை" என்றேன். என்னையும் பிரபாவையும் முறைத்துப் பார்த்துவிட்டு அங்கிருந்து சென்றார் டிக்சிட். இந்தியத் தூதுவரின் முயற்சி தோல்வியில் முடிந்ததும், அடுத்ததாக திரு.வெங்கடேஸ்வ ரனைக் களத்தில் இறக்கினார்கள். ரஜீவ் காந்தியின் நிர்வாகத்திலுள்ள ஒரு முக்கிய தமிழ் அதிகாரி என்பதால் அவர் மூலம் ஏதாவது சாதிக்கலாம் என எண்ணினார்கள் போலும். திரு.வெங்கடேஸ்வரன் மிகவும் அன்பாகவும் பண்பாகவும் கதைத்தார். எமது நிலைப்பாட்டை இந்தியத் தூதுவர் தமக்கு எடுத்துரைத்ததாகச் சொன்னார். ஆயினும் இப்பொழுது முன்வைக்கப்படும் தீர்வுத் திட்டம் நிரந்தரமான-தன்று என்றும் ஒரு இடைக்கால ஒழுங்கு என்றும் விளக்கினார். இலங்கையின் இனப்பிரச்சினைக்கு வெகு விரைவில் ஒரு தீர்வு காணப்படவேண்டும் என்பதில் ரஜீவ் ஆர்வமாக இருக்கிறார். இந்த சார்க் மாநாட்டில் ஒரு தீர்வு எட்டப்படுமானால் அது அவருக்கு ஒரு பெரிய அரசியல் - இராஜதந்திர வெற்றியாக அமையும் என்றார். இப்படியெல்லாம் கூறிவிட்டு எமது நிலைப்பாட்டை மறுபரிசீலனை செய்யுமாறு கேட்டார். பிரபாகரனுக்குக் கோபம் வந்துவிட்டது. "ரஜீவ் காந்தியைத் திருப்திப்படுத்துவதற்காக எமது விடுதலைப் போராட்டத்தை விற்கவா சொல்கிறீர்கள்?" என்று கடிந்து சொன்னார்.



வெங்கடேஸ்வரன் மலைத்துப் போனார். "எனக்கு உங்களது மனநிலை புரிகிறது" என்று சொல்லி ஒருவாறு சமாளித்துக் கொண்டு விடைபெற்றார். அடுத்ததாக, இந்தியப் புலனாய்வுத் துறை அதிகாரிகள் வந்தார்கள். எவ்வளவோ முயற்சித்துப் பார்த்தார்கள். முடியவில்லை. பிரபாகரனை நெகிழ்வுபடுத்தும் இறுதி ஆயுதமாக எம்.ஜி.ஆரைப் பயன்படுத்த முடிவாகிற்று. மறுநாள் தமிழக முதல்வர் பங்களூருக்கு அழைக்கப்பட்டார்.

தலைவர் பிரபாகரனும் நானும் முதலமைச்சர் எம்.ஜி.ஆர் அவர்களைச் சந்தித்தபொழுது, அவரோடு அமைச்சர் பண்டுருட்டி இராமச்சந்திரனும் இருந்தார். நாம் எமது நிலைப்பாட்டை அவருக்குத் தெளிவாக விளக்கினோம். வரலாற்று ரீதியாக தமிழ் மக்கள் வாழ்ந்து வரும் தாயக பூமியைக் கூறுபோடும் திட்டம் ஒன்றைத் தயாரித்து அதனை எம் மீது திணித்து விட ரஜீவ் அரசு முயற்சிக்கிறது என்பதைக் கூறி, இத்திட்டத்தை எம்மால் ஏற்க முடியாது என உறுதிபடக் கூறினோம். எமது வாதத்தை எம்.ஜி.ஆர் பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருந்தார். எமது நிலைப்பாட்டை ஏற்றுக் கொள்வது போன்று இடையிடையே தலையையும் அசைத்துக் கொண்டார். நாம் பேசி முடித்ததும், அமைச்சர் பண்டுருட்டியைப் பார்த்து, "ஈழத் தமிழர் வாழும் பிரதேசத்தை எதற்காகக் கூறுபோட்டுப் பிரிக்க வேண்டும்" என்று கேட்டார் எம்.ஜி.ஆர்.

"கிழக்கு மாகாணத்தில், திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை போன்ற மாவட்டங்கள் இருக்கின்றன. அங்கெல்லாம் தமிழர்களுடன் சிங்களவர்களும் முஸ்லிம்களும் வாழ்ந்து வருகிறார்கள். அதனால்தான் கிழக்கு மாகாணத்தைக் கூறுபோட முனைகிறார்கள்" என்றார் அமைச்சர். உடனே நான் குறுக்கிட்டு, "கிழக்கில் தமிழ் பேசும் முஸ்லிம் மக்கள் வாழ்கிறார்கள் என்பது உண்மைதான். ஆனால் கிழக்கில் பெரும்பான்மையான சிங்களவர்கள் பலவந்தமாகச் சிங்கள ஆட்சியாளர்களின் உதவியுடன் தமிழர் நிலத்தில்

குடியேற்றப்பட்டவர்கள்.'' என்றேன். எம்.ஜி.ஆர் சிறிது நேரம் சிந்தித்தார். பின்பு அமைச்சர் பண்டுருட்டியைப் பார்த்து, "தமிழர் வாழும் நிலம் தமிழருக்குச் சொந்தம். சிங்களவர்கள் வாழும் நிலம் சிங்களவர்களுக்குச் சொந்தம். அதுதானே இந்திய அரசு கூறும் நியாயம்'' என்று கேட்டார். அதற்கு ஆமாப் போட்டார் அமைச்சர்.

எம்.ஜி.ஆருக்கும் பண்டுருட்டியாருக்கும் மத்தியிலான விவாதம் ஒரு விசித்திரமான திசையை நோக்கி நகர்ந்தது. எம்.ஜி.ஆர் கேள்விகளை அடுக்கிச் செல்ல 'ஆமா' போட்டுக் கொண்டிருந்தார் அமைச்சர்.

"வடக்குக் கிழக்கில் பெரும்பான்மையாக வாழ்பவர்கள் யார்? தமிழர்கள் அல்லவா?''

"ஆமா சார்''

"தென் இலங்கையை எடுத்துக் கொண்டால், மலைநாட்டில் பொரும்பான்மையாக வாழ்பவர்கள் யார்? தமிழர்கள் அல்லவா?''

"ஆமா சார்''

"தென்னிலங்கைத் தலைநகரான கொழும்பில் பெரும்பான்மையாக வாழ்பவர்கள் யார்? தமிழர்கள் அல்லவா?''

சிறிது தயக்கத்துடன் ஆமாப் போட்டார் அமைச்சர்.

"முழு இலங்கையிலும் தமிழர்கள்தானே பரவலாக வாழ்கிறார்கள் இல்லையா?''

"ஆமா சார்''

"அப்படிப் பார்த்தால், இந்திய அரசின் நியாயப்படி, முழு இலங்கைத் தீவும் தமிழர்களுக்குத் தானே சொந்தமாக்கப்பட வேண்டும். பின்பு எதற்காக தமிழர் நிலத்தைப் பிரிக்க வேண்டும்? முழு இலங்கையையும் புலிகளுக்கு அல்லவா கொடுக்க வேண்டும்?'' என்றார் எம்.ஜி.ஆர். சொல்வது தெரியாது தடுமாறினார் பண்டுருட்டியார்.

"என்ன நான் சொல்வதில் நியாயம் இருக்கிறது தானே?'' என்று கூறி அமைச்சரைப் பார்த்தார் எம்.ஜி.ஆர். இம்முறை பண்டுருட்டியாரின் அடித் தொண்டையிலிருந்து



"ஆமா'' என்ற சொல் ஆர்வமிழந்து அரைகுறையாக வெளிவந்தது.

நானும் பிரபாவும் எதுவுமே பேசவில்லை. மௌனமாக இருந்து, உரையாடலை ரசித்துக் கொண்டிருந்தோம். எம்.ஜி.ஆர் எம்மைப் பார்த்து, "நீங்கள் போகலாம். இந்தியாவின் யோசனையை ஏற்கமுடியாது என நீங்கள் கருதினால், ஏற்க வேண்டாம். ஏற்றுக் கொள்ளும்படி நான் வற்புறுத்த மாட்டேன்'' என்றார்.

எம்.ஜி.ஆருக்கு நன்றி கூறிவிட்டு, அவரது அறையிலிருந்து வெளியேறி நடந்து கொண்டிருந்த பொழுது, எம்மை அழைத்தவாறு அமைச்சர் பண்டுருட்டி எமக்குப் பின்னால் ஓட்டமும் நடையுமாக வந்து சேர்ந்தார். "முழு இலங்கையையும் புலிகளுக்குக் கொடுக்க வேண்டும் என்று தலைவர் சொன்னார் அல்லவா? அதனை சீரியஸாக எடுக்க வேண்டாம். ஒரு வாதத்திற்காக அப்படிச் சொன்னார். தயவு செய்து பத்திரிகையாளர்களிடம் இது பற்றிக் கதைக்க வேண்டாம்.'' என்று மன்றாட்டமாகக் கேட்டார். நாம் அதற்கு இணக்கம் தெரிவித்தோம்.

பங்களூரில் இந்திய அரசு முன்வைத்த யோசனைகளை விடுதலைப் புலிகள் நிராகரித்தது ரஜீவ் காந்திக்குக் கடும் சினத்தை ஏற்படுத்தியது. சார்க் மாநாட்டின்போது, இலங்கையின் இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வை அறிவித்து, புகழ்மாலை சூட்டிக் கொள்ள விரும்பிய ரஜீவுக்குப் புலிகளின் விட்டுக்கொடாத உறுதியான நிலைப்பாடு ஏமாற்றத்தையும் ஆத்திரத்தையும் கொடுத்தது. அற்ப சொற்ப அதிகாரப் பரவலாக்கத்துடன் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு கண்டு, இலங்கை அரசைத் தனது வல்லாதிக்கத்தின் கீழ் கொண்டு வர விரும்பிய இந்திய அரசுக்கு விடுதலைப் புலிகள் இயக்கம் ஒரு சவாலாக நின்றது. தமிழர் விடுதலைக் கூட்டணியும் ஏனைய போராளி அமைப்புகளின் தலைவர்களும் இந்திய அழுத்தத்திற்குப் பணிந்து போகத் தயாராக இருக்கும் பொழுது, தலைவர் பிரபா மட்டும் வணங்கா முடியாக, கொண்ட இலட்சியத்தில் உறுதி பூண்டு நிற்பது இந்திய ஆட்சியாளருக்கு எரிச்சலை

ஊட்டியது. இந்தியாவில் பயிற்சி எடுத்து, இந்திய மண்ணில் பயிற்சிப் பாசறைகளை அமைத்து, இந்தியாவில் வாழ்ந்து கொண்டு, இந்திய அழுத்தங்களை எதிர்க்கத் துணிந்த பிரபாகரனுக்கு ஒரு பாடம் புகட்ட வேண்டுமென ரஜீவ் ஆட்சிப் பீடம் எண்ணியது. இதன் அடிப்படையில் பிரபாகரன் பாவித்து வந்த மிக நவீனகரமான, விலையுயர்ந்த தொலைதொடர்புச் சாதனங்களைப் பறிமுதல் செய்து, விடுதலைப் புலிகளின் தலைமைக்கும், தமிழீழ களத்திற்கும் மத்தியிலான தகவல் தொடர்புகளைத் துண்டித்துவிட மத்திய அரசு முடிவெடுத்தது. தமிழீழ சுதந்திரப் போராட்டத்திற்கும் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் எதிராகச் செயற்பட்ட தமிழ்நாட்டுப் புலனாய்வுப் பிரிவின் அதிபரான உதவிப் பொலிஸ் மாஅதிபர் மோகனதாஸின் உதவியுடன் இந்நடவடிக்கை நிறைவேற்றப்பட்டது.

தனது தொலைதொடர்புச் சாதனங்கள் பறிமுதல் செய்யப்பட்டதை அறிந்ததும் கடும் சினம் கொண்டவராக எனது வீட்டுக்கு வந்தார் பிரபாகரன். "நரம்பு மையத்தில் கைவைத்து விட்டார்கள். இதனை அனுமதிக்க முடியாது. எப்படியாவது, இந்தக் கருவிகளைத் திருப்பிப் பெற வேண்டும்" என்றார். தமிழீழக் களத்துடனும், அனைத்துலக கிளைகளுடனும் திடீரென தொடர்புகள் துண்டிக்கப்பட்டமை பிரபாகரனுக்கு ஆத்திரத்தை மூட்டியதுடன் இந்தியா மீதுள்ள நம்பிக்கையையும் முற்றாகத் தகர்த்தது. முதலமைச்சர் எம்.ஜி.ஆர் மீதும் அவருக்குக் கோபம். முதல்வரின் அனுமதியின்றி தமிழ்நாட்டுக் காவல்துறை இந் நடவடிக்கையை எடுக்க முடியாது என அவர் கருதினார். இனித் தொடர்ந்தும் தமிழ்நாட்டில் தங்கியிருப்பது தனது உயிருக்கு ஆபத்தாக முடியும் என்றும் சொன்னார்.

பறிமுதல் செய்யப்பட்ட தொலைதொடர்பு சாதனங்களைத் திருப்பித் தருமாறு கோரிக்கை விடுத்து சாகும்வரை உண்ணாவிரதம் கடைப்பிடிக்கப் போவதாகப் பிரபாகரன் முடிவெடுத்தார். உடனடியாகவே எனது வீட்டில் வைத்தே உண்ணாவிரதத்தை ஆரம்பித்தார். உணவையும் நீரையும் துறந்த கடும் விரதம். என்னால் தடுத்து நிறுத்த



முடியவில்லை. பிரபாகரன் தனது முடிவில் மிகவும் உறுதியாக நின்றார். நான் உடனடியாக பத்திரிகையாளர் மாநாட்டைக் கூட்டுவித்து, பிரபாகரனின் உண்ணாவிரதத்தை உலகிற்குத் தெரியப்படுத்தினேன். மறுநாள் காலை பிரபா-கரனின் உண்ணாவிரதப் போராட்டத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து தமிழ்நாட்டு ஊடகங்கள் செய்தியைப் பிரசுரித்தன. இதனையடுத்து தமிழ்நாட்டு அரசியல்வாதிகள், இயக்க ஆதரவாளர்கள், ஊடகவியலாளர் ஆகியோரும் தமிழீழ விடுதலை விரும்பிகளுமாக ஏராளமானோர் உண்ணாவிரதம் நடைபெற்ற எனது இல்லத்திற்கு வருகை தந்து, பிரபாகரனுக்குத் தமது நல்லாதரவைத் தெரிவித்தார்கள். வீட்டுக்கு முன்புறமாக அணி திரண்ட சனக்கூட்டம் உண்ணாவிரதத்திற்கு ஆதரவாகக் குரல் எழுப்பியது. பல்வேறு அரசியல் இயக்கங்களும், அமைப்புகளும், பத்திரிகைகளும் மத்திய, மாநில அரசுகளைக் கண்டித்து அறிக்கைகள் வெளியிட்டன. பிரபா-கரனின் உண்ணாவிரதப் போராட்டம் தமிழ்நாட்டில் ஒரு அரசியல் சூறாவளியைக் கிளப்பிவிட்டது. முதலமைச்சர் எம்.ஜி.ஆர் அவர்கள் அப்பொழுது சேலத்தில் இருந்தார். பிரபாகரனின் உண்ணாவிரதப் போராட்டம் தமிழ்நாட்டில் ஒரு அரசியல் கொந்தளிப்பை உருவாக்கியுள்ளதை அறிந்து மிகவும் கலங்கிப் போனார். விடுதலைப் புலிகளின் தொலைதொடர்புக் கருவிகள் பறிமுதல் செய்யப்பட்ட விவகாரம் தமக்குத் தெரியாது என அறிக்கை வெளியிட்ட அவர் புதுடில்லி மீது பழியைச் சுமத்தினார். பதிலுக்கு மத்திய அரசு தமிழ்நாட்டு அரசு மீது குற்றம் சுமத்தியது.

ஈழ மக்களின் விடுதலைப் போராட்டம் தமிழ்நாட்டில் மிகவும் பிரபல்யம் பெற்றிருந்த காலகட்டம் அது. சிங்கள அரச ஒடுக்குமுறையிலிருந்து ஈழத்தமிழர்கள் விடுதலை பெற வேண்டும் என்பதில் தமிழ்நாட்டுத் தமிழர்கள் பெரும் ஆர்வமும் அக்கறையும் கொண்டிருந்தனர். விடுதலைப் புலிகள் சுதந்திர வீரர்களாக மதிக்கப்பட்டனர். தலைவர் பிரபாகரன் ஒரு வரலாற்று நாயகனாகப் போற்றப்பட்டார். அப்படிப்பட்ட ஒரு மாபெரும் வீரன் தமிழ் நாட்டு அரசிடம்

நீதி கேட்டு, மகாத்மா காந்தியின் அகிம்சை வழியில் சாகும் வரை உண்ணாவிரதம் கடைப்பிடித்து வருவதனை அறிந்ததும் தமிழ்நாட்டு மக்கள் கொதிப்படைந்தனர். எம்.ஜி.ஆரின் நிர்வாகம் மீதும் குறிப்பாகத் தமிழ்நாட்டுக் காவல்துறை மீதும் வெறுப்புணர்வு பரவத் தொடங்கியது. உண்ணாவிரதம் நீடித்து பிரபாகரனுக்கு ஏதாவது ஆபத்து நேர்ந்தால் அதன் அரசியல் விளைவுகள் படுபாதகமாக அமையும் என எம்.ஜி.ஆர் பயந்தார்.

பிரபாவின் சாகும் வரை உண்ணாவிரதத்தின் இரண்டாவது நாள். முதலமைச்சரிடமிருந்து எனக்கு ஒரு அவசரத் தகவல் வந்தது. உடனடியாக தம்முடன் தொலைபேசியில் தொடர்பு கொள்ளுமாறு கேட்டிருந்தார். எனது வீட்டிற்கு அருகிலுள்ள எமது அரசியற் செயலகத்திற்குச் சென்று எம்.ஜி.ஆருடன் தொலைபேசியில் கதைத்தேன். முதலில் பிரபாவின் உடல்நிலைபற்றி மிகவும் பரிவோடு விசாரித்தார். மிகவும் சோர்ந்து போய் இருக்கிறார் என்றும், உண்ணாவிரதம் நீடித்துச் சென்றால் உடல்நிலை மோசமடையும் என்றும் சொன்னேன். முதலில் உண்ணாவிரதத்தை நிறுத்துமாறு பிரபாகரனுக்கு ஆலோசனை வழங்கும்படி என்னைக் கேட்டுக் கொண்டார். தாம் சென்னைக்குத் திரும்பியதும் எம்மை நேரில் சந்தித்து பிரச்சினை பற்றிப் பேசுவதாகச் சொன்னார். பிரபாகரன் ஒரு முடிவு எடுத்தால் அதிலிருந்து பின்வாங்க மாட்டார் என்பதை முதல்வருக்குத் தெளிவாக விளக்கினேன்.

"தமிழ்நாட்டு அரசு தனக்கு அநீதி இழைத்துவிட்டதாக பிரபாகரன் கருதுகிறார். தொலைதொடர்புக் கருவிகளைப் பறித்து, தாயகக் களத்துப் போராளிகளுடன் தொடர்பைத் துண்டித்தது மிகவும் பாரதூரமான பழிவாங்கும் நடவடிக்கை என எண்ணி அவர் மிகவும் வேதனை அடைந்து இருக்கிறார். தொலைதொடர்பு சாதனங்கள் திருப்பி ஒப்படைக்கப்பட்டாலன்றி அவர் உண்ணாவிரதத்தைக் கைவிடப் போவதில்லை" என்று கூறினேன். முதலமைச்சர் சிறிது நேரம் மௌனம் சாதித்தார். ஏதோ ஆழமாகச் சிந்திப்பது போல் தெரிந்தது.



காவல்துறையினருடன் கலந்தாலோசித்துவிட்டு மீண்டும் தொடர்பு கொள்வதாகச் சொன்னார். எம்.ஜி.ஆருடன் கதைத்த விபரத்தை பிரபாகரனுக்கு எடுத்துக் கூறினேன். முதலமைச்சரின் பதிலுக்காகக் காத்திருந்தோம். சில மணிநேரத்தின் பின் தன்னுடன் தொடர்பு கொள்ளுமாறு எம்.ஜி.ஆர் தகவல் அனுப்பியிருந்தார். "உங்களது தொலைதொடர்புச் சாதனங்களை உங்களிடம் திருப்பி ஒப்படைக்குமாறு நான் காவல்துறையினரைப் பணித்திருக்கிறேன். ஒரு சில தினங்களுக்குள் அவற்றைத் திருப்பித் தருவார்கள். உடனடியாகத் தம்பி பிரபாகரனை உண்ணாவிரதத்தைக் கைவிடுமாறு சொல்லுங்கள்" என்று கேட்டுக்கொண்டார். நான் அவருக்கு நன்றி தெரிவித்து விட்டு, பிரபாகரனிடம் சென்று தகவலை அறிவித்தேன்.

எம்.ஜி.ஆர் அளித்த வாக்குறுதி பிரபாகரனைத் திருப்திப்படுத்தவில்லை. தமிழ்நாட்டுக் காவல்துறையினரை, குறிப்பாக மோகனதாஸை அவர் நம்பத் தயாராக இல்லை. உண்ணாவிரதத்தைக் கைவிட்டதற்கு அப்புறம் தொலைதொடர்புச் சாதனங்களை காவற்துறையினர் திருப்பி ஒப்படைக்க மறுத்தால் என்ன செய்வது எனக் கேள்வி எழுப்பினார். பிரபாகரனது வாதத்தில் ஒரு நியாயப்பாடு இருப்பதாக எனக்குத் தோன்றியது. "எனது தொலைதொடர்பு சாதனங்கள் நேரடியாக என்னிடம் திருப்பி ஒப்படைக்கப்படும் வரை உண்ணாவிரதத்தை நான் கைவிடப் போவதில்லை. இதனை முதலமைச்சரிடம் சொல்லுங்கள்" என்றார். மீண்டும் எம்.ஜி.ஆருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பிரபாகரனின் நிலைப்பாட்டை எடுத்து விளக்கினேன். எம்.ஜி.ஆருக்கு நிலைமை புரிந்தது. தமிழக காவல்துறையினர் மீது பிரபாகரன் கசப்புணர்வுடன் இருப்பதன் காரணத்தையும் அவரால் உணர்ந்து கொள்ள முடிந்தது. பிரபாகரன் விரும்பியபடியே செய்கிறேன் என்றார்.

அன்று மாலை பறிமுதல் செய்யப்பட்ட தகவல் தொடர்பு சாதனங்கள் அனைத்தும் திருப்பி ஒப்படைக்கப்பட்டன. இந்த சாதனங்களை எனது வீட்டுக்குள் சுமந்து வந்த தமிழக காவல்துறை அதிகாரிகள் அவற்றை

பிரபாகரன் முன்பாக வைத்தார்கள். மிகவும் சோர்ந்து போயிருந்த பிரபாகரனது முகத்தில் லேசாக ஒரு புன்னகை மலர்ந்தது. பிரபாகரனது நாற்பத்து எட்டு மணி நேர உண்ணாவிரதம் முடிவுக்கு வந்தது. திராவிடக் கழகத் தலைவர் வீரமணி அவர்கள் பழச்சாறு ஊட்ட, அங்கு குழுமியிருந்த பெருந்திரளான ஆதரவாளர்கள், போராளிகள், பத்திரிகையாளர்கள் மகிழ்ச்சி ஆரவாரம் தெரிவிக்க, அந்த வரலாற்று நிகழ்வு முடிவுக்கு வந்தது.

ஒரு சில வாரங்களுக்குப் பின்னர் முதலமைச்சர் எம்.ஜி.ஆர் அவர்கள் தலைவர் பிரபாகரனையும் என்னையும் பறங்கி மலையிலுள்ள தனது இல்லத்திற்கு அழைத்தார். எம்மைக் கைது செய்து அவமானப்படுத்தியது, எமது ஆயுதங்களையும் பின்பு தொலைதொடர்பு சாதனங்களையும் பறித்தெடுத்தது சம்பந்தமாக நீண்ட நேரம் கலந்துரையாடல் நிகழ்ந்தது. தனது மனவேதனைகளை மனம் திறந்து கொட்டினார் பிரபாகரன். உதவிப் பொலிஸ் மாஅதிபர் திரு.மோகனதாஸ் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு விரோதமானவர் என்றும் விடுதலைப் புலிகள் இயக்கத்தையும் அதன் தலைமையையும் வெறுக்கிறார் என்றும் சிங்கள அரசின் உளவுத் துறையுடன் அவருக்கு நெருங்கிய உறவுண்டு என்பதையும் விளக்கிச் சொன்னோம்.

அப்பொழுது, திரு.மோகனதாஸ் பற்றி எமக்குச் சில அந்தரங்கத் தகவல்கள் கிடைத்திருந்தன. அவர் சிங்கப்பூருக்கு அடிக்கடி பயணம் செய்து ஒரு சிங்கள உயர்தர அதிகாரியைச் சந்திப்பதாகவும், பெரும் தொகை யில் லஞ்சம் வாங்கி ஈழ விடுதலை அமைப்புகள் பற்றித் தகவல்களைப் பரிமாறுவதாகவும் மிகவும் நம்பிக்கைக்குரிய மலையாளப் பத்திரிகையாளர் ஒருவர் எமக்குத் தெரிவித்திருந்தார். இந்த விபரங்களை எல்லாம் நாம் முதலமைச்சருக்கு தெரிவித்தோம். நாம் கூறியதையெல்லாம் மிகவும் ஆர்வமாகவும் உன்னிப்பாகவும் கேட்டுக் கொண்டிருந்தார் எம்.ஜி.ஆர். நாம் கொடுத்த தகவல்கள் முதலமைச்சருக்கும் மோகனதாசுக்கும் மத்தியில் பெரிய விரிசலை ஏற்படுத்தியது என்பதை பின்பு அறிந்தோம்.



எம்.ஜி.ஆருடனான அன்றைய சந்திப்பு எமக்குச் சாதகமாக அமைந்தது. விடுதலைப் புலிகளிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்ட ஆயுதங்கள் அனைத்தையும் திருப்பி ஒப்படைக்குமாறு தமிழக காவல்துறையினருக்கு உத்தர விட்டார் எம்.ஜி.ஆர். எமது இயக்கத்திடமிருந்து பறிக்கப்பட்ட ஆயுதங்கள் மிகவும் சொற்பம். இந்திய அரசிடமிருந்தும் வெளியுலகத்திடமிருந்தும் பெறப்பட்ட ஆயுதங்களில் பெரும்பாலானவற்றை நாம் ஏற்கனவே தமிழீழத்திற்கு அனுப்பியிருந்தோம். ஏனைய அமைப்புகளிடமிருந்தே ஏராளமான ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன. மொத்தம் நாற்பது கோடி பெறுமதியான ஆயுதங்களைக் கைப்பற்றிய-தாக திரு.மோகனதாஸ் அறிவித்திருந்தார். ஏனைய அமைப்புகளிடமிருந்து பெறப்பட்ட ஆயுதங்களையும் புலிகளிடம் ஒப்படைக்குமாறு கேட்டோம். எவ்வித தயக்கமுமின்றி அதற்கு இணங்கினார் எம்.ஜி.ஆர். ஏனைய அமைப்புகளிடமிருந்து பறிமுதல் செய்த சகல ஆயுத தளபாடங்களையும் விடுதலைப் புலிகளிடம் திருப்பி ஒப்படைக்கும் பொறுப்பும் திரு.மோகனதாஸிடம் கையளிக்கப்பட்டது. எமக்கு மட்டற்ற மகிழ்ச்சி. ஆயுதப் பறிமுதல் அதிர்ஷ்டத்தில் முடிந்தது என எண்ணிக் கொண்டோம்.

முதலமைச்சர் எம்.ஜி.ஆரின் அன்பும் ஆதரவும் இருந்தபோதும், தமிழ்நாட்டில் தங்கியிருந்து இந்திய அரசின் அழுத்தங்களுக்கு ஆளாவதை தலைவர் பிரபாகரன் விரும்பவில்லை. இந்திய ஆதிக்கப் பிடியிலிருந்து விடுபட்டு, தமிழீழத்தில் சுதந்திரமாக இயங்கி போராட்டத்தை முன்னெடுப்பதையே அவர் விரும்பினார். யாழ்ப்பாணம் செல்வதற்கான இரகசியத் திட்டங்கள் தீட்டப்பட்டன. 1987ஆம் ஆண்டு ஜனவரி முற்பகுதியில் பிரபாகரன் தமிழீழம் சென்றடைந்தார். நானும் அடேலும் தொடர்ந்தும் சென்னையில் தங்கியிருந்து அரசியற் பரப்புரைப் பணியில் ஈடுபட்டிருந்தோம். பிரபாகரன் யாழ்ப்பாணம் சென்றுவிட்டார் என்ற செய்தி தமிழகப் பத்திரிகைகளில் பிரசுரமாகியதை அடுத்து முதலமைச்சர் என்னை அவசரமாக அழைத்தார்.

எம்.ஜி.ஆர் அவர்களுடன் திரு.சிதம்பரமும் இருந்தார். அப்பொழுது சிதம்பரம் இந்திய மத்திய அரசின் ஒரு முக்கிய அமைச்சராகப் பணிபுரிந்தார். பிரதமர் ரஜீவ் காந்திக்கு மிகவும் நெருக்கமானவர். இலங்கையின் இனப் பிரச்சினை குறித்து ரஜீவிற்கு ஆலோசனையும் வழங்கி வந்தார். மத்திய அரசின் தூதுவராக ஏதோ பிரச்சினையுடன் வந்திருக்கிறார் என எண்ணினேன்.

புன்முறுவலுடன் என்னை வரவேற்ற எம்.ஜி.ஆர் தனக்கு முன்பாக அமரச் சொன்னார். நான் அமர்ந்த அந்தக் கணமே திரு.சிதம்பரம் என் மீது சீறி விழுந்தார். "நீங்கள் நன்றிக் கடன் உள்ளவர்களா? உங்களுக்கு பொறுப்புணர்வு ஏதாவது உண்டா?" என்று கதறினார். எதற்காக இப்படி ஆத்திரப்படுகிறார். முதலில் எனக்கு ஒன்றும் புரியவில்லை.

"உங்களது இயக்கத்திற்கு இந்திய அரசு எத்தனையோ உதவிகளைச் செய்திருக்கிறது. உங்களுக்கு புகலிடம் தந்து, உங்களது போராளிகளுக்குப் பயிற்சி கொடுத்து, ஆயுதங்கள் கொடுத்து உதவி செய்யவில்லையா? இப்பொழுதும் கூட ஈழத் தமிழரின் பிரச்சினைக்குச் சமாதான வழியில் தீர்வுகாண இந்திய அரசு எத்தனையோ முயற்சிகளை எடுத்து வருகிறது. இப்படி எல்லாம் நாம் செய்தபோதும் நீங்கள் எமக்கு விரோதமாகச் செயற்படுகிறீர்கள். இந்திய அரசுக்கு நீங்கள் எந்த வகையிலும் ஒத்துழைப்புத் தரவில்லை." என்றார் அமைச்சர் சிதம்பரம். நான் மௌனமாகக் கேட்டுக்கொண்டிருந்தேன்.

"இப்பொழுது உங்களது தலைவர் பிரபாகரன் எங்கே இருக்கிறார்? திடீரென மாயமாக மறைந்து விட்டார். யாருக்கும் தெரிவிக்காமல் யாழ்ப்பாணம் சென்றுவிட்டாராமே? இப்படிச் செய்வது சரியா? மத்திய அரசுக்குத் தெரியப்படுத்தாதது பரவாயில்லை. ஆனால் தமிழ்நாட்டு அரசுக்காவது தெரியப்படுத்தியிருக்கலாம் அல்லவா? அப்படித்தான் செய்யாவிட்டாலும் முதலமைச்சருக்காவது சொல்லியிருக்கலாம் அல்லவா? முதலமைச்சர் உங்களுடன் எவ்வளவு நெருக்கமாக இருக்கிறார். ஆதரவாக இருக்கிறார். அவருக்காவது தெரியப்படுத்தியிருக்கலாம் அல்லவா? அப்படிச் செய்யாதது பெரிய தவறு" என்றார் திரு.சிதம்பரம். முதலமைச்சருடன் முடிந்துவிடப் பார்க்கிறார் என்பது தெளிவாகியது. எம்.ஜி.ஆர் எதுவுமே பேசவில்லை. என்னைப் பரிதாபமாகப் பார்த்துக் கொண்டிருந்தார்.



"எண்பத்து மூன்று இறுதிப் பகுதியிலிருந்து பல வருடங்களைப் பிரபாகரன் இந்தியாவில் கழித்துவிட்டார். அவர் இங்கு தஞ்சம் கேட்டு வரவில்லை. இராணுவப் பயிற்சித் திட்டம் சம்பந்தமாக இந்திய அரசின் அழைப்பின் பேரில்தான் அவர் இங்கு வந்தார். இங்கு தங்கியிருந்த காலத்தில் பல கசப்பான அனுபவங்களையும் பெற்றார். இப்பொழுது போராட்ட களத்திற்குச் செல்ல வேண்டிய காலமும் வரலாற்றுத் தேவையும் அவருக்கு ஏற்பட்டு விட்டது. தமிழீழக் களத்திலிருந்துதான் எமது மக்களின் உரிமைப் போராட்டத்தை அவர் முன்னெடுக்க விரும்புகிறார். அதனால்தான் அவர் தாயகம் செல்ல வேண்டி நேர்ந்தது. சென்னையிலிருந்து யாழ்ப்பாணம் செல்வது மிகவும் ஆபத்தான பயணம். தரைப் பாதை மட்டுமன்றி, கடல் கடந்தும் செல்ல வேண்டும். பிரபாகரனுக்குப் பல எதிரிகள் இருக்கிறார்கள். அவருக்கு விரோதமாகப் பல சக்திகள் செயற்படுகின்றன. ஏனைய போராளி அமைப்புகளும் அவரைப் பழி தீர்ப்பதற்காக வெறிகொண்டு அலைகின்றன. இப்படியான சூழ்நிலையில் பிரபாகரனின் பாதுகாப்புக் கருதியே அவரது பயணத்தை இரகசியமாக வைத்திருக்க எமது இயக்கம் முடிவெடுத்தது." இப்படியாக ஒரு விளக்கம் கொடுத்தேன்.

அமைச்சர் சிதம்பரம் என்னை விட்டபாடில்லை. "சரி, பிரபாகரன் தான் பாதுகாப்புக் கருதி அவசரமாக, இரகசியமாக யாழ்ப்பாணம் போய்விட்டார். நீங்களாவது முதலமைச்சருக்கு அத்தகவலைத் தெரிவித்திருக்கலாம் அல்லவா?" என்று கூறி என்னை மடக்க முயன்றார். முதலமைச்சரும் என்னைக் கேள்விக் குறியுடன் நோக்கினார். உண்மையைச் சொல்வதுதான் ஒரே வழியாகத் தென்பட்டது.

முதலமைச்சரைப் பார்த்துச் சொன்னேன். "சார், பிரபாகரன் யாழ்ப்பாணம் சென்றது உண்மையில் எனக்கும் தெரியாது. அவர் எனக்கும் கூட தெரியப்படுத்தவில்லை. மிகவும் இரகசியமான காரியங்களை இரகசியமாக செய்து முடிப்பதுதான் எமது இயக்கத்தின் மரபு. நேற்றுத்தான் எனக்கு யாழ்ப்பாணத்திலிருந்து தகவல் அனுப்பியிருந்தார் பிரபாகரன். உங்களுக்கு அறிவிக்குமாறு பணித்திருந்தார். நான் உங்களுக்கு அறிவிப்பதற்கு முன்னராக நீங்கள் என்னை இங்கு அழைத்து விட்டீர்கள்." என்றேன். சகுனியார் வாயடைத்துப் போய் இருந்தார்.

முதலமைச்சருக்கு நிலைமை புரிந்தது. தலைவர் பிரபாகரன் தாயகம் திரும்பியதன் அவசியத்தை அவர் உணர்ந்து கொண்டார். அந்தப் பயணம் குறித்து இரகசியம் பேணப்பட்டதையும் அவர் புரிந்து கொண்டார். மத்திய அமைச்சர் சிதம்பரம் முடிந்துவிட முனைகிறார் என்பதையும் விளங்கிக் கொண்டார்.

"பிரபாகரன் சௌக்கியமாக இருக்கிறாரா?" என்று கேட்டார் எம்.ஜி.ஆர். "ஆமா சார்" என்றேன்.

"அவரைப் பாதுகாப்பாக இருக்கச் சொல்லுங்கள்" என்றார். நான் விசாரித்ததாகவும் சொல்லுங்கள்" என்றார். சந்திப்பு சுமுகமாக முடிந்தது. முகத்தை தொங்கப் போட்டபடி இருந்தார் சிதம்பரம்.

1987ஆம் ஆண்டு ஜுலை மாதம், இந்திய - இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுவதற்கு ஒரு சில நாட்களுக்கு முன்பாக நானும் பிரபாகரனும் முதலமைச்சர் எம்.ஜி.ஆரைப் புதுடில்லியில் சந்தித்தோம். அதுவே எமது கடைசிச் சந்திப்பாக அமைந்தது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் நிகழ்ந்த இறுதிச் சந்திப்பிலும் எம்.ஜி.ஆர் அவர்கள் எமக்கு அனுசரணையாக நின்று எமது நிலைப்பாட்டை ஆதரித்தார். புதுடில்லியில் நிகழ்ந்த அந்தச் சந்திப்பின் பின்னணியே ஒரு விசித்திரமான கதை.

1987 ஜுலை மாதம் 24ஆம் திகதி. தலைவர் பிரபாகரன், யோகரத்தினம் யோகி, திலீபன் ஆகியோருடன் கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்தின் முதற் செயலர்



ஹர்தீப் பூரியையும் ஏற்றிக் கொண்டு இந்திய விமானப் படையின் உலங்குவானூர்தி ஒன்று சுதுமலை அம்மன் கோவில் மைதானத்திலிருந்து சென்னை புறப்பட்டது. பிரபாகரனும் அரசியல் துறையைச் சேர்ந்த போராளிகளும் மீனம்பாக்கம் விமான நிலையத்திற்கு அழைத்து வரப்படுகிறார்கள் என்றும், அங்கு சென்று அவர்களைச் சந்திக்குமாறும் எனக்குத் தகவல் தரப்பட்டது. மீனம்பாக்கம் சென்றபொழுது அவர்கள் எனக்காகக் காத்து நின்றார்கள். நாம் அவசரமாகப் புதுடில்லி செல்ல வேண்டும் என்றும், ஒரு முக்கிய விடயமாக பிரதமர் ரஜீவ் காந்தி எம்மைச் சந்திக்க விரும்புவதாகக் கூறிய இந்தியத் தூதரக அதிகாரி திரு.பூரி தம்மைக் கட்டாயப்படுத்தி அழைத்து வந்ததாகவும் பிரபாகரன் சொன்னார். இதில் ஏதோ தில்லு முல்லு இருப்பதாக எனக்குத் தோன்றியது. எனினும் இந்தியப் பிரதமர் விடுத்த அழைப்பை நிராகரிப்பது நாகரீகம் அல்ல. எதற்கும் புதுடில்லி சென்று பார்ப்போமே என நினைத்தேன். ஒரு இந்திய விமானப்படை விமானத்தில் புதுடில்லி சென்றோம். அங்கு அசோகா விடுதிக்கு அழைத்துச் செல்லப்பட்டோம்.

அது ஒரு ஐந்து நட்சத்திர விடுதி. புதுடில்லியில் மிகவும் பிரபல்யமானது. விமான நிலையத்திலிருந்து ஆயுதம் தாங்கிய காவல்துறையினரின் பாதுகாப்புடன் சென்றுகொண்டிருந்த எமது வண்டி விடுதியின் முன் வாயிலை அடைந்தபோது அங்கு பல நூற்றுக்கணக்கான இந்திய இராணுவ அதிரடிப் படையினர் (கறுப்புச் சீருடை அணிந்த கரும்பூனைகள்) விடுதிக் கட்டடத்தைச் சூழ நிற்பதைக் கண்டோம். நாம் சந்தேகத்துடன் ஒருவரை ஒருவர் பார்ப்பதைக் கண்டதும், "உங்களுக்குப் பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டிருக்கிறது" என்றார் பூரி.

கரும்பூனைகள் சூழ விடுதியின் அதியுயர் மாடிக்கு அழைத்துச் செல்லப்பட்டோம். ஆளுக்கு ஒரு அறையும், கலந்துரையாடுவதற்கு ஒரு கூடமுமாக அந்த மாடியின் ஒரு பகுதி எமக்கு ஒதுக்கப்பட்டிருந்தது. எமது அறைகளுக்கு முன்பாகவும் மாடிபூராகவும் ஆயுதம் தரித்த கரும்பூனைகள் பாதுகாப்பாக நிலையெடுத்து நின்றனர். சிறிது நேரத்தில்

இந்தியப் புலனாய்வு உயர் அதிகாரி ஒருவர் அங்கு வந்தார். எமது பாதுகாப்புக் குறித்து நாம் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருப்பதாகவும் விடுதியை விட்டு வெளியேற எமக்கு அனுமதியில்லை என்றும் தொலைபேசி மூலம் வெளியுலகத்துடன் தொடர்பு கொள்ள முடியாதென்றும் எமது நிலைமையைத் தெளிவுபடுத்தினார். சற்று நேரத்தில் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் திரு.டிக்சிட் எம்மைச் சந்திப்பார் என்றும் நாம் புதுடில்லிக்கு அழைக்கப்பட்டதன் அரசியல் காரணத்தை அவர் விளக்கிக் கூறுவார் என்றும் சொன்னார். இந்திய அரசின் பொறிக்குள் சிக்கி விட்டோம் என்பது புலனாகியது. எதுவுமே செய்யமுடியாத நிர்க்கதியான நிலை. இந்தியத் தூதுவருக்காகக் காத்திருந்தோம்.

ஒரு மணிநேரம் கழித்து, திரு.டிக்சிட் அங்கு வந்தார். முகத்தைக் கடுப்பாக வைத்துக் கொண்டு, தனது சுங்கானைப் பற்றவைத்த பின்னர் அங்கிருந்த சோபாவில் அமர்ந்தார். “இந்திய அரசுக்கும் இலங்கை அரசுக்கும் மத்தியில் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. இந்தியப் பிரதமர் திரு.ரஜீவ் காந்தி வெகு விரைவில் கொழும்பு சென்று அந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட இருக்கிறார். இந்த ஒப்பந்தம் தமிழரின் இனப் பிரச்சினைக்கு ஒரு நல்ல, நியாயமான தீர்வை வழங்குகிறது. இவ்வொப்பந்தத்தை நீங்கள் கட்டாயமாக ஏற்றுக் கொள்ள வேண்டும்.” என்று அடித்துக் கூறினார். பின்பு தனது பைக்குள்ளிருந்து ஒப்பந்தத்தின் பிரதி ஒன்றை எடுத்து என்னிடம் கையளித்துவிட்டு, அதனை மொழிபெயர்த்து பிரபாகரனுக்கு விளங்கப்படுத்துமாறு கேட்டுக் கொண்டார். இரண்டு மணி நேரத்தின் பின்பு தான் திரும்பி வருவதாகவும் அப்பொழுது ஒரு முடிவுடன் இருக்குமாறும் கூறியவர் எமது பதிலுக்காகக் காத்திராது அவசரமாக அங்கிருந்து புறப்பட்டுச் சென்றார்.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை முழுமையாக மொழிபெயர்த்து பிரபாகரனுக்கு விளங்கப்படுத்தினேன். உப்புச் சப்பற்ற மாகாண சபைத்திட்டம் ஒன்று இனப் பிரச்சினைக்கு தீர்வாக வைக்கப்பட்டிருந்தது. அரசியல்



அதிகாரங்கள் மத்திய அரசிடம் குவிக்கப்பட்டிருந்தது. வட கிழக்கு மாகாணங்கள் தற்காலிகமாக இணைக்கப்படுமென விதிக்கப்பட்டிருந்தது. மாகாண சபையைக் கலைக்கும் அதிகாரமும் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டிருந்தது. எல்லாவற்றிற்கும் மேலாக இந்த உடன்படிக்கை கைச்சாத்திட்ட 72 மணி நேரத்திற்குள் எமது ஆயுதத் தளபாடங்கள் இந்திய அமைதிப் படைகளிடம் கையளிக்கப்பட வேண்டும் என்றும் ஒப்பந்தத்தில் விதிக்கப்பட்டிருந்தது. எமக்குத் தரப்பட்ட இரண்டு மணிநேர கால அவகாசத்தில் ஒரு தீர்க்கமான முடிவைப் பிரபாகரன் எடுத்தார். அதாவது, எந்தக் காரணத்திற்காகவும் இந்த ஒப்பந்தத்தை ஏற்பதில்லை என உறுதியான தீர்மானம் மேற்கொண்டார்.

சரியாக இரு மணிநேரத்தின் பின் திரு.டிக்சிட் திரும்பி வந்தார். வந்ததும் எமது முடிவைக் கேட்டார். இந்த ஒப்பந்தத்தை எக்காரணத்தைக் கொண்டும் ஏற்க முடியாது என்றோம். ஏன் ஏற்க முடியாது என்று கேட்டார். காரணங்களை விளக்கிக் கூறினோம். ஒப்பந்தத்தில் பரிந்துரைக்கப்பட்டிருக்கும் மாகாணசபைத் திட்டத்திலுள்ள குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி இத்திட்டம் எமது மக்களின் அரசியல் அபிலாசைகளை நிறைவு செய்யத் தவறிவிட்டது என்றோம். எமது முடிவை மாற்றுமாறு மன்றாட்டமாகக் கேட்டார். பின்பு வற்புறுத்திக் கேட்டார். இறுதியாக மிரட்டத் தொடங்கினார்.

“நீங்கள் ஏற்றுக் கொண்டாலும் ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும். இரு நாடுகள் செய்து கொள்ளும் உடன்பாடு இது. இதனை நீங்கள் எதிர்த்தால் பாரதூரமான விளைவுகளை எதிர்நோக்க நேரிடும்” என்று மிரட்டினார். எப்படியான விளைவுகளை எதிர்நோக்க நேரிடும் என்று கேட்டபொழுது, “இங்கே தொடர்ந்தும் தடுப்புக் காவலில் இருக்க வேண்டி நேரிடும். ஒப்பந்தத்தை ஏற்கும் வரை இந்தியாவில் உங்களை தடுத்து வைத்திருக்க எம்மால் முடியும்.” என்றார்.

“எத்தனை காலமோ, எத்தனை வருடங்களோ

எம்மைத் தடுப்புக் காவலில் வைத்தாலும் நாம் இந்த ஒப்பந்தத்தை ஏற்கப் போவதுமில்லை. ஆயுதங்களை ஒப்படைக்கப் போவதுமில்லை.'' என்று உரத்த குரலில் சொன்னார் பிரபாகரன். ஆத்திரத்தில் அவரது விழிகள் பிதுங்கின. திரு. டிக்சிட் கேரளத்தைச் சேர்ந்தவர். அவருக்கு தமிழ்மொழி நன்கு தெரியும். நான் மொழிபெயர்ப்பதற்கு முன்னரே பிரபாகரன் அடித்துச் சொன்னது அவருக்கு ஆத்திரத்தை மூட்டியது.

"ஆயுதங்களை நீங்கள் ஒப்படைக்க மறுத்தால், இந்திய இராணுவத்தைக் கொண்டு உங்களது ஆயுதங்களைப் பறித்தெடுப்போம். இந்திய இராணுவத்திற்கு முன்பாக உங்களது போராளிகள் வெறும் தூசு.'' என்று ஆவேசத்தில் கூச்சலிட்டவர் தனது சுங்கானை எடுத்து பிரபாகரனிடம் காண்பித்து, இதனை நான் பற்றவைத்து புகைத்து முடிக்கும் நேரத்திற்குள் இந்திய இராணுவம் உங்களது போராளிகள் அனைவரையும் துவம்சம் செய்துவிடும்'' என்று கூறிவிட்டு ஏளனமாக ஒரு எக்காளச் சிரிப்புச் சிரித்தார். எங்கள் எல்லோரது முகங்களும் கோபத்தினால் சிவந்தது. மிகவும் சிரமப்பட்டு ஆத்திரத்தை அடக்கிய பிரபாகரன், "உங்களால் முடிந்ததைச் செய்து பாருங்கள். ஆனால் நாங்கள் இந்த ஒப்பந்தத்தை ஒரு பொழுதும் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை'' என்று உறுதிபடக் கூறினார்.

டிக்சிட்டுக்குக் கோபத்தால் உதடுகள் நடுங்கின. "மிஸ்டர் பிரபாகரன், நீங்கள் இந்திய அரசாங்கத்தை இத்துடன் நான்கு தடவைகள் ஏமாற்றிவிட்டீர்கள்'' என்றார். "அப்படியானால், நான்கு தடவைகள் எமது மக்களை இந்திய அரசிடமிருந்து காப்பாற்றியிருக்கிறேன். அதற்காக நான் பெருமைப்படுகிறேன்'' என்றார் பிரபாகரன். திடீரென எழுந்த டிக்சிட் அங்கிருந்து வெளிநடப்புச் செய்தார்.

இந்தியத் தூதர் டிக்சிட்டின் 'மிரட்டல் இராஜதந்திரம்' தோல்வி அடைந்த போதும், இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை விடுதலைப் புலிகள் மீது திணித்துவிடும் முயற்சி தொடர்ந்தது. ரஜீவ் நிர்வாகத்தின் உயர்



அதிகாரிகள், மாறி மாறி, ஒவ்வொருவராக எம்மைச் சந்தித்து ஒப்பந்தத்தின் முக்கியத்துவத்தை எடுத்து விளக்கினார்கள். இந்திய உள்ளக புலனாய்வுத் துறையின் (I.B) அதிபர் திரு.எம்.கே நாராயணன், வெளிவிவகார அமைச்சரின் கூட்டுச் செயலர் திரு.சகாதேவ், வெளிவிவகார அமைச்சைச் சேர்ந்த திரு.நிகல் சேத், கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்தைச் சேர்ந்த ஹர்தீப் பூரி ஆகியோர் தொடர்ச்சியாக மாறி மாறிச் சந்திப்புக்களை நிகழ்த்தினர். புதுடில்லியில் அசோகா விடுதியில் இந்தத் திரைமறைவு நாடகம் பல நாட்களாகத் தொடர்ந்தது. திரு.பிரபாகரன் எதற்கும் அசைந்து கொடுக்கவில்லை. தனது நிலைப்பாட்டில் உருக்குப் போல உறுதியாக நின்றார். புலிகள் மிகவும் பிடிவாதமாக நிற்கின்றார்கள் எனப் பிரதமர் ரஜீவ் காந்திக்கு அறிவிக்கப்பட்டது. அவர் தனது அதிகாரிகளை அழைத்து மந்திராலோசனை நடத்தினார். இறுதி முயற்சியாக தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர் அவர்களைப் புதுடில்லிக்கு அழைப்பதென முடிவாகியது. ஜூலை 26ஆம் திகதி பிரதமரின் விசேட விமானத்தில் எம்.ஜி.ஆர் புதுடில்லிக்கு அழைத்து வரப்பட்டார்.

அன்றிரவே, இந்திய தலைநகரிலுள்ள தமிழ்நாடு இல்லத்தில் முதலமைச்சரைச் சந்திப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. தலைவர் பிரபாகரனும் நானும் யோகரத்தினம் யோகியும் எம்.ஜி.ஆரிடம் அழைத்துச் செல்லப்பட்டோம். முதலமைச்சருடன் திரு.டிக்சிட்டும் இருந்தார்.

இந்திய - இலங்கை ஒப்பந்தம் பற்றியும் அதில் பரிந்துரைக்கப்பட்ட மாகாண சபைத் திட்டம் பற்றியும் இம் மாகாண சபைத்திட்டம் மூலம் ஈழத் தமிழரின் அரசியல் அபிலாசைகள் முழுமையாக நிறைவு செய்யப்பட்டுள்ளது என்றும் ஒரு நீண்ட புராணம் பாடிக் கொண்டிருந்தார் டிக்சிட். நாடியில் கையூன்றியவாறு பொறுமையுடன் கேட்டுக் கொண்டிருந்தார் எம்.ஜி.ஆர்.

"தமிழர் விடுதலைக் கூட்டணியும் சகல போராளிக் குழுக்களும் இந்த ஒப்பந்தத்தை ஆதரிக்கின்றன. ஆனால்

இவர்கள் மட்டும் இதனை எதிர்க்கிறார்கள். தமிழீழத் தனியரசைத் தவிர இவர்கள் எதையுமே ஏற்கமாட்டார்கள் போலத் தெரிகிறது. ஆனால் இந்திய அரசு தனியரசு அமைவதை ஒருபொழுதும் அனுமதிக்கப் போவதில்லை. இவர்கள் இந்தியாவை விரோதித்தால் பாரதூரமான விளைவுகளை சந்திக்க நேரிடும்'' என்று சீறினார் இந்தியத் தூதுவர்.

"இந்த மாகாண சபைத் திட்டத்தில் உருப்படியாக ஒன்றுமில்லை. தமிழ் மக்களின் அபிலாசையை இது பூர்த்தி செய்யவில்லை. அப்படியிருக்க இத்திட்டத்தை நாம் எதற்காக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றார் யோகரத்தினம் யோகி. இதைத் தொடர்ந்து யோகிக்கும் டிக்சிட்டுக்கும் கடும் வாக்குவாதம் மூண்டது. "சென்றவாரம் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த திரு.பூரி இந்த ஒப்பந்தம் பற்றியும் மாகாணசபைத் திட்டம் பற்றியும் உமக்கு விபரமாக விளக்கினாராம். அப்போது அதற்கு ஆதரவு தெரிவித்த நீங்கள் இப்போது எதற்காக எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டும்'' என்று டிக்சிட் கதற, அதனை மறுத்துரைத்தார் யோகி. "யாழ்ப்பாணத்தில் இந்த ஒப்பந்தம் பற்றி எதுவுமே பேசப்படவில்லை'' என்றார் யோகி. "அப்பொழுது என்னை ஒரு பொய்யன் என்று சொல்கின்றீர்களா?'' என்று கேட்டார் டிக்சிட். "நீங்கள் உண்மை பேசவில்லை'' என்றார் யோகி. வாக்குவாதம் சூடு பிடித்தது. கோபாவேசம் கொண்டவராக முதலமைச்சரைப் பார்த்து, "பாருங்க சார், என்னைப் பொய்யன் என்று சொல்கிறார்'' எனக் கதறினார் டிக்சிட். ஒரு ஏளனப் புன்னகையுடன் மௌனம் சாதித்தார் பிரபாகரன். இந்த விவாதத்தில் நானும் குறுக்கிடவில்லை. இந்தியத் தூதுவர் டிக்சிட் நிதானம் இழந்து உணர்ச்சி வசப்படுகிறார் என்பதை உணர்ந்து கொண்டார் எம்.ஜி.ஆர். "நீங்கள் சிறிது நேரம் வெளியே இருக்கிறீர்களா? நான் இவர்களுடன் பேச வேண்டும்'' என டிக்சிட்டைப் பண்பாக வேண்டிக் கொண்டார் முதலமைச்சர். சிறிது தயக்கத்துடன் அங்கிருந்து வெளியேறினார் இந்தியத் தூதுவர்.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்திலுள்ள குறைபாடுகள் பற்றியும் அதனை ஏற்றுக்கொள்ள நாம் மறுப்பதன் காரணங்கள் பற்றியும் எம்.ஜி.ஆர் எம்மிடம் வினவினார். ஒப்பந்தத்திலுள்ள குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி எமது நிலைப்பாட்டைத் தெளிவாக விளக்கினோம். ஈழத்து அரசியற் கட்சிகளும் ஆயுதக் குழுக்களும் இந்திய அரசின் நெருக்குவாரத்திற்கும் மிரட்டலுக்கும் பணிந்து விட்டார்கள் என்றும், இந்திய அச்சுறுத்தல்களுக்குப் பணிந்து நாம் எமது மக்களின் உரிமைகளை விட்டுக் கொடுக்கத் தயாராக இல்லை என்றும் சொன்னோம். தமிழரின் இனப் பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வு காணாத நிலையில், சிங்கள ஆயுதப் படைகள் தமிழர் மண்ணை ஆக்கிரமித்து நிற்கும் சூழ்நிலையில், எமது ஆயுதங்களைக் கையளித்து, எமது போராளிகளைச் சரணடையுமாறு கேட்பது நியாயமற்றது என்பதையும் எடுத்து விளக்கினோம்.

எமது விளக்கங்களை முதலமைச்சர் பொறுமையுடன் செவிமடுத்தார். எமது நிலைப்பாட்டின் நியாயப்பாடுகளையும் அவர் புரிந்து கொண்டார். இந்திய-இலங்கை ஒப்பந்தமானது இந்தியாவின் கேந்திர-புவியியல் நலனைப் பேணுவதற்காகவே செய்து கொள்ளப்பட்டது என்பதையும் உணர்ந்து கொண்டார். இந்திய - இலங்கை ஒப்பந்த விவகாரத்தில் பிரபாகரன் என்ன முடிவு எடுக்கின்றாரோ, அதற்குத் தனது முழு ஆதரவும் இருக்கும் என்றார் எம்.ஜி.ஆர். அழுத்தங்களுக்கு விட்டுக் கொடுக்காது, கொண்ட கொள்கையில் உறுதியாக நிற்பது குறித்துப் பிரபாகரனை அவர் பாராட்டவும் தவறவில்லை. முதலமைச்சருக்கு எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துவிட்டு அங்கிருந்து புறப்பட்டோம்.

முதலமைச்சரின் சந்திப்பு அறைக்கு வெளியே திரு.டிக்சிட்டும் ஒரு இந்தியப் புலனாய்வு அதிகாரியும் நின்று கொண்டிருந்தனர். எம்மை வழிமறித்த இந்தியத் தூதுவர், "ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்ளும்படி முதலமைச்சர் வற்புறுத்தினார் அல்லவா?'' என்று கேட்டார். நாம் பதிலளிக்காது மௌனமாக நின்றோம். "முதலமைச்சர் சொன்னபடியே செய்யுங்கள்'' என்றார். "அப்படியே

செய்வோம்'' என்று கூறிவிட்டுச் சென்றோம்.

முதலமைச்சர் எம்.ஜி.ஆர் அவர்களுடனான கடைசிச் சந்திப்பு அதுதான். இந்திய-புலிகள் யுத்தம் தொடங்கிய காலத்தில் எம்.ஜி.ஆர் அவர்கள் கடும் சுகவீனமுற்றிருந்தார். அப்பொழுது ஒரு நாள் சென்னையில் தங்கியிருந்த கேணல் கிட்டுவைத் தனது வீட்டுக்கு அழைத்துப் பண உதவி செய்ததுடன், இந்திய இராணுவத்துடன் போர் நிறுத்தம் செய்யுமாறும் இந்திய அரசுடன் பேச்சுவார்த்தை நடத்துமாறும் தலைவர் பிரபாகரனுக்கு ஒரு தகவல் அனுப்பியிருந்தார்.

1987ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 23ஆம் திகதி முதலமைச்சர் எம்.ஜி.ஆர் அவர்கள் காலமானார். மறு நாள் 24ஆம் திகதி இந்தியத் தேசிய துக்க தினமாக பிரகடனம் செய்யப்பட்டது. அன்றைய நாளில் தமிழீழத்தை ஆக்கிரமித்து நின்ற இந்தியப் படைகள் போர் நிறுத்தம் அறிவித்தனர். வீதிகளில் ரோந்து சென்ற இந்தியத் துருப்புக்கள் முகாம்களில் முடக்கப்பட்டன. அவ்வேளை யாழ்ப்பாணம் வடமராட்சியில் இந்தியப் படைகளின் கடும் வேட்டைக்கு இலக்காகிப் பல்வேறு அவலங்களை அனுபவித்து வந்த நானும் எனது மனைவி அடேலும் அன்றைய நாள், எம்.ஜி.ஆரின் நினைவாக அமைதி பேணப்பட்ட அந்தச் சுமுக சூழலைப் பயன்படுத்தி யாழ்ப்பாணத்திலிருந்து தப்பிச் செல்ல முடிந்தது.

தமிழ் நாட்டில் நாம் வசித்தபோது எமது அமைப்பின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும். பேருதவி புரிந்த அந்தப் பெரிய மனிதர் தனது மறைவில் கூட எமக்கு உயிர் அளிப்பதில் பெரும் பங்கு வகித்தார் என அடேல் பாலசிங்கம் 'சுதந்திர வேட்கை' என்ற தமது நூலில் எம்.ஜி.ஆர் அவர்களுக்கு நினைவஞ்சலி செலுத்தி இருக்கிறார்.



# ரஜீவ் – பிரபா சந்திப்பு

## எழுதப்படாத ஒரு ஒப்பந்தம்

1987ஆம் ஆண்டு ஜுலை மாதம் 29ம் திகதி இந்திய-இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. பாரதப் பிரதமர் ரஜீவ் காந்தியும் இலங்கை அரச அதிபர் ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவும் கொழும்பில் நிகழ்ந்த விசேட வைபவமொன்றின்போது இவ்வுடன்படிக்கையில் கைச்சாத் திட்டனர். இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட தினத்திற்கு முதல் நாள், அதாவது 1987ஆம் ஆண்டு ஜுலை மாதம் 28ஆம் திகதி புதுடில்லியில் இந்தியப் பிரதமர் ரஜீவ் காந்திக்கும், விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கும் மத்தியில் ஒரு இரகசிய ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. கைச்சாத்து இடப்படாத அந்த இரகசிய உடன்பாடு பற்றி அனேகருக்குத் தெரியாது. அக் காலகட்டத்தில் ரஜீவின் நிர்வாக ஆட்சி பீடம் மூடி மறைத்த உண்மைகளில் இதுவும் ஒன்று. ரஜீவ் - பிரபா உடன்பாட்டில் சம்பந்தப்பட்டவர்களில் நானும் ஒருவன் என்பதால் அந்த வரலாற்று நிகழ்வை இங்கு பதிவு செய்வது முக்கியமெனக் கருதுகிறேன்.

தலைவர் பிரபாகரனும் நானும் யோகியும் திலீபனும் புதுடில்லிக்கு அழைத்து வரப்பட்டு அசோகா விடுதியில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டது பற்றியும், இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை எம் மீது திணித்து விட எடுக்கப்பட்ட முயற்சிகள் பற்றியும் முந்திய கட்டுரையில் விபரித்தேன். தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர் அவர்கள் விடுதலைப் புலிகளுக்குச் சார்பான நிலை எடுத்துக் கொண்டதால் இந்திய அரசுக்குச் சங்கடமான நிலை எழுந்தது. கொழும்பு சென்று ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்கு முன்பாக எப்படியாவது விடுதலைப்

புலிகளை வழிக்குக் கொண்டு வர வேண்டும் என ரஜீவ் காந்தி விரும்பினார். அவருக்கு ஒரேயொரு மார்க்கம் தான் தென்பட்டது. புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனை நேரடியாகச் சந்தித்து, ஒப்பந்தம் பற்றிய அவரது கருத்துக்களைக் கேட்டறிந்து, அவருடன் ஒரு இணக்கப்பாட்டிற்கு வருவதுதான் சாலச் சிறந்த வழி என ரஜீவ் காந்தி முடிவு எடுத்தார்.

1987ஆம் ஆண்டு ஜுலை மாதம் 28ஆம் திகதி நள்ளிரவு. அசோகா விடுதியில் ஆழ்ந்த தூக்கத்திலிருந்த என்னையும் பிரபாகரனையும் அவசர அவசரமாக எழுப்பினார்கள் இந்தியப் புலனாய்வு அதிகாரிகள். பிரதமர் ரஜீவ் காந்தி மிகவும் அவசரமாக எம்மைச் சந்திக்க விரும்புவதாகவும் உடனே புறப்படுமாறும் பணித்தார்கள். ஆயுதம் தரித்த கரும் பூனைகளின் வாகன அணி பின்தொடர பிரதம மந்திரியின் இருப்பிடத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டோம். வீட்டு வாசலில் எமக்காகக் காத்து நின்றார் பிரதமர். ரஜீவ் காந்தியுடன் உள்ளக புலனாய்வுத் துறையின் அதிபர் திரு.எம்.கே.நாராயணனும் நின்று கொண்டிருந்தார்.

புன்முறுவல் பூத்தபடி மனமுவந்து எம்மை வரவேற்ற பிரதமர், பிரபாகரனைப் பார்த்து, "உங்களைப் பற்றி நிறைய கேள்விப்பட்டிருக்கிறேன். உங்களை நேரில் சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்" என்றார். அங்கு தமிழக அமைச்சர் பண்டுருட்டி இராமச்சந்திரனும் எமக்காகக் காத்து நின்றார். கலந்துரையாடல் உடனேயே ஆரம்பித்தது. "இந்த ஒப்பந்தம் குறித்து நீங்கள் அதிருப்தி அடைந்திருப்பதாக அறிந்தேன். ஒப்பந்தத்திலுள்ள குறைபாடுகள் பற்றி விபரமாகக் கூறுவீர்களா?" என்று கேட்டார் ரஜீவ் காந்தி. எமது கருத்துகளை விபரமாக விளக்கும்படி பிரபாகரன் என்னைப் பணித்தார். ஒப்பந்தத்திலுள்ள குறைபாடுகளை ஒவ்வொன்றாக நான் எடுத்து விளக்கினேன்.

இனப் பிரச்சினையைப் பொறுத்த வரை தமிழரின் நில உரிமை மிகவும் முக்கியமானது. இலங்கையில் வட



கிழக்கு மாகாணங்களைக் கொண்ட நிலப்பரப்பில் தமிழர்களும், தமிழ்பேசும் முஸ்லிம் மக்களும் வரலாற்று ரீதியாக வாழ்ந்து வருகிறார்கள். இந்த நிலம் அவர்களது சொந்த நிலம். அவர்களது தாயக நிலம். இந்தத் தாயக நிலத்தைப் பிரிக்கும் எந்தத் திட்டத்தையும் தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளப்போவதில்லை. வடகிழக்கு மாகாணங் களைக் கொண்ட நிலப்பரப்பு தமிழ்பேசும் மக்களின் தாயகமாக இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் குறிப்பிடப் பட்ட போதும், இத்தாயக நிலத்தின் பிரதேச ஒருமைப் பாட்டைக் கருத்து வாக்கெடுப்பிற்கு விடுவது என்ற தீர்மானத்தை நாம் ஏற்றுக் கொள்ள முடியாது. இது தமிழர் தாயகத்தைக் கூறுபோட வழிவகுக்கும் என்று விளக்கினேன். அடுத்ததாக, மாகாண சபைக்கு வழங்கப்பட்டிருக்கும் அதிகாரப் பரவலாக்கம் வரையறுக்கப்பட்டது என்றும் அது தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யவில்லை என்பதையும் விளக்கினேன். எல்லாவற்றிற்கும் மேலாக, வடகிழக்கு மாகாண சபையைக் கலைத்து விடும் அதிகாரம் இலங்கையின் அரச அதிபர் ஜெயவர்த்தனாவுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. இவர் ஒரு சிங்கள இனவெறியர். தமிழ் மக்களுக்கு விரோதமானவர். இவர் தமிழ் மக்களுக்கு நீதி வழங்குவாரென நாம் நம்பவில்லை என்று கூறினார் பிரபாகரன். அடுத்ததாக ஆயுதக் கையளிப்புப் பற்றிய விடயத்தை எடுத்துக் கொண்டோம். ஒப்பந்தம் கைச்சாத்தாகிய 72 மணி நேரத்திற்குள் ஆயுதங்களைச் சரணடையுமாறு விதிப்பது அநீதியானது. எத்தனையோ ஆண்டுகளாக இரத்தம் சிந்திப் போராடிப் பெற்ற ஆயுதங்களை நான்கு நாட்களுக்குள், அதுவும் தமிழரின் தேசியப் பிரச்சினைக்கு இறுதித் தீர்வு கிட்டுவதற்கு முன்பாகக் கையளிக்கும்படி வற்புறுத்துவது எவ்வகையிலும் நியாயமாகாது என்றார் பிரபாகரன். நாம் சொல்வதை எல்லாம் ஆர்வமாகவும் பொறுமையாகவும் கேட்டபடி குறிப்பு எடுத்துக் கொண்டிருந்தார் ரஜீவ் காந்தி.

நாம் எமது நிலைப்பாட்டைக் கூறி முடிந்ததும் ரஜீவ் காந்தி சொன்னார். "உங்களது மக்களின் பிரச்சினைக்கு

ஒரு நீதியான தீர்வு காண வேண்டும் என்பதில் எனது அரசாங்கம் கடும் முயற்சிகளை எடுத்து வருகிறது. இந்த விடயத்தில் உங்களது ஒத்துழைப்பு எமக்கு அவசியம். நீங்கள் சொல்வதுபோல இந்த ஒப்பந்தத்தில் குறைபாடுகள் இருக்கத்தான் செய்கிறது. இந்த ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்ட மாகாண சபைத் திட்டம் ஒரு தற்காலிக ஒழுங்குதான். அதிலுள்ள குறைபாடுகளைப் பின்பு நான் ஜெயவர்த்தனாவுடன் பேசி நிவர்த்தி செய்ய முயல்வேன். தமிழர் தாயகம் பற்றி நீங்கள் எழுப்பிய ஆட்சேபனையை நான் கவனத்தில் எடுத்துள்ளேன். இது பற்றி நான் ஜெயவர்த்தனாவுடன் பேசுவேன். கருத்து வாக்கெடுப்பு நடத்தாமல் அதனை ஒத்தி வைக்குமாறு சொல்லுவேன். எதற்கும் நீங்கள் இந்திய அரசை நம்ப வேண்டும். தமிழரின் நலன் மீதுதான் நாம் அக்கறை கொண்டு செயற்படுகிறோம். எனவே உங்களது ஆதரவு எமக்குத் தேவை. தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுத்து, அவர்களது பாதுகாப்பை இந்த ஒப்பந்தம் உறுதிப்படுத்தும். ஒப்பந்தத்தை நீங்கள் ஆதரித்தால் எமது கையைப் பலப்படுத்துவதாக அமையும்'' என்றார்.

இந்தியப் பிரதமர் கூறியவற்றை தமிழில் மொழிபெயர்த்து பிரபாகரனுக்கு விளக்கமளித்தார் அமைச்சர் பண்டுருட்டி. "இந்த ஒப்பந்தம் தமிழ் மக்களின் நலனைப் பேணவில்லை. மாறாக, தமிழ் மக்களின் நலனைப் பாதிக்கிறது. ஆகவே, இந்த உடன்படிக்கையை நாம் ஏற்றுக் கொள்ள முடியாது." என்று அழுத்தம் திருத்தமாகச் சொன்னார் பிரபாகரன். ரஜீவ் காந்திக்கு நிலைமை புரிந்தது. பிரபாகரன் தனது நிலைப்பாட்டில் உறுதியாக நிற்கிறார் என்பதையும் அவர் உணர்ந்து கொண்டார். விடுதலைப் புலிகளுடன் முரண்பட்டுக் காரியத்தைக் கெடுக்க அவர் விரும்பவில்லை. ஆகவே, தனது அணுகுமுறையைத் திடீரென மாற்றிக் கொண்டார்.

"உங்களது நிலைப்பாடு எனக்குப் புரிகிறது. நீங்கள் எடுத்த முடிவையோ கொள்கையையோ மாற்றச் சொல்லி நான் கேட்கவில்லை. நீங்கள் இந்த ஒப்பந்தத்தை ஏற்றுக்





**ரஜீவ் - பிரபா சந்திப்பு**

இடமிருந்து வலமாக, திரு.ரஜீவ் காந்தி, திரு.பண்ருட்டி இராமச்சந்திரன், திரு.ஆன்ரன் பாலசிங்கம், திரு.வே. பிரபாகரன்

கொள்ளத் தேவையில்லை. ஆனால் அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்காமல் இருந்தால் போதும்" என்றார் ரஜீவ் காந்தி. "பார்த்தீர்களா?, பிரதம மந்திரியே உங்களது வழிக்கு வந்துவிட்டார். ஒப்பந்தத்தை நீங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டாம். அது உங்களது நிலைப்பாடு. அதை ஏற்கத் தேவையில்லை. ஆனால் அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டாம் என்று மட்டும் பிரதமர் கேட்கிறார். இந்த சிறிய ஒத்துழைப்பையாவது நீங்கள் இந்திய அரசுக்காகச் செய்யலாம் அல்லவா?" என்று ரஜீவிற்காக வக்காலத்து வாங்கினார் பண்டுருட்டியார். இந்தச் சந்திப்பில் அவர் எதற்காக அழைக்கப்பட்டார் என்பது இப்பொழுது புலனாகியது. ரஜீவ் கொடுத்த விளக்கமும் அதற்குப் பண்டுருட்டியார் அளித்த வியாக்கியானமும் பிரபாகரனுக்கும் எனக்கும் திருப்தியை அளிக்கவில்லை. "ஒரு விடயத்தை நாம் ஏற்றுக் கொள்ளவில்லை என்றால் அதனை நாம் எதிர்க்கிறோம் என்றுதானே அர்த்தம்," என்று எனது காதோடு குசு குசுத்தார் பிரபாகரன். ஏற்றுக் கொள்ளாததற்கும் எதிர்ப்புத் தெரிவிப்பதற்கும் இடையில் வேறுபாடு காட்டி எம்மைத் திருப்திப்படுத்த முடியாது என்பதை ரஜீவ் உணர்ந்து கொண்டார். அதனால் பிரச்சினையை வேறு திசைக்கு எடுத்துச் சென்றார்.

"உங்களது இயக்கத்திற்கும் பொதுவாக தமிழ் மக்களுக்கும் ஜெயவர்த்தனாவில் நம்பிக்கையில்லை என்பது எமக்குத் தெரியும். எனக்கும் அவர் மீது நம்பிக்கையில்லைதான். என்றாலும் அவர் மீது கடும் அழுத்தம் பிரயோகித்து இந்த ஒப்பந்தத்தைச் செய்திருக்கிறோம். மாகாண சபைத் திட்டத்தில் குறைபாடுகள் இருந்தாலும், பின்பு பேச்சுக்களை நடத்தி தமிழரின் சுயாட்சி அதிகாரத்தைக் கூட்டலாம் அல்லவா? அத்தோடு இந்த மாகாண சபைத் திட்டத்தை உடனடியாக நடைமுறைப்படுத்துவது சாத்தியமல்ல. அதற்குக் காலம் தேவை. அதற்கு முன்னராக, வடகிழக்கில் ஒரு இடைக்கால அரசை நிறுவலாம். அதில் உங்களது அமைப்பிற்கு பிரதான பங்கு வழங்கலாம். இந்த இடைக்கால அரசு சம்பந்தமாக



நான் உங்களுடன் ஒரு இரகசிய உடன்பாடு செய்துகொள்ளவும் ஆயத்தமாக இருக்கிறேன்." என்றார் ரஜீவ் காந்தி.

"இந்தச் சந்தர்ப்பத்தை நழுவ விட வேண்டாம். தமிழர் தாயகத்தில் புலிகளின் நிர்வாக ஆட்சியை நிறுவுவதற்கு இது அருமையான சந்தர்ப்பம். இந்தியப் பிரதமருடன் ஒரு இரகசிய உடன்பாடு. இந்த யோசனையை நிராகரிக்க வேண்டாம். இந்திய - இலங்கை ஒப்பந்தம் பற்றி பெரிதாக அலட்டிக் கொள்ள வேண்டாம். அதற்கு முன்னராக ரஜீவ்-பிரபா ஒப்பந்தம் வரப்போகிறது. இதனைப் பகிரங்கப்படுத்தத் தேவையில்லை. இரகசியமாகவே வைத்துக் கொள்ளலாம்." என்றார் அமைச்சர் பண்டுருட்டி. இதெல்லாம் முன்கூட்டியே ஒத்திகை செய்யப்பட்ட நாடகம் போல எமக்குத் தோன்றியது. பிரபாகரனுக்கு எதிலுமே நம்பிக்கை இல்லை. எதிலுமே ஆர்வம் காட்டவில்லை. ஆனால் பண்டுருட்டியார் மிகவும் ஆர்வத்துடன் ரஜீவ்-பிரபா ஒப்பந்தத்திற்கு ஒரு வடிவம் கொடுக்க முயன்று கொண்டிருந்தார்.

வடகிழக்கில் ஒரு இடைக்கால நிர்வாக ஆட்சி நிறுவப்பட்டு, அதில் விடுதலைப் புலிகளுக்குப் பெரும்பான்மை பிரதிநிதித்துவம் வழங்கப்படுமென முடிவெடுக்கப்பட்டது. ஈழத்திலுள்ள எல்லாப் போராளி அமைப்புகளுக்கும் இடைக்கால ஆட்சியில் பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டுமென ரஜீவ் கேட்டுக் கொண்டார். பிரபா அதற்கு இணங்கவில்லை. இறுதியில் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் ஈரோஸ் அமைப்புக்கும் மட்டும் குறைந்த அளவில் பிரதிநிதித்துவம் வழங்குவதென இணக்கம் காணப்பட்டது. இடைக்கால நிர்வாக ஆட்சியின் கட்டமைப்பு, அதிகாரம், செயற்பாடு பற்றி விபரமாகப் பேசப்படவில்லை. அரச அதிபர் ஜெயவர்த்தனாவுடன் பேசி இறுதி முடிவு எடுப்பதென ரஜீவ் வாக்குறுதி அளித்தார். தமிழர் தாயகத்தில் சிங்களக் குடியேற்றம் நிறுத்தப்பட வேண்டுமென்றும், சிங்கள அரசாங்கம் புதிதாகக் காவல் நிலையங்களைத் திறக்கக் கூடாதென்றும் பிரபாகரன்

கேட்டுக் கொண்டார். அதற்கும் ரஜீவ் காந்தி இணக்கம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் பொதுமக்களிடமிருந்து கட்டாய வரி வசூலிப்புச் செய்வதாக ஜெயவர்த்தனா அரசு புலிகள் மீது குற்றம் சுமத்துகிறது. வரி வசூலிப்பை நிறுத்த முடியாதா எனக் கேட்டார் ரஜீவ் காந்தி. அந்த வரிப் பணம் எமது இயக்கத்தின் நிர்வாகச் செலவுக்கே பயன்படுத்தப்படுகின்றது. அந்தத் தொகையை இந்திய அரசு எமக்குத் தருவதானால் வரி அறவிடுவதை நிறுத்தலாம் என்றார் பிரபாகரன். மாதாந்தம் எவ்வளவு தொகைப் பணத்தை வரியாகப் பெறுகின்றீர்கள் என ரஜீவ் கேட்க, இலங்கை நாணயப்படி ஒரு கோடி ரூபா வரை திரட்டுகிறோம் என்றார் பிரபா. "அப்படியென்றால் இந்திய நாணயப்படி ஐம்பது இலட்சம் ரூபா வரை வரும். அந்தப் பணத்தை நான் கொடுக்கிறேன்'' என்றார் ரஜீவ்.

இறுதியாக ஆயுதக் கையளிப்பு விவகாரம் எழுந்தது. "ஆயுதங்கள் முழுவதையும் கையளிக்குமாறு நாம் கேட்கவில்லை. நல்லெண்ணச் சமிக்ஞையாக சிறு தொகை ஆயுதங்களைக் கையளித்தால் போதும். பொது மக்களுக்கும் போராளிகளுக்கும் பாதுகாப்பாக இந்திய அமைதிப் படை வடகிழக்கில் செயற்படும். சிங்கள ஆயுதப் படைகளுடன் போர் நிறுத்தம் தொடர்ந்து இருக்கும். இந்த சூழ்நிலையில் உங்களுக்கு போராயுதங்கள் தேவைப்படாது அல்லவா?'' என்றார் இந்தியப் பிரதமர். பிரபாகரன் பதிலளிக்கவில்லை. ஆழமாகச் சிந்தித்தபடி இருந்தார். திடீரெனக் குறுக்கிட்டார் பண்டுருட்டியார். "எதற்காக யோசிக்க வேண்டும். இந்தியா கொடுத்த ஆயுதங்களில் பழைய, பாவிக்க முடியாத, துருப்பிடித்த ஆயுதங்கள் சிலவற்றை கொடுத்தால் போச்சு'' என்றார். "இந்தியா கொடுத்த ஆயுதங்கள் எல்லாமே அப்படித்தான்'' என்று கிண்டலாக பதிலளித்தார் பிரபா. "பரவாயில்லையே, அதில் சிலவற்றைக் கொடுங்கள். தேவை ஏற்படும்பொழுது இந்திய அரசு புதிய ஆயுதங்களைத் தரும் அல்லவா?'' என்றார் அமைச்சர் பண்டுருட்டியார். தான் கூறியதை ஆங்கிலத்தில்



மொழிபெயர்த்து ரஜீவிடம் சொன்னார். அதை ஆமோதிப்பது போலப் பிரதமரும் தலையசைத்தார்.

அப்பொழுது அதிகாலை இரண்டு மணி இருக்கும். அன்று காலை ஒன்பது மணியளவில் புதுடில்லியிலிருந்து கொழும்பு புறப்பட இருந்தார் ரஜீவ் காந்தி. பிற்பகல் மூன்று மணிக்கு இந்திய - இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்தாக இருந்தது. புலிகளின் தலைவர் பிரபாவுடன் ஏதோ ஒரு சுமுகமான இணக்கப்பாட்டிற்கு வந்ததுபோல மகிழ்ச்சியுடன் காணப்பட்டார் ரஜீவ். பிரபாகரனுக்கு மனதில் மகிழ்ச்சி இல்லை. அவரது முகத்தில் அது தெளிவாகத் தெரிந்தது. ஏதோ பெரிய சாதனை செய்துவிட்டது போன்று பண்டுருட்டியார் திருப்தியுடன் தென்பட்டார். தூக்கமின்மையால் எல்லோருமே சோர்ந்து போய் இருந்தோம். கூட்டம் முடியும் கட்டத்திற்கு வந்துவிட்டது. அப்பொழுது நான் அமைச்சர் பண்டுருட்டியிடம் கேட்டேன், "ரஜீவ் - பிரபா இரகசிய ஒப்பந்தம் என பல விடயங்களைக் கதைத்தோம். பிரதம மந்திரியும் பல வாக்குறுதிகளைத் தந்திருக்கிறார். இதை எல்லாம் சுருக்கமாக எழுத்தில் இட்டு, அவரிடமிருந்து கைச்சாத்துப் பெற்றால் என்ன?'' என்றேன்.

பண்டுருட்டியார் சிறிது நேரம் யோசித்தார். "இந்த இரகசிய உடன்பாட்டில் சர்ச்சைக்குரிய பல விடயங்கள் இருக்கின்றன அல்லவா? பண விவகாரம் இருக்கிறது. ஆயுதக் கையளிப்புப் பிரச்சினை இருக்கிறது. இதெல்லாம் அம்பலத்திற்கு வந்தால் இந்தியாவிலும் இலங்கையிலும் பெரும் அரசியற் சூறாவளியே ஏற்படும். உங்களுக்குப் பிரதமரில் நம்பிக்கையில்லையா? இது ஒரு Gentlemen Agreement. இரு பெரும் மனிதர்களின் எழுதப்படாத ஒப்பந்தமாக இருக்கட்டுமே?'' என்றார் அமைச்சர். ரஜீவ் காந்திக்கும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துச் சொன்னார்.

"நீங்கள் எதற்கும் கவலை கொள்ளத் தேவையில்லை. கொடுத்த வாக்குறுதிகளை நான் நிறைவேற்றுவேன். அமைச்சர் சொல்வது போன்று இது ஒரு எழுதப்படாத Gentlemen Agreement ஆக இருக்கட்டும்.''

என்றார் ரஜீவ் காந்தி. இறுதிக் கட்டத்தில் நான் அவருடன் முரண்பட விரும்பவில்லை. முடிவாக எமது தடுப்புக் காவல் பற்றி முறையிட்டோம். பிரபாகரன் மீதான தடுப்புக் காவலை அகற்றி, அவரைத் தமிழீழம் அனுப்புவதற்கு உடன் ஒழுங்கு செய்வதாக உறுதி அளித்தார் ரஜீவ்.

ரஜீவ் காந்தியின் இல்லத்திலிருந்து அசோகா விடுதிக்கு நாம் போய்ச் சேர அதிகாலை மூன்று மணியாகி விட்டது. "அண்ணா, இருந்து பாருங்கோ, இந்த இரகசிய ஒப்பந்தமும் வாக்குறுதிகளும் ஒன்றுமே நிறைவேறப் போவதில்லை. இதெல்லாம் ஒரு ஏமாற்று வித்தை" என்று விரக்தியோடு கூறிவிட்டு தனது அறைக்குள் நுழைந்தார் பிரபாகரன்.

எனது அறைக்குள் சென்றபோது, விழித்தபடி காத்திருந்த திலீபன் விடியும் வரை என்னைத் தூங்கவிட வில்லை. ரஜீவ் - பிரபா சந்திப்பு பற்றியும், இருவருக்கும் மத்தியில் செய்து கொள்ளப்பட்ட இரகசிய ஒப்பந்தம் பற்றியும் விபரமாகத் திலீபனுக்குச் சொன்னேன். மிகவும் ஆர்வமாக கேட்டுக் கொண்டிருந்தான். "அண்ணன் என்ன சொல்கிறார்" என்று கேட்டான். "பிரபாவுக்குத் திருப்தி இல்லை. நம்பிக்கையுமில்லை. இந்த வாக்குறுதிகள் ஒன்றுமே நிறைவேறப் போவதில்லை என்று உறுதியாகச் சொல்கிறார்" என்றேன்.

ஆழமாகச் சிந்தித்தபடியிருந்த திலீபன், "அண்ணை சொல்வதுதான் நடக்கும்" என்றான். உண்மையில் அப்படியேதான் நடந்தது. ரஜீவ் - பிரபா இரகசிய ஒப்பந்தம் நிறைவேற்றப்படவில்லை. இடைக்கால நிர்வாக அரசும் உருவாக்கப்படவில்லை.

தலைவர் பிரபாகரனுக்கு கொடுத்த வாக்குறுதிகளை இந்தியப் பிரதமர் ரஜீவ் காந்தி நிறைவேற்றவில்லை என்பதை உணர்ந்த திலீபன் ஆத்திரமடைந்தான். இந்திய அரசு செய்த வரலாற்றுத் தவறை உலகிற்கு அம்பலப்படுத்தும் நோக்கத்தோடு சாகும் வரை உண்ணா விரதப் போராட்டத்தைத் தொடங்கினான். இறுதியில் தனது உயிரை அர்ப்பணித்து உலகிற்கு உண்மையை



உணர்த்தினான். எழுதப்படாத ரஜீவ் - பிரபா ஒப்பந்தம் பூகம்பமாக வெடித்து, தமிழீழத்தில் ஒரு பேரெழுச்சியை உண்டு பண்ணியது.

# மனிதனை தேடும் மனிதன்

ஆதி மனிதன், தனது உலகானுபவத்தை அர்த்தமுள்ள சப்தங்களாக வார்த்தைகளில் உருவகித்து, பேசும் ஆற்றல் பெற்று, சுயமாகச் சிந்திக்கத் தொடங்கிய காலத்திலிருந்தே அவனிடம் அந்தக் கேள்வி பிறந்தது.

கேள்விகளுக்கு எல்லாம் மூலக் கேள்வியாக, வாழ்வியக்கத்தின் அர்த்தத்தையே தொட்டு நிற்கும் கேள்வியாக, ஆதி மனிதன் தன்னை நோக்கி அந்த வினாவை எழுப்பினான்.

'நான் யார்?'

எல்லையற்ற பிரபஞ்சத்தின் எங்கோ ஒரு மூலையிலிருந்து திசைதெரியாது தவித்த மானிடத்தின் அவலக் குரலாக அந்தக் கேள்வி எழுந்தது.

அந்தக் கேள்வி பிறந்த கணத்திலிருந்து இன்றுவரை, ஒரு நீண்ட முடிவில்லாத சுயவிசாரணைத் தேடுதலாக மனிதன் தன்னைத் தானே தேடிக் கொண்டிருக்கிறான். அந்தத் தேடுதல் இன்னும் முடியவில்லை.

அன்றிலிருந்து இன்றுவரை, ஓயாது ஓடிக் கொண்டிருக்கும் காலநதி இந்தப் பூமியின் முகத்தையே மாற்றிவிட்டது. நாகரீகங்கள் தோன்றி, வளர்ந்து, சிதைந்து அவற்றின் புதைகுழியிலிருந்து ஒரு புதிய உலகம் பிறந்து விட்டது. படிப்படியாகப் பொருளுலகின் சூட்சும முடிச்சுகளை மனிதன் அவிழ்த்துவிட்டான். என்றுமில்லாவாறு மனித அறிவு வளர்ந்தது. விண்ணுலக அண்டத்தின் விசாலம் தொட்டு, நுண்ணுலக அணுவின் மூலம் வரை இயற்கையின் எண்ணில்லாப் புதிர்களை எல்லாம் மனிதன் அறிந்து கொண்டான். ஆனால் மனிதன் தன்னைப் பற்றி இன்னும் அறிந்து கொள்ளவில்லை. மனிதன் யார் என்ற கேள்வியைப்

பின்தொடரும் தேடுதல் ஒரு முடிவில்லாத தொடர் கதையாக இன்னும் நீள்கிறது.

அன்றொரு காலம், கிரேக்க நாட்டில் ஒரு வயோதிப தத்துவஞானி இருந்தார். அவருக்குப் பைத்தியம் பிடித்து விட்டதாக மக்கள் கருதினர். அந்த மனிதர், இரவு வேளையில், ஒரு கையில் ஊன்றுகோலுடனும் மறு கையில் ஒரு விளக்குடனும் அதென்ஸ் நகர வீதிகளில் யாரையோ தேடி அலைந்து கொண்டிருந்தார். தனக்கு எதிரே வரும் மனிதர்களை வழிமறித்து, கைவிளக்கை உயர்த்திப் பிடித்து அவர்களது முகத்தை உன்னிப்பாக நோட்டமிடுவார். இப்படியாகத் தினமும் இரவில் விளக்கு வெளிச்சத்தில், மாறி மாறி மனித முகங்களை தரிசிப்பதில் அவரது காலம் கழிந்தது. இவரது தொல்லை தாங்காது ஒரு நாள் அந்த நகரவாசிகள் அவரிடம் சென்று, "யாரைத் தேடுகிறீர்கள்?" என்று கேட்டனர்.

"நான் ஒரு மனிதனைத் தேடிக் கொண்டிருக்கிறேன்" என்று அந்தத் தத்துவஞானி பதில் சொன்னார்.

பொய்யான, போலியான மனிதர்கள் மத்தியில் ஒரு உண்மையான மனிதனை அந்த ஞானி தேடிக் கொண்டிருந்தாராம்.

இப்படியாக மனிதனை மனிதன் தேடிய விசித்திரமான வரலாறு நீண்ட காலத்திற்கு முன்னரே தொடங்கிவிட்டது.

ஆதியிலிருந்தே மனிதன் ஒரு கனவு கண்டான். இந்தப் பூவுலக வாழ்வின் நிர்ப்பந்தங்களுக்கு அப்பால், நிச்சயமற்ற தன்மைகளுக்கு அப்பால், துன்பத்தின் அழுத்தத்திற்கு அப்பால், காலத்தின் எல்லைக்கு அப்பால், சாவின் நியதிக்கு அப்பால், இல்லாமை என்ற சூன்யத்திற்கு அப்பால், ஒரு நித்திய சீவியத்தை, பேரானந்த பரவசத்தில் சதா லயித்திருக்கும் சிரஞ்சீவியான வாழ்வைக் கனவு கண்டான். மனிதனின் இந்தக் கனவிலிருந்து ஒரு கருத்துலகம் பிறந்தது. அழியாத ஆன்மா என்றும் ஆவி உலகம் என்றும் அடுத்த பிறவி என்றும் சுவர்க்கம் என்றும் நரகம் என்றும் இந்தப் பூவுலகத்திற்கு அப்பால், நாம்



பிறந்து, வளர்ந்து, வாழ்ந்து, மடியும் இந்த நிஜவுலகத்திற்கு அப்பால், நாம் தொட்டுணர்ந்து பட்டறிந்து கொள்ளும் இந்தப் புறவுலகத்திற்கு அப்பால், மனிதன் ஒரு பூடகமான உலகைக் கற்பிதம் செய்து கொண்டான். இந்தக் கற்பனாவாதம் இயற்கைக்குப் பதிலாக ஒரு இந்திரலோகத்தைப் படைத்தது. மனிதன் ஒரு அந்நிய உலகத்தின் அபூர்வப் பிறவியாக மாற்றப்பட்டான். இதனால் பூமியில் புதைந்து கிடந்த மனிதனின் பூர்வீக வேர் பிடுங்கி எறியப்பட்டது. மனிதனின் மனக்குகை இருளுக்குள், அடி மன பாதாளத்திற்குள், ஆதியும் அந்தமுமற்ற அழியாத ஆன்மா ஒன்று புகுந்து கொண்டது.

அந்த ஆன்மத்தின் இரகசியத்தை மனிதன் தேடத் தொடங்கினான். இதனால் புதிய கேள்விகள் பிறந்தன.

'நான் யார்?' என்ற மையக் கேள்வியுடன் 'நான் எங்கிருந்து வந்தேன்?' 'நான் எதற்காக இங்கு வந்தேன்?', என்ற புதிய புதிரான வினாக்களும் எழுப்பப்பட்டன.

இந்த வினாக்களும் அவற்றிற்கு அளிக்கப்பட்ட விளக்கங்களும் அதனால் எழுந்த கருத்துருவப் பொய்மைகளும் உண்மையான மனிதனை இந்த உண்மையான உலகத்திலிருந்து அந்நியமாக்கியது. மனித உலகத்திற்கும் மனித வாழ்விற்கும் விசித்திரமான வியாக்கியானங்கள் கொடுக்கப்பட்டன.

இந்த விசித்திரமான பார்வையில் இப்பூவுலகம் ஒரு மாயலோகம். ஒரு மானசீகத் தோற்றப்பாடு. எமக்குள்ளே இருந்து கொண்டு, எல்லாம் தெரிந்ததாக எண்ணிக் கொள்ளும் எமது மனம் பொய்களைக் கொண்டு உருவகிக்கும் ஒரு போலியான உலகம். சத்தியத்தின் இருப்பிடமாக இன்னொரு உலகம் இருக்கிறதாம். அந்த ஆன்ம உலகிலிருந்து நாம் இங்கு வந்து, வந்து, வாழ்ந்து விட்டுப் போகிறோம். விதி என்ற முடிவில்லாப் பெருங்கதையில் நாமெல்லாம் சிறு, சிறு நாடகப் பாத்திரங்கள். வந்து, வந்து நடித்துவிட்டுப் போகிறோம். எம்மைச் சாவு தீண்டுவதில்லை. உடல்களை உடையாக அணிந்து, பின் உரிந்து விட்டுச் செல்கிறோம். இந்தப் பூமி

ஒரு தற்காலிக தங்குமிடம். பாவங்களைச் சுமப்பதற்கும் ஆசைகளைத் தீர்ப்பதற்கும் கர்மவினை கழிப்பதற்கும் நாம் இங்கு வந்து தங்கிச் செல்கிறோம். பிறப்பு, இறப்பு என்ற சூட்சுமச் சக்கரத்தில், முடிவில்லாத ஒரு சங்கிலித் தொடர்பில் பிணைபட்டு, இழுபட்டு, நசிபட்டு எமது வாழ்வு நகர்கிறது. இந்தப் பொய்யான பூவுலக மாயையிலிருந்து விடுபடும் வரை எமக்கு விடிவில்லை. இந்த உலகத்தைத் துறந்து, உறவுகளைத் துறந்து, உணர்வுகளைத் துறந்து, சாதாரண வாழ்வின் சகலவற்றையும் துறந்து பரிபூரண துறவறத்தில் விமோசனத்திற்கு வழி இருக்கிறது. உள்ளேயுள்ள உள்ளொளியின் தரிசனத்தில், அந்த மெஞ்ஞான விழிப்புணர்வில், 'நான்' என்ற பொய்ப்பொருள் செத்துவிட மெய்ப்பொருள் புலனாகும். அந்த ஞானோதயத்தில் விதியின் விலங்குகள் உடைந்து விழும். பிறப்பு, இறப்பு, மறுபிறப்பு என்ற சங்கிலிப் பிணைப்பிலிருந்து விடுதலை கிட்டும்.

இந்த விபரீதமான ஆன்மீக விசாரணையில் 'நான் யார்?' என்ற தேடுதல் 'நான் ஒரு பொய்' என்ற கண்டுபிடிப்புடன் முடிவடைகிறது.

வேதகாலம். மணிபுரி என்ற நாட்டின் மன்னன் துறவறம் பூண்டு, அந்தக் குருஷேத்திரம் வருகிறான். மெஞ்ஞானம் பெற்ற அந்த முனிவனிடம் மண்டியிடுகிறான்.

"நான் மணிப்புரி நாட்டின் மன்னன். எனது வயோதிபத்தில் வாழ்க்கையைத் துறந்துவிட்ட நான், மெய்ப்பொருளைக் கண்டு கொள்ள விரும்புகிறேன். நீங்கள் தான் எனக்கு ஞானவொளி காட்டி, வழி காட்ட வேண்டும்" என்று கேட்டுக் கொண்டான்.

தியானத்திலிருந்து விழித்துக் கொண்ட முனிவர், மன்னனைப் பார்த்து, "நான் செத்துவிட்டதும் என்னிடம் வா" என்று சொல்லிவிட்டுக் கண்களை முடிக் கொண்டார்.

ஒன்றுமே புரியாது, குழப்பமடைந்தவனாக ஆச்சிரமத்திற்கு வெளியே வந்த மன்னன், முனிவனின் சீடனைப் அழைத்து, முனிவன் கூறிய வார்த்தைகளுக்கு அர்த்தம் கேட்டான்.



"நான் செத்துவிட்டதும் என்று முனிவர் தன்னைக் குறிப்பிடவில்லை. உனக்குள்ளே, உனது ஆசையின் வடிவமாக, உனது அகங்காரத்தின் இருப்பிடமாக இயங்கிக் கொண்டிருக்கும், உனது 'நான்' முதலில் இறக்க வேண்டும். உனது சுயத்தின் சாவுக்குப் பின்னரே தன்னிடம் வருமாறு குருநாதர் கூறியிருக்கிறார்" என்று அந்தச் சீடன் அரசனுக்கு விளக்கம் கொடுத்தானாம்.

'நான்' என்ற பொய்யைச் சாகடிப்பதற்கு முன்னரே அந்த அரசன் செத்துப் போனான்.

'நான்' என்பது பொய் என்றால், எனது பிரக்ஞையின் பிரமை என்றால், எனது மனவுலகம் சிருஷ்டிக்கும் மாயை என்றால், 'நான்' என்று எனக்குள்ளிருந்து சிந்திப்பவனாக, உணர்பவனாக, உணர்ச்சிவசப்படுபவனாக, ஆசைப்படு பவனாக, நானாக என்னை இயக்கி வரும் அந்தப் பிரகிருதி யார்?

"நான் என்பது ஒரு எண்ணம். எண்ணவோட்டத்தின் நெற்றிக் கண்ணாக அமையப் பெறும் ஒரு எண்ணம்; மனவுலகம் உள்வாங்கிக் கொள்ளும் கோடானு கோடி எண்ணப் படிமங்களின் மையப் படிமமாக 'நான்' என்ற சுயம் எழுகிறது," என்கிறார் ஒரு ஞானி.

அப்படியானால், நான் என்பது ஒரு மானசீகப் பொருளா? நினைவுகளின் நிழலாக, படிமங்களின் நடுவப்படிமமாக, எண்ணச் சிதைவுகளிலிருந்து உயிர்பெறும் ஒரு மானசீகப் பேய்த் தோற்றமாக மனிதனின் சுயத்தை, அவனது ஆளுமையைச் சித்தரிக்க முடியுமா?

'நான்' என்பது எனது மனநிலைக்கு அப்பால், எனது உயிர்நிலை சார்ந்த சுயவுணர்வாகவும் இயங்குகிறது அல்லவா? எனது உயிரின் இருப்பிடமாக, பொருளுருவம் பெற்றிருக்கும் உடற்கூறும் எனது சுயத்தின் திண்ணியமான பொருள் வடிவம் அல்லவா? உடலும் உயிருமாக, இரத்தமும் சதையுமாக, உணர்ச்சியின் பிண்டமாகவும் 'நான்' இருப்புற்று இருக்கிறேன் அல்லவா?

'நான்' என்பது அகவுலகத்துப் பிசாசு அல்ல. அன்றித் தெய்வலோகத்துப் பதுமையும் அல்ல.

மனிதன் என்பவன் இயற்கையின் குழந்தை. இயற்கை என்ற மாபெரும் கலைஞனால் படைக்கப்பட்ட ஒரு கலை வடிவம்; உயிர் வடிவம். இயற்கையின் கருவகத்துடன் மனிதனின் தொப்புள் கொடி பின்னிப் பிணைந்து கிடக்கிறது. ஒரு புறம், இயற்கையின் மடியில் வேர் பதிந்து நிற்பவனாகவும், மறுபுறம் சமூகப் பிறவியாகவும், சமூக வாழ்வியக்கத்தில் உருவாக்கம் பெறுபவனாகவும், இருமுகப் பரிமாணத்தில் மனித வாழ்வு அமைகிறது.

மனிதன் உணர்ச்சிமயமானவன். உணர்ச்சிப் பிண்டமாக இயற்கை மனிதனைப் படைத்திருக்கிறது. இயல்பூக்கங்களாக, இயல்புணர்ச்சிகளால் (instincts) அவை மனிதனை ஆட்டிப் படைக்கின்றன.

இயற்கை மனிதனைப் படைத்தது மட்டுமன்றி, மனிதன் தன்னைத்தானே படைத்துக் கொள்ளவும், பாதுகாத்துக் கொள்ளவும், தனது இனத்தை விருத்தி செய்து கொள்ளவும் நிர்ப்பந்திக்கிறது. இந்த நிர்ப்பந்த சக்தியாக, உந்துதலாக, இயல்புணர்ச்சிகள் மனிதனை ஆட்கொள்கின்றன.

இந்த இயல்புணர்ச்சிகளின் மையமாகப் பாலுணர்ச்சி அமைகிறது. ஒரு ஜீவ சக்தியாக சகல ஜீவராசிகளையும் அது இயங்க வைக்கிறது. சகல உயிர்களையும் மீளாக்கம் செய்கிறது. அது என்னையும் உன்னையும் பற்றிக் கொள்கிறது. அதன் ஈர்ப்புச் சக்தியிலிருந்து நீயும் நானும் தப்பிவிட முடியாது. படைத்தலின் தவிர்க்க முடியாத நியதி யாக அது எம்மைப் பணிய வைக்கிறது. இன்ப நுகர்ச்சியின் பரவசத்தைக் காட்டி அது எம்மை ஆகர்ஷித்துக் கொள்கிறது.

பாலெழுச்சியாக தோற்றப்பாடு கொள்ளும் இந்த ஜீவ சக்தியை, லிபிடோ (libido) என்றும், உயிரியக்க சக்தி (life force) என்றும், காதல் தெய்வம் (Eros) என்றும் பிரபல உளவியல் அறிஞரான சிக்மெண்ட் பிராய்ட் விபரிக்க முனைகிறார்.

பாலெழுச்சியின் திருவிளையாடல்களை மையக்



கருவாகக் கொண்டே பிராய்டின் உளப்பகுப்பியல் (psycho-analysis) மனிதனையும், மனித வாழ்வையும் விசாரணை செய்கிறது.

மனிதன் விழிப்பு நிலையில் இருக்கும் பொழுது இயங்கிக் கொண்டிருக்கும் சாதாரண பிரக்ஞைக்கு (consciousness) அப்பால் நனவு அற்ற நிலையில், ஒரு மனவுலகம் உண்டு. இது மனிதனின் ஆழ்மனம்; நனவிலி மனம் (unconscious mind). இதுவே மனித மன இயக்கத்திற்கு ஆதாரமாக இருக்கிறது; மூலமாக இருக்கிறது. இந்த நனவிலிமனம் என்ற கோட்பாட்டை அடித்தளமாகக் கொண்டே பிராய்டின் உளவியல் தத்துவம் கட்டி எழுப்பப்பட்டிருக்கிறது.

இந்த நனவிலி மனம் எப்படியானது? எப்படி இயங்குகிறது? மனிதனின் ஆழ்மனப் பாதாளத்திற்குள், செத்துப் போன நினைவுகளின் கல்லறைகளுக்கு அப்பால், என்ன ஒளிந்து கிடக்கிறது?

மனதின் ஆழத்தில், நனவிலி மனதில் புதினமான பொக்கிஷம் எதுவுமே இருக்கவில்லை. மனிதன் கனவு கண்ட அழியாத ஆன்மாவோ அன்றி அடுத்த உலகத்து அதிசயப் பொருட்களோ இருக்கவில்லை. பிராய்டின், மன அகழாய்வு தெய்வலோகத்துப் புதையல்கள் எதையும் தோண்டி எடுக்கவில்லை. அவரது உளப் பகுப்பியல் கண்டுபிடிப்பில், அடிமனதின் ஆழத்தில் ஒரு எரிமலை இருந்தது. உணர்ச்சிகளின் நெருப்பலைகளாக அது எரிந்து கொண்டிருந்தது. அடக்கப்பட்ட ஆசைகளின் அக்கினி நாக்குகள் நர்த்தனமாட அது குமுறிக் கொண்டிருந்தது. பிராய்டின் ஆழ்மனமானது கொதிக்கும் உணர்ச்சிகளின் கொப்பறை.

நனவு மனமானது மனித பண்பாட்டு உலகத்தால் வனையப்படுகிறது. பண்பாட்டுக் கருத்துலகம் வரிந்து விடும் நியமங்களையும் கட்டுப்பாடுகளையும் உள்வாங்கி உருவாக்கம் பெறுகிறது. தனி மனிதனின் சமூகப் பிரக்ஞையாகச் செயற்படுகிறது. இந்த நனவுமனமானது அடிமனதிலிருந்து ஆசைகளாக, அபிலாசைகளாக,

உந்துதல்களாக மேலெழும் இயல்புணர்ச்சிகளை தணிக்கை செய்து ஒடுக்கி விடுகிறது. ஒடுக்கப்பட்ட உணர்வுகளும் ஆசைகளும் நனவிலி மனவுலகில் தஞ்சம் பெறுகின்றன. அங்கு, அவை தணிந்து அணைந்து போவதில்லை. மாறாக, சீற்றம் கொண்ட பாம்புகளாக அவை சீறி எழுகின்றன. எப்படியாவது, எந்த வழியிலாவது, எந்த வடிவத்திலாவது அடிமனப் புற்றிலிருந்து வெளியேற அவை சதா விழைந்து கொண்டிருக்கின்றன.

கனவுகளும் ஆழ் மனதின் ஒரு வெளிப்பாடு. புதிரான படிமங்களில் புனைக் கதைகள் பின்னி, குறியீட்டுச் சித்திரங்களாக மனத்திரையில் கட்டவிழும் கனவுக் காட்சிகளில் அடிமன ஆசைகள் ஒளிந்து கிடக்கின்றன. நனவுலகில், நிஜவுலகில் நிறைவு காண முடியாத ஆசைகள் கனவுலகில் நிறைவு கண்டு விடுகின்றன. கனவுலகத்தின் கதவுகளைத் திறந்து கொண்டே ஆழ்மனவுலகில் தான் நுழைய முடிந்ததாக பிராய்ட் கூறுகிறார்.

உணர்ச்சிகள் ஆசைகளாக, அடிமனத்திலிருந்து வெளியேற விழைவதும், அவை நனவு மனதில் மறுக்கப்படுவதும், மறுக்கப்பட்ட ஆசைகள் முக மூடிகள் அணிந்து, வேடங்கள் பூண்டு வேறு வழிகளில் வெளிப்பாடு காண விழைவதும், அதனால் எழும் நெருக்குவாரங்களும், முரண்பாடுகளும் உளச் சிக்கல்களாகவும், மனக் கோளாறுகளாகவும், ஆளுமைச் சிதைவுகளாகவும் விபரீத தோற்றப்பாடுகளை எடுப்பதுமாக பாலெழுச்சி என்ற 'காதல் தெய்வத்தின்' திருவிளையாடல்களை பிராய்டின் மனப்பகுப்பியல் விபரித்துக் கூறுகிறது. இந்த உளவியல் தத்துவம் மனித ஆழ்மனதின் அசைவியக்கத்துடன் நின்று விடாது, மனிதனின் கலை, பண்பாட்டு உலகத்திற்கும், மனித நாகரீகத்தின் தோற்றத்திற்கும் விசித்திரமான விளக்கங்களையும் கொடுக்க முனைகிறது. ஆழ் மனதில் முடங்கிக் கிடக்கும் ஆசைகள் கனவுலகத்தை சிருஷ்டித்து வெளிப்பாடு காண விளைவது போல, நனவு மனமும் விழிப்பு நிலையில், கற்பனா உலகில் பிரவேசிக்கிறது. கற்பனை வடிவில் மனிதன் விழித்துக் கொண்டு காணும் கனவுகள், புராணங்களாக, காவியங்களாக, இலக்கியங்களாக கலைவடிவம் பெறுவதாகவும், மனிதனின் அடக்கப்பட்ட பாலுணர்வு ஆசைகள் இன்பநுகர்ச்சி என்ற அதன் இயல்பான இலக்கிலிருந்து விடுபட்டு, கலா சிருஷ்டிப்பு என்ற உன்னத வெளிப்பாடாக உயர்நிலை மாற்றம் (sublimation) பெறுவதாகவும் பிராய்ட் கூறுகிறார்.

எல்லாமே அது. எல்லாவற்றிலும் அது. எல்லாவற்றையும் அசைப்பது அது. அதுவின்றி எதுவுமில்லை என்ற வகையில் பிராய்டின் உளப்பகுப்பியல் பாலுணர்ச்சிக்கு அலாதியான முக்கியத்துவம் கொடுத்து, அதன் மையத்திலிருந்தே மனித மனம், மனித வாழ்வு, மனிதப் பண்பாடு என சகலவற்றிற்கும் விளக்கமும் அளிக்கிறது. இந்த உளவியல் தத்துவம் மனிதனை ஆசையின் பிராணியாக, இன்பத்தின் பித்தனாகச் சித்தரிக்க முனைகிறது.

மனிதன் இயற்கையின் படைப்பு என்பதால் மனித உயிர்வாழ்வு இயற்கையின் நிர்ப்பந்த சக்திகளுக்கு உட்பட்டிருப்பதால் இயல்புணர்ச்சியாக எழும் பாலெழுச்சியின் அழுத்தத்தையும் வீச்சையும், மனித மனதிலும் மனித உறவுகளிலும் அது செலுத்தும் தாக்கத்தையும் நாம் குறைவாக மதிப்பிட முடியாது. ஆயினும் பாலுணர்ச்சி உந்துதலை மனிதத்தின் சாரமாகக் கற்பித்து, மனித வாழ்விற்கும், மனித பண்பாட்டு வரலாற்றிற்கும் ஒருமுகப் பரிமாணத்தில் விளக்கம் அளித்து விட முடியாது.

பிராய்ட், உணர்ச்சிமயமான மனிதனைக் கண்டார். மனிதன் இயற்கையோடு ஒன்றியிருப்பதைப் பார்த்தார். மனிதனின் பரிணாம வேர் இயற்கையில் புதைந்து கிடப்பதை அவதானித்தார். ஆயினும் அந்தக் கண்டுபிடிப்பை, நம்பமுடியாத கற்பனாவாத எல்லைகள் வரை விரிவுபடுத்தி, மிகைப்படுத்திவிட்டார். பிராய்டின் தேடுதல் மனிதனின் முழுமையான முகத்தைக் காட்டவில்லை. மனிதனை ஒரு சமூகப் பிறவியாக, சமூக உறவுகளால் பிணைக்கப்பட்டு, சமூக வாழ்வியக்கத்தால் உருவாக்கப்படுபவனாக அவர் பார்க்கவில்லை.



பிராய்ட்

பாலுணர்வை மையமாக வைத்து சிக்மண்ட் பிராய்ட் சித்தரித்துக் காட்டும் ஆசை உலகத்தின் (realm of desire) நிர்ப்பந்தங்களைப் பார்க்கிலும் மனிதனின் உயிர்வாழ்வை நிர்ணயிக்கும் இன்னொரு உலகமும் இருக்கிறது. அது தான் தேவை உலகம் (realm of needs).

உண்பதற்கு உணவு, உடுத்துவதற்கு உடை, உறங்குவதற்கு உறைவிடம், காலூன்றி நிற்பதற்கு நிலம் என்ற வகையில் நாளாந்த சீவியத்திற்கு ஆதாரமாக எண்ணற்ற தேவைகளின் அழுத்தத்தால் மனிதப் பிறவிகள் ஒருவர் ஒருவருடன் இடர்பட்டு, முரண்டு, போராடி வாழும் ஒரு கொடுமையான உலகமாக இந்தத் தேவை உலகம்



அசைகிறது.

இந்தத் தேவை உலகத்தில் பசியுணர்வு பிரதானமானது. பாலுணர்வின் உந்துதலைவிட பசியுணர்வின் உறுத்துதல் மிகவும் கொடியது. கனவிலோ கற்பனையிலோ மனவுலக மருட்சியிலோ பசியுணர்வின் வேட்கையைத் தணித்து விட முடியாது.

தினமும் அது என்னை வதைக்கிறது. வாட்டி எடுக்கிறது. எனது மடிக்குள்ளிருந்து நெருப்பாகச் சுடுகிறது. அதன் வேட்கையைத் தணிக்காது போனால் எனது வாழ்க்கையே அற்றுப் போகும். உயிரியக்கத்திற்கு அதுதான் எல்லாம். அதற்குப் பின்புதான் மற்றெல்லாம். இந்தப் பூவுலகிலுள்ள கோடானு கோடி வாய்களதும், வயிறுகளினதும் வாழ்நிலைத் தவிப்பாக, அன்றாட அவலமாக, பசியுணர்வு பூதாகாரத் தோற்றப்பாடு கொள்கிறது. தவிர்க்க முடியாத இந்தத் தேவையின் மையத்திலிருந்தே மனித முனைப்புகளின் அசைவியக்கமாக இருப்பின் சக்கரம் சுழல்கிறது.

மனிதனின் ஆணிவேர் இயற்கையில் ஆழப்பதிந்திருக்கிறது. தனது வயிற்றை நிரப்பிக் கொள்வதிலிருந்து தனது சீவியத்திற்கு ஆதாரமான தேவைகள் அனைத்தையும் இயற்கையிலிருந்தே மனிதன் பெற்றுக் கொள்கிறான். தேவை உலகத்து நிர்ப்பந்தங்கள் மனிதனை இயற்கையோடு பிணைத்து வைத்திருக்கிறது; விலங்கிட்டு வைத்திருக்கிறது. அனந்த காலமாக அகற்ற முடியாத இந்தச் சங்கிலிப் பிணைப்பில் கட்டுண்டு கிடக்கும் மனிதன், இயற்கையோடு போராடி, இயற்கையின் நிர்ப்பந்தப் பிடியிலிருந்து விடுதலை பெற எத்தனித்து வருகிறான். ஒருபுறம் தேவையின் கொடூர நிர்ப்பந்தமும், மறுபுறம் விடுதலையின் உந்துதலுமாக மானிடம் ஒரு சிக்கலான முரண்பாட்டில் சிக்குண்டு கிடக்கிறது.

இந்தத் தேவை உலகத்தின் முரண்பாட்டுக் களத்திலிருந்தே மனிதன் பற்றிய விசாரணையைத் தொடங்குகிறார் கார்ள் மாக்ஸ்.

"எல்லாவற்றிற்கும் முதற்படியாக மனிதர்கள்

வாழவேண்டும். உண்டு, உடுத்தி, உறங்கி, உறவு கொண்டு வாழவேண்டும். வாழும் சூழ்நிலையை முதலில் உருவாக்கிக் கொண்ட பின்புதான் மனிதர்கள் வரலாற்றைப் படைக்க முடியும். தமது வாழ்நிலைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய, மனிதர்கள் என்று பொருளுற்பத்தியை ஆரம்பித்தார்களோ என்று பொருளுலகத்தைப் படைக்கத் தொடங்கினார்களோ அன்றிலிருந்தே மனித வரலாறு ஆரம்பமாகிறது'' என்கிறார் மாக்ஸ்.

தேவை உலகத்து அழுத்தத்தால் மனிதனுக்கும் இயற்கைக்கும் மத்தியில் தொடர்ச்சியாக, முடிவில்லாத நிகழ்வுப் போக்காக நடந்து வரும் போராட்டமே உழைப்பு ஆகிறது. இந்த உழைப்பானது மானிடரின் மாபெரும் ஆக்க சக்தியாக, செயற்பாட்டு சக்தியாகப் பொருளுலகத்தைப் படைக்கிறது.

உழைக்கும் மனிதனே இந்தப் பொருளிய உலகத்தின் சிருஷ்டி கர்த்தா. மானிடரின் பொருளிய வரலாற்றைத் தொடங்கி வைப்பவனும் அவனே.

உழைக்கும் மனிதனை மையப் புள்ளியாக வைத்தே கார்ள் மாக்ஸ் தனது சிந்தனைக் கோட்டையைக் கட்டி எழுப்புகிறார்.

உழைக்கும் மனிதன், அவனிடமிருந்து உழைப்பாக வெளிப்பாடு காணும் உழைப்பு சக்தி, அந்த உழைப்பு சக்தியிலிருந்து உருவாக்கம் பெறும் உற்பத்தி உலகம், அந்த உற்பத்தி உலகத்திலிருந்து உருப்பெறும் உற்பத்தி உறவுகள். அந்த உற்பத்தி உறவுகளிலிருந்து தோற்றம் கொள்ளும் வர்க்கப் பிரிவுகள், அந்த வர்க்கங்கள் மத்தியில் முனைப்புறும் முரண்பாடுகள், அந்த முரண்பாடுகளிலிருந்து வெடிக்கும் புரட்சிகள், அந்தப் புரட்சிகளால் தோன்றும் சமூக மாற்றங்கள், அந்தச் சமூக மாற்றங்களாக அசைந்து செல்லும் வரலாறு - இப்படியாக உழைக்கும் கரங்களில் இருந்து கட்டவிழ்கிறது மனித சரித்திரம்.

மனிதனே பொருளுலகத்தையும் படைக்கிறான்; சமூகத்தையும் படைக்கிறான்; தன்னையும் படைக்கிறான். மாக்சிய தரிசனம் மனிதனை இந்த உலகத்தின் கடவுளாகச் சித்தரிக்கிறது.



இந்த மாமனிதன் தனிமனிதனல்ல, அவன் சமூக மனிதன். சமூக உறவுகளால் உருவாக்கம் பெறும் மனிதன். சமூக உறவுகள் என்ற சிக்கலான சிலந்தி வலைக்குள் சிக்கப்பட்டிருக்கும் மனிதன்.

சமூகம் என்பது தனி மனிதர்களால் அமையப் பெற்ற ஒரு மக்கள் கூட்டம் அல்ல. அன்றி தனிமனிதர்களின் உறவு நிலையையும் அது குறித்து நிற்கவில்லை. சமூகம் என்பது ஒரு கட்டமைப்பாக இயங்குகிறது. பல்வேறு சமூகக் கூறுகள் ஒன்றோடு ஒன்று தொடர்புடையதாக, ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்ததாக, ஒன்றோடு ஒன்று ஆதிக்கம் செலுத்துவதாக, ஒரு முழுமையான கட்டமைப்பாக சமூகம் செயற்படுகிறது.

இந்தச் சிக்கலான சமூக உறவுகளுக்கு மத்தியில் தனி மனிதன் இருப்புக் கொள்கிறான். தனது இருப்பு நிலையைத் தனிமனிதன் நிர்ணயித்து விடுவதல்ல. சமூக இயக்கமே தனி மனிதனின் தலைவிதியை நிர்ணயித்து விடுகிறது.

தேவை உலகத்து நிர்ப்பந்தங்கள் ஒரு புறமும், உற்பத்தி உறவுகளின் நிர்ணய சக்திகள் மறுபுறமுமாக, இயற்கையினதும் சமூகத்தினதும் அழுத்தங்கள் தனிமனிதனின் வாழ்நிலையை நிச்சயித்து விடுகின்றன.

கார்ள் மாக்ஸின் புகழ் பெற்ற அறிவியல் ஆய்வு நூலான 'மூலதனம்' முதலாளிய பொருளுற்பத்தி உலகத்தை அறுவை செய்து பார்க்கிறது. முதலாளித்துவத்தின் முரண்பாட்டுக் கோலங்களையும், அதன் அசைவி யக்க விதிகளையும் விளக்க முனைகிறது.

'மூலதனத்தில்' திரைநீக்கம் செய்யப்படும் முதலாளிய சமூக அமைப்பில் தனித்துவமான, தனி இயல்புகளையுடைய தனி மனிதர்களைக் கண்டு கொள்ள முடியாது. இங்கு தனி மனிதர்கள், பொருண்மிய கருத்துருவங்களின் மனித வடிவங்களாக (personifications of economic categories) சித்தரிக்கப்படுகிறார்கள். உற்பத்தி உறவுகளின் சுமை தாங்கிகளாக உருவகம் பெறுகிறார்கள்.

வர்க்க உறவுகளால் வனையப்பட்ட, வர்க்க நலன்களைப் பிரதிபலிக்கும் வர்க்க மனிதர்களாக இனம் காணப்படுகிறார்கள்.

முதலாளித்துவம் என்ற பொருள் உற்பத்தி நாடகத்தில், முதலாளி என்றும் தொழிலாளி என்றும், விற்பவன் என்றும், வாங்குபவன் என்றும் எண்ணில்லாப் பாத்திரங்களைத் தாங்கி மனிதர்கள் மேடையேறுகிறார்கள். அந்தந்தப் பாத்திரங்களை அவனவன் தேர்ந்து கொள்வதில்லை. அந்தப் பாத்திரங்களில் அவனவன் அமர்த்தப்படுகிறான். முதலாளித்துவம் ஒரு ராட்சத இயந்திரமாக, மனிதனுக்குப் புறம்பான ஒரு அசுர சக்தியாக, மனிதனை அடிமை கொள்கிறது. தனி மனிதத்தைச் சிதைத்து விடுகிறது. மனித முகத்தை அழித்து விடுகிறது.

உழைக்கும் மனிதன், முதலாளியச் சந்தையில் ஒரு விலைப் பொருள் ஆகிறான். தனது வயிற்றை நிரப்ப தனது உழைப்பை விற்கிறான். தன்னை விற்கிறான். முதலாளிய ஆதிக்க சக்தி, தொழிலாளியின் ஆக்க சக்தியை விழுங்கிக் கொள்கிறது. அவனது உழைப்பு சக்தியைப் பிழிந்து எடுக்கிறது. தொழிலாளியின் உதிரத்திலிருந்து முதலாளி உபரி லாபத்தை எடுத்துக் கொள்கிறான்.

உழைக்கும் மனிதன் வியர்வை சிந்தி உழைக்கிறான். அவனது உழைப்பு சக்தி பொருள் வடிவம் எடுக்கிறது. மனிதனின் சாரம் பொருள்களில் பொதிந்து பொருள் மயமாகிறது. உழைப்பில் மனிதன் பொருளாக மாறும் விந்தை ஒன்று நிகழ்கிறது. அந்தப் பொருள்களிலிருந்து பண்ட உலகம் தோன்றுகிறது. உழைப்பு சக்தியால் உருவாக்கம் பெறும் இந்தப் பண்ட உலகம் உழைப்பவனுக்கே அந்நியமானதாக ஒரு புதிரான பொருளுலகமாகத் தோற்றப்பாடு கொள்கிறது. இந்த முதலாளியப் பொருளுலகில் உழைக்கும் மனிதன் தனது ஆக்கத்தின் அடையாளத்தை இனம் காண முடியாது. அவனது ஆக்கம், அவனது படைப்பு, அவனுக்கு அந்நியமாகி, அவனிடமிருந்து புறம்பாகி, பண்டமாகி, பணமாகி, லாபமாகி, இன்னொருவனின் செல்வமாகி,



கூடுவிட்டுக் கூடு பாய்கிறது. முதலாளியப் பொருளுலகில் உழைக்கும் மனிதன் தன்னை இழந்து விடுகிறான். தனது மனிதத்தை இழந்து விடுகிறான்.

முதலாளியப் பொருள் உற்பத்தி முறைமையில் மனிதச் சிதைவு (dehumanisation) நிகழும் சூத்திரத்தை கார்ள் மாக்சின் 'மூலதனம்' பிட்டுக் காட்டுகிறது.

மாக்சிய தரிசனத்தில், சமூகத்திற்கு வெளியாக, சமூக இயக்கத்திற்குப் புறம்பாக மனிதனைக் கண்டு கொள்ள முடியாது. மனித வாழ்வு சமூக வாழ்வாக, சமூக உறவுகளால் பின்னப்பட்ட வாழ்வாக, சமூக முரண்பாடுகளால் சிக்குப்பட்ட வாழ்வாக, சமூக சக்திகளால் நிர்ணயிக்கப்பட்ட வாழ்வாக, சமூக இயக்கத்திற்கு உட்பட்ட வாழ்வாக இயங்குகிறது. தனி மனிதன், தனித்த ஒருவனாக, சமூகத்திற்கு வெளியாக நின்று, தனது வாழ்நிலையை நிர்ணயிக்க முடியாது. சமூகத்தை மாற்றியமைக்காமல் தன்னை மாற்றியமைக்க முடியாது. சமூகத்திற்கு உள்ளே நின்று, சமூகப் பிறவியாக நின்று, சமூக உறவுகள் ஊடாகவே மனிதன் தன்னை உருவாக்கிக் கொள்ள முடியும். காலம் காலமாக மனிதன் படைத்த சமூக உலகங்கள் மனித விடுதலைக்கு வழி கோலவில்லை. மனித முரண்பாடுகளைக் களைந்து விடவில்லை. பொருண்மிய சமத்துவத்தை உருவாக்கவில்லை. வரலாற்றுப் பிரக்ஞையின்றி, வரலாற்று அசைவியக்கம் பற்றிய விழிப்புணர்வு இன்றி, மனிதன் வரலாற்றைப் படைத்திருக்கிறான். வரலாற்றைப் படைக்கும் சக்தியாகிய உழைக்கும் மனிதன், ஒடுக்கப்பட்டு, சுரண்டப்பட்டு, அடிமைப்படும் மனிதன், முதலாளித்துவத்தின் இரும்புப் பாதங்களால் மனித சருகுகளாக மிதிபடும் பாட்டாளி வர்க்க மனிதன் சுயவிழிப்புணர்வோடு, வரலாற்றுப் பிரக்ஞையோடு, வரலாற்றைப் படைக்க வேண்டும். அந்த வரலாற்றுப் படைப்பாக உருவாக்கம் பெறும் புதிய சமூகத்தில், பொருளிய பொதுமை நிலவும். அந்த சமத்துவ சமூகத்தில், யுகம் யுகமாக மனிதர்கள் மத்தியில் நிலவி வந்த முரண்பாடுகள் நீங்கிய சூழலில் 'சோலிச மனிதன்' பிறப்பு

எடுப்பான். ஒரு புதிய யுகத்தின் புதிய மனிதனாக சோசலிச மனிதன் திகழ்வான். அகத்திலும், புறத்திலும் விடுதலை பெற்றவனாக, தனது ஆக்க சக்திக்கு ஆக்கபூர்வ வெளிப்பாடு காண்பவனாக, முழு மனிதனாக அவன் உருவாக்கம் பெறுவான். இந்த 'சோசலிச மனிதனின்' பிறப்புடன், வர்க்க முரண்பாட்டில் சுழலும் வரலாற்றுச் சக்கரம் தனது அசைவியக்கத்தை நிறுத்துக் கொள்ளும்.

முதலாளித்துவத்தின் கொடுமையை வெறுத்து, முழு மனித விடுதலையை விரும்பிய கார்ள் மாக்ஸ், இப்படியாக ஒரு தீர்க்கதரிசனம் சொன்னார்.

சோசலிச மனிதன் பிறப்பு எடுத்தானா? பொதுமையின் சமத்துவம் புது மனிதனை, முழு மனிதனை தோற்றுவித்ததா? என்ற கேள்வி பற்றி பிறிதொரு கட்டுரையில் பார்ப்போம். இங்கு இது ஆய்வுப் பொருள் அல்ல.

கார்ள் மாக்ஸ் கனவு கண்ட மனிதன் வேறு, கண்டு கொண்ட மனிதன் வேறு. அவர் கண்டு கொண்ட மனிதனைப் பற்றியே நாம் இங்கு கவனம் செலுத்துகிறோம்.

'மனிதன் யார்?' என்ற கேள்விக்கு மாக்சியத்தில் விடை காண முடியாது என்பது சில நவமாக்சிய தத்துவாசிரியர்களின் கருத்து. மாக்சியமானது சமூக உறவுகள் பற்றியும் சமூக அசைவியக்கம் பற்றியும் ஆழமாகப் பார்க்கிறதே தவிர மனிதம் பற்றியோ மனிதன் பற்றியோ தேடுதலை நடத்தவில்லை என்பது இவர்களது வாதம். இந்தக் கருத்தை முன் வைப்பவர்களில் அல்தூசர் முக்கியமானவர்.

கார்ள் மாக்சின் சிந்தனை உலகை இரு கூறுகளாக வகுத்துக் காட்ட முனைகிறார் அல்தூசர். ஒன்று இளம் பிராய தத்துவார்த்த எழுத்துக்கள். மற்றையது, முதிர்ந்த மாக்சின் 'மூலதனம்'. இளம் பிராய எழுத்துக்கள் தத்துவ கருத்துநிலை சார்ந்தவை என்பதும், 'மூலதனம்' அறிவியற் கோட்பாடுகளைக் கொண்ட வரலாற்று விஞ்ஞானமாக அமையப் பெற்றிருக்கிறது என்பதும் அவரது கருத்து. இளம் பிராய தத்துவ எழுத்துக்களில் மனிதத்துவம் பற்றி (human-



ism) மாக்ஸ் கூறியவை எல்லாம் கருத்து நிலை சார்ந்த சித்தாந்தவாதம் என ஒதுக்கிவிடும் அவர், மூலதனத்திற்கே முக்கியத்துவம் கொடுக்கிறார்.

மாக்சின் சிந்தனை உலகை, சித்தாந்தம் என்றும் விஞ்ஞானம் என்றும் இரு வகைப்படுத்தி மனிதத்துவத்திற்கு சாவு மணி அடிக்கும் அல்தூசரின் வாதத்தை நிராகரிப்பவர்கள் நிறையப் பேர் இருக்கிறார்கள். மாக்சின் எழுத்துக்களில் ஒரு தொடர்ச்சியான படிநிலை வளர்ச்சி இருக்கிறது என்பதும், முதிர்ந்த வயதில் நிகழ்ந்த சிந்தனை முறிவு (epistemological break) என்ற அல்தூசரின் கருத்து தவறானது என்பதும் இவர்களது நிலைப்பாடு. மாக்சின் தத்துவார்த்த எழுத்துக்கள் முற்று முழுதாக மனிதத்துவம் பற்றியே குறிப்பிடுகிறது என்பதும், 'மூலதனத்திலும்' முதலாளித்துவத்திற்கு எதிரான தார்மீகப் பிரகடனங்கள் நிறையவுண்டு என்பதும் இவர்களது வாதம். சர்ச்சைக்குரிய இந்த வாதப் பிரதிவாதங்களை இங்கு விபரித்துக் கூறுவது அவசியமில்லை.

கார்ள் மாக்ஸ் ஒரு மனிதாபிமானி. மானிடத்தின் விடுதலையை விரும்பியவர். முழு மனிதனைக் கனவு கண்டவர். மனித உலகத்தை மாற்றியமைக்க விரும்பியவர். மனித செயற்பாடு மூலம் அது சாத்தியமாகும் என நம்பியவர். அவரது தார்மீக இலட்சியம் நெருப்பு வரிகளாக அவரது எல்லா எழுத்துக்களிலும் சுடர்விடுகிறது.

மனிதன் யார்? என்ற விசாரணையை அவர் நடத்தவில்லை. அது அவரது ஆய்வுப் பொருளும் (analytical object) அல்ல. ஆனால் மனிதம் பற்றியும், மனிதத்துவம் பற்றியும் மனித வளர்ச்சி பற்றியும் அவர் அக்கறையோடு எழுதியிருக்கிறார்.

மனிதா சாரம் (human essence) என்ற பதம் அவரது தத்துவார்த்த சிந்தனையின் மையமாக அமைகிறது. மனித ஆக்க சக்தியை, சிருஷ்டி சக்தியை, அந்தச் சொல் குறித்து நிற்கிறது. சாராம்சத்தில், மனிதனை ஒரு சிருஷ்டி கர்த்தாவாக, ஒரு படைப்பாளியாக அவர் பார்த்தார். பொருளுலகத்தைப் படைப்பவனாகவும் வரலாற்றை

சிருஷ்டிப்பவனாகவும் மனிதனை அவர் சித்தரித்தார். இந்த மனித சிருஷ்டி சக்தியையே தொழிலாக்க சக்தியாக (labour power), பொருட் படைப்பின் மூல சக்தியாக 'மூலதனத்தில்' வர்ணிக்கிறார். இந்தத் தொழிலாக்க சக்தி மனிதனிடமிருந்து அந்நியமாதலையே மனிதச் சிதைவு எனக் குறிப்பிடுகிறார்.

முதலாளியம் மனித தொழிலாக்க சக்தியால் கட்டியெழுப்பப்படுகிறது. மனிதன் கட்டிய அக் கோட்டைக்குள் மனிதனே சிறைப்படுகிறான். படைப்பாளியை படைப்பே விழுங்கிக் கொள்கிறது. முதலாளியத்தின் அநீதியான சமூக உறவுகளால் விலங்கிடப்பட்டிருக்கும் மனிதனையே கார்ள் மாக்ஸ் கண்டார். எனவே 'மூலதனத்தில்' சித்தரிக்கப்படும் மனிதன் முழு மனிதன் அல்ல. அவன் தன்னையிழந்த, தனது சுயத்தை இழந்த, தனது சுதந்திரத்தை இழந்த மனிதன். பொருண்மிய குறியீடாக, பொருண்மிய சக்திகளால் ஆட்டிப்படைக்கப்படும் ஒரு பொம்மை மனிதன்.

பொருளிய வாழ்விற்கும் பொருண்மிய உறவுகளுக்குமே கார்ள் மாக்ஸ் முக்கியத்துவம் கொடுத்தார். மனித மனம், வாழ்க்கையை நிர்ணயிப்பதல்ல. பொருளிய வாழ்வே மனித மனதை நிர்ணயித்து விடுகிறது என்று அவர் எழுதினார். சமூக உறவுகள் என்பது, அவரது ஆய்வில் உற்பத்தி உறவுகளால் உருவாகும் வர்க்க உறவுகளையே குறிக்கிறது. இந்த வர்க்க உறவுகளைத் தாங்கி நிற்கும் வர்க்க மனிதனையே அவர் சமூக மனிதனாகக் கண்டார். எனவே, மாக்சின் சமூக மனிதன் பொருளாதாரக் கட்டுமானத்தின் வரம்பிற்குள் முடங்கிக் கிடக்கிறான்.

சமூக உறவுகள் என்பது சிலந்தி வலை போன்று சிக்கலானது. பல்முகப் பரிமாணங்களைக் கொண்டது. சமூக உறவுகள் அனைத்தையும் பொருளாதார உறவு என்ற வட்டத்திற்குள் வரையறுத்து விட முடியாது.

சமூக உறவுகள் என்ற முடிச்சுகள் பல. அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையானவை. தாய் பிள்ளை



உறவு, சகோதர உறவு, தாம்பத்திய உறவு, குடும்ப உறவு, நட்புறவு, காதலுறவு, கல்வியுறவு, கட்சி உறவு, சமய உறவு, சாதி உறவு, கலை உறவு, பண்பாட்டு உறவு என்பவையும், இன்னும் எண்ணில்லாதவையுமாக சமூக உறவுகளால் மனிதர்கள் பிணைந்து கிடக்கிறார்கள். இந்த சமூக உறவுகளும், அவை விளைவிக்கும் தாக்கங்களும் மனித சுயத்தின் தோற்றத்திற்கும், வளர்ச்சிக்கும் ஏதுவாகின்றன. மனித உருவாக்கத்திற்கு அடிப்படையாக அமைகின்றன.

வர்க்க உறவுகளை மட்டும் பிரதிபலிக்கும் வெறும் பொருண்மிய மனிதனை முழுமையான சமூக மனிதனாகக் கொள்ள முடியாது.

மனிதன் வெறும் உழைக்கும் இயந்திரம் அல்ல. மனிதனின் சாரத்தை வெறும் உழைப்பு சக்தியாக, படைப்பாற்றல் சக்தியாக மட்டும் சித்தரித்து விட முடியாது. மனிதனிடம் உள்ளமுண்டு; உணர்வுகள் உண்டு; சமூகக் கலாச்சார வாழ்வில் பெறப்பட்ட பண்புகளுண்டு. இவை எல்லாம் ஒன்று திரண்ட மனிதமுண்டு, சுயமுண்டு, ஆளுமையுண்டு, ஆழ்மனமுண்டு.

மாக்சிய தத்துவம் தனி மனிதனை ஒதுக்கிவிட்டதால் முழு மனிதனைத் தரிசித்து நிற்கவில்லை.

சமூக அறிவியலுக்கு மனிதத்துவம் பற்றிய விசாரணைகள் அவசியமில்லை என்பது சில மாக்சியத் தத்துவாசிரியர்களின் கருத்து. மாக்சியம் சமூகவியலாக மட்டுமன்றி மனிதவியலாக முழுமை பெறுவதற்கு மனிதன் பற்றிய ஆழமான பார்வை தேவை என்பது வேறு சிலரது வாதம். மாக்சியத்தில் தனி மனிதனின் மனிதத்துவமும் உதாசீனம் செய்யப்பட்டதால்தான், மாக்சிய சித்தாந்தத்தை தழுவிக் கொண்ட சோசலிச அரசுகள் சர்வாதிகாரத்தை நிலை நிறுவி, தனி மனித சுதந்திரங்களை நசுக்க முயன்றன என்பதும் இவர்களது நிலைப்பாடு.

மாக்சியத்திலுள்ள இந்தக் குறைபாட்டை எப்படி நீக்குவது? மனிதனுக்கு முழுமையான விளக்கம் எவ்விதம் அளிப்பது?

மாக்சிய சமூகவியல் கோட்பாடுகளையும் பிராய்ட்டின் மனப் பகுப்பியல் கோட்பாடுகளையும் ஒன்றிணைத்துப் புதிதாக ஒரு அறிவியல் தத்துவத்தை உருவாக்கினால் மனிதன் பற்றி விஞ்ஞான பூர்வமான ஒரு ஆழமான தரிசனம் கிட்டலாம் என்பதும் சில அறிஞர்களது கருத்து. மாக்சிய சமூகவியலையும் பிராய்ட்டின் உளவியலையும் கோட்பாட்டு ரீதியாகத் திருமணம் செய்து வைக்க மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் வெற்றி பெறவில்லை. இரண்டு, வெவ்வேறான ஆய்வு இலக்குகளைக் கொண்ட அறிவியல் உலகங்களை ஒன்றிணைப்பது சுலபமான காரியமல்ல. நவ பிராய்டிய சிந்தனையாளர்களான லக்கான் (Lacan) போன்றவர்கள் உளப் பகுப்பியலை மொழி அமைப்பியலாக (linguistic sturcturalism) உருமாற்றம் செய்ய முனைவதால் இந்த இணைப்பு முயற்சிகள் மேலும் சிக்கலடைந்துள்ளன. ஆயினும் மனிதனைத் தேடும் மனிதனின் முயற்சி தொடர்கின்றது.

இந்த உலகம் மாறி வருகிறது. மாறி வரும் இந்த உலகத்துடன் மனிதனும் மாறி வருகிறான். காலம் என்ற காற்று அடித்துச் செல்லும் மாற்றம் என்ற படகில், ஒரு முடிவில்லாப் பயணத்தைத் தொடரும் மனிதன், தன்னை நோக்கிப் பார்க்கிறான். அந்த சுய தரிசனத்தில், அவனது முகம் அவனுக்குப் புலப்படுவதில்லை. அது சதா மாறிக் கொண்டிருக்கிறது. இறந்த காலத்தின் சுவடுகளும் எதிர்காலத்தின் நம்பிக்கைகளுமே அவனுக்குத் தென்படுகிறது.

ஆனால் மனிதன் தன்னைத் தேடுகிறான். முடிவில்லாத் தொடர் கதையாக அந்தத் தேடுதல் தொடர்கிறது.



# கருத்துலகமும் வாழ்வியக்கமும்

நாம் வாழும் இந்த உலகத்தைப் பல உலகங்களாக வகைப்படுத்தலாம். எல்லையற்ற பிரபஞ்சமாக எங்கும் வியாபித்து நிற்கும் பேருலகம். ஒன்பது கிரகங்களில் ஒரு கிரகமாக, சூரியன் என்ற நட்சத்திரத்தை சுற்றி உலா வரும் பூவுலகம். மனித உறவுகளால் பின்னப்பட்டிருக்கும் சமூக உலகம். மூளைய நரம்பு மண்டலமாக மண்டையின் ஓட்டுக்குள் மறைந்திருந்து செயற்படும் மனவுலகம். இப்படியாக பல உலகங்களுக்குள் எமது வாழ்க்கை ஓடுகிறது. இந்த வகையில் கருத்துலகம் என்ற ஒரு உலகமும் உண்டு.

கருத்துலகம் என்றால் என்ன? அது எங்கே இருக்கிறது? அது எப்படி இயங்குகிறது?

கருத்துலகம் என்றால் கருத்துக்களால் அமையப் பெற்ற உலகம். எண்ண உலகம். மனித சிந்தனைகள், நம்பிக்கைகள், கோட்பாடுகள், சித்தாந்தங்கள், வேதாந்தங்கள், தத்துவங்கள், இலக்கியங்கள் என்ற ரீதியில் கருத்துக் குவியல்களைக் கொண்ட உலகம். பலவகைப்பட்ட இந்தக் கருத்துருவங்களின் ஒட்டுமொத்த மான கட்டமைப்பையே இங்கு கருத்துலகமெனக் குறிப்பிடுகிறேன்.

கருத்துக்கள் என்றால் மனிதர்களின் மனக் குகைக்குள் வசிக்கும் அரூபமான நிழலுருவங்கள் அல்ல. அன்றி, அவை அனுபவத்திற்கு அகப்படாத பூடகமான மானசீகப் பொருட்களுமல்ல.

கருத்துக்களுக்கு இருப்புண்டு. திண்ணியமான பொருளிய வாழ்வுண்டு. கருத்துக்கள் மனித பண்பாட்டு உலகிலிருந்து பிறப்பெடுக்கின்றன. அவை மனிதர்களைப் பற்றிக் கொள்கின்றன. கருத்துக்களுக்கு அபார சக்தியுண்டு.

அவை மனிதர்களைப் பற்றிக் கொண்டு அவர்களது வாழ்க்கையை நிர்ணயிக்கும் சக்தியுடையனவாக இயங்குகின்றன.

அது ஒரு பொது நூலகம். நகரப் புறத்தில் ஒரு அழகிய பூங்காவிற்கு அண்மையில், அமைதியான சூழலில் அமையப்பெற்றிருக்கிறது. அதனுள் ஆயிரமாயிரம் நூல்கள். நேர்த்தியாக, ஒழுங்கு வரிசையாக, அலமாரிகளிலும், நிலையடுக்குகளிலும் அவை அடுக்கப்பட்டிருந்தன. இலக்கியம், தத்துவம், சட்டம், அரசியல், சமூகவியல், இறையியல் என்ற ரீதியில் பல துறை சார்ந்த பல்லாயிரம் புத்தகங்கள். ஒரு பிரமாண்டமான கருத்துலகத்தின் பொருளியத் தோற்றப்பாடாக அந்நூலகம் விளங்கியது.

அந்த நூல்கள் அனைத்துமே உயிரற்ற சடப்பொருட்களாக, வெறும் அச்சிடப்பட்ட கடுதாசிப் பண்டங்களாக காட்சி தந்தபோதும், அப்புத்தகங்கள் ஒவ்வொன்றிலும் ஏதோவொரு அதிசயமான இறவாப் பொருள் ஒளிந்து கிடந்தது. ஒவ்வொரு நூலிலும் ஒரு படைப்பாளியின் ஆன்மா குடிகொண்டிருந்தது. அந்தப் படைப்பாளி மரணித்து பல ஆண்டுகள் கழிந்திருக்கலாம். அல்லது பல நூற்றாண்டுகள் கழிந்திருக்கலாம். ஆயினும் அப்படைப்பாளியின் எண்ணங்கள், சிந்தனைகள், கருத்துக்கள், கோட்பாடுகள், அவன் ஆய்வு செய்து கண்ட உண்மைகள், அவனது கண்டுபிடிப்புகள், வாழ்வனுபவத்திலிருந்து அவன் பெற்ற தரிசனங்கள் - எல்லாமே எழுத்து வடிவத்தில் நூலாக, அவனது வாழ்வின் சாட்சியாக, காலத்தால் சாகாத அவனது சிருஷ்டியாக, ஒரு மனிதத்தின் பேருண்மையாக அங்கு இருப்புக் கொண்டு இருந்தது.

தினமும் அந்த நூலகத்திற்குப் பல வாசகர்கள் வருவார்கள். அவரவருக்குப் பிடித்தமான துறைகளில், அவரவருக்குப் பிடித்தமான நூல்களைத் தெரிந்தெடுத்துப் படிப்பார்கள். வாசிப்பில், வாசகனுக்கும் அந்த நூலைப் படைத்த படைப்பாளிக்கும் மத்தியில் ஒரு விசித்திரமான உறவு நிகழ்கிறது. மானசீகமான ஒரு சந்திப்பு நிகழ்கிறது. அகவயமான ஒரு சங்கமம் நிகழ்கிறது. படைப்பாளியின் எழுத்துலகில், அவனது கருத்துலகில், அவனது அனுபவக் களத்தில் பிரவேசிக்கும் வாசகன் படைப்பாளியுடன் இணைந்து ஒரு தேடுதலை நடத்துகிறான். ஒரு விசாரணையை நடத்துகிறான். அந்தத் தேடுதலில், அந்த விசாரணையில், படைப்பாளியின் தரிசனத்தை வாசகன் தரிசித்துக் கொள்கிறான். அவனது பார்வை இவனைப் பற்றிக் கொள்கிறது. கருத்துக்கள் கூடுவிட்டுக் கூடு பாயும் வித்தை நிகழ்கிறது.

அன்றொரு காலம், பல யுகங்களுக்கு முன்னர், இந்தப் பூமியில் ஒரு கருத்துப் பிறப்பு எடுத்தது. கருத்துக்களின் மையக் கருத்தாக அது புனிதம் பெற்றது. மனிதர்களை அது ஆழமாகப் பற்றிக் கொண்டது.

அந்தக் கருத்துக்கு மனிதன் பொருள் வடிவம் கொடுத்தான். மலைகளைப் பெயர்த்து, பாறைகளைத் தகர்த்து கலைவடிவம் கொடுத்தான். ஆயிரமாயிரம் ஆலயங்கள் எழுந்தன.

அந்தக் கருத்துக்கு மனிதன் விளக்கங்களைக் கொடுத்தான். வியாக்கியானங்கள் அளித்தான். அர்த்தங்களைக் குவித்தான். வேதங்கள் தோன்றின. சித்தாந்தங்கள் பிறந்தன. கிரிகைகள், சடங்குகள் தோன்றின. நிறுவனங்கள், நிர்வாக பீடங்கள் தோன்றின. கோடானு கோடி அடியார்கள் தோன்றினர். ஆராதனைகள் நடத்தினர்.

அந்த மையக் கருத்திலிருந்து இப்பூவுலகில் பல நாகரீகங்கள் தோன்றின. கிறீஸ்தவ, இஸ்லாமிய, இந்து, பௌத்த நாகரீகங்களாக மானிடம் பிளவுபட்டது. போர்கள் நிகழ்ந்தன. நாடுகளும் இனங்களும் மோதின. பூமியில் இரத்த ஆறுகள் ஓடின. அந்தக் கருத்து மனிதர்களை ஆழமாகப் பற்றிப் பிடித்து அவர்களை ஆட்டிப் படைத்தது.

கருத்துலகம் மனிதர்களை இயந்திரமாக இயக்குகின்றது. மனிதர்களின் நம்பிக்கைகளுக்கும் அவர்களது சமூக செயற்பாடுகளுக்கும் ஆதாரமாக விளங்குகின்றது.

நாம் பிறந்த கணத்திலிருந்தே கருத்துலகம் எம்மை

ஆட்கொண்டு விடுகிறது. நாம் விழிப்புணர்வு பெறுவதற்கு முன்னரே எமக்கு விலங்குகளை மாட்டிவிடுகிறது. விபரமறி யாத பருவத்திலேயே எமது விதியை நிர்ணயித்து விடுகிறது.

நாம் பிறந்த கணத்திலிருந்து எமக்கொரு பெயர் என்றும், எமக்கொரு சாதி என்றும், எமக்கொரு மதம் என்றும், மரபு என்றும், சம்பிரதாயம் என்றும் கருத்துலகம் குத்திவிடும் சமூகக் குறிகள் சுடுகாடு வரை எம்மைப் பின்தொடர்கின்றன. நாம் வாழ்ந்த குடும்பம், நாம் படித்த பாடசாலை, நாம் வழிபட்ட கோவில், நாம் வாசித்த நூல்கள், நாம் பழகிய நண்பர்கள், நாம் வரித்துக் கொண்ட ஆசான்கள் என நாம் கொண்ட உறவுகளால் காலம் காலமாக எமது மூளையில் திணிக்கப்பட்ட எண்ணங்கள், நம்பிக்கைகள், சித்தாந்தங்கள், உலகப் பார்வைகளால் எமது மனமும் எமது சுயமும் தோற்றப்பாடு கொள்கிறது. எம் மீது திணிக்கப்பட்டதும் நாமாகப் பற்றிக் கொண்டதுமான கருத்துக்கள் எமக்கு உள்ளே இருப்புக் கொண்டு எம்மை இயக்கிக் கொண்டிருக்கின்றன. நாம் கருத்துக்களால் வனையப்பெற்ற சமூகப் பொம்மைகள்.

கோவிலில் அந்தச் சடங்கு நடக்கிறது. குருவானவர் பூசை செய்கிறார். அப்பத்தையும் முந்திரிப் பழச்சாறுடைய கிண்ணத்தையும் உயர்த்திப் பிடித்தவாறு செபிக்கிறார். சிலுவையில் நிகழ்ந்த கடவுளின் மரணம் குறியீட்டுச் சடங்காக மேடையேறுகிறது. அவன் முழங்காலிட்டபடி தலைகுனிந்து, கைகூப்பியவாறு வணங்குகிறான். நம்பிக்கை என்ற கருத்தியக்கம் அவனை ஆட்கொண்டு இயக்கியது. அன்று காலை, ஒரு மணி நேரமாக அவனும் அவனுடன் சேர்ந்து மற்றவர்களுமாக அந்த மத பண்பாட்டுச் சடங்கில் பங்கு கொண்டனர்.

ஒருவனது நடத்தை, அவனது செயற்பாடு, அவன் நாளாந்தம் நடத்தும் வழிபாடுகள், மற்றவர்களுடன் சேர்ந்து அரங்கேற்றும் சம்பிரதாயச் சடங்குகள், உறவு முறைகள் - எல்லாமாக அவனது சமூகச் செயற்பாடுகள் அனைத்தையுமே கருத்துலகம் நிர்ணயித்து விடுகிறது.



மனிதர்கள் தம்மை அடையாளம் காணவும், சமூகப் பிறவிகளாக தம்மை உருவாக்கிக் கொள்ளவும், மற்றவர்களுடன் உறவுகொண்டு பண்பாட்டு வாழ்வில் பங்குகொள்ளவும் கருத்துலகம் வழிசெய்து கொடுக்கிறது. இந்த வகையில் தனிமனித வாழ்விற்கும், சமூக சீவியத்திற்கும் கருத்துலகம் ஆதாரமாக விளங்குகின்றது.

கருத்துக்கள் சமூக உலகம் சார்ந்தவை. கருத்துலகமானது சமூக உலகத்தின் ஒரு துணை உலகமாக, சமூகக் கட்டமைப்பின் ஒரு அமைப்பாக, மனித வாழ்வியக்கத்தை ஊடுருவி நிற்கிறது.

கருத்துலகத்தை சமூக உலகமே படைக்கிறது. சமூக நிறுவனங்களே கருத்துலகை உருவாக்கம் செய்கின்றன.

குடும்பம், பாடசாலை, பல்கலைக் கழகம், கோவில், கட்சி, ஊடகம் என்ற ரீதியில் கருத்து உற்பத்தி நிறுவனங்கள் உள்ளன. குடும்பம் மொழியைக் கற்றுக் கொடுக்கிறது. பேசும் ஆற்றலைப் பெற்றுக் கொடுக்கிறது. எழுத்தறிவைப் பெற்றுக் கொடுக்கிறது பாடசாலை. பல்வேறு கலைகளையும் புலமைகளையும் பயிற்றுவித்து அறிவாற்றலை வளர்த்து விடுகிறது பல்கலைக் கழகம். அடுத்த உலகம் பற்றியும் அழியாத ஆன்மா பற்றியும், எல்லாம் வல்ல இறைசக்தி பற்றியும் போதனை செய்கிறது மதம். கருத்துப் பரப்புரை செய்கிறது கட்சி. தகவல்களைத் தந்து கருத்துகளை விதைக்கிறது ஊடகம். பேசும் மொழியாக, எழுத்தாக, பாடங்களாக, போதனைகளாக, பிரசங்கமாக, பிரச்சாரமாக, செய்தியாக, தகவலாக பல்வேறு வழிகளில் பல்வேறு வடிவங்களாக, பல்வேறு நிறுவனங்கள் வாயிலாக கருத்து உற்பத்தியும் கருத்துத் திணிப்பும் நிகழ்கிறது. நாம் பிறந்த கணத்திலிருந்தே எமது மனதின் நினைவுப் பசுமையில் கோடானு கோடி கருத்துருவங்கள் விதைக்கப்படுகின்றன. நாம் விசாரணை செய்யாது விழுங்கிக் கொள்ளும் கருத்துக்களிலிருந்தும் நாம் விரும்பிப் பற்றிக் கொள்ளும் எண்ணங்களிலிருந்தும் அவற்றின் தன்மைகளிலிருந்தும் எமது சுயம் வளர்கிறது;

எமது ஆளுமை வனையப் பெறுகிறது; எமது சிந்தனையும் செயற்பாடும் சீவியமும் அமைந்து விடுகிறது.

கருத்துக்களைப் படைத்து, அந்தக் கருத்துக்களை வெகுசன அரங்கில் பரப்பி, சமூகக் கருத்தோட்டத்தை கட்டி வளர்த்து, சமூக சிந்தனைப் போக்கை நெறிப்படுத்தி, சமூகக் கட்டுப்பாட்டை நிலைநாட்டுவதில் கருத்து உற்பத்தி நிறுவனங்களின் பங்கு முக்கியமானது. இன்றைய நவயுகத்தில் ஊடகங்களே பிரதான கருத்து உற்பத்தி நிறுவனமாகக் கொள்ளப்படுகின்றன. மனிதர்கள் மீது கருத்தாதிக்கம் செலுத்தி, அவர்களைக் கட்டுப்பாட்டுடன் ஆளுவதற்குக் கருத்துத் திணிப்பு அவசியம் என்பதால் உலகத்திலுள்ள பல அரசுகளும் அதிகார வர்க்கங்களும் கருத்து உற்பத்தி நிறுவனங்களாக ஊடகங்களைத் தமது அதிகாரக் கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்கின்றன. கருத்துக்களை மக்கள் மீது திணித்து, மக்களின் விழிப்புணர்வை மழுங்கடித்து, மக்களின் மனவரங்கில் ஒரு பொய்யான, போலியான சிந்தனையுலகைச் சிருஷ்டித்து, கருத்தாதிக்கம் மூலம் தமது ஆட்சியை வலுப்படுத்தி நிலைப்படுத்த முனைகின்றன. இந்த வகையில், கருத்துருவாக்கமானது மனிதர்கள் மீது ஆதிக்கம் செலுத்தும் ஒரு அடக்குமுறை வடிவமாகும்.

சமூகச் சிந்தனை உலகை மாற்றியமைக்கும் வகையில் கருத்துருவாக்கம் செய்வது ஒரு கலை. மிகவும் நுட்பமான ஒரு கலை. மெய்மையைத் திரிவுபடுத்தி, பொய்மையை மெய்மையாகக் காட்டும் ஒரு சூட்சுமமான கலை. படித்தவர்களும் சரி, பாமர மக்களும் சரி, இந்தக் கண்கட்டு வித்தையை இலகுவில் கண்டு கொள்ள முடியாது. இன்றைய உலகில் இந்தக் கருத்துருவாக்கக் கலை ஒரு பெரும் வர்த்தகமாக வளர்ந்து வருகிறது. இந்தக் கருத்துருவாக்க கலையில், அதன் வர்த்தக ரீதியான வளர்ச்சியில் அமெரிக்க ஊடகங்கள் உலகில் முன்னணி வகிக்கின்றன. அமெரிக்க ஊடக உரிமையாளர்கள் பெரும் முதலாளித்துவ முதலைகள். பெரும் செல்வந்தர்கள். இந்த ஊடகச் சொந்தக்காரர்களான



வர்த்தகர்களுக்கும் அதிகார ஆதிக்கம் பெற்ற அரசியல்வாதிகளுக்கும் மத்தியில் ஒரு நெருங்கிய உறவுண்டு. இந்த உறவின் அடிப்படையில், பரஸ்பர நலன் பேணும் நோக்கில், ஊடகங்கள் ஆட்சியதிகாரத்திற்கு முண்டுகொடுத்து நிற்கின்றன. ஆட்சியாளரின் அநீதிகளை நியாயப்படுத்தி வருகின்றன.

சிந்தனைச் சுதந்திரம், எழுத்துச் சுதந்திரம், அடிப்படையான மனித சுதந்திரம், சனநாயக சுதந்திரம் என்ற ரீதியில் சுதந்திர விழுமியத்தின் உன்னதத்தை உலகிற்குப் போதித்து வருகிறது அமெரிக்கா. சுதந்திரம் என்ற இக்கருத்துருவத்தின் தோற்றப்பாட்டிற்கு அப்பால், அந்தப் பொய்யான முகமூடிக்கு அப்பால், காலம் காலமாக அமெரிக்க அரசு புரிந்து வந்த அநீதிகளையும், அதனை நியாயப்படுத்த அமெரிக்க ஊடகங்கள் கையாண்ட யுக்திகளையும் தகுந்த ஆதாரங்களுடன் அம்பலப்படுத்திய பெருமை அமெரிக்கப் பேரறிஞரான நோம் சொம்ஸிசைச் சாரும். அமெரிக்காவின் சனநாயக முகமூடியை கிளித்தெறிகிறார் சொம்ஸி. சுதந்திரம் என்றும் மனித உரிமை என்றும் அமெரிக்க அரசியலுலகில் பேசப்படுவது எல்லாமே அர்த்தமற்ற சொல்லாடல்கள். நடைமுறை நிதர்சனத்திற்கு மாறான வார்த்தைப் பிரயோகங்கள். 'சுதந்திர உலகம்' என்ற ஒரு போலியான கருத்துருவத் திரைக்குப் பின்னால் மறைந்து நின்று, மற்றைய நாடுகளதும் சமூகங்களதும் சுதந்திரங்களை நசுக்கி வருவதாக அமெரிக்கா மீது குற்றம் சுமத்துகிறார் சொம்ஸ்கி. சுதந்திர நாடுகள் மீது படையெடுப்பது, ஆக்கிரமிப்பது, மக்களின் ஆதரவுடைய ஆட்சியைக் கவிழ்ப்பது, ஆட்சி மாற்றங்களை அரங்கேற்றுவது, சர்வாதிகார ஆட்சிகளுக்கு முண்டுகொடுப்பது, பயங்கரவாதிகளுக்குப் பயிற்சி கொடுப்பது, இனவாத அரசுகளுக்கு ஆயுத உதவி வழங்குவது, மனித இனத்தை அழிக்கவல்ல அணுவாயுதங்களை உற்பத்தி செய்து குவிப்பது - இவ் விதமான அட்டூழியங்களை அமெரிக்க அரசு புரிந்து வர அதனையெல்லாம் சுதந்திரத்தின் பெயரால் நியாயப்படுத்தி

வருகின்றன அமெரிக்க கருத்துருவாக்க நிறுவனங்களான ஊடகங்கள். இப்படியாக, அமெரிக்க அரசின் அசிங்கமான உண்மை முகத்தை அம்பலப்படுத்துகிறார் சொம்ஸ்கி. எந்தவொரு காலத்திலும், எந்தவொரு சமூகத்திலும் அதிகார மேலாண்மையும் கருத்துநிலை மேலாதிக்கமும் ஒன்றோடு ஒன்று தொடர்புடையதாக, ஒன்றுக்கொன்று முண்டுகொடுத்து நிற்கின்றன.

அன்றொரு காலம், காலனித்துவப் பேரரசுகள் இந்தப் பூமியில் தமது வல்லாதிக்கத்தை விரிவுபடுத்தியபோது ஆயுத வன்முறையை மட்டும் அவை பாவிக்கவில்லை. கருத்து ஆதிக்கத்தையும் ஒரு அடக்குமுறைக் கருவியாக அவர்கள் பிரயோகிக்கத் தவறவில்லை. முதலில் தமது மொழியைத் திணித்தார்கள். தமது மொழியைப் பயின்றவர்களுக்குக் காலனித்துவ நிர்வாகத்தில் வேலை வாய்ப்பு அளித்தார்கள். அடுத்ததாக, தமது மதத்தைப் பரப்பினார்கள். தமது மொழியைப் பயின்று, தமது மதத்தையும் தழுவிக் கொண்ட சுதேசிய மக்களுக்கு எல்லா சலுகைகளையும் வழங்கினார்கள். பின்னர் தமது அரசியல் ஆட்சிமுறைக் கோட்பாடுகளைத் திணித்தார்கள். இறுதியாக, மேற்கத்தைய தார்மீக தத்துவங்களைப் பரப்பினார்கள். மேற்கத்தைய தார்மீக விழுமியங்களின் மகத்துவத்தைப் போதித்தார்கள். இப்படியாக மேற்குலக காலனித்துவ வாதிகளின் மதம், மொழி, அரசியல், தார்மீகம் என்ற ரீதியில் அந்நியப் பண்பாட்டுக் கருத்துருவங்கள் சுதேசிய மக்கள் மீது திணிக்கப்பட்டன. காலனித்துவமானது தான் ஆக்கிரமித்த நாடுகளின் நிலத்தையும், அதன் வளங்களையும் சுரண்டுவதுடன் நின்றுவிடவில்லை. கருத்தாதிக்கத்தைத் திணித்து சுதேசிய மக்களின் மனவுலகத்தையும் அது ஆக்கிரமிக்க முயன்றது.

கருத்து விலங்கிட்டு மனித மனங்களைச் சிறை கொள்வது ஒரு நுட்பமான அடக்குமுறை யுக்தி. உலகெங்கும் அடக்குமுறையாளர்கள் இந்தக் கருத்தாதிக்க யுக்தியையே கடைப்பிடிக்கின்றார்கள். மனிதர்களை விழித்தெழச் செய்யாது அவர்களை அறியாமை



உறக்கத்தில் ஆழ்த்துவதற்கு ஏகாதிபத்தியவாதிகளும் சரி, பேரினவாதிகளும் சரி, இந்தக் கருத்துப் போதையையே பாவித்து வருகின்றனர். அடிமை கொண்ட மக்களின் கிளர்ச்சியை நசுக்க, புரட்சியை முறியடிக்க, விடுதலை உணர்வைக் கொன்றுவிட கருத்தாதிக்கமானது ஒரு கனரக ஆயுதமாகப் பாவிக்கப்பட்டு வருகிறது.

கருத்துலகமானது எமது சமூக வாழ்வை ஊடுருவி நிற்கிறது. சமூக உறவுகளோடு பின்னிப் பிணைந்து நிற்கிறது. எமது சிந்தனையையும் செயற்பாட்டையும் நிர்ணயித்து வருகிறது. காலையில் எழுந்து பத்திரிகைகளை வாசிப்பதிலிருந்து அல்லது வானொலிச் செய்திகளைக் கேட்பதிலிருந்து இரவு படுக்கைக்குச் செல்லும் வரை, நாளாந்தம் பல்வகைப்பட்ட உறவு நிலைகளில் மற்றவர்களது எண்ணங்களை, கருத்துக்களை, அபிப்பிராயங்களை, பார்வைகளை நாம் எதிர்கொண்டு வருகிறோம். எமது மனவரங்கில் தொடர்ச்சியாக, முடிவில்லாது கொட்டப்படும் எண்ணங்களின் இயல்புகளை, கருத்துக்களின் தன்மைகளை, பார்வைகளின் அந்தரங்க நோக்குகளை நாம் விழிப்புணர்வுடன் விசாரணை செய்து பார்க்கத் தவறினால் கருத்தாதிக்கச் சிறையிலிருந்து நாம் விடுதலை பெறுவது சாத்தியமல்ல.

# மனப்புரட்சியும் மனித விடுதலையும்

## ஜிட்டு கிருஷ்ணமூர்த்தி

யார் இந்த ஜிட்டு கிருஷ்ணமூர்த்தி?

கடவுள் என்றும், ஞானி என்றும், புத்த பெருமானின் அவதாரம் என்றும், அனுபூதிமான் என்றும், ஆன்மயோகி என்றும், தத்துவதரிசி என்றும் நாம் பதிக்கும் சமூகப் படிமங்களுக்கும் எமக்குத் தெரிந்த சாதாரண அளவீடுகளுக்கும் அகப்படாத ஒரு அபூர்வமான மனிதர்.

அவர் யார் என்பதை வரையறுத்துக் கொள்வது கடினம். அப்படி வரித்துக் கொண்டு நாம் அவரைப் புரிந்து கொள்ளவும் முடியாது.

'அவர் யார்?' என்ற கேள்விக்கு அவர் யாருமற்றவர் என்பதுதான் பொருத்தமான பதில். ஏனென்றால் அவர் தனது சுயத்தை, அகந்தையை, ஆளுமையை, அகத்தின் முகத்தை அழித்துக் கொண்டவர்.

அவர் ஒரு அசாதாரண மனிதர். அழகான மனிதர்.

தொண்ணூறு ஆண்டுகள் வரை எம்மோடு இப் பூமியில் வாழ்ந்தார். அதில் எழுபத்தைந்து ஆண்டுகள் வரை எம்மோடு கலந்துரையாடினார், போதித்தார், எழுதினார்.

மனித மனம் பற்றி, மனித உறவுகள் பற்றி, மனித விழிப்புணர்வு பற்றி, மனித விடுதலை பற்றி, மனித வாழ்வின் சகல சிக்கலான பரிமாணங்கள் பற்றியும் மிகவும் கனிவுடன், மிகவும் அக்கறையுடன், மிகவும் துல்லியமான தெளிவுடன், மிகவும் அழகான, அற்புதமான கவிதா மொழியில் பேசினார், எழுதினார்.

அவரது போதனைகள், எழுத்துக்கள் எல்லாவற்றையும் நாம் ஒன்று சேர்த்துத் தொகுத்துப்

பார்த்தால் அவை ஒரு பெரும் தத்துவார்த்தமாகவோ கருத்துக் களஞ்சியமாகவோ அல்லது ஒரு ஆன்மீக தரிசனமாகவோ அமையமாட்டா. அவை அனைத்துமே எம்மை நோக்கி எறியப்படும் கேள்விகள்; எம்மோடு சேர்ந்து நடத்தப்படும் தேடுதல்கள்; எமது கனவுகளைக் கலைத்து, நம்பிக்கைகளை உடைத்து, விழிப்புணர்வைத் தூண்டும் விசாரணைகள். கிருஷ்ணமூர்த்தி எமக்கு எவ்வித தத்துவக் கோட்பாடுகளையும் நெறித்துவிடவில்லை. ஆன்மீக ஞான தரிசனத்தை அளித்து விடவில்லை. உண்மைப் பொருளைக் கண்டு கொள்ளும் ஒரு மார்க்கத்தை காட்டவில்லை.

யுகம், யுகமாக எமக்குள், எமது மனக்குகை இருட்டினுள் நாமே வரைந்துவிட்ட நிழலுருவங்களை, புனைந்துவிட்ட பொய்மைகளைக் கண்டுகொள்வதாயின் "நாமே எமக்கு ஒளியாக வேண்டும்" என்கிறார் கிருஷ்ணமூர்த்தி. அவரது போதனை ஒரு புதுமையான சுய தரிசனக் கண்ணாடி.

மனித குலம் இன்று தன்னைத் தானே அழித்துக் கொள்ளும் ஒரு பயங்கர அணுயுகத்தின் விளிம்பில் நிற்கிறது. உலகமானது பிளவுபட்டு, மனித உறவுகள் சிதை பட்டுக் கிடக்கின்றன. வல்லரசுகள் என்றும், நாடுகள் என்றும், இனங்கள் என்றும், மதங்கள் என்றும், வர்க்கம் என்றும், சாதி என்றும் மானிடம் சிதறுண்டு, முரண்பட்டு மோதுகிறது. இனவாதம், மதவாதம் என்ற வெறிபிடித்த சித்தாந்தங்கள் வன்முறைக்குத் தூபமிடுகின்றன. உலகின் பல முனைகளில் யுத்தங்களும் போராட்டங்களும் புரட்சிகளும் வெடித்து மனிதனை மனிதன் அழித்துக் கொண்டிருக்கிறான். இவ்விதம் மனித வாழ்வு சீர்குலைந்து கிடப்பது ஏன்? மனித உறவுகள் சிக்குப்பட்டு குரோதமடைவது ஏன்? மனிதர்களிடையே அன்பும் அமைதியும் ஒத்திசைவான வாழ்வும் செத்துப் போனது ஏன்? மனிதன் முழுமையோடு, நிறைவோடு, உள்ளும் புறமும் இசைவாக, அமைதியோடு ஆனந்தமாக வாழ முடியாதா?

மனிதன் நாகரீகங்களை தோற்றுவித்தான். அவை அழிந்து போயின. சாம்ராஜ்யங்களைக் கட்டி எழுப்பினான்.





ஜிட்டு கிருஷ்ணமூர்த்தி

அவை இடிந்து விழுந்தன. சமுதாய வடிவங்களை உருவாக்கினான். அவை சிதைந்து போயின. மனிதன் மீண்டும் மீண்டும் ஒரு உன்னதமான, புதுமையான சமுதாயத்தைக் கட்டி எழுப்ப விழைகிறான். சமுதாய அமைப்பை மட்டும் மீண்டும் மீண்டும் மாற்றியமைத்து விடுவதால் மனிதன் சுபீட்சமடைய முடியுமா?

தனி மனிதனுக்குப் புறம்பான சக்தியாக, தனிமனிதனை ஆட்டிப்படைக்கும் சக்தியாக, தனி மனித தனித்துவத்தை நசுக்கிவிடும் சக்தியாக சமுதாய அமைப்பு இயங்கும் பொழுது அது தனி மனித முழுமைக்கும், மனித விடுதலைக்கும் வழி வகுக்குமா?

சமுதாயம் என்பதே சிக்கலான மனித உறவுகளைக் குறிப்பது அல்லவா? இந்த உறவு எனக்கும் உனக்கும் இடையிலான உறவு. அவனுக்கும் மற்றவனுக்கும் இடையிலான உறவு. மனித உறவுகளின் ஒட்டுமொத்தமான

சிலந்திவலைப் பின்னலாக சமூக அமைப்பு உருவகம் பெறுகிறது. தனி மனிதன் தனது மனவுலக இருட்டினுள் பாதை தெரியாது தடுமாறும் பொழுது, பொய்மைகளில் புதைந்து குழம்பும்போது, எனக்கும் உனக்குமுள்ள உறவுகளில் புரிந்துணர்வு இல்லாதபோது, அவனுக்கும் மற்றவனுக்கும் உள்ள உறவுகளில் முரண்பாடு தலைதூக்கும் பொழுது, சமுதாயத்தை மாற்றி அமைக்க விழைவதில் என்ன அர்த்தம் இருக்கிறது? அக உலகத்தை அறவே உதாசீனம் செய்து புற உலகத்தை, பொருளுலகத்தை மட்டும் சீரமைத்தால் மனித வாழ்க்கை சிறப்புற முடியுமா?

இவ்விதம் கேள்விகளை எழுப்பும் கிருஷ்ணமூர்த்தி, முதலில் தனி மனிதன் தனக்குள், தனது மனவுலகில் ஒரு புரட்சியைச் செய்ய வேண்டும் என்கிறார்.

“சமுதாயப் புரட்சியானது, தனி மனிதனிலிருந்து, தனி மனிதனின் உள்ளீட்டான அகவுலகப் புரட்சியாக ஆரம்பிக்கப்பட வேண்டும். தனி மனிதனின் உள்ளீட்டான புரட்சி நிகழாமல், மனவமைப்பு மாற்றப்படாமல், தனி மனிதனுக்குப் புறம்பாக, வெளியே நிகழும் எவ்வித புதுமையான சமூகப் புரட்சியும் உள்ளடக்கத்தில் உயிரற்றதாகவே இருக்கும். உயிர்த்துடிப்புள்ளதும், காலத்தால் சிதைந்து போகாததுமான ஒரு புதிய சமூக வடிவத்தைக் கட்டி எழுப்புவதாயின் தனி மனிதனின் மனவரங்கில் ஒரு புரட்சி நிகழ்வது அவசியம்'' என்கிறார் கிருஷ்ணமூர்த்தி.

இந்த மனப் புரட்சியானது பிரக்ஞையின் விழிப்புணர்வாக, பிரக்ஞையின் அடித்தளத்திலிருந்து வெடித்தெழ வேண்டும்.

நானே என்னைப் புரிந்து கொள்ளாதவரை, வாழ்வின் அர்த்தத்தை உணர்ந்து கொள்ளாத வரை, பொய்மைகளின் இருண்ட சுவர்களுக்குள் நான் சிறைபட்டுக் கிடக்கும் வரை, நான் மற்றவனைப் புரிந்து கொள்வது எங்ஙனம்? இந்த சமுதாயத்தையும் உலகத்தையும் அறிந்து கொள்வது எங்ஙனம்?



இந்த சமூகமோ உலகமோ என்னிடமிருந்து மாறுபட்ட ஒரு பூடகமான பொருளல்ல. நானே இந்த சமூகத்தையும் உலகத்தையும் சிருஷ்டித்துள்ளேன். இந்த சமூகமும் உலகமும் எனது சுயத்தின் வெளிப்பாடாகவே பொருளுருவம் பெற்றிருக்கிறது. எனது ஆசைகள், எனது கனவுகள், எனது விருப்பு வெறுப்புகள், எனது மனப் புற்றிலிருந்து பாம்புகளாகச் சீறும் துவேசங்கள், வெறிகள் எல்லாமே இந்த சமூக உலகத்தை, சமூக உறவுகளைப் படைத்திருக்கிறது. எனவே, நானே இந்த சமூகம், நானே இந்த உலகம்.

நான் சிருஷ்டித்த இந்த சமூக உலகத்தை, நானாகவுள்ள இந்த சமுதாயத்தை, நானே மாற்றி அமைப்பதானால் அந்தப் புரட்சி எனக்குள் தொடங்க வேண்டும். எனது மனவுலகக் களத்தில் அந்தப் போராட்டம் ஆரம்பமாக வேண்டும்.

இந்த உள்ளீட்டான, மனவரங்கப் போராட்டத்தில் எனது விடுதலைக்கான ஆயுதம் எனது விழிப்புணர்வுதான். இந்த விழிப்புணர்வின் வெளிச்சத்தில் எனது மனதின் வேடங்களை, கோலங்களை நான் கண்டு கொள்ள வேண்டும். “பொய்மைகளைக் கண்டுகொள்ளும் பொழுது தான் உண்மை புலனாகிறது” என்கிறார் கிருஷ்ணமூர்த்தி.

ஆன்மீக யாத்திரை என்றும் அகவுலகப் பயணம் என்றும் தியானம் என்றும் யோகம் என்றும் எமக்குள் ஒளிந்திருக்கும் ஆன்மத்தின் சூட்சுமத்தை அறிந்து கொள்வதென்றும் நாம் உலகத்தைத் துறந்து, வாழ்க்கையைத் துறந்து, உறவுகளை அறுத்து, யுகம் யுகமாக நடத்திய தேடுதலால் உண்மையைக் கண்டு கொள்ள முடியாது. கடவுள் என்றும் உண்மைப் பொருள் என்றும் நாம் தேடி அலைந்ததெல்லாம் எமது ஆசையின் நிகழ்வுகளன்றி வேறொன்றுமல்ல. கால விசாலத்தின் எல்லைகளைக் கடந்து, சாவின் நியதியை வென்று, துயரத்தின் பளுக்கள் அகன்ற ஒரு நித்தியமான, சிரஞ்சீவியான, பேரானந்தமான வாழ்வினைக் கனவு கண்ட எமது விபரீதமான ஆசை கடவுளாகப் பிறந்தது.

ஆயிரமாயிரம் கோவில்களைக் கட்டி, அந்தக் கடவுகளைக் குடியமர்த்தினோம். அர்த்தமிழந்த, அபத்தமான எமது வாழ்க்கைக்கு ஒரு பிரமாதமான அர்த்தமாக, ஒரு அலாதியான நம்பிக்கையாகக் கடவுள் என்ற கருத்துருவத்தை நாம் தழுவிக் கொண்டோம். எமது மனமோ கனவுலகில், கற்பனையுலகில், நிதர்சனத்திற்குப் புறம்பான உலகில் தூங்குகிறது. இந்தப் புராதன மனதால், காலம் காலமாகப் பொய்களால் வனையப்பட்ட மனதால், மூட நம்பிக்கைகளில் மூழ்கிப் போன மனதால், கருத்துலக் கோட்பாடுகளில் கண்டுண்ட மனதால் உண்மையைக் கண்டுகொள்ள முடியாது. நாம் ஒரு குருவை வரித்துக் கொண்டோ ஒரு ஆன்மீக வழிகாட்டியைப் பின் தொடர்ந்தோ ஆச்சிரமத்தில் தவமிருந்தோ மந்திரங்கள் ஓதி, பிரார்த்தனைகள் செய்து, அழுது புரண்டு ஆண்டவனை வேண்டியோ உண்மைப் பொருளைக் கண்டு கொள்ள முடியாது.

அறிவுப் பசியில் அலையும் எமது மனமோ கருத்துக்களை விழுங்குகிறது. அனுபவத்தைத் தேடித் திரட்டுகிறது. நினைவுப் பளுவைப் பெருக்குகிறது. நடமாடும் நூல்களாக, மற்றவர்களது செத்துப் போன, கருத்துக்களை சதா அசைபோடும் இயந்திரமாக, எண்ணத்தின் ஆதிக்கத்திற்கு அடிமைப்பட்டுக் கிடக்கும் அறிவார்த்த மனமும் உண்மையைக் கண்டு கொள்ளாது.

எண்ணத்தால், சிந்தனையால், அறிவால், அனுபவத்தால் மனிதர்கள் காலம் காலமாக வரைந்து கொண்ட கருத்துருவச் சித்திரங்கள் எல்லாம் பழைய, இறந்த கால மனவுலகத்தைச் சார்ந்தவை. இந்தப் பழைய மனதின் படிமங்களால் மெய்யுண்மையின் கதவுகளைத் திறக்க முடியாது என்கிறார் கிருஷ்ணமூர்த்தி.

“மனித வாழ்வில் எண்ணங்கள் எதற்காக முக்கியத்தைப் பெறுகிறது என்று விசாரித்துப் பார்த்தீர்களா? மனதின் அனுபவக் கடலிலிருந்து ஓயாது அலைமோதும் கருத்துருவங்களாக, படிமங்களாக சதா மனதை உலைத்துக் கொண்டிருக்கும் இந்த எண்ணங்களுக்கு எதற்காக நாம் அடிமைப்பட்டுக் கிடக்கின்றோம்? மிகவும்



தந்திரமாக, மிகவும் நுட்பமாக, மிகவும் சாதுரியமாக இயக்கும் எண்ணமானது தன்னிச்சையாக தனக்கேற்றவாறு சகலத்தையும் திரிபுசெய்து கொள்கிறது. மனித உறவுகளில் பிளவையும், முரண்பாட்டையும் தோற்றுவிக்கின்றது. இன்பம், துன்பம் என்று மனித வாழ்வனுபவத்தைக் கூறு போடுகிறது. எண்ணற்ற அனுபவக் கூறுகளை மனதின் நினைவறையில் குவித்துக் கொள்ளும் எண்ணமானது அந்த அனுபவக் கிடங்கிலிருந்தே மீண்டும் புத்துயிர் பெற்று எழுகிறது. வாழ்க்கை பற்றி எண்ணத்தால் அளிக்கப்படும் விளக்கங்களும், வியாக்கியானங்களும் இறந்த கால அனுபவத்திலிருந்து பெறப்படுபவை. ஆகவே எண்ணமானது இறந்த காலத்தைச் சார்ந்தது. பழமையானது.” என்று குறிப்பிடும் கிருஷ்ணமூர்த்தி, எண்ண அமைப்பின் முழு இயக்கத்தையும் கண்டுகொள்வதுதான் சுயதரிசனத்தின், அகப் புரட்சியின் ஆரம்பம் என்கிறார்.

எண்ண அசைவின் மையமாக எனது சுயம் இயங்குகிறது. இந்தச் சுயம் என்றால் என்ன? நான் என்று எனக்குள்ளிருந்து எண்ணிக் கொண்டிருப்பவன் யார்? அவதானிப்பவனாக, அனுபவிப்பவனாக, ஆசைப்படுபவனாக, எனக்குள் என் அகமாக, அந்தரங்க ஆன்மாவாக, என் ஆளுமையாக, என் அகந்தையாக, ஆணவமாக இயங்கிவரும் எனது சுயம் எப்படித் தோற்றம் கொண்டது? இந்த உலகத்தில் எனக்கு எல்லாமே அதுவாக, அதற்காக வாழ்ந்து, அதற்காக அனுபவித்து, அதற்காகத் துயரப்பட்டு, அதை எனது நிரந்தர நான் என்று நம்பி, அலாதியான பிரியத்தோடு நான் வழிபட்டுப் பூசிக்கும் அந்த நான், எனது சுயம், எனக்குச் சொந்தமானது எப்படி?

எனது வாழ்வனுபவத்திலிருந்து, எனது நினைவுலகத்திலிருந்து, எனது பாரம்பரியத்திலிருந்து, எனது பண்பாட்டிலிருந்து, நான் எதிர்கொள்ளும் புறவுலக அழுத்தங்களிலிருந்து எனது சுயம் கருவாகி உருப்பெறுகிறது. எனது சுயத்தின் எலும்பும் சதையுமாக இருப்பதெல்லாம் எனது நினைவுகளின் நிழலுருவங்களன்றி வேறொன்றுமல்ல. எனது மனம் சுவீகரித்துக் கொண்ட

கோடானுகோடி படிமங்களின் மையத்திலிருந்து எனது சுயம் வெடித்தெழுகிறது. ஆகவே, நான் என்பதே ஒரு படிமம். ஒரு மையப் படிமம். காலத்தால் செத்துப் போன கருத்துருவங்களிலிருந்து, நினைவுகளின் கல்லறை களிலிருந்து உயிர் பெற்றும் இயங்கும் ஒரு எண்ணம்.

"மிகவும் விழிப்புடன் கூர்மையான கவனத்துடன், கணத்திற்குக் கணம் உனது எண்ணத்தின் அசைவுகளை அவதானித்துப் பார். நீ அவதானிப்பதும் ஆராய்வதும் உனது எண்ணமாக இருந்தால் நீ எதையும் கண்டு கொள்ளப் போவதில்லை. உனது விழிப்புணர்வின் வெளிச்சத்திலேயே நீ உன்னைக் கண்டு கொள்ள வேண்டும். உனது விழிப்புணர்வு கூர்மையாகி, உனது கவனம் முழுமைபெறும் பொழுது, அவதானிப்பவனாக, சிந்திப்பவனாக, உனது பிரக்ஞையின் மையமாக இயங்கிவரும் உனது சுயம் செயலிழந்து விடுவதை நீ கண்டு கொள்வாய். இவ் விழிப்பு நிலையில் மனமானது எண்ண இயக்கத்தின் ஆதிக்கத்திலிருந்து விடுபட்டு அமைதியடைகிறது. எண்ண இயக்கத்திலிருந்து விடுதலையடைந்து, அமைதிகொள்ளும் மனதில்தான் அன்பும் அழகும் ஆனந்தமும் சாத்தியமாகிறது என்கிறார் கிருஷ்ணமூர்த்தி.

வாழ்க்கை என்பதே ஒரு மாபெரும் இயக்கம்; ஒரு மாபெரும் சக்தி. எமது மனம், எமது எண்ணம், எமது உணர்வு, எமது ஆசைகள் எல்லாமே இந்த இயக்கத்தின், இந்த சக்தியின் வெளிப்பாடுகள்தான். எமது மனதில், எண்ணத்தில், உணர்வில், ஆசையில் பிணக்கும் போராட்டமும் தாண்டவமாடும் பொழுது, எமது உறவுகளில் முரண்பாடு தலைதூக்கும் பொழுது இந்த சக்தி விரையமாகிறது, வீணாகிறது. மனித மனமானது விழிப்புணர்வுகொண்டு, தனக்குள் தெளிவுகண்டு, உள்ளும் புறமும் முழுமையான, அமைதியான, ஒத்திசைவான வாழ்வைத் தழுவிக் கொள்ளும் பொழுதுதான் எல்லையற்ற சக்தியாக மனிதனிடம் ஞானோதயம் பிறக்கிறது என்கிறார் கிருஷ்ணமூர்த்தி.



எமது பழைய மனம், பயிற்றப்பட்ட மனம் இறக்க வேண்டும். அந்தச் சாவிலிருந்துதான் புதிய மனம், புரட்சிகர மனம் பிறக்க முடியும். அந்தப் புரட்சிகர மனமே முழு மனித விடுதலைக்கும், சமுதாய விடுதலைக்கும் வழி வகுக்கும்.

கிருஷ்ணமூர்த்தி போதிக்கும் மனப் புரட்சியின் சாராம்சம் இதுதான்.

# உலக வரலாறும் மனித விடுதலையும்

## I

வரலாறு என்றால் என்ன? அது எப்படி இயங்குகிறது? அது ஒரு அர்த்தபூர்வமான செல்நெறியிற் செயற்படுகிறதா? அதன் இயங்கு விதிகளை இனம் கண்டு கொள்வது சாத்தியமா? மானிடத்தின் உலகானுபவத்தை உள்வாங்கியபடி, மனித சமூக வடிவங்களை ஒரு உயர்ந்த படிநிலைக்கு இட்டுச் செல்லும் பரிணாம வளர்ச்சியை நோக்கி வரலாறு அசைந்து செல்கிறதா? வரலாற்றின் அசைவியக்கத்தை அடையாளம் கண்டு அதன் போக்கை, அது செல்லும் பாதையை, அதன் இலக்கை எதிர்வு கூற முடியுமா? வரலாற்று அசைவியக்கத்தின் இறுதி நோக்கு என்ன? வரலாறு எப்பொழுது நிறைவு பெறுகிறது? அதற்கு ஒரு முடிவு உண்டா?

இன்றைய சமூக சிந்தனை உலகில் இப்படியான பல கேள்விகள் எழுப்பப்படுகின்றன. இவற்றிற்கு விடை அளிப்பதுதான் இந்த ஆய்வுக் கட்டுரையின் நோக்கம்.

வரலாறு என்பது கால ஓட்டத்தைக் குறிப்பது அல்ல. அன்றிக் காலத்தின் கோலத்தைக் கணிப்பிட்டுக் கூறுவதும் அல்ல. வரலாறு என்றால் செத்துப் போன காலத்தின் புதைகுழிக்குள் உக்கிப் போன எலும்புகளைத் தேடுவதும் அல்ல. கடந்து போன நிகழ்வுகளைக் காலவரிசையில் நிரைப்படுத்திவிடுவதும் வரலாறு ஆகிவிடாது. வரலாறு என்பது மனித வாழ்வு பற்றியது. மனித சமூகத்தின் வாழ்வியக்கம் பற்றியது. அந்த அசைவியக்கத்தின் மாற்றத்திற்கும் முன்னேற்றத்திற்கும் உந்தியல்பான தன்மைகள், சக்திகள், விதிகள் பற்றியது. சாராம்சத்தில் வரலாறு என்பது மானிடத்தின் உயர்நிலை வளர்ச்சிப்

போக்கு பற்றியது.

மானிடத்தின் வரலாற்றைப் பல்வேறு தனித்துவ கூறுகளாகப் பிரித்து, பண்டைய நாகரீகங்கள் என்றும், பண்பாட்டு மையங்கள் என்றும், நாடுகள் என்றும், சமூகங்கள் என்றும், தனி மனிதர்கள் என்றும் மேற்கொள்ளப்படும் சரித்திர ஆய்வுகளும் இல்லாமல் இல்லை. வளர்ச்சி, எழுச்சி, வீழ்ச்சி என்ற முப்பரிமாண விதிகளின் அடிப்படையில் இந்த வரலாற்று ஆய்வுகள் எழுதப்பட்டிருக்கின்றன. இவற்றை மதிப்பாய்வு செய்வது எமது நோக்கமல்ல. நாம் இங்கு எடுத்துக் கொண்ட வரலாற்று ஆய்வு முறைமை வித்தியாசமானது. மனித வரலாற்றைக் கூறு போட்டு நோக்காமல், மானிடத்தின், அதாவது மனித குலத்தின் ஒட்டுமொத்தமான வரலாறு பற்றியே நாம் இங்கு பார்ப்போம். முழு மனித வரலாறு எனும் பொழுது, எல்லாக் காலங்களிலும், எல்லா மக்கள் சமூகங்களாலும் பெறப்பட்ட உலகானுபவத்தை உள்வாங்கியபடி ஒரு சீரான அசைவியக்கமாக மானிடத்தை ஒரு உன்னத படிநிலை வளர்ச்சிக்கு நகர்த்திச் செல்லும் வரலாறு பற்றியே நாம் குறிப்பிடுகிறோம். இத்தகைய ஒரு ஆழமான வரலாற்றுத் தரிசனத்திற்கு மூல கர்த்தாவாக விளங்கியவர் பிரபல ஜெர்மானியத் தத்துவாசிரியரான ஹேகல் (Hegel) ஆவார். ஹேகலின் வரலாற்றுத் தத்துவத்தை செழுமைப்படுத்தி, விரிவுபடுத்தியவர் கார்ள் மாக்ஸ். ஆகவே, மானிட வரலாறு பற்றிய ஒரு ஆழமான பார்வையை நாம் பெற்றுக் கொள்வதாயின், ஹேகலதும் கார்ள் மாக்சினதும் சிந்தனை உலகங்களைத் தரிசித்துக் கொள்வது அவசியம். கார்ள் மாக்சின் வரலாற்றுக் கோட்பாட்டைப் புரிந்து கொள்வதாக இருந்தால் முதலில் ஹேகலின் தத்துவத்தைப் படித்தறிவது அவசியம் என்று லெனின் அடிக்கடி வலியுறுத்துவார். இந்தக் கூற்றில் உண்மை இருக்கத்தான் செய்கிறது.

அன்றைய ஜெர்மானிய கருத்துலகின் திருமூலராக ஹேகல் விளங்கினார். அவர் படைத்த எண்ண உலகம் மாக்ஸ் போன்ற அன்றைய இளம் சிந்தனையாளர்கள் மீது





ஹேகல்

ஆழமான தாக்கத்தைப் பதித்தது. ஹேகலின் தத்துவத்தை மாக்ஸ் கடுமையாக விமர்சித்தார். அகவயமான ஆன்மீகவாதம் எனச் சாடினார். எனினும் ஹேகலின் கருத்துலக ஆதிக்கத்திலிருந்து அவர் முற்று முழுதாக விடுபட்டதாக இல்லை. ஹேகலின் இயங்கியலும் வரலாற்றுத் தத்துவமும் கார்ள் மாக்சை வெகுவாக ஆகர்ஷித்துக் கொண்டன. ஆன்மீக உலகத்தில் புதைந்து போயிருந்த ஹேகலின் இந்த சிந்தனைக் கருவூலங்களை பொருளிய உலகத்தை விளக்கும் அறிவியற் கோட்பாடுகளாக மாக்ஸ் மாற்றியமைத்தார் எனக் கூறுவது பொருத்தமாகும். இதனால் தான் மாக்சீயத்தை ஆழமாகப் புரிந்து கொள்வதற்கு ஹேகலின் தத்துவத்தைப் படிக்க வேண்டும் என லெனின் கூறினார்.

ஹேகலின் தத்துவத்தைப் புரிந்து கொள்வது

என்பதும் இலகுவான விடயமல்ல. மிகவும் கனமான, ஆழமான கருத்துகளை, மிகவும் தெளிவற்ற பூடகமான வார்த்தைகளில், மிகவும் சிக்கலான முறையில் விபரிப்பதில் அவர் வித்தகர். வரலாறு பற்றி அவர் விளக்கும் Phenomenology of The Mind, Philosophy of History, என்ற நூல்கள் இத்தகைய சொற்புதிர்கள் நிறைந்தவை. உதாரணமாக மனம் என்று அவர் பிரயோகிக்கும் சொல் பல்வேறு அர்த்த பரிமாணங்களைக் கொண்டது. அவரது மொழியில் மனம் என்பது சாதாரண மனித மனதை மட்டும் குறிப்பிடுவதல்ல. அது மனித ஆன்மாவைக் குறிப்பிடும். மானிடத்தின் கூட்டு மனதையும் அது குறிப்பிடும். அதே வேளை, அண்டமெங்கும் வியாபித்து நிற்பதாக அவர் கருதும் பிரபஞ்ச மனதையும் அது பொருள்படுத்தும். அதே சமயம் அது மெய்ப்பொருளையும் குறிக்கும். மெய்யுண்மையாக அவர் கருதும் பரிபூரணத்துவத்தையும் குறியீடு செய்யும். தனி மனித மனம், மானிட மனமாக, பிரபஞ்ச மனமாக, ஆத்மாவாக, பரமாத்மாவாக, மெய்யுண்மையாக, சகலத்தையும் உள்ளடக்கிய முழுமையாக, பரிபூரணத்துவமாக, எல்லாம் வல்ல கடவுளாக அர்த்த பரிமாணம் கொள்ளும்.

இந்தப் பிரபஞ்ச மனதின் அசைவியக்கத்தையே வரலாறு என்கிறார் ஹேகல். இந்த அசைவியக்கமானது பிரபஞ்சத்திலிருந்து மனித வாழ்க்கை வரை வியாபித்து நிற்கிறது. அது எல்லாவற்றையும் நகர்த்திச் செல்லும் மாபெரும் இயங்கு சக்தியாக அசைகிறது. இந்தப் பேரசைவு ஒரு முரணிய இயக்கமாக சகலதையும் படைத்து, சகலதையும் அசைத்து, சகலதையும் அழித்து ஒவ்வொரு படிநிலையாக, முழுமையை நோக்கி முன்னேறிச் செல்கிறது. இன்னொரு அர்த்தத்தில் வரலாறு என்பது இறைவனின் பிரபஞ்ச நாடகம்.

பூமியிலும் இந்த நடனம் அரங்கேறுகிறது.

மனித நாகரீகங்கள் தோன்றுகின்றன. சாம்ராஜ்யங்கள் எழுகின்றன. மனித பண்பாட்டு மறுமலர்ச்சி யுகங்கள் பிறக்கின்றன. இவை தோன்றி, வளர்ந்து, மடிந்து



போக புதிய நாகரீகங்கள், புதிய சாம்ராஜ்யங்கள், புதிய பண்பாட்டு யுகங்கள் தோன்றுகின்றன. இந்த பிறப்பு, இருப்பு, அழிவு என்ற அசைவியக்கத்தின் ஊடாக மானிட மனமானது முரண்பாடுகள் களையப்பெற்ற முழு நிறைவை நோக்கி நகர்கிறது. சட உலகின் சாரமாக ஈர்ப்பு சக்தி இருப்பது போல, ஆன்ம உலகின் சாராம்ச சக்தியாக விடுதலையுணர்வு இயங்குகிறது. எனவே வரலாறு என்பது ஆன்மத்தின் விடுதலை நோக்கிய நகர்வு (history is the movement of the spirit towards freedom) என்கிறார் ஹேகல்.

மெல்ல மெல்ல, மானிடப் பிரக்ஞை விழிப்பு நிலை பெறுகிறது. விடுதலை பற்றி சுயவுணர்வு கொள்கிறது. தளைகளை நீக்கி விடுதலையைப் பெற முனைகிறது. ஆதி நாகரீகங்களில் அனைத்து அதிகாரமும் கொண்ட அரசனே சுதந்திர புருஷனாக விளங்கினான். மற்றெல்லோரும் அவனுக்குக் கீழ் அடிமைகளாக உழன்றனர். காலப் போக்கில் புதிய நாகரீகங்கள், புதிய பண்பாட்டு உலகங்கள் தோன்றி, விடுதலையின் விழிப்புணர்வை மனிதரிடையே வளர்த்தது. வேதங்களாக, தத்துவங்களாக, கலை இலக்கிய வடிவங்களாக, சமூகச் சிந்தனைகளாக, அரசியற் கோட்பாடுகளாக, காலத்திற்குக் காலம் தோன்றி வளர்ந்த பண்பாட்டுக் கோலங்கள் விடுதலையின் விழிப்புணர்வை விரிவுபடுத்தியது. போர், புரட்சி, கிளர்ச்சி என்று மனிதர்கள் விடுதலை வேண்டி எழுச்சி கொண்டனர். இவ்விதம் விடுதலையின் தேடுதலாக மனித வரலாறு நகர்கிறது. இந்த வரலாற்று நகர்வு, யுகங்களை விழுங்கிய நீண்ட பயணமாகத் தொடர்கிறது. இந்தப் பெரும் பயணத்தில், முடிவில்லாது தொடரும் இந்த ஆன்மீக யாத்திரையில், கோடானு கோடி மனிதர்களின், கோடானு கோடி சுயசரிதச் சுவடுகளை உள்வாங்கி வரலாற்று இயக்கம் அசைந்து செல்கிறது.

பிரபஞ்ச பேரான்மாகவும், பூவுலக ஜீவான்மாவாகவும், கடவுளாகவும், மனிதனாகவும், ஒன்றோடு ஒன்று சங்கமிக்கும் முழுமையாகவும், சகலதாகவும், சர்வ வியாபகம் கொண்டு

பிரம்மன் நடத்தும் திருக்கூத்துப் பற்றி உபநிடதம் படித்தவர்களுக்கு ஹேகலின் வரலாற்றுக் கடவுளைப் புரிந்து கொள்வது சிரமமாக இருக்காது. இந்தப் பிரபஞ்ச பேரான்மாவின் சுயசரிதமாகவே மனித வரலாற்றை எழுதுகிறார் ஹேகல்.

எங்கோ, மனித புலன்களுக்குப் புலப்படாத மறு உலகிலிருந்து மனித வாழ்க்கை நிச்சயமாகிறது. அண்டம் அளாவிய ஒரு பெரும் தெய்வீகத் திட்டத்தை நிறைவு செய்ய நாம் எல்லோரும் இந்தப் பூவுலக யாத்திரையில் வந்து செல்கிறோம். எமது தனிப்பட்ட வாழ்வும், வரலாறும் ஏதோ ஒரு அர்த்தத்தில், ஏதோ ஒரு நோக்கில், ஏதோ ஒரு காரணத்தில் நெறிக்கப்படுகிறது. அது எமக்குப் புலப்படுவதில்லை. நாம் எமது வாழ்க்கைக்கு கொடுக்கும் அர்த்தங்கள் எல்லாம் அர்த்தமற்றவை. எமது வாழ்க்கையின் அர்த்தத்தை நாம் கண்டு கொள்ள முடியாது. அது பிரபஞ்ச முழுமையின் தரிசனத்தில் மட்டும் ஒளிந்து கிடக்கிறது. அந்தப் பிரபஞ்ச முழுமையின் தரிசனத்தில் மட்டுமே அதன் உண்மை புலனாகும். முழுமை பெறாத நிலையில், பூரணமற்ற தன்மையில் இருப்பின் இரகசியத்தை நாம் புரிந்து கொள்ள முடியாது. எமக்குப் பின்னாலிருந்து ஏதோ அசைக்க நாம் அசைபடுகிறோம். மனிதப் பொம்மைகளாக, நாம் பொம்மலாட்டம் ஆடுகிறோம். சிந்தித்துச் செயல்படுவதாக நாம் எண்ணிக் கொள்வது எல்லாம் அபத்தமானது. வரலாற்றின் அரூப கரங்களால் நகர்த்தப்படும் பகடைக் காய்கள் நாம்.

அமைதியும் ஆனந்தமும், ஒழுங்கும் ஒத்திசையும் நிறைந்த பொற்காலங்களை வரலாறு படைப்பதில்லை. அது உலக வரலாற்று ஏட்டின் வெற்றுப் பக்கங்களாகவே இருக்கும் என்கிறார் ஹேகல். முரண்பாடும் மோதலும், சாவும் அழிவும் நிறைந்த துன்பியல் நாடகமாக வரலாறு இந்தப் பூமியில் அரங்கேறுகிறது. மானிடம் இரத்தம் சிந்தியபடி சிலுவையைச் சுமந்து செல்கிறது. பூரணத்துவம் நோக்கிய பாதையில் மனிதன் இரத்த ஆறுகளைக் கடந்து செல்ல வேண்டும். மனித வாழ்வை, வரலாறு அப்படி



விதித்திருக்கிறது. ஒரு சிலர், வரலாற்றினால் அபூர்வமாக தேர்ந்தெடுக்கப்பட்டும் சிலர், வரலாற்று நாயகர்களாகப் பிறப்பெடுக்கின்றனர். அந்த உலக வரலாற்று நாயகர்கள் (world historical beings) வரலாறு விதித்த பணிக்காக அவதாரம் எடுக்கிறார்கள். அவர்கள் மூலம், வரலாறானது தனது நோக்குகளை தந்திரமாக, நுட்பமாக சாதித்து விடுகிறது. மகா அலெக்சாந்தர் தொடக்கம் நெப்போலியன் வரை, யுகம் யுகமாக, வரலாற்று மனிதர்கள் தோன்றி, வரலாற்றை நகர்த்திச் செல்ல வரலாறு விதி செய்திருக்கிறது என்கிறார் ஹேகல்.

## II

ஹேகல் படைத்த வரலாற்றுத் தத்துவத்தின் மையக் கருத்தாக விளங்குவது இயங்கியல். இந்த இயங்கியல் தத்துவத்தின் (philosophy of dialectics) அடிப்படையிலேயே மனவுலகத்தையும் பொருளுலகத்தையும், உலக வரலாற்று இயக்கத்தையும் அவர் விளக்க முனைந்தார்.

ஹேகலின் இயங்கியல் தத்துவத்தை மாக்சிய வரலாற்றியல் எவ்வாறு, எந்த வடிவத்தில் உள்வாங்கிக் கொண்டது என்பதை ஆராய்வதற்கு முன்னர், இந்தத் தத்துவம் என்ன சொல்கிறது என்பதைப் பார்ப்போம்.

இந்த உலகம் நிலையானது அல்ல. இந்த உலகத்தில் எதுவுமே நிரந்தரமானது அல்ல. எதுவுமே நிச்சயமானதும் அல்ல. இந்த உலகம் சதா மாறிக் கொண்டிருக்கிறது. சதா அசைந்து கொண்டிருக்கிறது. சதா அவிழ்ந்து கொண்டிருக்கிறது.

அக உலகம் என்றாலும் சரி, புற உலகம் என்றாலும் சரி, எதிலும், எல்லாவற்றிலும் ஒரு பெயர்வு இருக்கிறது; ஒரு நகர்வு இருக்கிறது; ஒரு மலர்வு இருக்கிறது. அணுவிலிருந்து அண்டம் வரை எல்லாமே ஒரு இயங்கு சக்தியால் இயக்கப்படுகிறது.

காலம் என்பது இயக்கம்; வாழ்வு என்பதும் இயக்கம்; இருப்பு என்பதும் இயக்கம்; வரலாறு என்பதும் இயக்கம்.

இந்த இயக்கம் இலக்கின்றி சும்மா இயங்கவில்லை. இந்த இயக்கத்தின் இயக்கத்தில் ஒரு நிலை மாற்றம் நிகழ்கிறது; ஒரு புத்தாக்கம் பிறக்கிறது; ஒரு வளர்ச்சி தோன்றுகிறது. ஒரு முன்னேற்றம் ஏற்படுகிறது. இந்த இயக்கம் எல்லாவற்றையுமே ஒரு வளர்ச்சிப் பாதையில் முன்னோக்கி நகர்த்திச் செல்கிறது. உயர் நிலைக்கு இட்டுச் செல்கிறது.

மனித சிந்தனையிலும் இந்த இயக்கம் இருக்கிறது. மனித சமூகத்திலும் இந்த இயக்கம் இருக்கிறது. மனித வரலாற்றிலும் இந்த இயக்கம் இருக்கிறது. இயற்கையிலும் இந்த இயக்கம் இருக்கிறது. முழு உலகமுமே இந்தச் செயலியக்கப் படிமுறையில் தோற்றம் கொண்டு, வளர்ச்சி கண்டு, மாற்றமடைந்து, முன்னோக்கிய முனைப்பில் உருவாக்கம் பெறுகிறது.

மனித மனம், சமூகம், இயற்கை என்ற ரீதியில் சகலவற்றையும் வளர்ச்சிப் படிமுறையில் நகர்த்திச் செல்லும் செயலியக்கத்திற்கு அடிப்படையான விதிகள் உள்ளன. இந்த இயங்கு விதிகள் பற்றிய தத்துவக் கோட்பாடே இயங்கியல் எனப்படும். இந்த இயங்கியல் விதி-களை (laws of dialectics) முதன் முதலாக நெறிப்படுத்திய பெருமை ஹேகலைச் சாரும்.

இந்த இயங்கியல் விதிகளில் அடிப்படையானது முரணியமாகும் (contradiction).

எந்தப் பொருளுக்கும் ஒரு தன்னியக்கம் இருக்கிறது. உள்ளீட்டான சுய-இயக்கம் இருக்கிறது. இந்த சுய-இயக்கம் முரணியத் தன்மையைக் கொண்டது. அதாவது ஒன்றுக்கொன்று மாறான, முரணான எதிர்வுத் தன்மை களைக் (opposite tendencies) கொண்டது. ஒரு பொருளில் இந்த எதிர்வுத் தன்மைகள் ஒன்றித்திருக்கும் நிலையை எதிர்வுகளின் ஒன்றியம் (unity of the opposites) என்கிறார் ஹேகல். இந்த எதிர்வு சக்திகள் ஒன்றித்திருந்து அதே சமயம் ஒன்றோடு ஒன்று முரண்பட்டு நிகழ்த்தும் பிணக்காக, போராட்டமாக அந்தப் பொருளின் வாழ்வியக்கம் அசைகிறது. இந்த முரண்பாடு முற்றி வெடிக்கும் பொழுது



மாற்றம் நிகழ்கிறது. புதியது பிறக்கிறது. எனவே, எந்தப் பொருளது இயக்கத்திற்கும், மாற்றத்திற்கும், புத்தாக்கத்திற்கும், புதிய வளர்ச்சிப் போக்கிற்கும் அந்தப் பொருளில் உள்ளீட்டாக, அதன் உள்ளியக்கமாகச் செயற்படும் முரணியமே காரணியாக இருக்கிறது. சிந்தனை உலகிலும் சரி, சமூக உலகிலும் சரி, இயற்கையின் சகல பொருட்களிலும் சரி, தோற்றம், மாற்றம், முன்னேற்றம் என்பன புற சக்திகளால் தூண்டப்படுவதல்ல. அது உள்ளீட்டாக, உள்-முரண்பாட்டின் உந்துதலால் நிகழ்கிறது.

இயங்கியலின் அடிப்படையிலேயே மனித மனம் படிநிலை வளர்ச்சி காண்கிறது என்கிறார் ஹேகல். இங்கும் முரணிய விதி முக்கிய இடம் பெறுகிறது. முரண்பாடான சிந்தனைகள் தோன்றி அவற்றின் தீர்வாகப் புதிய சிந்தனை பிறக்கிறது. காலப் போக்கில் அந்தப் புதிய சிந்தனையிலும் புதிய முரண்பாடு எழுந்து, அது களையப் பெறும்போது மேலும் செழுமை பெற்ற சிந்தனை வளர்கிறது. இவ்விதம் ஒரு முடிவில்லா முரணியச் சுழற்சியில் மனித மனமானது பரிணாம வளர்ச்சி கண்டு அகற்சி பெறுகிறது. மனித அறிவு முன்னேற்றம் காண்கிறது.

தர்க்கீகம் பற்றி ஹேகல் இரு நூல்களை எழுதியிருக்கிறார். இந்நூல்களில் அவரது இயங்கியல் தர்க்கீகம் (dialectical logic) விபரிக்கப்படுகிறது. முரணியம் மூலம் எண்ண இயக்கத்தின் முன்னோக்கிய நகர்வு தர்க்க ரீதியில் விளக்கப்படுகிறது. அதன் சாராம்சம் இதுதான்.

முதலில் ஒரு எண்ணம் அல்லது சிந்தனை பிறக்கிறது. இது கருத்தாக்கம் (thesis) எனப்படும். இந்தக் கருத்துக்கு மாறாக ஒரு எதிர்க்கருத்து எழுகிறது. இது முரண் கருத்தாக்கம் (anti-thesis) எனப்படும். ஒன்றுக்கு ஒன்று மாறான இவ்விரு கருத்துகள் மத்தியில் முரண்பாடு தோன்றுகிறது. இறுதியில் இம்முரணான கருத்துகள் மத்தியில் ஒத்திசைவு ஏற்பட்டு, அதன் தீர்வாக ஒரு புதிய கருத்து பிறக்கிறது. இது கூட்டுக் கருத்தாக்கம் (synthesis) எனப்படும். இந்தக் கூட்டுக் கருத்தாக்கம், காலக்கெதியில் மீண்டும் ஒரு கருத்தாக்கமாக முரண்பாட்டைச் சந்திக்கிறது.

இவ்விதம், எண்ண இயக்கமானது இயங்கியலின் மும்முனைச் சுழற்சியில் முன்னேறிச் செல்கிறது.

ஹேகலின் இயங்கியல் தர்க்கீகத்தில் மனித சிந்தனையை உயர் நிலைக்கு இட்டுச் செல்லும் உந்து சக்தியாக முரணியமே செயற்படுகிறது. முரணியத்தால் நிகழும் மாற்றத்தை விளக்கும் வகையில் மேலும் சில இயங்கியல் விதிகளை அறிமுகப்படுத்துகிறார் ஹேகல். இவற்றில் எதிர்மறை (negation), எதிர்மறையின் எதிர்மறை (negation of the negation) என்பன முக்கிய விதிகளாகும். எதிர்மறை என்பது ஒரு கருத்தாக்கத்தில் அல்லது ஒரு பொருளின், அல்லது ஒரு கட்டமைப்பின் நிலைமாற்றத்தைக் குறிப்பிடுகிறது. அதாவது ஒன்று செயலிழந்து, நிலைமாறி, அதன் சிதைவால் இன்னொன்றின் வளர்ச்சிக்கு ஏதுவாகும் மாற்றீட்டை இது புலப்படுத்தும்.

உதாரணமாக, ஒரு கருத்துக்கு எதிராக முரண்பாடான இன்னொரு கருத்துத் தோன்றி, முன்னதை வாழாண்மை ஆக்குவதை எதிர்மறை என்கிறார் ஹேகல். பின்னர் முரணிய கருத்துக்கள் இரண்டுமே மாற்றமடைந்து புதிய கருத்தாக்கம் பிறக்கிறது. இவ்விதம் முரணிய கருத்துக்கள் செயலிழந்து செல்லுபடி அற்றுப் போவதை 'எதிர்மறையின் எதிர்மறை' என விளக்குகிறார் அவர். எதிர்மறையிலும் சரி, அல்லது எதிர்மறையின் எதிர்மறையிலும் சரி, ஒரு கருத்தாக்கம் அல்லது ஒரு பொருள் முற்று முழுதாக அழிக்கப்படுவதல்ல. இந்த மாற்றீட்டில், அவற்றிலுள்ள சாராம்சப் பண்புகள் உள்வாங்கப்பட்டு உயர் நிலைக்கு எடுத்துச் செல்லப்படுகிறது. உதாரணமாக, ஒரு விதை முளைவிட்டுத் துளிர்த்து அதன் சிதைவிலிருந்து ஒரு மரம் வளர்கிறது. அந்த விதையின் சிதைவை எதிர்மறை என்றும், அந்த மரத்திலிருந்து மீண்டும் உற்பத்தியாகும் புதிய விதைகளை எதிர்மறையின் எதிர்மறை என்றும் அவர் விளக்கம் கொடுக்கிறார். விதையானது சிதைவு பெற்றபோதும் அதிலுள்ள சாராம்சப் பண்புகள் மரமாகி, மீண்டும் விதையாகி தொடர்ச்சியான ஒரு வளர்ச்சிப் போக்கில்



கட்டவிழ்ந்து செல்கிறது.

ஹேகலின் இயங்கியல் தர்க்கீகம் மிகவும் சிக்கலானது. கனமானது. கருத்துப் புதிர்கள் நிறைந்தது. தனது இயங்கியல் கோட்பாட்டை நிறுவ மிகவும் பூடகமான வாதங்களை அவர் முன் வைக்கிறார்.

இந்தத் தர்க்கீகத்தில், இருத்தல் (being) இல்லாமை (non-being) என்ற முரணிய கருத்துகள், உண்டாகுதல் (becoming) என்ற கூட்டுக் கருத்தாக்கத்தில் தீர்வு காணப்பட்டு செழுமை பெறுகிறது என்பது ஹேகலின் வாதம். இவ்வாறு, வாதப் பிரதிவாதங்களை அடுக்கிச் சென்று மிகவும் பூடகமான தர்க்கீக உலகத்தைப் படைக்கிறார் அவர்.

ஹேகலின் இயங்கியல் மனவுலகத்திற்கே முதன்மை கொடுக்கிறது. அவரது தரிசனத்தில் சகலதுமே மனவுலகில் தொடங்குகிறது.

அகத்தின் இயல்புகள்தான் புறத்திலும் இருக்கிறது. மனவுலகத்து இயங்கியல்தான் பொருளுலகத்தையும் இயக்குகிறது. எல்லாமே ஒரே விதியில் அசைகிறது. அகம் வேறு புறம் வேறு அல்ல. அகமே புறம். மனமே இந்த உலகம். மனமே எல்லாவற்றிற்கும் மூலமாக இருக்கிறது. மனதின் இயக்கமாக, அதன் பொருளிய வெளிப்பாடாக மெய்யுலகம் தோற்றப்பாடு கொள்கிறது. இந்த மனமானது மனிதனின் மண்டை ஓட்டிற்குள் மட்டும் செயற்படவில்லை. அதன் பரப்பு எல்லையற்றது. அது அண்டம் வரை விசாலித்து நிற்கிறது. பிரபஞ்ச மனமாக எங்கும் வியாபித்து நிற்கிறது. ஆன்மாவாக, பரமான்மாவாக, பிரம்மமாக எல்லாவற்றையும் ஆட்கொண்டு நிற்கிறது.

இயங்கியலின் சக்கரத்தில், அதன் முரணிய சுழற்சியில் பிரபஞ்ச மனமானது பிரபஞ்சத்தை இயக்கிச் செல்கிறது. தோற்றமும் மாற்றமுமாகச் சகலதையும் படைத்து, சகலதையும் காத்து, சகலதையும் அழித்து, அந்தச் சிதைவில் சகலதின் உள்ளியல்புகளையும் உள்வாங்கி, உயர்நிலைப் பரிணாம வளர்ச்சியில் பரிபூரணத்துவம் என்ற இலட்சியப் பயணத்தைத்

தொடர்கிறது.

பிரபஞ்ச மனமானது பூமியிலும் ஒரு இயங்கியல் காவியத்தை எழுதுகிறது. அதுதான் உலக வரலாறு. மனித வரலாறு. பிரபஞ்ச பிரக்ஞையின் கணங்களாக; எண்ணப் பொறிகளாக இங்கு யுகங்கள் தோன்றுகின்றன. ஒவ்வொரு யுகத்திலும் ஒவ்வொரு நாகரீகம் தோன்றி மறைகிறது. இந்திய, சீன, கிரேக்க, ரோம, கிறிஸ்தவ நாகரீகங்கள் என்று, இந்த நாகரீகங்கள் ஒவ்வொன்றிலும், அந்த யுகத்து சமூக, அரசியல், பொருண்மிய கட்டமைப்புகள் பிரபஞ்ச மனதில் உதித்த எண்ணப் பொறியின் வெளிப்பாடாகத் தோற்றப்பாடு கொள்கிறது. அந்த எண்ணமானது, அந்த நாகரீகத்தில் அதியுன்னத வளர்ச்சியைப் பெறுகிறது. (உதாரணமாக, ரோம நாகரீகத்தில் சட்ட ஆட்சி என்ற எண்ணப்பாடு உன்னத நிலையை அடைந்ததாகக் கூறுகிறார் ஹேகல்). ஒவ்வொரு நாகரீகத்தின் சிதைவிலும், அதன் எதிர்மறையாக அந்த நாகரீகத்தின் சாராம்ச பண்பான அந்த எண்ணம் உள்வாங்கப்பட்டு, அடுத்து யுகத்திற்கு, அடுத்த நாகரீகத்திற்கு, அடுத்த வரலாற்றுக் காலகட்டத்திற்கு எடுத்துச் செல்லப்படுகிறது. இந்த வரலாற்று ஓட்டத்தில் பிரபஞ்சப் பிரக்ஞையானது மானிடத்தின் கூட்டு மனதாக தோற்றப்பாடு கொண்டு புதிது புதிதாக விழிப்பு நிலை பெற்று வளர்கிறது. முரண்பாடுகளைக் களைந்து, தளை-களை அகற்றி, விடிவை நோக்கி, முழுமையை நோக்கி முன்னேறிச் செல்கிறது.

பூமியில் மானிட வரலாறு விடுதலையை நோக்கிய முனைப்பில் முன்னேறுகிறது. சுதந்திரத்தையும் சமத்துவத்தையும் வேண்டி மனிதர்கள் போராட்டங்களையும் புரட்சிகளையும் நிகழ்த்துகிறார்கள். பிரஞ்சுப் புரட்சி நிகழ்கிறது. அதனைத் தொடர்ந்து அமெரிக்கப் புரட்சி நிகழ்கிறது. மன்னராட்சி வீழ்கிறது. சர்வாதிகார ஆட்சி சரிகிறது. மனிதர்கள் மக்களாட்சியை நிறுவுகின்றனர். நவீன அரசு வடிவம் எடுக்கிறது. சுதந்திரம், சமத்துவம் என்ற மனித விழுமியங்களின் திருவடிவமாக, மனித அபிலாசைகளின் பூரணத்துவமாக நவீன அரசு தோற்றம் கொள்கிறது



என்கிறார் ஹேகல். அவரது பார்வையில் அரசு என்பது மக்கள் அனைவரும் ஒன்றிணைந்த ஒரு முழுமை. தனி மனித மனமும் சமூக மனமும் சங்கமமாகும் ஒன்றியம். அரசு என்ற இந்த உன்னதமான முழுமையிலேயே தனி மனிதன் தனது உரிமையையும் சுதந்திரத்தையும் நிலைநிறுத்திக் கொள்ள முடியும். தனி மனிதன் சுயநல அபிலாசைகளைத் துறந்து, பொதுநல நோக்கிற்காக அரசின் கட்டமைப்பிற்குக் கட்டுப்பட வேண்டும். அரச சட்டங்களுக்கு அடிபணிய வேண்டும். அரசு என்பது ஒரு தேசத்தின் ஆன்மா. அந்தத் தேசிய ஆன்மாவில், அந்த முழுமையான உண்மையில், தனி மனிதம் நிறைவு காண முடியும் என்கிறார் ஹேகல்.

யுகம், யுகமாக விடுதலை நோக்கிய முனைப்போடு, முடிவில்லாப் பயணத்தில் முன்னேறிச் சென்ற மனித வரலாற்று இயக்கம் இறுதியில் அரசுகளின் உருவாக்கத்துடன் தனது யாத்திரையை முடித்துக் கொள்கிறது.

அரச நிறுவனத்திற்கு ஹேகல் எதற்காக முக்கியத்துவம் கொடுத்தார்? தனது முதுமைக்கால தத்துவ எழுத்துகளில் அரசின் உன்னதம் பற்றி அவர் போதித்தது ஏன்? உலக வரலாற்று இயக்கத்தை அன்றைய ஜெர்மானிய சர்வாதிகார அரசுக்கு அடிபணிய வைத்ததன் காரணம் என்ன? பிரஞ்சுப் புரட்சியால் எழுந்த சுதந்திரத் தீ ஜெர்மானிய ஆளும் வர்க்கத்திற்குச் சவாலாக எழுந்த பொழுது ஹேகலின் தத்துவம் அன்றைய சர்வாதிகார அரசை நியாயப்படுத்த முனைந்தது என அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டது. அன்றைய ஜெர்மானிய அரசும் மக்கள் சமூகமும் முரண்பட்டு நின்றபொழுது, தனி மனித சுதந்திரங்களை அரசு மிதிக்கும் பொழுது, மனிதரிடையே சமத்துவம் நிலவாத பொழுது, அரசின் மகத்துவம் பற்றி அவர் எழுதியது ஜெர்மானிய இளம் புரட்சியாளர்களை சீற்றம் கொள்ளச் செய்தது. இந்த இளம் புரட்சியாளர்களில் முக்கிய சிந்தனையாளராக விளங்கியவர் கார்ள் மாக்ஸ். நவீன அரசின் தோற்றப்பாட்டுடன் மனித வரலாற்று இயக்கம்

நிறைவு காண்கிறது என்ற ஹேகலின் கருத்தை கார்ள் மாக்ஸ் நிராகரித்தார். அன்றைய ஜெர்மானிய அரசு ஒரு முதலாளிய சர்வாதிகார அரசு. அந்த அரசில் ஒரு அடிப்படையான முரண்பாடு நிலவியது. அதாவது, முதலாளிய ஆளும் வர்க்கத்திற்கும், ஆளப்படும் தொழிலாளர் வர்க்கத்திற்கும் மத்தியில் முரண்பாடு நிலவியது. வர்க்க முரண்பாடுகள் நிலவும் வரை சமத்துவமும் சுதந்திரமும் தோன்றாது. முரண்பாட்டினால் எழும் வர்க்கப் போராட்டமாகவே மனித வரலாறு நகர்கிறது. ஆகவே, வர்க்க முரண்பாடு நீங்கிய, சமத்துவமும் சமூக நீதியும் நிலவும் பொதுவுடமைச் சமுதாயத்தில்தான் மனித வரலாறு பூரணத்துவம் பெறும் என்பது கார்ள் மாக்சின் தத்துவம்.

ஹேகலின் தத்துவார்த்த சிந்தனை கார்ள் மாக்சை வெகுவாகக் கவர்ந்தது என்பது உண்மை. எனினும் ஹேகலின் தத்துவத்தை அவர் முழுமையாக ஏற்றுக் கொள்ளவில்லை. ஹேகலின் வரலாற்றுத் தரிசனத்தில் எத்தகைய கருத்துக்களை அவர் நிராகரித்தார், எத்தகைய கருத்துக்களை உள்வாங்கித் தனது சமூக வரலாற்றுத் தத்துவத்தைப் படைத்தார் என்பதை இனி விரிவாகப் பார்ப்போம்.

## III

ஹேகலின் தத்துவார்த்த எழுத்துகளை ஆன்மீகவாதம் என்றும், புதிரான புராணக்கதை என்றும் கடுமையாக விமர்சித்த கார்ள் மாக்ஸ் அவரது இயங்கியல் கோட்பாட்டை மெச்சத் தவறவில்லை. 'இயக்கத்தின் இரகசியத்தை முதன் முதலாக ஆழமாக விளக்கிய பெருமை ஹேகலைச் சாரும்' எனப் பாராட்டினார். எனினும் ஹேகலின் இயங்கியல் இறையியலில் புதைந்து கிடக்கிறது; பிரபஞ்சம் எங்கும் வியாபித்து நிற்கிறது; ஆகாயத்தில் தலை கீழாகத் தொங்கும் அதனை, பூமிக்கு கொண்டு வந்து நிலத்தில் காலூன்றச் செய்ய வேண்டும் எனக் குறிப்பிட்டார் மாக்ஸ்.



ஹேகலின் இயங்கியல் எண்ண விதை பூடகமான ஆன்மீக மேலுறையால் போர்த்தப்பட்டிருக்கிறது. இந்த மேலுறையை கழற்றி எறிந்து விட்டு விதையை மட்டும் எடுக்க வேண்டும் என்று இன்னொரு இடத்தில் கூறுகிறார்.

ஹேகலின் கருத்துலகிலிருந்து இயங்கியலைப் பிரித்தெடுக்கும் அறுவைச் சிகிச்சையை மாக்சீயம் நுட்பமாகச் செய்திருக்கிறது. இந்த அறுவைச் சிகிச்சை மூலம் பிரபஞ்ச யாத்திரையில் சென்ற இயங்கியல் பூமிக்குக் கொண்டு வரப்படுகிறது. சமூக எதார்த்த நிலத்தில் நிறுத்தப்படுகிறது.

ஹேகலின் ஆன்மீகத்தை மாக்சீயம் விரட்டியது. ஆயினும் ஹேகலின் 'ஆவியை' மாக்சீயத்தால் விரட்ட முடியவில்லை. அது மறைபொருளாக, எதிர்மறையின் சாகாத பண்பாக மாக்சீயத்தில் புரையோடிக் கிடக்கிறது.

மாக்சீயத்தின் பிதாமகர்களான மாக்ஸ், ஏங்கல்ஸ் தொடக்கம், மாக்சீயப் புரட்சிவாதிகளான லெனின், மாவோ மற்றும் பல நவ-மாக்சீய தத்துவ அறிஞர்கள் வரை ஹேகலின் இயங்கியல் தத்துவம் பலரால் பல்வேறு ரகங்களில், பல்வேறு வடிவங்களில் உங்வாங்கப் பட்டிருக்கிறது.

மாக்சின் தோழரான ஏங்கல்ஸ் இயங்கியல் தத்துவத்தின் அடிப்படையில் இயற்கையின் இரகசியங்களை விளக்க முனைந்தார். இயற்கையின் இயங்கியல் (dialectics of nature) என்ற தலைப்பில் அவர் எழுதிய நூல் இயங்கியல் விதிகளை விஞ்ஞான விதிகளாக நிறுவ முனைகிறது. உயிருலகமும் பொருளுலகமும் இயங்கியலால் இயக்கப்படுவதாக அவர் தரும் பல உதாரணங்களை இன்றைய அறிவியல் ஏற்க மறுக்கிறது. அன்றைய காலகட்டத்தில், அவர் இயங்கியலின் முக்கியத்துவத்தை மிகைப்படுத்தி எழுதினார் என்பதை இன்று பலர் ஒப்புக்கொள்கிறார்கள்.

இயங்கியலின் அடிப்படையில் ஆன்மத்தின் சூட்சுமத்தை விளக்க முனைந்தார் ஹேகல். அதே இயங்கியல் விதிகளைக் கொண்டு இயற்கையின் இரகசி

யங்களை விளங்க முனைந்தார் ஏங்கல்ஸ். அதே விதிகளைக் கொண்டு சமூக வரலாற்று இயக்கத்தை விளக்க முனைந்தார் மாக்ஸ்.

ஹேகலின் இயங்கியலுக்கும் மாக்சிய இயங்கியலுக்கும் மத்தியில் அடிப்படையான வேறுபாடு உண்டு என வாதிப்பவர்களும் உளர். ஹேகலின் இயங்கியல் கருத்து நிலை சார்ந்தது; அகவயமானது; அது நிஜவுலகத்தின் நிழலான மனவுலகத்தை ஆராய்கிறது. ஆனால் மாக்சின் இயங்கியல் பொருளியம் சார்ந்தது; அது நிஜவுலகத்தின் மெய்யுண்மைகளை விளக்க முனைகிறது என்பது இவர்களது வாதம். இவ்விதம் ஹேகலின் சிந்தனையிலிருந்து மாக்சீய இயங்கியலை வேறுபடுத்தி, அதனைப் பொருளிய இயங்கியல் (materialistic dialectics) என இவர்கள் வர்ணிக்கிறார்கள். இந்த வேறுபாட்டில் உண்மை இருக்கத்தான் செய்கிறது. ஆயினும் இந்த வேறுபாடு ஆய்வுப் பொருள் சார்ந்தது; ஆய்வுமுறை சார்ந்தது. ஆனால், இயங்கியலின் மூல விதிகளில் அடிப்படையான மாற்றம் எதுவும் செய்யப்படவில்லை. இந்த மூல விதிகளை நெறித்தவர் ஹேகல். இது அபாரமான கண்டுபிடிப்பு என மாக்சீயத்தின் தந்தைகளே மெச்சியிருக்கிறார்கள். இந்த மூல விதிகளை மாக்சீயம் உள்வாங்கி, அதன் அடிப்படையில் ஆழமான சமூக ஆய்வுகளையும், நடைமுறைப் பரிசோதனைகளையும் செய்திருக்கிறது. இன்னொரு விதத்தில் சொல்லப்போனால், ஹேகலின் இயங்கியல் விதிகளை மாக்சீயம் உள்வாங்கி, அவற்றை சீரமைத்து, செழுமைப்படுத்தி, சிறப்பான ஆய்வுக் கருவியாகக் கையாண்டிருக்கிறது எனலாம். இயக்கத்தின் இரகசியத்தைக் கண்டுபிடித்த ஹேகல், அதனைப் படைத்தலின் சூட்சுமமாகக் கொண்டார். பிரபஞ்சப் பேரான்மாவின் சிருஷ்டிப்பு வித்தையாகக் கண்டார். இதனால் அவரது இயங்கியல் தத்துவம் ஆன்மீக உலகத்தின் சிகரத்திலிருந்தே மனித வாழ்க்கையை நோக்குகிறது. இந்த நோக்கில், மனித வாழ்வும் மனித வரலாறும் தெய்வீகத் திருக்கூத்தாக அவருக்குத்





கார்ள் மாக்ஸ்

தென்பட்டது. இயங்கியலின் மூல விதிகளை நெறித்து, அந்தப் பிரமாதமான கண்டுபிடிப்பை ஆன்மீக கருத்துலகில் புதைத்து விடுகிறார் ஹேகல்.

கார்ள் மாக்சின் எழுத்துக்களில் ஹேகலின் இயங்கியல் விதிகள் பொருளுலகின் எதார்த்த களத்திற்கு கொண்டுவரப்படுகின்றன. மெய்யுலகின் இயங்கு விதிகளாக அவை நிறுவப்படுகின்றன.

கார்ள் மாக்ஸ் ஒரு பொருளியவாதி. பொருளுலகத்தையே மெய்யுலகமாகக் கண்டவர். பொருளுலகத்திற்கே முதன்மை கொடுத்தவர். பொருளுலகத்திலிருந்தே மனவுலகம் தோற்றப்பாடு கொள்கிறது என்ற கருத்தைக் கொண்டவர். அவரது உலகப் பார்வை ஹேகலின் ஆன்மீகக் கருத்துலகிற்கு நேர்

மாறானது.

ஹேகலின் தரிசனத்தில், வரலாறு என்பது ஒரு தெய்வீகச் சக்தி. மனிதனுக்கு அப்பாற்பட்ட சக்தி. மனித உலகத்திற்கு அந்நியமான சக்தி. மனிதனுக்குப் புறம்பாக நின்று, ஆனால் அதே சமயம், மனிதனுக்கு புலனாகாத ஒரு புனித பயணத்தில், பரிபூரணத்துவத்தை நோக்கிய, முழு மனித விடுதலையை நோக்கிய பரிணாமப் பயணத்தில், மனிதனை வழிநடத்திச் செல்லும் ஒரு சக்தி. இது பிரம்மமாக, பிரபஞ்சப் பேரியக்கமாக, பிரபஞ்ச மனமாக, எங்கும் எதிலும் சர்வவியாபகம் கொண்டு எல்லாவற்றையும் இயக்குகிறது. இது ஒரு இயங்கு சக்தி. சிருஷ்டி சக்தி. இந்தத் தெய்வீக சக்தி இயங்கியல் சக்கரத்தில் சுழல்கிறது. இயங்கியல் விதிகளுக்கு அமைய இயங்குகிறது. இப்படியாக, ஹேகலின் தத்துவார்த்த எழுத்துக்கள் இயக்கத்தின் மூல விதிகளை பிரம்ம சூத்திரமாக மாற்றி, அதன் அடிப்படையில் மனித வாழ்விற்கும் வரலாற்றிற்கும் விளக்கங்கள் கொடுக்கிறது.

கார்ள் மாக்சைப் பொறுத்த வரை, மனிதனின் பொருளிய வாழ்வே எல்லாவற்றிற்கும் மூலமானது. மனித மனமும், மனித உறவுகளும், மனித வாழ்வும், மனித வரலாறும் - எல்லாமே மனிதனின் பொருளிய வாழ்விலிருந்து பிரவாகமெடுக்கிறது. இந்தப் பொருளிய வாழ்வின் மூல இயக்கமாகவே இயங்கியலை நிறுவுகிறார் மாக்ஸ்.

இந்தப் பொருளிய வாழ்வு மனிதனுக்கு அப்பாற்பட்ட சக்திகளால் நிர்ணயிக்கப்படுவதல்ல. மனிதனே பொருளுலகத்தைப் படைக்கிறான். மனித செயற்பாட்டின் மூலமே பொருளுற்பத்தி நிகழ்கிறது. இந்தப் பொருளுற்பத்தியில் நிகழும் ஒட்டுமொத்தமான உறவுகளின் கூட்டமைப்பாக பொருண்மியக் கட்டமைப்பு உருவாக்கம் பெறுகிறது. அதுவே, சமூகத்தின் அடித்தளமாக அமைகிறது. பொருண்மிய வளர்ச்சிப் போக்கில், பொருள் உற்பத்தி வடிவங்களில் தோன்றும் மாற்றங்கள் சமூக அமைப்பிலும் மாற்றங்களை நிகழ்த்துகிறது. இந்த சமூக மாற்றத்தை நிகழ்த்திச் செல்லும் மாபெரும் இயங்கு சக்தியாக வரலாறு இயங்குகிறது. பொருண்மிய உறவுகளில் எழும் முரண்பாடும், அந்த முரண்பாட்டைக் களைந்து விட மனிதர்கள் நிகழ்த்தும் போராட்டமும், அந்தப் போராட்டத்தால் நிகழும் சமூக மாற்றமுமாக வரலாறு நகர்கிறது. எனவே, வரலாறு என்பது சமூக மாற்றத்தை நிகழ்த்தும் இயங்கு சக்தி. இது பொருளுற்பத்திக் களத்திலிருந்து எழுவதால் அதனைப் பொருளிய வரலாறு அல்லது வரலாற்றுப் பொருளியம் (historical materialism) என்கிறார் கார்ள் மாக்ஸ். இந்தப் பொருளிய வரலாற்றை நகர்த்திச் செல்லும் இயங்கு விதிகளாக இயங்கியல் விதிகள் இயங்குகின்றன.

இயங்கியல் பற்றி விளக்கமான ஆய்வுரைகள் எதையும் கார்ள் மாக்ஸ் எழுதிவிடவில்லை. ஆனால் அவரது தத்துவார்த்த எழுத்துக்களிலும், சமூக, பொருண்மிய ஆய்வுகளிலும் இயங்கியல் கருத்தாக்கங்கள் செறிந்து கிடக்கின்றன. இயங்கியலை ஒரு விளக்கக் கோட்பாடாக, ஒரு ஆய்வுக் கருவியாகக் கையாண்டு, சமூக மெய்யுண்மைகளை அவர் பிட்டுக் காட்டினார். இயங்கியல் ஆய்வு முறைமையின் (dialectical methodology) ஒரு தலை சிறந்த உதாரணமாக அவர் எழுதிய 'மூலதனம்' விளங்குகிறது.

கார்ள் மாக்ஸ், மனித சமூகத்தை ஒரு முரண்பாட்டுக் களமாகக் கண்டார். அவரது சமூக ஆய்வுகளில் இயங்கியலின் மூல விதியான முரணியம் முக்கிய இடத்தைப் பெறுகிறது.

சமூகம் என்பது தனிமனிதர்களைக் கொண்ட ஒரு பெரிய கூட்டுக் குடும்பம் அல்ல. எல்லா மனிதர்களும் ஒன்று சேர்ந்து, ஒத்திசைவாக, ஒன்றித்திருக்கும் ஒரு சுவர்க்க பூமியும் அல்ல. சமூகம் என்பது முரண்பாடுகள் நிறைந்த ஒரு உலகம். வர்க்கம் என்றும், சாதி என்றும், மதம் என்றும், ஏழை என்றும், பணக்காரன் என்றும், ஆளுபவன் என்றும், ஆளப்படுபவன் என்றும், ஒடுக்குபவன் என்றும், ஒடுக்கப்படுபவன் என்றும், சுரண்டுபவன் என்றும், சுரண்டப்படுபவன் என்றும், ஆண் என்றும், பெண் என்றும்

மனித உறவுகளில், சமூகப் பிரிவுகளில், எங்கும், எல்லாவற்றிலும் முரண்பாடு தலைதூக்குகிறது. சமூகமானது முரண்பாடுகள் நிறைந்த ஒரு போராட்ட களம். கொந்தளிப்புகளும், நெருக்கடிகளும் நிறைந்த மனித உலகம். இந்த முரண்பாடுகளே சமூகத்தின் அசைவியக்கத்திற்கு காரணிகளாக இருக்கின்றன. இந்த முரண்பாடுகளின் இயல்புகளை இனம் கண்டு கொள்வதன் மூலமே சமூக அசைவியக்கத்தின் தன்மைகளைப் புரிந்து கொள்ளலாம். சமூக அசைவியக்கமாக கட்டவிழும் சமூக வரலாற்றின் போக்கினையும் அறிந்து கொள்ளலாம்.

மனிதர்களின் சமூக வாழ்வைப் பொறுத்த வரை, பொருளாதார வாழ்வே முக்கியமானது. பொருளுற்பத்தியே மனித வாழ்வுக்கு ஆதாரமானது. மனித தேவைகளை நிறைவு செய்வதும் அதுவே. இதனால், சமூகக் கட்டமைப்பில் பொருண்மிய அமைப்பிற்கே பிரதான இடத்தைக் கொடுக்கிறார் கார்ள் மாக்ஸ். பொருண்மிய அமைப்பே பொருளுற்பத்தியின் மையம். அதுவே சமூகத்தின் திண்ணியமான அடித்தளம். அந்த அடித்தளத்தின் மேற்தளமாகவே மற்றெல்லாம் இயங்குகிறது. பொருளிய வாழ்வே மனவுலகத்தையும் நிர்ணயிக்கிறது. பொருளிய புறநிலைகளின் வெளிப்பா டாகவே கருத்துலகமும் தோற்றப்பாடு கொள்கிறது.

பொருளுற்பத்தியின் வளர்ச்சிப் போக்கில், ஒரு காலகட்டத்தில், உற்பத்தி சக்திகளுக்கும், உற்பத்தி உறவுகளுக்கும் மத்தியில் முரண்பாடு எழுகிறது. அந்த முரண்பாடு முற்றி, வர்க்கப் போராட்டம் தீவிரம் பெறுகிறது. சமூகப் புரட்சிக்கான புறநிலை தோன்றுகிறது. இறுதியில், சமூகப் புரட்சி வெடிக்கிறது. இந்தச் சமூகப் புரட்சியால் பொருண்மிய கட்டுமாணத்தில் மாற்றம் நிகழ்கிறது; உற்பத்தி உறவுகளில் மாற்றம் நிகழ்கிறது; சமூக வடிவத்தில் மாற்றம் நிகழ்கிறது. இதனால் புதிய சமுதாயம் பிறக்கிறது. இந்தப் புரட்சிகரமான சமூக மாற்றம் ஒரு மாபெரும் வரலாற்று நிகழ்வாக இடம்பெறுகிறது. இந்த வரலாற்று நிகழ்வு சமூகத்தை ஒரு புதிய படிநிலை



வளர்ச்சிக்கு இட்டுச் செல்கிறது.

இப்படியாக, கடந்த காலங்களில் சமூக மாற்றங்கள் நிகழ்ந்து புதிய சமூக வடிவங்கள் தோன்றி, பொருளாதார கட்டமைப்பில் முன்னேற்றம் ஏற்பட்டதாகக் கூறுகிறார் கார்ள் மாக்ஸ். இந்த சமூக வடிவங்களை புராதன பொதுவுடமை சமுதாயம், அடிமைச் சமுதாயம், பிரபுத்துவ சமுதாயம், முதலாளிய சமுதாயம் என அவர் வகைப்படுத்தினார். ஆதிப் பொதுவுடமைச் சமுதாயத்தில், மனிதர்கள் காடுகளில் வேட்டையாடி வாழ்ந்த யுகத்தில், சொத்துரிமைப் பிரச்சினை இருக்கவில்லை. அதனால் ஆதி சமூகத்தில் வர்க்கப் பிரிவுகள் தோன்றவில்லை. ஆயினும் காலப்போக்கில், மனிதர்கள் நிலத்தைப் பகிர்ந்து விவசாய உற்பத்தியில் ஈடுபட்ட காலத்தில் சொத்துரிமைப் பிரச்சினை தோன்றி வர்க்கங்கள் பிறந்தன. கிரேக்க, ரோம சாம்ராஜ்யங்களில் அடிமைகளின் உழைப்பை சுரண்டி விவசாய, கைத்தொழில் துறைகள் வளர்ந்தன. ஆண்டான் அடிமைகளாக வர்க்கங்கள் தோன்றின. அடிமை சமுதாயத்தின் அழிவிலிருந்து பிரபுத்துவ உற்பத்தி வடிவம் தோன்றி, பிரபுக்களும் கூலி விவசாயிகளும் என்ற வர்க்கங்கள் தோன்றின. இதனையடுத்து, ஐரோப்பாவில் ஏற்பட்ட கைத்தொழில் புரட்சியாலும், விஞ்ஞான தொழில்நுட்ப கண்டுபிடிப்புகளாலும் உற்பத்தி சக்தியில் நிகழ்ந்த மாற்றம் காரணமாக புதிய உற்பத்தி வடிவமாக முதலாளியம் தோற்றம் எடுத்தது. முதலாளிய உற்பத்தி வடிவத்தில், முதலாளி, தொழிலாளி என்ற இரு பெரும் வர்க்கங்கள் தோற்றம் கொண்டன. இவ்விதம் உற்பத்தி வடிவங்களில், உற்பத்தி உறவுகளாக தோன்றும் வர்க்கங்களும் அவை மத்தியில் எழும் போராட்டங்களுமாக சமூக மாற்றங்களை நிகழ்த்தி, மனித வரலாறு முன்னேறிச் செல்வதாக மாக்சின் வரலாற்றுப் பொருளியம் கூறுகிறது.

கார்ள் மாக்சின் சமூக வரலாற்றுக் கோட்பாட்டில் சிக்கல்கள் இல்லாமல் இல்லை. இந்தக் கோட்பாடு பொருண்மிய நியதியை (economic determinism) வலியுறுத்துகிறது என்பது சிலரது குற்றச்சாட்டு. அதாவது,

பொருளாதாரக் கட்டுமாணமே சமூகத்தின் சகல அமைப்புகளையும், மனித மன உலகையும் நிர்ணயிக்கும் சக்தியாகக் கொள்ளப்படுகிறது. இதில், மனித செயலாக்க சக்திக்கு மேலாக பொருளிய சக்தியே மேலோங்கி நிற்கிறது என்பது இவர்களது வாதம்.

வேறு சிலர், மாக்சின் வரலாற்றுப் பொருளியத்தை, தொழில்நுட்ப நியதிவாதம் எனவும் விமர்சிப்பதுண்டு. அதாவது, உற்பத்தி சக்தியில் தோன்றும், தொழில்நுட்ப வளர்ச்சியே சமூக மாற்றத்தை நிர்ணயிக்கும் சக்தியாக மாக்ஸ் சித்தரிக்கிறார் என்பது இவர்களது குற்றச்சாட்டு. உற்பத்தி சக்தி என்பது உற்பத்தி சாதனங்களையும், மனித தொழிலாக்க சக்தியையும் குறிக்கும். உற்பத்தி சாதனங்களில் நிகழும் தொழில்நுட்ப வளர்ச்சியே பொருளுற்பத்தி உலகில் முரண்பாட்டைத் தோற்றுவிக்கும் காரணியாக அமைகிறது. ஆகவே, தொழில்நுட்பத்தில் ஏற்படும் வளர்ச்சியே சமூக மாற்றத்திற்கும், சமூக வளர்ச்சிக்கும் வித்திடும் உந்து சக்தியாக விளங்குகிறது. எனவே, வரலாற்றின் இயங்கு சக்தியாகத் தொழில் நுட்பத்தையே கொள்ள வேண்டும் என்பது இவர்களது கருத்து.

இந்த விமர்சனங்களை எல்லாம் மாக்சீயத்தின் பிதாமகர்களே நிராகரித்திருக்கிறார்கள். லெனினும் இது பற்றி நீண்ட விளக்கவுரைகள் எழுதியிருக்கிறார். அவற்றின் சாராம்சம் இதுதான்.

பொருளாதார உறவுகளில் எழும் முரண்பாடு பிரதானமானது. ஆயினும் சமூக கட்டமைப்பின் பல்வேறு நிலைகளில், பல்வேறு பரிமாணங்களில், முரண்பாடுகள் தோன்றி வளர்கின்றன. சகல முரண்பாடுகளினதும் ஒட்டுமொத்தமான புறநிலை அழுத்தத்தால் புரட்சிகர சூழ்நிலை எழுகிறது. ஒடுக்கப்படும் மக்களே இந்த முரணியங்களின் அழுத்தத்தால் ஈர்க்கப்படுகிறார்கள். சமூகத்தின் பெரும்பான்மையாக, சமூக உற்பத்தியின் படைப்பாளிகளாக விளங்கும் உழைக்கும் மக்களே, புரட்சிகர வர்க்கமாக, புரட்சிகர சக்தியாகச் செயற்படுகிறார்கள். எனவே, முரணியங்களின் போராட்ட களமாக வர்க்கப் போராட்டம் அமைகிறது. இந்த வர்க்கப் போராட்டமே வரலாற்றின் சக்கரத்தைச் சுழற்றுகிறது. வர்க்கப் போராட்டமே சமூகப் புரட்சிக்கும், சமூக மாற்றத்திற்கும் ஏதுவாக இருக்கிறது. வர்க்கப் போராட்டம் என்பது தானாக, தன்னியல்பாக சமூகப் புரட்சியை தோற்றுவிப்பதல்ல. வர்க்கப் போராட்டம் என்பது அணிதிரட்டப்பட்ட வெகுசன சக்தியாக எழுச்சி கொள்ளும் புரட்சிகர வர்க்கத்தின் போராட்டம். வெகுசனத்தை அணிதிரட்டவும், போராட்டத்தை முன்நகர்த்திச் செல்லவும், புரட்சியை நடத்தவும், ஆட்சியைக் கைப்பற்றவும், சமூகத்தில் மாற்றத்தை நிகழ்த்தவும் ஒரு புரட்சிகர இயக்கம் வேண்டும். இந்தப் புரட்சிகர இயக்கமும் அதன் பின்னால் அணிதிரளும் மக்களுமே புரட்சியை நடத்த முடியும். வரலாற்றை நகர்த்த முடியும்.

கார்ள் மாக்ஸ் ஒரு வரலாற்று ஆசிரியர் மட்டுமன்றி ஒரு சமூகப் புரட்சியாளரும் ஆவார். அவர் சமூக உலகத்திற்கும் வரலாற்றுக்கும் விளக்கக் கோட்பாடுகள் அளித்ததோடு நின்றுவிடவில்லை. அவர் சமூகத்தை, உலகத்தை மாற்றியமைக்க விரும்பினார். முதலாளிய ஒடுக்குமுறையிலும், சுரண்டல் முறையிலும் சிக்குப்பட்டுச் சீரழியும் மனிதர்கள் விடுதலையடைந்து ஒரு உன்னதமான சமூக அமைப்பைக் கட்டியெழுப்ப வேண்டுமென ஆவல் கொண்டவர். எனவே, அவர் சமூகப் புரட்சி பற்றி எழுதினார். சமூகச் செயற்பாட்டை வலியுறுத்தினார்.

சமூக மெய்மையை, அதன் முரணிய தன்மைகளை, அதன் அசைவியக்கத்தை ஆழமாகப் பார்க்கும் ஆய்வுக் கருவியாக அவர் இயங்கியலைக் கையாண்டார். இயங்கியலில் நெறிக்கப்பட்ட சமூக அறிவியற் கோட்பாடு சமூக நிதர்சனத்தைத் துல்லியமாகக் காட்ட வல்லது; சமூக வரலாற்று இயக்கத்தை வெளிப்படுத்த வல்லது என்பது அவரது கருத்து. விளக்கக் கோட்பாடுகள் சமூக உண்மைகளைத் திரைநீக்கம் செய்து காட்டலாம். ஆனால் செயற்பாடுதான் சமூகத்தை மாற்றியமைக்க வல்லது.

ஆகவே, கோட்பாடும் செயற்பாடும் ஒன்றித்து நிற்பதுதான் புரட்சிகர நடவடிக்கைக்கு இன்றியமையாதது என்பது அவரது நிலைப்பாடு.

இயங்கியல் தத்துவத்தின் அடிப்படையில் மாக்சின் சிந்தனைப் பாரம்பரியத்தை சமூகப் புரட்சிக் களத்திற்கு எடுத்துச் சென்றவர்களில் லெனினும் மாவோவும் முக்கியமானவர்கள். அக்டோபர் புரட்சிக்கு முற்கால ரஷ்ய சமூக அமைப்பை இயங்கியல் கோட்பாட்டின் அடிப்படையில் தெளிவாக விளக்கினார் லெனின். ரஷ்ய சமூகத்தில் அன்று நிலவிய பன்முக முரண்பாடுகளை ஆழமாக எடுத்து விளக்கி, புரட்சிக்கான புறநிலைத் தன்மைகளை அவர் சுட்டிக் காட்டினார். சமூக எதார்த்த நிலைகளை விளக்குவதோடு நின்றுவிடாது, சமூக மாற்றத்திற்காக புரட்சிகர வேலைத்திட்டத்தையும் நெறிப்படுத்தி, அதைச் செயற்படுத்தியும் காட்டினார். இதே போன்று சீனச் சமூக உலகத்தையும், அதன் முரண்பாட்டுக் கோலங்களையும் மிகவும் துல்லியமாக விளக்கினார் மாவோ. விவசாய வர்க்கத்தின் கட்டமைப்பையும் அந்த வர்க்கத்தில் நிலவிய பிரிவுகளையும் பிளவுகளையும் முரண்களையும் ஆழமாக ஆராய்ந்து, அந்த முரண்களை அகற்றும் செயற்திட்டமாக புரட்சிக் கோட்பாடுகளை அவர் உருவாக்கினார். முரணியம் பற்றி அவர் எழுதிய கட்டுரை, இயங்கியல் ஆய்வு முறைக்கு ஒரு தலைசிறந்த விளக்கவுரையாகக் கருதப்படுகிறது.

சமூகம் என்பது சிக்கலான மனித உறவுகளைக் கொண்ட ஒரு புதிரான உலகம். எத்தனையோ எதிர்வு சக்திகள் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்து, ஒன்றோடு ஒன்று முரண்பட்டு, அந்த முரண்களின் முகங்கள் தெரியாதவாறு ஒன்றோடு ஒன்று ஒன்றித்து நின்று, ஒரு பொய்யான தோற்றப்பாட்டுடன் சமூகம் இயங்குகிறது. இந்தத் தோற்றப்பாட்டிற்கு அப்பால், மறைபொருளாக ஒளிந்திருக்கும் சமூக மெய்யுண்மைகளை இனம் கண்டு அறிவதற்கு இயங்கியல் ஆய்வு இன்றியமையாதது. இதில் முரணிய விதி முக்கியமானது. அதுவே சமூக இயக்கத்தின்



இரகசியங்களை வெளிக்காட்ட வல்லது. இந்த முரணியம் ஒருமுகத் தன்மை கொண்டதல்ல; அது பல்முகப் பரிமா ணங்களைக் கொண்டது என விளக்குகிறார் மாவோ.

சிக்கலான வர்க்க உறவுகளால் பின்னப்பட்டிருக்கும் சமூக உலகத்தில், முரண்பாடுகளும் சிக்கலானதாக பின்னப்பட்டிருக்கின்றன. இவை ஒன்றோடு ஒன்று தொடர்புடையதாக, ஒன்றன் மீது ஒன்று தாக்கம் விளைவிப்பதாக, சமூக இயக்கத்தின் நீரோட்டமாக அசை கின்றன. இந்த சமூக முரண்பாட்டு உலகத்தைப் பல ரகங்களாக வகைப்படுத்துகிறார் மாவோ. பிரதான முரண்பாடு என்றும், இரண்டாம் தர முரண்பாடு என்றும், பகை முரண்பாடு என்றும், சிநேக முரண்பாடு என்றும், சமநிலையற்ற வளர்ச்சிப் போக்குடைய முரண்பாடு என்றும், இவை நிரைப்படுத்தி வகைப்படுத்தப்படுகின்றன. நதிகள் சமுத்திரத்தில் சங்கமமாவது போன்று, எல்லா முரண்பாடுகளுமே பிரதான முரண்பாட்டைச் சந்திக்கின்றன. அதற்கு முண்டு கொடுத்து நிற்கின்றன. இந்தப் பிரதான முரண்பாடு முக்கியமானது. அது முற்றிக் கனியும்போதே புரட்சிகரப் புறநிலை பிறக்கிறது. இந்தப் பிரதான முரண்பாட்டையும் அதோடு பிணைந்து நிற்கும் ஏனைய முரண்பாடுகளையும் இனம்கண்டு கொள்வதன் மூலமே சமூக உலகத்தை ஆழமாகத் தரிசித்துக் கொள்ள முடியும் என்கிறார் மாவோ.

முரணியக் கோட்பாட்டை விரிவுபடுத்தி, அதனைச் செழுமைப்படுத்த மாவோ, லெனின் போன்றோர் நிகழ்த்திய சமூக ஆய்வுகளை உதாரணம் காட்டி, ஹேகலின் இயங்கியலுக்கும் மாக்சீய இயங்கியலுக்கும் அடிப்படையான, அமைப்பு ரீதியான வேறுபாடு உண்டு என வாதிடுகிறார் பிரபல நவ மாக்சிய அறிஞரான அல்தூசர். ஹேகலின் தத்துவம் கருத்துலகம் சார்ந்தது. ஆன்மீக மயமானது. ஆனால் மாக்சின் ஆய்வு வரலாற்றுடன் பிணைந்து நிற்கிறது. சமூக வரலாற்றிற்கு அறிவியல் ரீதியான விளக்கத்தைக் கொடுக்கிறது என்பது அல்தூசரின் வாதம்.

மாக்சீயத்தை ஒரு வரலாற்று விஞ்ஞானக் கோட்பாடாக நிறுவுவதாயின் மாக்சின் சிந்தனை உலகிலிருந்து ஹேகலின் 'ஆவியை' விரட்ட வேண்டும் என்கிறார் அல்தூசர். அவரது தத்துவார்த்த எழுத்துக்கள் இந்தக் காரியத்தையே செய்ய முனைகின்றன. அல்தூசரின் எழுத்துக்கள் நவ மாக்சிய சிந்தனை உலகில் பெரும் சர்ச்சையைக் கிளப்பியது. இந்தச் சர்ச்சையையும் அதன் வாதப் பிரதிவாதங்களையும் விளக்கிக் கூறுவது இக் கட்டுரையின் நோக்கமல்ல. நாம் இங்கு எடுத்துக் கொண்ட விடயம், ஹேகலின் தத்துவம் மாக்சின் சமூக வரலாற்றுக் கோட்பாட்டில் ஏற்படுத்திய தாக்கம் பற்றியதாகும். ஹேகலின் சிந்தனையை மாக்சியம் எந்த அளவிற்கு உள்வாங்கியிருக்கிறது என்பது பற்றியே நாம் இங்கு பார்ப்போம். இந்தச் சிந்தனை வரம்பிற்குள் நின்றே இந்தக் கட்டுரை எழுதப்படுகிறது.

கார்ள் மாக்சின் சிந்தனையுலகை இரு கால கட்டங்களாகப் பிரித்து, ஒன்றை இளம் மாக்சின் தத்துவார்த்த எழுத்துக்கள் என்றும், மற்றதை முதிர்ந்த மாக்சின் அறிவியற் கோட்பாடுகள் என்றும் இருவகைப் படுத்துகிறார் அல்தூசர். முன்னது சித்தாந்த உலகம் சார்ந்தது. பின்னது அறிவியல் உலகம் சார்ந்தது. முன்னதில் ஹேகலின் தத்துவப் பிசாசு குடிகொண்டிருக்கிறது. பின்னதில் அது விரட்டப்பட்டுவிட்டது. முன்னது தத்துவ விமர்சனம். பின்னது சமூக வரலாற்று விஞ்ஞானம். இப்படியாக மாக்சின் எழுத்துலகை இரு கூறுகளாகப் பிரித்து, இடையே ஒரு சிந்தனை முறிவு ஏற்பட்டுள்ளதாக வாதாடுகிறார் அல்தூசர்.

இந்த வாதம் வலிமையற்றது. ஏற்றுக் கொள்ள முடியாதது. ஏனென்றால் அல்தூசர் கூறுவதுபோல மாக்சின் எழுத்துக்களில் ஒரு அடிப்படையான சிந்தனை முறிவு (epistemological break) ஏற்பட்டதாக சொல்லிவிட முடியாது. அவரது எழுத்துக்களில் ஒரு சிந்தனைத் தொடர்ச்சி இருக்கிறது. ஒரு பரிணாம வளர்ச்சி இருக்கிறது. இளம் பிராயத்தில் அவர் தத்துவம் பற்றி எழுதினார். முதிய



காலத்தில் பொருண்மியம் பற்றி எழுதினார். ஆனாலும் அவரது தத்துவப் பார்வை, உலகப் பார்வை, அவரது முதிர்ந்த கால எழுத்துக்களிலும் ஆழமாக வேர் பதித்து நிற்கின்றன. ஹேகலின் இயங்கியல் தத்துவமானது மாக்சின் சிந்தனைத் தொடர்ச்சிக்கு ஆதாரமாக நிற்கிறது.

ஜெர்மானிய தத்துவம், பிரஞ்சு அரசியல், பிரித்தானிய பொருண்மியம் என்ற ரீதியில், காலத்திற்குக் காலம் அந்தந்த நாடுகளில் வாழ்ந்தபோது, அந்தந்த நாடுகளின் வரலாற்றுப் புறநிலைகளாலும் சிந்தனைப் போக்குகளாலும் ஈர்க்கப்பட்டு, அந்தந்த துறைகள் பற்றி மாக்ஸ் எழுதினார். அவர் எங்கு சென்றாலும், எதனை எழுதினாலும், ஹேகலின் 'ஆவி' அவரைப் பின்தொடர்ந்தது. அதே 'ஆவிதான்' ஹேகலின் இயங்கியல் தத்துவம். அது அவரது எல்லா எழுத்துக்களிலும் ஆட்கொண்டு நிற்கிறது.

முதிர்ந்த பருவத்தில் அவர் பிரித்தானியாவில் வாழ்ந்தபொழுது, ஆங்கிலேய முதலாளிய உற்பத்தி உலகின் அராஜகப் போக்கு அவரை ஆழமாகப் பாதித்தது. பல வருடங்களை லண்டன் 'மியூசியம்' நூலகத்தில் செல விட்ட அவர், 'மூலதனத்தை' எழுதினார். புரட்சிகரமான பொருண்மியக் கோட்பாடுகளைப் படைத்தார். முதலாளிய உற்பத்தி உலகின் முரணிய தன்மைகளையும், இயங்குவிதிகளையும் எடுத்து விளக்கினார். வரலாற்றுப் பொருளியத்தின் அத்திவாரத்தை அமைத்தார். அல்தூசரால் சமூக வரலாற்று விஞ்ஞானமாகச் சித்தரிக்கப்படும் சமூக வரலாற்றுப் பொருளியமும் இயங்கியல் தத்துவத்தின் அத்திவாரத்தில்தான் கட்டப்பட்டிருக்கிறது. ஹேகலின் இயங்கியல் விதிகளே மாக்சிய வரலாற்றியலின் தூண்களாக நிற்கின்றன.

## IV

இயங்கியல் ஆய்வு முறைக்கு இலக்கணமாகத் திகழும் கார்ள் மாக்சின் 'மூலதனம்', முதலாளிய பொருள் உற்பத்தி உலகை ஆழமாக விசாரணை செய்கிறது.

தற்கால சமூகத்தின் பொருண்மிய இயங்குவிதிகளைப் பிட்டுக்காட்டுவதே இந்த ஆய்வு நூலின் இறுதி நோக்கம் என 'மூலதனத்தின்' முன்னுரையில் அவர் குறிப்பிடுகிறார்.

சமூகக் கட்டமைப்பின் அடித்தளமாக பொருண்மியக் கட்டமைப்பு அமைந்திருக்கிறது. பொருண்மிய அமைப்பின் இயங்கு விதிகளே சமூகக் கட்டமைப்பின் அசைவியக்கத்திற்கு பிரதான காரணிகளாக விளங்குகின்றன. ஆகவே, பொருண்மிய அமைப்பின் இயங்குவிதிகளைக் கண்டுகொண்டால் சமூக இயக்கத்தின் போக்கினை, அதன் வரலாற்று நகர்வினைக் கண்டு கொள்ளலாம். இந்த நோக்கிலேயே முதலாளிய சமூகத்தின் உற்பத்தி வடிவத்தை 'மூலதனம்' அறுவை செய்து பார்க்கிறது.

இந்த ஆய்வில், முதலாளிய உற்பத்தி முறையில் நிலவும் முரணியங்களை மிகவும் நுட்பமான முறையில் வெளிப்படுத்திக் காட்டுகிறார் கார்ள் மாக்ஸ். இந்த முரணியங்கள் முதலாளியத்தைப் பெரும் நெருக்கடிக்குள் தள்ளிக்கொண்டிருப்பதாக அவர் சுட்டிக் காட்டினார். இது முதலாளியத்தின் சிதைவுக்கு வழிகோலும் என அவர் நம்பினார்.

உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்ற பேரவாவில், முதலாளியமானது கட்டுக்கடங்காத வளர்ச்சிப் பாதையில் செல்கிறது. இதன் விளைவுகளில் ஒன்றாக, இலாப விகிதாசாரத்தில் தவிர்க்க முடியாத வீழ்ச்சி ஏற்படும். இது முதலாளியத்தின் உள்-முரண்பாடாக எழுந்து, முதலாளிய உற்பத்தி முறையை ஸ்தம்பிக்கச் செய்யும். மறுபுறத்தில், முதலாளியத்தின் பெருவளர்ச்சி, முதலாளிய தொழிலாள வர்க்கங்களை இரு துருவப் பிளவில் இட்டுச் செல்லும். பெருமீன்கள் சிறு மீன்களை விழுங்குவது போல, பெருமுதலாளிகள் சிறுமுதலாளிகளை ஏப்பம் விட முதலாளிகளின் தொகை சுருங்கும். அதே வேளை தொழி லாள வர்க்கத்தின் தொகை பெருகும். சுரண்டல் அதிகரிக்கும். தொடர்ச்சியாக வறுமையின் விளிம்பிற்கு பாட்டாளி வர்க்கம் தள்ளப்படும். சகித்துக் கொள்ளமுடியாத



துன்பத்தில் உழைக்கும் வர்க்கம் உழலும். இதனால் பாட்டாளி வர்க்கப் புரட்சி வெடிக்கும். இவ்விதம் உள்-முரண்பாடாக எழும் நெருக்கடியால் முதலாளியமானது தனது புதைகுழியைத் தானாகவே தோண்டிக் கொள்ளும். அதன் புதைகுழியிலிருந்து ஒரு புதிய சமூகம் பிறக்கும். புதிய உற்பத்தி உறவுகளைக் கொண்ட ஒரு புதிய உற்பத்தி வடிவம் தோன்றும். இவ்வாறு 'மூலதனத்தில்' தீர்க்க தரிசனம் சொல்கிறார் கார்ள் மாக்ஸ்.

முதலாளித்துவத்தின் புதைகுழியிலிருந்து புதிய உற்பத்தி வடிவமாக சோசலிச சமுதாயம் பிறக்கும். அந்தச் சோசலிச சமுதாயத்தில் அனைத்து உற்பத்தி சாதனங்களும் பொதுவுடமையாக்கப்படும். அந்தப் புரட்சிகரமான புதிய சமுதாயத்தில் வர்க்கப் பிரிவுகள் அழிந்து சமத்துவம் நிலவும். அந்த சோசலிச சமுதாயம் மேலும் வளர்ச்சி கண்டு கம்யூனிச சமுதாயமாக உன்னத வடிவம் எடுக்கும். அந்தக் கம்யூனிச சமுதாயத்தில் அரச நிறுவனமும், ஆட்சி அதிகாரமும் அழிந்து போகும். ஆளுபவர், ஆளப்படுபவர் என்ற முரணிய பேதங்கள் முற்றாக நீங்கும். கம்யூனிசம் இறுதியில் உலகமயமாகி முழு மனித வர்க்கத்தையும் தழுவிக் கொள்ளும். அப்பொழுது, சுதந்திரமும், சமத்துவமும் பெற்றதாக மனிதம் பூரணமடையும். அத்துடன் மனித உலகத்து முரணிய இயக்கங்கள் முடிவுக்கு வரும். அந்நிலையில் வரலாற்றின் அசைவியக்கம் நின்றுவிடும். இப்படி எதிர்வு கூறினார் கார்ள் மாக்ஸ்.

'மூலதனத்தில்' முதலாளியத்தின் சாவு பற்றி கார்ள் மாக்ஸ் கூறிய தீர்க்கதரிசனம் பலிக்கவில்லை. முதலாளிய உற்பத்தி உலகில் எழும் வர்க்க முரண்பாடு கூர்மையடைந்து, தனக்குத்தானே குழிபறித்து முதலாளித்துவம் செத்துவிடவில்லை. பதிலாக, அதுபெரும் வளர்ச்சியைக் கண்டது. ஏகபோக முதலாளியமாக, அரச முதலாளியமாக, ஆக்க நல முதலாளியமாக, காலத்திற்கு காலம் அது வெவ்வேறு வடிவங்களை எடுத்து விஸ்வரூபம் பெற்று பாரிய வளர்ச்சி கண்டு வருகிறது. முதலாளியமானது

தேசிய எல்லைகளைக் கடந்து, உலகக் கூட்டணி அமைத்து சர்வதேச சக்தியாக விரிவாக்கம் பெற்று வருகிறது. இன்று உலக முதலாளியத்தின் பொருளாதாரச் சிலந்திவலைக்குள் முழு உலகமுமே சிக்குப்பட்டு நிற்கிறது.

மூலதனத்தின் ஆய்வில் முதலாளியத்தின் உண்மை முகத்தை கார்ள் மாக்ஸ் கண்டு கொள்ளவில்லை. உலகத்தின் வளங்களையும் உழைப்பாற்றலையும் சுரண்டிக்கொழுக்கும் அதன் உற்பத்தி வலுவையும் அவர் செம்மையாக எடைபோடவில்லை என்பது சில பொருண்மிய ஆய்வாளர்களது கருத்து.

தொழில்நுட்பத்தின் தன்மையை, அதன் பேராற்றலை கார்ள் மாக்ஸ் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்பது இன்னொரு சாரரது வாதம். உற்பத்தி சக்தியின் முக்கிய கூறாக விளங்கும் தொழில்நுட்பத்தின் வளர்ச்சியானது உற்பத்தி உறவுகளில் முரண்பாட்டையும், நெருக்கடியையும் தோற்றுவிக்கும் எனக் கருதுவது தவறு. தொழில்நுட்பமானது மனிதத் தேவையின் நிர்ப்பந்தத்தால் பிறக்கிறது. பொருள் உற்பத்தியைச் செழுமைப்படுத்துகிறது. முழு உலகத்தையுமே ஒரு புதிய தொழில்நுட்ப யுகத்தை நோக்கி நகர்த்திச் செல்கிறது. முதலாளிய உற்பத்தியின் மூச்சாக விளங்கும் இந்த தொழில்நுட்பத்தின் வீச்சை கார்ள் மாக்ஸ் சரியாக மதிப்பாய்வு செய்யவில்லை என்பது இவர்களது நிலைப்பாடு.

சோசலிச சமூக உருவாக்கம் பற்றிய மாக்சின் எதிர்பார்ப்புகளும் நிறைவு பெறவில்லை. முதலாளித்துவம் பாரிய அளவில் வளர்ச்சி கண்ட பிரிட்டன் அல்லது ஜேர்மனியில் வர்க்க முரண்பாடு கூர்மையடைந்து, சமூகப் புரட்சி வெடித்து, சோசலிசம் உருவாக்கம் பெறும் என கார்ள் மாக்ஸ் எதிர்பார்த்தார். ஆயினும் அவர் எதிர்பார்த்ததுபோல இந்நாடுகளில் சமூகப் புரட்சிகள் நிகழ்ந்து சோசலிச சமூகம் உதயம் பெறவில்லை. மாறாக, சமூகப் புரட்சிகள் வேறு எங்கோ நிகழ்ந்தன. அதுவும் முதலாளியம் முதிர்ச்சி காணாத, நிலமானியத்தில் திளைத்து நின்ற ரஷ்யாவிலும் பின்பு சீனாவிலும் புரட்சிகள்



நிகழ்ந்தன. இந்தச் சமூகப் புரட்சிகளும் இயங்கியலின் தவிர்க்கமுடியாத நியதிகளின் நிர்ப்பந்தத்தால் நிகழவில்லை. இங்கு சமுதாயப் புரட்சிகள் திட்டமிட்டு நடத்தப்பட்டன. மனித செயற்பாட்டின் திண்ணியமான முனைப்பாக இங்கு மாபெரும் சமூக மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன.

லெனினும், மாவோவும் இயங்கியல் ஆய்வு முறைமையைக் கையாண்டனர். முரணியக் கோட்பாட்டின் அடிப்படையில் சமூக மெய்யுலகை ஆழமாக ஆராய்ந்தனர். ஆயினும், கோட்பாட்டு விளக்கத்துடன் நின்றுவிடாது செயற்பாட்டிற்கும் முதன்மை கொடுத்தனர். கோட்பாட்டுடன் செயற்பாடு கைகோர்த்து நிற்கும் பொழுதுதான் புரட்சி சாத்தியமாகும் என்பதை வலியுறுத்தினர். கோட்பாடும் செயற்பாட்டு அனுபவத்தில் நெறிக்கப்பட வேண்டும் என்பதை லெனின் சுட்டிக் காட்டினார். ‘வெகுசனப் புரட்சி இயக்கத்தின் நடைமுறைச் செயற்பாட்டுடன் ஒன்றித்து நிற்கும் பொழுதே ஒரு புரட்சிகரக் கோட்பாடு முழுமையான வடிவத்தை எடுக்கிறது’ என்கிறார் லெனின்.

1917ஆம் ஆண்டு நிகழ்ந்த அக்டோபர் புரட்சியை அடுத்து ரஷ்யாவில் சோசலிச அரசு நிறுவப்பட்டது. அதன் பின்னர் இரண்டாவது உலக யுத்தத்தை அடுத்து கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் சீனாவிலும் சோசலிச அரசுகள் உருவாக்கம் பெற்றன.

உலக முதலாளியத்திற்குப் போட்டியாக எழுந்த சோசலிச அரசுகளும் சோசலிசப் பொருண்மிய உற்பத்தி வடிவங்களும் நிலைத்து நிற்கவில்லை. ஆயிரத்துத் தொள்ளாயிரத்து எண்பதுகளின் இறுதியிலும், தொண்ணூறுகளின் ஆரம்பத்திலும் ஏற்பட்ட அரசியற் பூகம்பங்கள் காரணமாக சோவியத் ஒன்றியத்திலும், கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் சோசலிச அரசுகள் தகர்ந்து விழுந்தன. 1989ஆம் ஆண்டு ஜுலை மாதத்திற்கும் டிசம்பருக்கும் மத்தியில் ஆறு கிழக்கு ஐரோப்பிய சோசலிச அரசுகள் சிதைவுற்றன. இதே ஆண்டில் சோவியத் ஒன்றியத்தில் புரட்சிகரமான அரசியற் சீர்திருத்தங்கள்

நிகழ்ந்தன. இறுதியில் 1991ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி கலைக்கப்பட்டதை அடுத்து சோவியத் ஒன்றியத்தின் சோசலிச ஆட்சி கவிழ்ந்தது. சீனாவில் 1980ஆம் ஆண்டு ஆரம்பத்திலிருந்தே சோசலிசப் பொருளாதாரக் கட்டுமாணத்தில் அடிப்படையான சீர்திருத்தங்கள் கொண்டு வரப்பட்டன. அரசின் ஆதிக்கத்தின் கீழிருந்த கூட்டுறவு விவசாய முறை நீக்கப்பட்டு, தனிப்பட்ட முறையில் உணவு உற்பத்தியில் ஈடுபடவும், உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்யவும் சீன விவசாயிகளுக்கு சுதந்திரம் அளிக்கப்பட்டது. எண்பது விகிதமான சனத்தொகையைக் கொண்ட சீன விவசாய சமூகம் முதலாளிய உற்பத்தி முறையைத் தழுவிக் கொண்டது. அப்பொழுது சீன கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவராகப் பதவி வகித்த டெங் சியா பிங், தனியார் சொத்துடமையை அனுமதித்ததுடன் முழு நாட்டையுமே முதலாளிய பொருளுற்பத்தி முறைக்குத் திறந்து விட்டார். சீனக் கம்யூனிஸ்ட் தலைமை ஆட்சியதிகாரத்தை இறுகப் பற்றிக்கொண்டு முதலாளியத்தைத் தழுவிக் கொண்டதால், அரசியல் நெருக்கடியைத் தவிர்த்து பொருளாதாரத்தில் முன்னேற்றம் கண்டு வருகிறது. எனினும், சீனாவில் சோசலிசம் தோல்வி கண்டது என்பதுதான் உண்மை.

முதலாளியம் தகர்ந்து விழும் என்றும் அதன் சமாதியிலிருந்து பொதுவுடமை சமுதாயமாக சோசலிசம் தோன்றி வளர்ந்து, உலகெங்கும் பரவி, அதன் உயர்நிலைப் பரிணாம வளர்ச்சியாக கம்யூனிச சமூகம் தோன்றும் என்றும் அந்த உன்னதமான சமூக வடிவத்தின் உதயத்துடன் மனிதர்கள் முழுமையான விடுதலை பெறுவதுடன் மனித வரலாறும் முழுமைபெற்று முடிவுக்கு வருமென மாக்சியத்தின் தந்தையர் கண்ட கனவு பலிக்கவில்லை.

சோசலிசத்தின் சிதைவுக்கான காரணங்களை ஆழமாக, விரிவாக ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமல்ல. எனினும் சில மூல காரணிகளை இங்கு சுருக்கமாகப் பார்ப்போம்.

சோவியத் ஒன்றியத்திலும், கிழக்கு ஐரோப்பாவிலும்



சோசலிச அரசுகள் சிதைவுற்றதற்குப் பொருளாதார நெருக்கடியும் ஒரு காரணம். இந்த நாடுகளின் பொருளாதார வாழ்வு மைய அரசின் இரும்புப் பிடிக்குள் இருந்தது. மைய அரசே பொருளாதாரத் திட்டங்களைத் தீட்டி அவற்றை இறுக்கமாக நடைமுறைப்படுத்தியது. சோவியத் ஒன்றியத்தைப் பொறுத்த வரை அரச பொருளாதாரத் திட்டங்கள் பொதுமக்களின் அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்வதாக அமையவில்லை. மக்களின் உணவுத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் விவசாய அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பதற்குப் பதிலாகக் கனரக தொழிற்சாலைகள் நிறுவும் திட்டங்களுக்கே முன்னுரிமை கொடுக்கப்பட்டது. உலக முதலாளிய வல்லரசுகளுடன் பனிப் போரில் ஈடுபட்டிருந்ததால் தேசிய வருமானத்தின் பெரும் பங்கு ஆயுத உற்பத்தியிலும், அணு ஆராய்ச்சியிலும், விண்வெளி ஆய்விலும் செலவிடப்பட்டது. இத்தகைய தவறான அணுகுமுறையால் சோவியத் ஒன்றியம் பாரிய உணவுத் தட்டுப்பாட்டைச் சந்திக்க நேர்ந்தது. பண வீக்கம் அதிகரித்தது. பொருளாதார வளர்ச்சியின் விகிதாசாரம் படிப்படியாக வீழ்ந்து பூஜ்யத்தை அடைந்ததாக சோவியத் பொருளாதார நிபுணர்கள் சிலர் கூறுகிறார்கள். மக்களின் வாழ்க்கைத் தரமும் வெகுவாகக் குறைந்தது. நாடு பெரும் பொருளாதார நெருக்கடியைச் சந்தித்தது. சோவியத் மக்கள் வறுமையின் கோரப் பிடிக்குள் சிக்குண்டனர். முதலாளிய உலகிலிருந்து உணவுத் தானியங்களை இறக்குமதி செய்ய சோவியத் அரசு நிர்ப்பந்திக்கப்பட்டது. சோசலிசப் பொருளாதார உற்பத்தி முறையில் மக்களுக்கு நம்பிக்கை தளர்ந்தது. கம்யூனிசக் கட்சியின் ஆட்சியமைப்பை மாற்றியமைக்க மக்கள் திடசங்கற்பம் பூண்டனர்.

சோவியத் ஒன்றியத்திலும் சரி, கிழக்கு ஐரோப்பாவிலும் சரி, சோசலிசத்தின் சிதைவுக்கு பொருளாதார நெருக்கடி மட்டும் முக்கிய காரணி அல்ல. ஒரு கொடூரமான சர்வாதிகார ஆட்சிமுறையும் அதன் கீழ் பொதுமக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுமே கம்யூனிச

நிர்வாகம் சிதைந்து போனதற்குப் பிரதான காரணமாகும்.

அக்டோபர் புரட்சியை அடுத்து சோவியத் ஒன்றியத்தில் கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சிபீடம் ஏறியது. கம்யூனிஸ்ட் கட்சியின் சர்வாதிகார ஆட்சியில் உண்மையான சனநாயகம் பேணப்படுமென லெனின் கூறிவந்தார். ஆனால் நடைமுறையில் அப்படி நிகழவில்லை. லெனினின் மறைவுக்குப் பின்னர் ஆட்சிப் பீடம் ஏறிய ஸ்டாலின் மிகவும் கொடூரமான சர்வாதிகார ஆட்சிமுறையை நிறுவினார். அரச பயங்கரவாதம் தலைவிரித்தாடியது. இரவுக் கைது, சித்திரவதை, கொலைகளாக பொதுமக்கள் மீது கொடுமை கட்டவிழ்த்து விடப்பட்டது. சைபீரிய பனிமண்டல சிறைகளில் பல லட்சம் மக்கள் மரணத்தைத் தழுவ நேரிட்டது. ஸ்டாலினின் மறைவுக்குப் பின்னர் பதவிக்கு வந்த குருசேஷ் 1956ஆம் ஆண்டு விடுத்த பிரகடனத்தில், ஸ்டாலின் ஆட்சிக் கால அட்டூழியங்களைப் பகிரங்கப்படுத்தினார். ஆயினும் அரச பயங்கரவாதம் முடிவுக்கு வரவில்லை.

எதிர்ப்புகளை நசுக்கி, குடிமக்களை இறுக்கமான கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கத் தீர்மானித்த அரசு கடுமையான அடக்குமுறை நடவடிக்கைகளை மேற்கொண்டது. இதனால் சாதாரண மக்களின் சாதாரண சமூக வாழ்வு சிதறடிக்கப்பட்டது. குடும்பம், மத வழிபாடு, பண்பாட்டு வாழ்வு போன்ற சமூக வாழ்வுக்கு ஆதாரமாக விளங்கும் மனித உறவுகளைப் பாதிக்கும் வகையில் அரச சர்வாதிகாரம் மக்களின் வாழ்வில் தலையிட்டது. அன்புறவுகளுக்கு அப்பால் அரச விசுவாசத்திற்கும், கீழ்ப்படிவிற்கும் முதன்மை அளிக்கப்பட்டது. மக்களின் சிந்தனையை நெறிப்படுத்தி அவர்களை அடிமைப்படுத்தி வைத்திருக்கும் நோக்கில் ஊடகங்களையும், கல்வி முறையையும், கட்சிச் சித்தாந்தத்தையும் அரசு தனது கட்டுப்பாட்டில் இயக்கியது. ஆயினும் யதார்த்த உண்மைகளை ஊடகங்கள் வாயிலாகவும், திட்டமிட்ட பரப்புரைகள் மூலமாகவும் சோவியத் சர்வாதிகாரம் மூடிமறைக்க முனைகிறது என்பதை மக்கள் உணரத்



தொடங்கினர். நீண்ட காலமாக, பல பரம்பரைகளாக சர்வாதிகார ஆட்சியின் அட்டூழியங்களைச் சகித்து வந்த சோவியத் மக்கள், எண்பதுகளின் இறுதிப் பகுதியில் கோபச்சேவின் ஆட்சிக் காலத்தில் பொறுமையின் எல்லையை அடைந்தனர். சோவியத் சோசலிச ஆட்சியை கட்டிக்காக்க விழைந்த கோபச்சேவ் சில அடிப்படையான அரசியல், பொருளாதார சீர்திருத்தங்களைக் கொண்டு வந்தார். ஆனால் அவை மக்களின் கொதிப்புணர்வையோ, சோசலிச ஆட்சியை சிதைத்துவிட வேண்டுமென்ற அவர்களது உறுதிப்பாட்டையோ தணித்து விடவில்லை.

தனியார் சொத்துடமையை பொதுவுடமையாக ஆக்கிவிட்டால், சொத்துடமையால் எழும் வர்க்க பேதங்கள் நீங்கி சமத்துவ சமுதாயம் உருவாகும் என மாக்சீயத்தின் மூலகர்த்தாக்கள் கண்ட கனவு நிறைவேறவில்லை. மாறாக, சோசலிச நாடுகளில் ஒரு புதிய ஆளும் வர்க்கம் தோற்றம் எடுத்தது. கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்களும் பிரமுகர்களும் முக்கிய உறுப்பினர்களுமாக அரச நிர்வாகத்தைக் கைப்பற்றி புதிய ஆளும் வர்க்கமாக உருவெடுத்தனர். இப்புதிய ஆளும் வர்க்கமானது சர்வ அதிகாரமும், சகல வசதிகளும், சலுகைகளும் பெற்றதாக மக்களிடமிருந்து அந்நியப்பட்ட சக்தியாக இயங்கியது. ஊழலும் நிர்வாகச் சீர்கேடும் ஒழுக்கக் கேடும் இப்புதிய ஆட்சியாளரிடம் குடிகொண்டதால் இவர்கள் வெகுசன விரோதிகளாக மாறினார்கள். சோசலிச உலகில் தோற்றமெடுத்த இப்புதிய அதிகார வர்க்கத்தின் அநீதிகளும் அட்டூழியங்களும் சோசலிசத்தின் வீழ்ச்சிக்கு புறநிலையை அமைத்துக் கொடுத்தன எனலாம்.

சோசலிச ஆட்சியில் சமத்துவமும் சுதந்திரமும் சம உரிமைகளும் நிலைநாட்டப்பட்ட ஒரு உன்னத சமுதாயம் பிறக்கும் என்ற கோட்பாட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்தங்கள் சமத்துவத்தை ஏற்படுத்தவில்லை. மாறாக அவை தனி மனித அபிலாசைகளை நசுக்கி, சமூக அநீதிக்கு வழிவகுத்தன. எல்லா மனிதர்களும் தமது ஆற்றலுக்கும் திறமைக்கும்

வாழ்க்கையை அமைத்துக் கொள்ளவே ஆவல் கொண்டனர். மனித ஆற்றலுக்கு மதிப்பளிக்காமல், தேவையின் அடிப்படையில் வருமானத்தை நெறித்து அரசினால் திணிக்கப்பட்ட சமத்துவமானது மனித உரிமைக்கும் சுதந்திரத்துக்கும் விரோதமாக அமைந்தது. பிற தலையீடுகள் எதுவுமின்றி தமது தனிப்பட்ட வாழ்க்கையை, தமது சொந்த அபிலாசையைத் தாமாக நிர்ணயித்துக் கொள்ளவே மனிதர்கள் விரும்பினார்கள். பொது உடமை என்றும், பொதுவான கூட்டுறவு வாழ்க்கை என்றும் தேவைக்கு ஏற்றதான ஊதியம் என்றும் சோசலிசம் வழங்கிய சமத்துவத்தை மக்கள் ஏற்றுக் கொள்ள மறுத்தார்கள். அடிப்படையான மனித உரிமைகளோடு, தமது தலைவிதியைத் தாமாகத் தெரிவு செய்யும் சுதந்திர மனிதர்களாக வாழ்வதையே எல்லா மனிதர்களும் விரும்பினார்கள். தனி மனிதர்களின் இந்த அடிப்படையான அபிலாசைகளுக்கு சோசலிச ஆட்சிமுறை இடமளிக்கவில்லை. சோசலிசத்தின் சிதைவுக்கு இதுவும் ஒரு பிரதான காரணியாக அமைந்தது.

## V

மானிடத்தின் வரலாறு பற்றிய ஹேகலதும், கார்ள் மாக்சினதும் சிந்தனை உலகங்களைத் தரிசித்தோம். வரலாற்றியலில் இயங்கியல் தத்துவத்திற்கு ஹேகல் அளித்த முக்கியத்துவம் பற்றியும், சமூக வரலாற்றுத் துறையில் இயங்கியல் ஆய்வுமுறையைக் கார்ள் மாக்ஸ் தழுவிக் கொண்டதையும் பார்த்தோம். 'மூலதனம்' என்ற தனது பிரதான நூலில் முதலாளித்துவ உற்பத்தி வடிவம் பற்றி கார்ள் மாக்ஸ் நிகழ்த்திய ஆழமான ஆய்வு பற்றியும் விளக்கினோம். முதலாளித்துவத்தின் தவிர்க்க முடியாத வீழ்ச்சி பற்றியும், கம்யூனிச சமூகத்தின் உதயத்துடன், முரணியங்கள் நீங்கிய அந்த உயர் நிலை சமுதாய வளர்ச்சியுடன் வரலாற்று அசைவியக்கம் முடிவுக்கு வருமென மாக்ஸ் கூறிய தீர்க்க தரிசனம் பலிக்கவில்லை



என்பது பற்றியும் விபரமாக விளக்கினோம்.

சோவியத் ஒன்றியத்திலும், கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும், சீனாவிலும், சோசலிச உற்பத்தி வடிவங்கள் சிதைவடைந்து அங்கெல்லாம் முதலாளித்துவ பொருளுற்பத்தி பெருவளர்ச்சி கண்டு வருகிறது. சோசலிசத்தின் வீழ்ச்சியுடன் முதலாளித்துவம் எழுச்சி கண்டுள்ள இப்புதிய சூழ்நிலையில் மாக்சிய சிந்தனை மறு பரிசீலனைக்கு ஆளாகி வருகிறது. நவீன வரலாற்றியலில் மாக்சிய சிந்தனை எத்தகைய பங்கை வகிக்க முடியும்? மாக்சிய சமூகவியலை ஒரு அறிவியற் கோட்பாடாக நிறுவ முடியுமா? மாக்சியச் சிந்தனையிலுள்ள பலவீனங்கள் என்ன? சிறப்பம்சங்கள் என்ன? மனித விடுதலை நோக்கிய வரலாற்றின் அசைவியக்கம் முடிவுநிலை எய்துமா? இன்றைய வரலாற்றியல், சமூகவியல் சிந்தனையாளர்கள் மத்தியில் எழுந்துள்ள சர்ச்சைக்குரிய இக்கேள்வி பற்றி இனி நோக்குவோம்.

பிரபல நவமாக்சிய சிந்தனையாளரும் பிரஞ்சுத் தத்துவாசிரியருமான அல்தூசரின் சிந்தனை பற்றி ஏற்கனவே சுருக்கமாகக் குறிப்பிட்டிருந்தேன். மாக்சின் வரலாற்றுப் பொருளியம் ஒரு தத்துவதரிசனம் அல்ல; அது ஒரு சமூக வரலாற்று விஞ்ஞானம் என வாதிடுகிறார் அல்தூசர். நவமாக்சிய சிந்தனைப் பாரம்பரியத்தில் அல்தூசரின் தத்துவார்த்த எழுத்துக்கள் மிகவும் பிரபல்யம் பெற்றவை. சோசலிச உலகின் சிதைவுக்கு முன்னர் அவரது தத்துவ நூல்கள் பிரசுரிக்கப்பட்ட போதும், மாக்சிய சமூகவியல் பற்றி அவர் தெரிவித்த கருத்துக்கள் இன்றும் சர்ச்சையை தோற்றுவித்து வருவதால், அவை பற்றி மிகவும் சுருக்கமாக இங்கு பரிசீலனை செய்து பார்ப்போம்.

வரலாற்றுப் பொருளியத்தை ஒரு சமூக விஞ்ஞானக் கோட்பாடாக நிறுவும் நோக்கில் கார்ள் மாக்ஸ் படைத்த அரசியற் தத்துவார்த்த எழுத்துக்கள் அனைத்தையும் சித்தாந்தவாதம் என ஒதுக்கிவிடுகிறார் அல்தூசர். அது மட்டுமன்றி, மாக்சிய மரபு வழி தோன்றிய தத்துவச் சிந்தனையாளர்கள் பலரது எழுத்துக்களும் அறிவியலுக்குப்

புறம்பான கருத்தியல் என அவரால் நிராகரிக்கப்படுகிறது. 'மூலதனத்தை' மட்டுமே முக்கிய ஆய்வுநூலாக அவர் மதிப்பாய்வு செய்கிறார்.

'மூலதனத்தில்' மாக்ஸ் அறிமுகம் செய்யும் முக்கிய கருத்தாக்கங்களை (உதாரணமாக, உற்பத்தி வடிவம், உற்பத்தி சக்திகள், உற்பத்தி உறவுகள் போன்றன) மையமாக வைத்து வரலாற்றுப் பொருளியத்தை ஒரு விஞ்ஞானக் கோட்பாடாக நிறுவ முனைகிறார் அவர். அல்தூசரின் ஆய்வில், மாக்சியம் ஒரு சமூக அமைப்பியல் கோட்பாடாகக் கொள்ளப்படுகிறது. விஞ்ஞானம் என்பதும் அறிவை உற்பத்தி செய்யும் ஒரு கோட்பாட்டுக் கட்டமைப்பாக விளக்கப்படுகிறது. 'மூலதனத்து' கருத்தாக்கங்களின் அடிப்படையில், மனித சமூகத்திற்கும், சமூக இயக்கத்திற்கும் அவர் கொடுக்கும் விளக்கத்தை இனிப் பார்ப்போம்.

சமூகம் என்பது முழுமையான ஒரு கட்டமைப்பு (Structural Totality). பல அமைப்புகளின் கூட்டமைப்பாக அது இயங்குகிறது. இந்த சமூக அமைப்புகள் ஒன்றோடு ஒன்று உறவு கொண்டு, ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்து ஒரு சிக்கலான ஒருமைப்பாட்டில் செயற்படுகின்றன. இந்தச் சமூகக் கட்டமைப்பின் பிரதான-மான அலகுகளாக பொருண்மியம், அரசியல், கருத்தியல் ஆகியன இயங்குகின்றன. இந்த மூன்று முக்கிய அமைப்புகளின் ஒன்றியமாக சமூக வடிவமைப்பு அமையப் பெறுகிறது. சமூகத்தின் அமைப்புகள் ஒவ்வொன்றும், தமக்கே உரித்தான செயற்பாட்டைக் கொண்டவை. பொருளுற்பத்திச் செயற்பாடு, அரசியற் செயற்பாடு, கருத்து உற்பத்திச் செயற்பாடு, இப்படியாக இந்த அமைப்புகள் ஒவ்வொன்றும், சார்பு நிலையுடைய தனித்துவம் கொண்டவை (Relatively Autonomous). தன்னியல்பாக இயங்கிய போதும், ஒன்றோடு ஒன்று சார்ந்து நிற்பவை. இந்த அமைப்புகளின் செயற்பாடுகள், ஒன்றின் மீது ஒன்று தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. ஒன்றின் தாக்கமும், அழுத்தமும் மற்றதைப் பாதிக்கிறது. இந்த சமூக





அல்தூசர்

அமைப்புகளின் செயற்பாடுகளும் உறவுகளும் ஒன்றின் மீது ஒன்று விழுத்தும் தாக்கங்களும் அழுத்தங்களும் சமூக இயங்கு நிலைக்கும் அசைவியக்கத்திற்கும் காரணியாக இருக்கின்றன. இறுதியில், பொருண்மிய அமைப்பே சமூகக் கட்டமைப்பில் மாற்றத்தை நிகழ்த்த வல்ல நிர்ணய சக்தியாக அமைகிறது. அல்தூசரின் சமூக அமைப்பியல் இறுதியில் பொருண்மிய அமைப்பிற்கே முதன்மை கொடுக்கிறது.

சமூக வரலாற்று விஞ்ஞானமாக, அல்தூசர் சித்தரித்துக் காட்டும் மாக்சிய அமைப்பியலில் முரணிய விதி முக்கிய இடத்தைப் பெறுகிறது. முரணிய விதியே சமூக அசைவியக்கத்தின் இயங்கு விதியாக அமைகிறது. சமூகத்தின் பல்வேறு கூறுகளிலும், பல்வேறு நிலைகளில், பன்முகப்பட்டதாக முரணியம் செற்படுகிறது. பன்முகப்பட்ட

சமூக முரண்பாடுகளின் ஒட்டுமொத்த விளைவாக சமூக மாற்றம் நிகழ்கிறது என்கிறார் அல்தூசர்.

அல்தூசர் கற்பிக்கும் மாக்சிய சமூக விஞ்ஞானம், வரலாற்று இயக்கத்தை ஒரு இயந்திர இயக்கமாக விளக்க முனைகிறது. அமைப்புகளும் அமைப்புகளின் உறவுகளும் அமைப்புகளின் பரஸ்பர அழுத்தங்களும் அந்த அமைப்புகளிலிருந்து தலைதூக்கும் முரண்பாடுகளும் அந்த முரண்பாடுகளின் கூட்டிணைந்த விளைவுகளும் என்ற ரீதியில் சமூக வரலாறு ஒரு இயந்திரக் கட்டமைப்பின் சக்கரமாகச் சுழல்கிறது. இதில், மனித செயலாண்மைக்கு இடமளிக்கப்படவில்லை. மனித உறவுகளுக்கும் மனித செயற்பாடுகளுக்கும் அப்பால் சமூக அமைப்புகளின் நிர்ணய சக்தி மேலாண்மை செலுத்துகிறது.

அமைப்புகளால் கட்டப்பட்ட அல்தூசரின் சமூக உலகில் மனிதர்கள் பங்கு சிறுமைப்படுத்தப்படுகிறது. மனிதர்கள் சமூக அமைப்புகளின் சுமைதாங்கிகளாக (Bearers of Structures) சித்தரிக்கப்படுகிறார்கள். சமூக அமைப்புகளால் வனையப்பட்ட பொம்மைகளாக உருவாக்கப்படுகிறார்கள். இந்த அமைப்பியல் விஞ்ஞானத்தின்படி, மனித வரலாற்றை மனிதர்கள் படைப்பதில்லை. அமைப்புகளின் முரணிய இயக்கமே மனிதர்களையும் இயக்கி, மனித வரலாற்றையும் நகர்த்திச் செல்கிறது. ஒட்டுமொத்தத்தில் அல்தூசரின் வியாக்கியானம் மாக்சியத்தை ஒரு வரண்ட விஞ்ஞானவாதமாக மாற்ற முனைகிறது.

மனித செயற்பாட்டை வலியுறுத்தி, மனித போராட்டங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து, சமூக முரண்பாடுகள் பற்றியும், சமூகப் புரட்சி பற்றியும் கார்ள் மாக்ஸ் எழுதிய தத்துவார்த்த, அரசியல் நூல்களை அல்தூசர் நிராகரித்தமை மாக்சிய சிந்தனை வளர்ச்சிக்கு இழைக்கப்பட்ட பெரும் தவறு எனக் கண்டிக்கிறார் ஆங்கில தத்துவ அறிஞரான ஈ.பி.தொம்சன். மாக்சியத்தை 'மூலதனத்திற்குள்' மட்டும் முடக்கி அதற்கு விஞ்ஞான அந்தஸ்தை கொடுக்க முனையும் அல்தூசரின் முயற்சி, மாக்சியத்தின் கருத்துப் பரப்பையும் செறிவையும் ஆழத்தையும் சிதைத்து விடுகிறது என்கிறார் அவர். மாக்சிய வரலாற்றியலுக்கு வரம்புகளைக் கட்டி, அதனை ஒரு அமைப்பியல் நியதிவாதமாக மாற்றியிருக்கிறார் அல்தூசர் என்பது தொம்சனின் குற்றச்சாட்டு. சதா இயங்கு நிலையில் உள்ளதும், சதா மாறிக் கொண்டிருப்பதுமான வரலாற்று ஓட்டத்தை விசாரணை செய்யும் ஆய்வுக் கோட்பாடுகள், கால மாற்றத்திற்கு ஏற்ப, நிகழ்வுப் போக்குகளுக்கு அமைய மாற்றியமைக்கப்பட வேண்டும்; மிகவும் இறுக்கமான, அசைந்து கொடாத, அமைப்பியல் கோட்பாடுகளால் சமூக இயக்கத்தையும் மாற்றத்தையும் செம்மையாக ஆய்வு செய்வது சாத்தியமல்ல என்கிறார் தொம்சன்.

வரலாறு என்பது தொடர்ச்சியாகக் கட்டவிழ்ந்து செல்லும் மாற்றத்தையும் வளர்ச்சிப் போக்கையும் வெளிப்படுத்தி நிற்கிறது. இந்த வரலாற்று இயக்கத்தில் மனித செயலாக்கம் பிரதானமானது. மனிதர்களின் திண்ணியமான செயற்பாட்டின் முனைப்பாகவே சமூக உறவுகளிலும் சமூக உலகத்திலும் மாற்றம் நிகழ்கிறது. இந்த வகையில், மனிதர்களே வரலாற்றின் கதாநாயகர்கள். இந்த மனிதர்களை, தனி மனிதர்களாக அல்லாமல், சமூகப் பிறவிகளாகச் சித்தரித்து, வர்க்கப் பிரிவுகளாக வகைப்படுத்தி, வர்க்க முரண்பாட்டில் மோதும் எதிர்வு சக்திகளாக இனம் கண்டு, அந்த முரணியப் போரில் கட்டவிழும் சமூக மாற்றத்தை வரலாறாகக் கற்பிக்கிறார் மாக்ஸ். ஆனால் அல்தூசரின் மாக்சியம், மனித செயலாக்க சக்தியை அமைப்புகளின் நிர்ணய சக்திக்குள் முடக்கி விடுகிறது. வரலாற்றுப் பொருளியத்தை விஞ்ஞான மயமாக்கும் அவரது முயற்சி, மாக்சியத்தை செழுமைப்படுத்துவதற்குப் பதிலாக வறுமைப்படுத்தியுள்ளது என்றே சொல்ல வேண்டும். இந்த உண்மையைச் சுட்டிக் காட்டும் நோக்கில்தான், ஈ.பி.தொம்சன், அல்தூசரை விமர்சித்து எழுதிய நூலுக்கு, Poverty of Theory எனத் தலைப்பு வைத்திருக்கிறார்.

இன்னொரு கோணத்திலிருந்து, மாக்சிய வரலாற்றியலை விஞ்ஞானமாகக் கொள்ள முடியாது என வாதித்து, கார்ள் பொப்பர் (Karl Popper) என்ற தத்துவ அறிஞர் ஒரு நூலை எழுதினார். அதற்கு Poverty of Historicism எனத் தலைப்பிட்டிருக்கிறார். கார்ள் பொப்பர் என்ன சொல்கிறார் என்பதை இங்கு சுருக்கமாகப் பார்ப்போம்.

பௌதிகவியல், வானியல், உயிரியல் போன்ற இயற்கைசார் விஞ்ஞானங்களை (Natural Sciences) ஒத்ததாக சமூகவியலும், அறிவியல் அந்தஸ்தை எட்டிப் பிடிப்பதற்கு முயற்சிகளை செய்து வருகிறது. ஆயினும் இயற்கைசார் விஞ்ஞானங்களைப் போன்று அவதானிப்பிலும், பரிசோதனை ஆய்வு முறைமையிலும் சமூகவியலை நெறிப்படுத்துவது கடினம். அது சாத்தியமும் இல்லை என்கிறார் பொப்பர்.

சமூகம் ஒரு வித்தியாசமான உலகம். எண்ணற்ற மனித உறவுகளையும் செயற்பாடுகளையும் கொண்டதான சமூக உலகமானது ஒருமையான சீரமைப்பைக் (Uniformity) கொண்டதல்ல. அதனை ஒரு முழுமையான ஆய்வுப் பொருளாகக் கொள்ள முடியாது. அன்றி, அனுபவத்திற்கு அகப்படும் மெய்ப்பொருளாக எடுத்து பரிசோதனைக்கு உட்படுத்தவும் முடியாது என்பது பொப்பரின் நிலைப்பாடு.

அரசியல், சமூக நிகழ்வுகளை அவதானித்து, அந்த நிகழ்வுகளைக் கால வரிசையில் பதிவு செய்து, அந்த வரலாற்றுப் பதிவின் அடிப்படையில் சமூகத்தின் போக்கு பற்றி பொதுவிதிகளை நிறுவி விடலாமென சமூகவியல் முயற்சிக்கிறது. இந்தப் பொதுவிதிகளின் அடிப்படையில், சமூக வரலாற்று ஓட்டம் பற்றியும், எதிர்காலம் பற்றியும் எதிர்வு கூறவும் முயற்சிக்கிறது. இந்த முயற்சி சாத்தியமானதல்ல என்கிறார் பொப்பர். இப்படியாக, வரலாற்றுத் தீர்க்கதரிசனம் கூற முனையும் அணுகுமுறையை வரலாற்றியம் (Historicism) என அவர் சாடுகிறார். மாக்சியம் இப்படியான ஒரு சமூக தத்துவம்;



வரலாற்று விஞ்ஞானம் அல்லது விஞ்ஞான சோசலிசம் என்ற போர்வையில், அது எதிர்காலத்தை எதிர்வு கூற முனைகிறது என்பது பொப்பரின் குற்றச்சாட்டு.

இயற்கைசார் விஞ்ஞானம் பெருவளர்ச்சி கண்டிருக்கிறது; ஆயினும், சமூகவியல், ஒரு விஞ்ஞானக் கோட்பாடாக இன்னும் தன்னை நிறுவிக் கொள்ளவில்லை என்று பொப்பர் கூறுவது உண்மைதான். இயற்கை வேறு; மனித உலகம் வேறு. இயற்கையின் ஒழுங்கு விதிகளில், நியதிகளில் - மனித உலகம் இயங்கவில்லை. எனவே, இயற்கைசார் விஞ்ஞானங்களின் அடிப்படையில், ஆய்வுமுறைமையில் மனித உலகத்தின் மெய்யுண்மைகளை கண்டு கொள்ள முனைவது கடினமானது என்பது உண்மை. அப்படியாக, விஞ்ஞானத் தகைமையைப் பெறாத சமூகவியல், வரலாற்றுத் தீர்க்க தரிசனம் கூறவிழைவது சாத்தியமல்ல. விண்வெளி விஞ்ஞானம், ஒரு சூரிய கிரகணத்தை அறுதியிட்டு எதிர்வு கூறுவதுபோல, ஒரு சமூகப் புரட்சி எப்பொழுது, எந்த நேரத்தில் நிகழுமென சமூகவியலால் தீர்க்கதரிசனம் கூறிவிட முடியாது. மாக்சிய வரலாற்றியலாலும் அது முடியாது.

மாக்சிய சமூகவியல், வரலாற்று தீர்க்க தரிசனம் கூறுவதையே தனது ஆய்வு இலக்காகக் கொண்டிருக்கிறது எனப் பொப்பர் கூறுவது ஒரு தவறான மதிப்பீடாகும். 'மூலதனத்தில்' கார்ள் மாக்ஸ் தெரிவித்த ஒரு சில தீர்க்க தரிசனக் கூற்றுக்களை ஆதாரமாகக் கொண்டு மாக்சிய சமூக சிந்தனையை, ஒட்டுமொத்தமாக 'வரலாற்றியம்' என அவர் நிறுவ முனைவதும் அபத்தமானது.

சமூகம் என்பது மிகவும் சிக்கலான மனித உறவுகளால் பின்னப்பட்ட ஒரு விசித்திரமான உலகம் என்பதால், அதனை ஒரு பௌதிகப் பொருளாக ஆய்வுகூடப் பரிசோதனைக்கு எடுத்துச் செல்ல முடியாதுதான். ஆனால் அதே வேளை, சமூக உலகத்தை, அறிவியல் ரீதியில் ஆய்வு செய்வது சாத்தியமற்றது எனப் பொப்பர் கூறுவதையும் ஏற்றுக் கொள்ள முடியாது.

பௌதிகப் பொருட்களையும் அண்டத்துக்

கோள்களையும் தாவரங்களையும் ஆய்வு செய்து அறிவது போன்று மனித வாழ்வியக்கத்தை அறிந்து கொள்ள முடியாது. சமூக மெய்யுண்மையானது மனித உறவுகளின் தளத்திலிருந்து தோற்றப்பாடு கொள்வதாலும் மனித செயற்பாடுகளினால் அது சதா இயங்கு நிலையிலுள்ள அசைவியக்கத்தைக் கொண்டதாலும், சமூகத்தை ஆழமாகத் தரிசித்துக் கொள்வதற்குப் பிரத்தியேகமான ஆய்வுமுறை அவசியம். இந்தத் தேவையை, இயங்கியல் ஆய்வு முறைமை ஓரளவிற்குப் பூர்த்தி செய்கிறது எனச் சொல்லலாம். இயங்கு நிலையிலுள்ள மெய்மையை விளங்கிக் கொள்வதற்கு இயங்கு விதிகளால் நெறிக்கப்பட்ட இயங்கியல் ஆய்வுமுறையைக் கார்ள் மாக்ஸ் தழுவிக்கொண்டார்.

மாக்சியத்தை ஒரு விஞ்ஞானக் கோட்பாடு என்ற நிலைக்கு உயர்த்திக் காட்ட முனைவது தவறு. முன்னைய சோசலிச அரசுகளின் சித்தாந்தவாதிகளும், சில கம்யூனிச தத்துவாசிரியர்களும் இத்தகைய மிகைப்படுத்திய பார்வையைக் கொண்டிருந்தனர் என்பது உண்மை.

ஆயினும், தனது எழுத்துக்களையும், ஆய்வுகளையும், விஞ்ஞானக் கோட்பாடு என கார்ள் மாக்ஸ் முத்திரை பதிக்க முயலவில்லை. விஞ்ஞானம் என்பது, என்றும் நிலைத்து நிற்கும் அழியாத மெய்யுண்மைகளைக் கொண்டதல்ல; அது சதா மாற்றத்திற்கு உட்பட்டு வரும் ஒரு அறிவியக்கம் என்ற கருத்தையே அவர் கொண்டிருந்தார். விஞ்ஞானமும், இயங்கியலுக்கு அமைய மாற்றமும் வளர்ச்சியும் என்ற பாதையில் முன்னேறிச் செல்லும் என்பதே அவரது நிலைப்பாடு. கால ஓட்டத்திற்கு அமைய, வரலாற்றுச் சூழ்நிலைக்கேற்ப தனது சிந்தனையிலும் சீரமைப்பு செய்யப்பட வேண்டும் என்பதை அவர் உணர்ந்திருக்கத் தவறவில்லை. சோசலிச அரச சித்தாந்தவாதிகள் இதைப் புரிந்து கொள்ளவில்லை. மாக்சியத்தை, விஞ்ஞான சோசலிசம் என முத்திரை குத்தி, அதனை காலத்தால் அழியாத மெய்யுண்மையாகப் பூசித்தனர். மாறிவரும் உலகின் மாறிவரும் வரலாற்றுப்



போக்கிற்கு இசைந்து கொடுக்காது, மரபுவாதத்தை இறுக்கமாகப் பற்றி நின்றனர். இந்த இறுக்கமான பழமைவாதப் போக்கால் சமூகத்தில் பூகம்பமாக எழுந்த பொருண்மிய, அரசியல் பிரச்சினைகளை அவர்களால் செம்மையாக எடைபோட முடியவில்லை. சோசலிசத்தின் உடைவுக்கு இதுவும் ஒரு காரணமாக அமைந்தது.

சாராம்சத்தில் மாக்சியம் ஒரு சமூக தத்துவம். அதனை ஒரு வரலாற்று விஞ்ஞானமாகக் கொள்ள முடியாது. மாக்சியத்தை ஒரு சிறந்த வரலாற்று ஆய்வு முறைமையாக, ஒரு விசாரணைக் கருவியாகக் கொள்ளலாம். சமகால வரலாற்று ஆசிரியர்கள் பலர் இத்தகைய நிலைப்பாட்டையே கொண்டுள்ளனர்.

பல நூற்றாண்டு காலமாக, பழமைவாதத்தில் புதைந்து நின்று இறந்த காலத்தை மட்டுமே வரலாறாக நோக்கிய வரலாற்றுத் துறையில் மாக்சியம் ஒரு சிந்தனை மறுமலர்ச்சியை ஏற்படுத்தியது என்பதை யாராலும் மறுக்க முடியாது. நிகழ்ந்தது, நிகழ்வது, நிகழப் போவது என்ற வரிசையில், வரலாற்றுக் காலத்தின் முப்பரிமாண அகற்சியை மாக்சியம் தரிசித்துக் கொள்ள முனைகிறது. நிகழ்ந்து போனதும், நிகழ்காலத்தில் விரிந்து செல்வதுமான நிதர்சனத்திலிருந்து எதிர்காலத்தைப் படைத்துவிட அது முனைகிறது. இதன் அடிப்படையில் சமூகவியலுக்கு அப்பாலான அரசியற் பரிமாணமும் மாக்சியத்திற்கு உண்டு. மானிடத்தின் விடுதலையை இலக்காகக் கொண்ட புரட்சிகர அரசியற் செயற்பாட்டை அது வலியுறுத்தி நிற்கிறது.

மாக்சியத்தின் சிறப்பம்சம் அதன் சமூக ஆய்வுத் திறனாற்றல் மட்டுமல்ல; அதன் செயற்பாட்டுத் தத்துவமுமாகும். சிந்தனையுடன் செயலையும் அது வற்புறுத்துகிறது. சமூக அறிவினால் பிறக்கும் விழிப்புடன், மனித செயற்பாடும் இணைந்து கொள்ளும் பொழுதே வரலாறு உயிர்ப்பிக்கப்படுகிறது என்ற உண்மையை மாக்சியம் எடுத்துரைக்கிறது.

## VI

உலக வரலாற்று இயக்கத்திற்கு ஒரு முடிவு இருக்கின்றதா? எத்தகைய புறநிலையில் வரலாறு தனது பயணத்தை முடித்துக் கொள்கிறது? அன்றி, மானிட வரலாறானது ஒரு முடிவில்லாப் பயணத்தில், தொடர்ச்சியாக கட்டவிழ்ந்து செல்லுமா?

உலகப் பிரசித்தி பெற்ற வரலாற்றியல் சிந்தனையாளர்களான ஹேகலதும், கார்ள் மாக்சினதும் கருத்துலகங்களை ஆய்வு செய்தோம். சுதந்திரமும் சமத்துவமும் பகுத்தறிவும் பூரணத்துவம் பெறும் உன்னத வாழ்நிலை நோக்கி மனித வரலாறு நகர்ந்து செல்வதாகக் கூறும் ஹேகல், இந்த விழுமியங்களின் திருவடிவமாக நவீன அரசு தோற்றம் கொண்டுள்ளதாகவும், அதன் தோற்றப்பாட்டுடன் மனித வரலாற்று இயக்கம் ஒரு முடிவுக்கு வந்துவிட்டதாகவும் கருதினார். வரலாற்றின் முடிவு பற்றி ஹேகல் தெரிவித்த கருத்து தவறானது. சமத்துவம், சகோதரத்துவம், சுதந்திரம் என்ற சுலோகங்களுடன் நிகழ்ந்த பிரஞ்சுப் புரட்சியை அடுத்து, ஐரோப்பாவில் தோன்றிய நவீன அரசுகள் மனித நாகரீகத்தின் அதியுன்னத வடிவத்தை எய்தியதாக ஹேகல் எண்ணினார். இந்த உயர்நிலை வளர்ச்சி காரணமாக மானிடம் நிறைவை எய்தி, வரலாற்று இயக்கம் முடிவுக்கு வரும் என அவர் கற்பிதம் செய்தார். அவரது கற்பிதம் பிழைத்துப் போனது. ஐரோப்பாவில் பூகம்பமாக வெடித்த முதலாம், இரண்டாம் உலக யுத்தங்களின் பேரழிவுடன் நவீன அரசுகளும் சிதைந்து போயின. மனித வரலாற்று இயக்கம், ஹேகல் கற்பித்தது போன்று, நின்றுவிடவில்லை. அது புதிய பரிமாணம் நோக்கி நகர்ந்தது. முரண்பாடுகள் முற்றி வெடித்து முதலாளித்துவம் சிதைந்து போகும் என்றும், அதன் சிதைவுகளிலிருந்து பொதுவுடமை சமுதாயமாக சோசலிச உற்பத்தி வடிவம் பிறக்குமென்றும், அது மேலும் உயர்நிலை வளர்ச்சி பெற்று கம்யூனிச சமூக வடிவம்



தோன்றி உலகளாவியதாக வளர்ந்து, மனித முரணியங்கள் நீங்கிய புதிய நாகரீகம் பிறக்கும் என்றும், அப்பொழுது வரலாற்று இயக்கம் முடிவுக்கு வரும் என்றும் கார்ள் மாக்ஸ் எதிர்வு கூறினார். அவரது தீர்க்கதரிசனமும் பிழைத்துப் போயிற்று. முதலாளித்துவம் மடிந்து போகவில்லை. பதிலாக, சோசலிச அரசுகளே இடிந்து போயின. முதலாளித்துவம் உலகரீதியாகப் பெருவளர்ச்சி கண்டது. சோசலிசம் சிதைவுற்ற நாடுகளிலும் அது காலூன்றி வளர்ந்து வருகிறது. சோசலிச உற்பத்தி முறையைக் கைவிட்டு முதலாளியத்தைத் தழுவியதால் சீனாவிலும் பிரமிக்கத்தக்க வகையில் பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டு வருகிறது.

மானிடத்தின் உயர்நிலை வளர்ச்சியை நோக்கிய அசைவியக்கமாகவே ஹேகலும், கார்ள் மாக்சும் வரலாற்றுக்கு விளக்கம் அளித்தனர். ஆயினும், மனித சமூகத்தின் உயர்நிலை வளர்ச்சி பற்றியும் வரலாற்றின் நிறைவு பற்றியும் அவர்கள் கண்ட தரிசனத்தை வரலாறே பொய்ப்பித்து விட்டது.

ஹேகலதும், மாக்சினதும் சிந்தனைப் பாரம்பரியத்திலிருந்து மனித வரலாறு பற்றி ஒரு புதிய கண்ணோட்டத்தை முன் வைக்கிறார் அமெரிக்க வரலாற்று அறிஞரான பிரான்சிஸ் புக்குயாமா (Francis Fukuyama). 1989இல் கம்யூனிச உலகின் சிதைவுக்கான அறிகுறிகள் தென்பட ஆரம்பித்த போது 'வரலாற்றின் முடிவு' (End of History) என்ற தலைப்பில் சிக்காகோ பல்கலைக்கழகத்தில் அவர் நிகழ்த்திய உரை அரசியல் உலகிலும் அறிவுத் துறையிலும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. அவரது உரை பின்பு கட்டுரை வடிவத்தில் புலமை சார்ந்த ஏடுகளில் பிரசுரமாகியது. அக்கட்டுரையின் பொருளடக்கத்தை விரிவுபடுத்தி, 1992ஆம் ஆண்டில் ஒரு நூலை வெளியிட்டார் புக்குயாமா. 'வரலாற்றின் முடிவும் கடைசி மனிதனும்' (The end of history and the last man) என்ற தலைப்பில் அவர் எழுதிய நூல் அனைத்துலக ரீதியில் இன்றும் பெரும் சர்ச்சையைக் கிளப்பி வருகிறது. மனித வரலாறு முடிவுக்கு

வந்து விட்டது எனப் பிரகடனம் செய்யும் புக்குயாமாவின் சிந்தனை பற்றி இங்கு சுருக்கமாகப் பார்ப்போம்.

மானிடத்தின் வரலாறு பற்றி ஹேகலும், கார்ள் மாக்சும் தெரிவித்த மையக் கருத்தினை புக்குயாமா ஏற்றுக் கொள்கிறார். அதாவது, வரலாறு என்பது மானிட சமூகத்தின் உயர்நிலை வளர்ச்சியை நோக்கிய அசை வியக்கம் என்ற தரிசனம் அவரை வெகுவாகக் கவர்ந்தது. ஆயினும் வரலாற்று ஓட்டத்தின் முடிவு பற்றிய அவர்களது கருத்தை புக்குயாமா ஏற்றுக் கொள்ளவில்லை. நவீன அரசின் தோற்றப்பாட்டுடனும், கம்யூனிச சமூகத்தின் உதயத்துடனும் மனித வரலாறானது பூரணத்துவம் பெற்று முடிவடைகிறது என ஹேகலும், மாக்சும் தெரிவித்த கருத்தை அவர் நிராகரித்தார்.

சோசலிசத்தின் சிதைவை முதலாளியத்தின் வெற்றியாகக் காண்கிறார் புக்குயாமா. உள் முரண்பாடுகளால் முதலாளியம் உடைந்து போகாது, வர்க்க முரண்பாடுகளை உள்வாங்கியபடி என்றுமில்லாப் பெருவளர்ச்சியை நோக்கி முன்னேறிச் செல்கிறது. விஞ்ஞானம், தொழில்நுட்பத்தால் செழுமைபெற்று, மேம்பாடு கண்டு அது உலகெங்கும் கிளைபரப்பி விருட்சமாக வளர்கிறது. பொருளுற்பத்தியில் முதலாளியத்திற்கு ஈடாக எந்தவொரு உற்பத்தி வடிவமும் நிலைத்து நிற்கப் போவதில்லை. சோசலிசத்தின் வீழ்ச்சியுடனும், முதலாளித்துவத்தின் எழுச்சியுடனும் மானிட சமூகம் ஒரு நவயுகத்தில் பிரவேசித்துள்ளது என்கிறார் புக்குயாமா.

சமூகப் பொருளுற்பத்தி வடிவங்களின் படிநிலை வளர்ச்சியின் உச்சமாக முதலாளியம் தோற்றம் எடுத்தது. அது போன்றே, அரசியலமைப்பு வடிவங்களின் உச்சகட்ட வளர்ச்சியாகச் சனநாயகம், குறிப்பாக தாராண்மை சன நாயகம் (Liberal Democracy) உருவாக்கம் பெற்றுள்ளது என்கிறார் புக்குயாமா. மன்னராட்சி என்றும், மத ஆட்சி என்றும், சர்வாதிகார ஆட்சி என்றும், பாசிசம் என்றும், நாசிசம் என்றும், கம்யூனிசம் என்றும், தோற்றமெடுத்த ஆட்சியமைப்புகள் மனித உரிமைகளுக்கும், மனித



சுதந்திரங்களுக்கும் மனித அபிலாசைகளுக்கும் மதிப்பளிக்கத் தவறியதால் இந்த அரசியலமைப்பு வடிவங்கள் இறுதியில் சிதைந்து போயின. இவற்றின் புதைகுழியிலிருந்து பிறந்த சனநாயக ஆட்சிமுறை வளர்ச்சி பெற்று, முதிர்ச்சி பெற்று, நிலைத்து நிற்கிறது. முன்னேறிய நாடுகளின் உறுதியான அரசியல் அத்திவாரமாக அது இன்று நிமிர்ந்து நிற்கிறது. உலகளாவியதாகப் பரந்து வளர்கிறது. மனித விழுமியங்களுக்கு சனநாயகம் மதிப்பளிக்கிறது. மனித தேர்வுச் சுதந்திரத்திற்கு இடமளித்து, மனித அபலாசைகளுக்கு ஊக்கமளிக்கிறது. இதனால் சனநாயக ஆட்சிமுறையை மனிதர்கள் பெரிதும் விரும்புகிறார்கள். மனித சுதந்திரங்களின் நிறுவன வடிவமாக, மனித சமூக வளர்ச்சியின் உச்ச கட்டமாக தாராண்மை சனநாயகம் நிரந்தரமாக நிலைத்து நிற்கப் போகின்றது என்பது புக்குயாமாவின் வாதம்.

அடுத்ததாக, முதலாளியத்திற்கும் சனநாயகத்திற்கும் ஒரு ஒத்திசைவான வளர்ச்சிப் போக்கு உண்டு என வாதிக்கிறார் புக்குயாமா. சனநாயக அரசியல் புறநிலையில்தான் முதலாளிய உற்பத்தி முறை மேம்பாடு காணும். ஏனெனில், சனநாயக அரசியல் அமைப்பிலேயே முதலாளியத்தின் வளர்ச்சிக்கு ஏதுவான தனிமனித அபிலா சைகள், சுதந்திரங்களுக்கு ஊக்கமளிக்கப்படுகிறது என்கிறார் புக்குயாமா.

திறந்த சந்தைப் பொருளாதாரமாக முதலாளியமும், மனித சுதந்திரங்களின் திருவடிவமாக தாராண்மைச் சனநாயகமும் ஒன்றிணைந்த வளர்ச்சிப் போக்கு சமூகங்களை நவீனத்துவத்தை (Modernity) நோக்கி நகர்த்தி வருகிறது. இந்த வளர்ச்சிப் போக்கானது மேற்குலகில் நிலையூன்றி வளர்ந்து, மேலும் பல நாடுகளில் பரவி வருகிறது. இது ஒரு தவிர்க்க முடியாத வளர்ச்சிப் போக்கு. இதனால் முழு உலகமுமே நவீனமாயமாகி வருகிறது. மானிட சமூகம் ஒரு உன்னதமான உச்சநிலை வளர்ச்சியைக் கண்டுவிட்டது. முதலாளியமும், சனநாயகமும் ஒன்றிணைந்து படைத்துள்ள நவீனத்துவ

உலகிற்கு அப்பால் மேற்கொண்டு வளர்ச்சி இருக்கப்போவதில்லை. நவீனத்துவம்தான் மானிட சமூக வளர்ச்சியின் எல்லை. எனவே, மானிடத்தின் உயர்நிலை வளர்ச்சிப் போக்காக, அந்தப் படிநிலை வளர்ச்சியின் அசைவியக்கமாக செயற்பட்ட வரலாறு நவீனத்துவ யுகத்தின் உதயத்துடன் முடிவுக்கு வந்துவிட்டது. இப்படியாக வரலாற்று இயக்கத்திற்கு முற்றுப் புள்ளி வைக்கிறார் புக்குயாமா.

வரலாற்றின் முடிவுபற்றி புக்குயாமா முன்வைத்த கோட்பாடு பலத்த சர்ச்சைக்கு இலக்காகி வருகிறது. மனித சமூகத்தின் பொருளுற்பத்தியில், நவீனத்துவ உலகின் உருவாக்கத்தில் முதலாளித்துவமானது என்றுமில்லாத பெரும் சாதனைகளை ஈட்டியிருக்கிறது என்பது உண்மை. ஆயினும் அதன் வளர்ச்சிப் போக்கு மனித சமூகத்தின் அதியுன்னத நிலையை எட்டியுள்ளது என்பதும் முதலாளியத்திற்கு அப்பால் அடுத்த கட்ட வளர்ச்சி சாத்தியமில்லை என்பதும் ஏற்றுக் கொள்ள முடியாதென வாதிடுகிறார்கள் பல அறிஞர்கள். முதலாளியம் மனித சமத்துவத்திற்கு விரோதமானது. மனிதர்களிடையே அது முரண்பாட்டையும் வர்க்க பேதத்தையும் பொருளாதார ஏற்றத் தாழ்வையும் ஏற்படுத்தி வருகிறது. முன்னேற்றமடைந்த முதலாளித்துவ நாடுகளில் சமூக முரண்பாடுகள் தலைவிரித்தாடுகிறது. சமூகச் சீர்கேடுகள் பெருகி வருகிறது. சமத்துவமின்மை தாண்டவமாடுகிறது. பெரும்பான்மையான உழைக்கும் மக்களின் உதிரத்திலிருந்து சிறுபான்மையான சிலர் செல்வத்தையும் அதிகாரத்தையும் தேடிக் கொள்ள முடிகிறது. முதலாளியமானது, சாராம்சத்தில் சமூக அநீதிகளைத் தோற்றுவிக்கும் ஒரு பொருளுற்பத்தி வடிவம். பொருளுற்பத்தியில் பிரமிக்கத்தக்க முன்னேற்றத்தை எட்டிய போதும், மனிதத்தின் வளர்ச்சியையும் மனித உறவுகளின் மேம்பாட்டையும் அது பேணி நிற்கவில்லை. எனவே, பொருளிய வளர்ச்சியை மட்டும் அடிப்படையாகக் கொண்டு, மானிட சமூகம் உன்னதமான உயர்நிலை வளர்ச்சியை



பிரான்சிஸ் புக்குயாமா

எட்டிவிட்டதெனக் கருதுவது தவறு. புக்குயாமாவின் கோட்பாட்டுக்கு எதிராக இப்படியான விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன.

அரசியலமைப்பைப் பொறுத்தவரை, சனநாயகம், குறிப்பாக தாராண்மை சனநாயகம், தலைசிறந்த ஒரு அரசியல் வடிவம் என்றும் அதில் மனித உரிமைகளும், சுதந்திரங்களும் செம்மையாகப் பேணப்படுகின்றன என்றும் புக்குயாமா தெரிவிக்கும் கருத்தும் கண்டன விமர்சனங்களுக்கு இலக்காகி வருகிறது. அரசியல் நிறுவனங்களின் படிநிலை வளர்ச்சியில் சனநாயக ஆட்சிமுறையானது, ஏனைய ஆட்சி அமைப்புகளை விடச் சிறந்தது என்றே கூற வேண்டும். எனினும் பல்வேறு ரகங்களாக, பல்வேறு நாடுகளில் இயங்கிவரும் சனநாயக ஆட்சி வடிவங்களில் மனித உரிமைகளும் சுதந்திரங்களும் செம்மையாகப் பேணப்படுகிறதா என்பது ஒரு சர்ச்சைக்குரிய விடயம். சனநாயகம் என்றும் பரந்த கொள்கை ஆட்சி என்றும் சுதந்திர உலகம் என்றும், மக்களால் மக்களுக்காக

நடத்தப்படும் மக்களாட்சி என்றும் போற்றப்படும் இந்த ஆட்சிமுறையில் அநீதியும் அடக்குமுறையும் தலைதூக்கி மனித உரிமைகள் நசுக்கப்படுவது இன்றைய உலக யதார்த்தம். மனித உரிமைகள், குடியுரிமைகள், அரசியல் உரிமைகள் என்றும் தனிமனித சுதந்திரங்கள் என்றும், சனநாயக யாப்புகளில் பொன் எழுத்துகளால் பொறிக்கப்பட்ட போதும், நடைமுறையில் இவையெல்லாம் மீறப்படுவது இயல்பாகியுள்ளது. சனநாயக ஆட்சிமுறையில் பல்வேறு ஏமாற்று வழிகளைக் கையாண்டு, பணத்தைக் கொட்டி, பரப்புரை செய்து முதலாளிய வர்க்கமே ஆட்சி பீடம் ஏறுகிறது. மக்களை நம்பச் செய்யும் வகையில் கருத்துருவாக்கம் செய்யும் ஊடகங்களின் உரிமையாளர்களும் இவ்வர்க்கத்தினரே. அமெரிக்க சன நாயக ஆட்சிமுறையிலே, ஆளும் வர்க்கமானது, ஊடகங்கள் வாயிலாக மக்களின் மனவுலகில் கருத்துக்களைத் திணித்து, உண்மைகளைத் திரிவுபடுத்தி, பொய்மை என்ற மாயைக்குள் மக்களை வைத்திருக்கிறது என்பதனை ஆதாரங்களுடன் புட்டுக்காட்டுகிறார் பிரபல அமெரிக்க அறிஞரான நோம் சொம்ஸ்கி (Noam Chomsky). இப்படியாக, உலகின் முதன்மையான சனநாயக ஆட்சியமைப்புகளே கேள்விக் குறிக்கு ஆளாகி நிற்கும் பொழுது, இந்த ஆட்சிவடிவத்தை மானிடத்தின் அதியுன்னத வளர்ச்சிக் கட்டமாகவும், மனித விழுமியங்களின் திருவடிவமாகவும் புக்குயாமா சித்தரிக்க முனைவது தவறானது. சனநாயக அரசியற் புறநிலையில் திளைத்து வளர்ந்து, விரிவாக்கம் பெற்று, முதலாளியமானது மானிட சமூகத்தின் ஒரு பிரிவினரை மட்டும் நவீன தொழில்நுட்ப யுகத்தினுள் இட்டுச் சென்றுள்ளது. இப்பூமியில் வதியும் ஏனையோர், பெரும்பான்மையான மனிதர்கள், மூன்றாம் உலக மக்கள் இன்னும் ஏழைகளாக, ஒடுக்கப்பட்டவர்க ளாக, சுரண்டப்படுபவர்களாக மிகவும் பின்தங்கிய நிலையில் துன்பங்களைச் சுமந்து வாழ்ந்து வருகிறார்கள். மானிட உலகம் பிளவுபட்டு நிற்கிறது. செல்வமும், வறுமையுமாக, முன்னேற்றமும் பின்னடைவுமாக,



உயர்நிலையும் தாழ்நிலையுமாக மனிதர்களிடையே பாரிய ஏற்றத் தாழ்வு நிலவுகிறது. போர்கள், ஆக்கிரமிப்புகள், புரட்சிகள் போராட்டங்களாக மனித சமூகங்கள் மத்தியில் முரண்பாடும் மோதல்களும் நிகழ்ந்து வருகின்றன. உலக ஒழுங்கு சீர்குலைந்து வருகிறது. உலக அமைதி குன்றி வருகிறது. ஒழுங்கும் அமைதியும், ஒத்திசைவான மனித உறவுகளும், வறுமைப் பிணி அகன்ற நிறைவான வாழ்வும், சமத்துவமும் சமூக நீதியும் நிலவும் ஒரு உன்னதமான வளர்ச்சி நிலையை மானிடம் இன்னும் அடையவில்லை. நவீனத்துவம் என புக்குயாமா குறிப்பிடுவது முதலாளிய தொழில்நுட்ப வளர்ச்சியின் ஆரம்ப கட்டத்தையே. இதனை அடிப்படையாகக் கொண்டு, மானிட சமூகம் ஒரு உன்னதமான உச்சநிலை வளர்ச்சியை எட்டிவிட்டது என்றும், இக்கட்ட வளர்ச்சியுடன் மனித வரலாறு முடிவுக்கு வந்துவிட்டது என்றும் அவர் முன்வைக்கும் கோட்பாட்டை ஏற்றுக் கொள்ள முடியாது. மனித சமூகத்தின் உயர்கட்ட வளர்ச்சிப் போக்கானது முடிவில்லாத பெரும் பயணமாகத் தொடர்கிறது. அந்த முடிவில்லாப் பயணத்து யாத்திரீகனாக வரலாறும் தொடர்ந்து நடைபோட்டு வருகிறது.

2001ஆம் ஆண்டு, செப்டெம்பர் மாதம், 11ம் திகதி, அமெரிக்க தலைநகரான நியூயோர்க்கில், உலகின் பொருளாதார மையமாக வானைத் தொட்டு நின்ற கோபுரங்கள் தாக்கப்பட்டு தகர்ந்து விழுந்த கோர நிகழ்வானது உலக வரலாற்றில் ஒரு திருப்புமுனையாக அமைந்தது. உலக முதலாளியத்தின் உச்ச வளர்ச்சியின் சின்னமாக, அமெரிக்க சனநாயகத்தின் அத்திவாரத்தில் கட்டப்பட்ட கோபுரங்கள் மீது விழுந்த அடி, புக்குயாமாவின் வரலாற்றுக் கோட்பாட்டையும் தகர்த்தது. வரலாறு இன்னும் முடிவுக்கு வந்துவிடவில்லை என்ற செய்தியையே அந் நிகழ்வு உலகெங்கும் பறைசாற்றியது.

இந்த நிகழ்வை அடுத்து ஒரு புதிய உலக வரலாற்றுப் படலம் கட்டவிழ்ந்தது. அமெரிக்கா, பிரிட்டன் தலைமையில் மேற்குலகம் அணிதிரண்டு உலகப் பயங்கரவாத ஒழிப்பு இயக்கம் என்ற போர்வையில்

இஸ்லாமிய அடிப்படைவாத சர்வாதிகாரங்களுக்கு எதிராகப் போர் தொடுத்தது. ஆப்கானிஸ்தானும், பின்பு ஈராக்கும் பெரும் படையெடுப்புகளுக்கு ஆளாகின. இந்நாடுகளில் பழைய ஆட்சியமைப்புகள் கவிழ்க்கப்பட்டு, புதிய ஆட்சிகள் நிறுவப்பட்டன. ஆனால் இங்கு போரும் வன்முறையும் ஓய்ந்து விடவில்லை. அமைதி நிலைநாட்டப்படவில்லை. ஒரு புதிய சர்வதேச நெருக்கடிக்குள் உலகம் சிக்குப்பட்டுள்ளது. ஒரு புதிய பரிமாணத்தில் மனித வரலாற்று இயக்கம் அசையத் தொடங்கியுள்ளது.

## VII

புதிய உலக ஒழுங்கை நிர்ணயிக்கும் சக்தியாக மேற்குலக சனநாயகம் வளர்ச்சி பெற்று வருவதால் இந்தப் பூமியில் மனித அரசியல் ஆட்சிமுறை பூரணத்துவம் பெற்றுவிட்டது என்றும் இதனால் உலக நெருக்கடி நிலைமைகள் தணிந்து வரலாற்று இயக்கம் முடிவுக்கு வந்துவிட்டதென்றும் புக்குயாமா கண்ட தரிசனம் பிழைத்து விட்டது.

மானிட சமூகம் இன்னும் உன்னதம் பெறவில்லை. மனிதர்களிடையே இன்னும் பிணக்குகள் தீர்ந்துவிடவில்லை. முரண்பாடுகள் நீங்கிவிடவில்லை. மனித சமூகங்கள் ஒன்றோடு ஒன்று மோதுகின்றன. இனங்களிடையே போர் நிகழ்கிறது. பலம் பொருந்திய நாடுகள் பலம் குன்றிய நாடுகள் மீது படையெடுப்புகளை நிகழ்த்துகின்றன. ஆக்கிரமிப்புகள் நடக்கிறது. ஆக்கிரமிப்புகளுக்கு எதிராக கிளர்ச்சியும் வன்முறையும் தாண்டவமாடுகிறது. இந்தப் பூமியில் இரத்த ஆறுகள் ஓடியவாறு இருக்கின்றன. வரலாறு என்னும் மகாநதி ஓய்வின்றி, அமைதியின்றி ஓடிக்கொண்டே இருக்கிறது. மானிடம் இன்னும் விடுதலை பெறவில்லை.

ஒரு புதிய பரிணாமம் நோக்கி நகர்ந்து செல்லும் மனித வரலாற்று இயக்கத்தை எப்படி விளங்கிக் கொள்வது? இன்றைய உலக நெருக்கடி எந்தத் திசையில் செல்கிறது?

உலகப் பயங்கரவாதத்திற்கு எதிரான போர் என்ற



பார்வையில் அமெரிக்க வல்லரசானது மேற்குலக நாடுகளை அணிதிரட்டி ஆப்கானிஸ்தானுக்கும் ஈராக்கிற்கும் எதிராகத் தொடுத்த யுத்தம் இஸ்லாமிய தீவிரவாதத்திற்கு எதிரான யுத்தமாகவே கருதப்படுகிறது. இன்னொரு வகையில் பார்க்கப் போனால், மேற்கத்தைய கிறீஸ்தவ உலகிற்கும் இஸ்லாமிய உலகிற்கும் மத்தியிலான மோதலாகவும் இந்நெருக்கடி சித்தரிக்கப்படுகிறது. இரு பெரும் நாகரீகங்கள் ஒன்றுடன் ஒன்று மோதிக் கொள்கின்றனவா என்ற கேள்வியும் இப்பொழுது எழுப்பப்படுகின்றது. இந்தப் பார்வையின் அடிப்படையில் பிரபல அமெரிக்க வரலாற்று அறிஞரான சாமுவேல் ஹண்டிங்ரனது (Samuel Huntington) 'நாகரீகங்களின் மோதல்' என்ற வரலாற்றுக் கோட்பாடு இன்று மிகவும் பரவலாக மீளாய்வு செய்யப்பட்டு வருகிறது. ஹண்டிங்ரனின் வரலாற்றுக் கோட்பாடு பற்றி இங்கு சுருக்கமாக விளக்க முயற்சிக்கிறேன்.

1993ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் Foreign Affairs எனப்படும் பிரபல அரசியல் ஆய்வு ஏட்டில் 'நாகரீகங்களின் மோதல்' (Clash of Civilizations) என்ற தலைப்பில் சாமுவேல் ஹண்டிங்ரன் எழுதிய கட்டுரை பெரும் சர்ச்சையையும் தொடர்ச்சியான விவாதத்தையும் ஏற்படுத்தியது.

உலகத்தில் பல்வேறு நாகரீகங்களைச் சேர்ந்த மக்கள் இனங்கள் வாழ்ந்து வருகின்றன. இனிவரும் உலக நெருக்கடியின் மிகவும் ஆபத்தான பரிமாணமாக வெவ்வேறு நாகரீகங்களைச் சேர்ந்த மக்கள் இனங்கள் மோதிக் கொள்வது சாத்தியமாகும். அதாவது, நாகரீகங்களின் மோதல்களாகவே எதிர்காலத்தில் மனித வரலாறு கட்டவிழும். ஹண்டிங்ரனது கட்டுரையின் மையக் கருத்து இதுதான். இந்தக் கருத்து சர்வதேச அரசியல் உலகில் ஒரு சிலுசிலுப்பை ஏற்படுத்தியது.

ஹண்டிங்ரனது கோட்பாடு பற்றிப் பல கேள்விகளும் வாதப் பிரதிவாதங்களும் எழுந்தன. இவை எல்லாவற்றிற்கும் ஒரு தெளிவான, விரிவான விளக்கம் அளிக்கும் நோக்குடன்

1997ம் ஆண்டு, 'நாகரீகங்களின் மோதலும் உலக ஒழுங்கை மீளமைத்தலும்' (The Clash of Civilizations and the Remaking of World Order) என்ற தலைப்பில் ஹண்டிங்ரன் ஒரு நூலை வெளியிட்டார். பனிப் போர் யுகத்தின் பின்னர் பரிணாமம் பெற்று வரும் உலக அரசியல் நிலைமை பற்றிய ஒரு ஆய்வாகவே இந்நூல் அமையப் பெறுவதாக முன்னுரையில் அவர் கூறுகிறார். இந்நூலில் தரப்படும் மையக் கருத்துகள் பற்றி இனிப் பார்ப்போம்.

கம்யூனிசம் முதலாளியம் என இரு துருவங்களாக பிளவுபட்டு, முரண்பட்டு நின்ற உலகம் சோசலிசத்தின் சிதைவுடன் ஒரு புதிய வரலாற்றுத் திருப்பத்தை அடைந்தது. பனிப் போர் முடிவுக்கு வந்தது. கருத்தியல் முரண்பாடுகளும் முடிவுக்கு வந்தன. சித்தாந்த வேறுபாடுகளும் செயலிழந்து போயின. முன்பு போல, சித்தாந்தங்களும், அரசியல் அமைப்பு வடிவங்களும், பொருளாதாரக் கட்டமைப்புகளும் மனித சமூகங்களின் தனித்தன்மையைக் கோடிட்டுக் காட்டவில்லை. பண்பாட்டு வடிவங்களே மனித சமூகங்களின் அடையாளங்களை நிர்ணயிக்கின்றன. சமூகங்களின் தனித்தன்மையை வேறுபடுத்திக் காட்டுகின்றன. மொழி, மதம், பாரம்பரியம், வரலாறு, வழக்கங்கள், நியமங்கள், நிறுவனங்கள் என்ற ரீதியில் பண்பாட்டுக் கோலங்களிலிருந்தே மனித சமூகங்கள் தம்மை இனம் கண்டு கொள்கின்றன. ஒரு குலமாக, இனக் குழுமமாக, மதச் சமூகமாக, தேசிய இனமாக, ஒட்டுமொத்தத்தில் ஒரு நாகரீகமாக மக்கள் சமூகங்கள் தம்மை அடையாளம் காட்டிக் கொள்வதற்குப் பண்பாட்டு அம்சங்களே ஆதாரமாக விளங்குகின்றன. பண்பாடானது நாகரீகத்திலிருந்து வேறுபட்டதல்ல. ஒரு பண்பாட்டின் அகன்ற பரிமாணமே நாகரீகமாகும். மனித வரலாறு என்பது மனித நாகரீகங்களின் வரலாறாகும். ஒரு நீண்ட முடிவில்லாக் கதையாக மனித நாகரீகங்களின் வரலாறு தொடர்கிறது. உலகின் முதன்மையான நாகரீகங்களுக்கு மதங்களும், மதம் சார்ந்த விழுமியங்களுமே அத்திவாரமாக விளங்குகின்றன. உதாரணமாக, மேற்கத்தைய கிறீஸ்தவ





சாமுவேல் ஹண்டிங்ரன்

நாகரீகம், இஸ்லாமிய நாகரீகம், இந்து நாகரீகம் ஆகியவற்றைக் குறிப்பிடலாம். காலத்தால் சிதைந்து போன நாகரீகங்களும் உண்டு. உதாரணத்திற்கு, சுமேரிய நாகரீகம், எகிப்திய நாகரீகம், கிரேக்க நாகரீகம், ஆகியவற்றைக் குறிப்பிடலாம். ஆனால் அதே வேளை, தோற்றம் முடிவின்றி பல ஆயிரம் ஆண்டுகள் வரை நீடித்து நிலைத்து நிற்கும் நாகரீகங்களும் இருக்கின்றன. நீண்ட வரலாற்றைக் கொண்டிருப்பதே நாகரீகங்களின் சிறப்பம்சமாகும். சாம்ராஜ்யங்கள் எழுச்சியும் விழுச்சியும் அடையலாம்; அரசுகள் தோன்றி மறையலாம்; சமூக, அரசியற் புரட்சிகள் வெடிக்கலாம். ஆயினும் இப் பூகம்ப நிகழ்வுகளுக்கு ஈடுகொடுத்து நாகரீகங்கள் நிலைத்து நிற்கலாம். புறநிலை அழுத்தங்களுக்கு முகம் கொடுத்து, சவால்களை எதிர்கொண்டு, ஒரு படிநிலை வளர்ச்சியில் நாகரீகங்கள் அகற்சி பெற்று நீடிக்கின்றன. நாகரீகங்களுக்கு புவியியல் எல்லைக் கோடுகள் இருப்பதில்லை. பல தேசிய

அரசுகளைக் கொண்டதாக, பல இனக் குழுமங்களை உள்ளடக்கியதாக பூதாகார விரிவாக்கம் பெற்ற நாகரீகங்களும் உண்டு. உதாரணத்திற்கு மேற்கத்தைய கிறீஸ்தவ, இஸ்லாமிய நாகரீகங்களைக் குறிப்பிடலாம். இன்றைய நவயுகத்தில் ஏழு அல்லது எட்டு நாகரீகங்களை இனம் கண்டு கொள்ளலாம். மேற்கத்தைய கிறீஸ்தவ நாகரீகம், இஸ்லாமிய நாகரீகம், லத்தீன் அமெரிக்க நாகரீகம், ஆபிரிக்க நாகரீகம், சீன நாகரீகம், இந்து நாகரீகம், பௌத்த நாகரீகம் என்ற ரீதியில் உலகப் பண்பாட்டு மையங்களை வகைப்படுத்தலாம்.

இன்றைய உலக நாகரீகங்களில், அரசியல், பொருளாதார, இராணுவ ரீதியில் பெரும் வளர்ச்சி பெற்று வல்லாதிக்கம் படைத்ததாக விளங்குவது மேற்குலக கிறீஸ்தவ நாகரீகமாகும். மேற்குலக நாகரீகத்தின் எழுச்சியும் அதன் வீச்சும் உலகின் ஏனைய நாகரீகங்கள் மீது பாரதூரமான எதிர்மறை விளைவுகளை ஏற்படுத்தி வந்தது. முன்பு ஒரு காலத்தில் காலனித்துவ அடக்குமுறையாக மேற்குலக நாகரீகம் உலகளாவிய ரீதியில் ஏனைய நாகரீகங்களை சீண்டிச் சிதைக்க முற்பட்டது. காலனித்துவ யுகத்தின் பின்பும் மேற்குலக நாகரீகம் உலகத்தை தனது வல்லாதிக்க வியூகத்தினுள் வைத்திருக்க முனைகிறது.

மேற்குலக கிறீஸ்தவ நாகரீகத்திற்கு அமெரிக்கா தலைமை வகிக்கிறது. மேற்குலக கிறீஸ்தவ நாகரீகமே மனித குலத்தின் அதியுன்னத பண்பாட்டு வடிவம் என அமெரிக்கா எண்ணுகிறது. மேற்குலக நாகரீகத்தின் பண்பாட்டு விழுமியங்களை ஏனைய நாகரீகங்கள் மீது திணித்து விட முயல்கிறது. சனநாயகம், தனிமனித சுதந்திரம், திறந்த சந்தைப் பொருளாதாரம், சட்ட ஆட்சிமுறை போன்றன மேற்குலக நாகரீகத்தின் உன்னத பண்புகள் என வரையறுத்து, அவற்றை மனித குலம் பின்பற்ற வேண்டுமென அமெரிக்கா விரும்புகிறது. அதுவே தனது இலட்சியப் பணி எனவும் இறுமாப்புடன் செயற்படுகிறது. அமெரிக்கா தலைமை வகிக்கும் மேற்குலக



நாகரீகமானது இராணுவப் படையெடுப்புகளை நிகழ்த்தி ஏனைய நாகரீகங்களைச் சார்ந்த நாடுகளை அடிமைப்படுத்தியும் ஆட்சி மாற்றங்களை நிகழ்த்தியும் நசுக்கி விட முனைகிறது. தனது பொருளாதார நலன்களை மேம்பாடு செய்யும் நோக்கில், உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் போன்ற நிறுவனங்கள் வாயிலாக ஒரு உலகப் பொருளாதார ஒழுங்கமைப்பை உருவாக்கி ஏனைய நாகரீகங்களின் பொருளாதார வாழ்வைத் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர முயற்சிக்கிறது. மேற்குலக நாகரீகமானது முழு உலகத்தையுமே தனது ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவரும் நோக்கில் திட்டமிட்டுச் செயற்பட்டு வருகிறது.

மேற்குலக நாகரீகத்தின் ஆதிக்கமும் செல்வாக்கும் ஏனைய உலக நாகரீகங்கள் மீது ஆக்கபூர்வமான விளைவுகளையும் ஏற்படுத்தி வருகிறது. முதலாளிய பொருளுற்பத்தி, கைத்தொழில் மயமாக்குதல், நவீனத்துவமாக்குதல் போன்ற மேற்குலகின் வழி முறைகளைத் தழுவி ஏனைய நாகரீகங்களும் பெருவளர்ச்சி கண்டு வருகின்றன. சீனம், யப்பான் மற்றும் தென்கிழக்கு ஆசிய புலிப் பொருளாதார வடிவங்கள் மேற்குலகிற்குப் போட்டியாக முன்னேற்றம் கண்டுள்ளன. இதனால் மேற்குலக நாகரீகத்தின் மேலாதிக்க நிலை தளர்ந்து வருகிறது. பாரிய வளர்ச்சி கண்டு வரும் கிழக்கு ஆசிய சமூகங்களுடன் ஒப்பு நோக்குகையில் மேற்குலகின் பொருளாதார வளர்ச்சி குன்றிவருகிறது. சனத்தொகை விகிதாச்சாரமும் வீழ்ச்சி கண்டு வருகிறது. இவற்றைவிட, மேற்கில் தார்மீக ஒழுக்க நெறிகள் சீர்குலைந்து வருகின்றன. வன்முறை, குற்றச் செயல்கள், போதை மருந்துப் பாவனை பெருகி வருகின்றன. குடும்ப உறவுகள் சிதைந்து வருகின்றன. மேற்குலகில், குறிப்பாக அமெரிக்காவில் பல்லினப் பண்பாட்டுக் (Multi-Cultural) கோட்பாடு வலியுறுத்தப்படுவ தால் மேற்குலக நாகரீகத்தின் தனித்தன்மை பலவீனமடைந்து வருகிறது. மேற்குலகம், தனது தனித்துவமான பண்பாட்டினை வலுப்படுத்தி வளர்ப்பதற்குப்

பதிலாக, அதனை உலகமயப்படுத்த முனைவது ஆபத்தாக முடியலாம். உலகமானது பல்வேறு பண்பாட்டு மையங்களைக் கொண்டுள்ளது. இந்த நாகரீகங்கள் தமது பண்பாட்டுத் தனித்துவங்களைப் பேணி வளர்த்து முன்னேற முயற்கின்றன. இப் பன்முக நாகரீகங்களது அபிலாசைகளின் அடிப்படையிலேயே இனிவரும் உலக அரசியல் ஒழுங்கு நிர்ணயிக்கப்படும்.

கிழக்கு ஆசியாவில் சீன நாகரீகத்தின் பூதாகர வளர்ச்சியும், முஸ்லிம் உலகில் நிகழ்ந்து வரும் இஸ்லாமிய பண்பாட்டு எழுச்சியும் மேற்குலக கிறீஸ்தவ நாகரீகத்திற்கு பெரும் அச்சுறுத்தலாக அமைந்து வருகிறது. எண்பதுகளிலும் தொண்ணூறுகளிலும் சீன தேசம் பிரமிக்கத்தக்க வளர்ச்சியை அடைந்துள்ளது. பொருளாதார ரீதியிலும், இராணுவ ரீதியிலும் மேற்குலக நாகரீகத்திற்கு சவால்விடும் அளவுக்குச் சீனம் பாரிய முன்னேற்றம் அடைந்துள்ளது. மேற்குலக கிறீஸ்தவ நாகரீகத்துடன் ஒப்புநோக்கும் பொழுது சீன நாகரீகம் சாராம்சத்தில் வித்தியாசமானது. கொன்பூசியஸ் என்ற ஞானியின் போதனைகளை உள்வாங்கி வளர்ந்த சீனம் தனக்கேயுரிய பண்பாட்டு விழுமியங்களைக் கொண்டது. மேற்குலக நாகரீகத்தைவிட தனது பண்பாடு உன்னதமானது என சீனா கருதுகிறது. அத்தோடு தமது அபாரமான பொருளாதார முன்னேற்றத்திற்குத் தமது தனித்துவமான சீரிய பண்புகளுடைய நாகரீகமே காரணம் எனச் சீன மக்கள் கருதுகின்றனர். உலக முதலாளியத்துடன் போட்டியிட்டு முன்னேற வேண்டும் என்ற நோக்கில், சீனா திறந்த சந்தைப் பொருளாதாரத்தைத் தழுவிய போதும், இறுக்கமும், ஒழுக்கமும், கட்டுப்பாடுமுடைய உறுதியான அரசாட்சியை நடத்தி வருகிறது. உலகின் மிகப் பெரிய நவீன இராணுவ பலத்துடன் அணு ஆயுதம் படைத்த வல்லரசாகவும் விளங்குகிறது. இதனால் சீன தேசம் தன்நம்பிக்கையும், தன்னுறுதியும் கொண்டதாக, தனித்துவப் போக்குடையதாக மேற்குலக ஆதிக்கத்திற்கு பெரும் அச்சுறுத்தலாகவும் விளங்கி வருகிறது. மேற்குலகிற்கு எதிரான ஒரு பகைமைச்



சக்தியாக சீன நாகரீகம் உருவெடுக்கலாம். ஏற்கனவே நிகழ்ந்த வியட்னாமிய, கொரிய யுத்தங்களில் சீனாவின் தலையீடு காரணமாக அமெரிக்க வல்லரசு தோல்விகளைச் சந்திக்க நேரிட்டது. இப்பொழுது தைவான் தீவின் இறைமைப் பிரச்சினை குறித்து சீனாவுக்கும் அமெரிக்காவுக்கும் மத்தியில் பகைமை நிலவுகிறது. இது ஒரு யுத்தமாக வெடிக்கும் சாத்தியமும் உண்டு.

சமீப காலமாகத் தோற்றப்பாடு கொண்டுள்ள இஸ்லாமியப் பண்பாட்டு எழுச்சியும் அதன் தீவிரவாத அடிப்படைவாதப் போக்குகளும் மேற்குலக கிறீஸ்தவ நாகரீகத்திற்குப் பெரும் அச்சுறுத்தலாக எழுந்துள்ளது. இஸ்லாமிய நாகரீக உலகில் புதிய மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன. இஸ்லாமிய மதத்திலும் மறுமலர்ச்சி ஏற்பட்டு வருகிறது. தமது இனத்துவ அடையாளத்தைப் பேணவும் தமது சமூகத்தின் வளர்ச்சியை முன்னெடுக்கவும் தமது அரசியல் பொருளாதார வாழ்வை மேம்படுத்தவும் பல கோடி முஸ்லிம் மக்கள் இஸ்லாமிய மதத்தில் அர்த்தத்தையும் விடிவையும் காண முனைகின்றனர். மேற்குலக பண்பாட்டுக் கோலங்களை முற்றாக நிராகரித்து, வாழ்வின் உன்னத வழிகாட்டியாக இஸ்லாமிய மதத்தைத் தழுவி நிற்கின்றனர். இஸ்லாமிய மறுமலர்ச்சியானது சமூக, பண்பாட்டு, அரசியல் பரிமாணங்களைக் கொண்ட ஒரு பேரியக்கமாக முஸ்லிம் உலகில் எழுச்சி பெற்று வருகிறது. இம் மறுமலர்ச்சியானது இஸ்லாமிய தீவிரவாதத்திற்கும் இராணுவவாதத்திற்கும் வழிகோலுவதுடன் மேற்குலக நாகரீகத்திற்கும் பெரும் அச்சுறுத்தலாக எழுந்துள்ளது. குறிப்பாக எண்பதுகளிலும் தொண்ணூறுகளிலும் இஸ்லாமிய மறுமலர்ச்சி இயக்கமானது மேற்குலக நாகரீகத்திற்கு விரோதமான போக்கையே கடைப்பிடித்து வருகிறது. தமது மத நம்பிக்கைக்கும் சமூகப் பண்பாட்டு வாழ்வுக்கும் விரோதமான சக்தியாகவே மேற்குலக நாகரீகத்தை முஸ்லிம்கள் கருதுகிறார்கள். சிலுவை யுத்த யுகத்திலிருந்து காலம் காலமாகவே கிறீஸ்தவ - இஸ்லாமிய நாகரீகங்கள் மத்தியில் போரும் பகைமையும்

நிலவி வந்திருக்கிறது. சமீப காலமாக முஸ்லிம் அரசியலில் தலையிட்டு, இஸ்லாமிய நாகரீக உலகைப் பிளவுபடுத்தி, யூத ஆதிக்கத்திற்கு முண்டுகொடுத்து வருவதால், மேற்குலகம் மீது குறிப்பாக அமெரிக்கா மீது இஸ்லாமிய சமூகம் ஆத்திரம் கொண்டுள்ளது. இப்பகையுணர்வு கிறீஸ்தவ - இஸ்லாமிய நாகரீகங்கள் மத்தியில் பெரும் மோதலுக்கான புறநிலையை உருவாக்கி வருகிறது.

மேற்குறிப்பிட்டவாறு சாமுவேல் ஹண்டிங்ரன் தனது கோட்பாடுகளை வரலாற்றுத் தகவல்களுடனும் நிகழ்வுகளுடனும் தனது நூலில் எடுத்து விளக்குகின்றார். பல்வேறு நாகரீகங்களை அடிப்படையாகக் கொண்ட உலக ஒழுங்காகவே அவர் மானிட சமூகத்தைக் காண்கிறார். இந் நாகரீகங்கள் மத்தியில் அமைதியும் ஒத்திசைவான வாழ்வும் நிலவவில்லை. அவை ஒரு சீரான வரலாற்றுப் பாதையில், ஒரு உன்னதமான படிநிலை வளர்ச்சியை நோக்கி நகர வில்லை. மாறாக, இந்நாகரீகங்கள் தமது பண்பாட்டின் தனித்துவத்தையும் சிறப்பு அம்சங்களையும் வலுப்படுத்த முனைகின்றன. இந்த அபிலாசைகள் காரணமாக முரண்களும் மோதல்களுக்குமான புறநிலையும் உருவாகி வருகிறது. உலக நாகரீகங்களின் நலன்கள், அவற்றின் அபிலாசைகள், அவை மத்தியிலான முரண்கள் ஆகியனவையே எதிர்கால உலக அரசியலையும் மானிடத்தின் வரலாற்றையும் நிர்ணயிக்கும் என்பது ஹண்டிங்ரனது நிலைப்பாடு. மேற்குலக நாகரீகத்தின் ஆதிக்கப் போக்கும் தனது பண்பாட்டு விழுமியங்களை உலகமயமாக்க எத்தனிக்கும் விரிவாக்க நோக்கும் அதனை ஏனைய நாகரீகங்களோடு, குறிப்பாக சீன, இஸ்லாமிய நாகரீகங்களோடு மோதும் நிலைக்கு தள்ளிவருவதாகக் கருதுகிறார் ஹண்டிங்ரன். எனினும் அவரது பார்வையில் இன்றைய உலகின் போர்க்களமாக விளங்குவது இன நெருக்கடிகளும் இனமோதல்களுமாகும். இவையும் ஒரு பரிமாணத்தில் சிறிய அளவிலான நாகரீக மோதல்களாகும். இது பற்றி ஹண்டிங்ரன் கூறும் விளக்கத்தை இனிப் பார்ப்போம்.



தமது இன அடையாளங்களை பாதுகாப்பதற்காகவும் நிலைப்படுத்துவதற்காகவும் மக்கள் சமூகங்கள் காலம் காலமாகப் போராடி வருகின்றன. ஆதிக் குடிகளும், இனக் குழுமங்களும், மத சமூகங்களும், தேசிய இனங்களும் தமது பண்பாட்டுத் தனித்துவத்தைப் பேண எல்லாக் காலங்களிலும் போராடி வருகின்றன. தமது இனத்துவ, பண்பாட்டு அடையாளங்களுக்கு அச்சுறுத்தல் ஏற்படும்பொழுது, அன்றி ஒரு இனம் இன்னொரு இனத்தை அடிமை கொள்ள எத்தனிக்கும் போது அல்லது ஒரு இனத்தின் பாரம்பரிய நிலப்பரப்பை இன்னொரு இனம் ஆக்கிரமிக்க முயலும் போது இனப் போர்கள் வெடிக்கின்றன. இனப் போர்கள் பல நீண்ட காலமாக முடிவின்றித் தொடர்வதுண்டு. போர் நிறுத்தங்கள் ஏற்படுவதும், அவை முறிந்து போக மீண்டும் போர் தொடங்குவதுமாக இன நெருக்கடிகள் நீடிப்பதுண்டு. இனப் போர்கள் இரு நாடுகள் மத்தியிலும் எழலாம். அன்றி இரு வேறுபட்ட நாகரீகங்களைச் சேர்ந்த இனக் குழுமங்கள் மத்தியிலும் தேசிய இனங்கள் மத்தியிலும் ஏற்படலாம். ஒரே நாட்டில் வதியும் வேறுபட்ட மக்கள் சமூகங்கள் மத்தியிலும் மோதல்கள் எழலாம் (உதாரணமாக, இந்தியாவில் நிகழும் இந்து - முஸ்லிம் கலவரங்கள்). பொதுவாகவே, இனப் போர்கள் மிகவும் கொடூரமானதாக, ஈவிரக்கமற்றதாக அமைவதுண்டு. சில சமயங்களில் இனக் கொலைப் பரிமாணத்தையும் அவை அடைவதுண்டு. இந்த இனப் போர்கள் பல்லாயிரக்கணக்கான மக்களை பலிகொண்டு பல தசாப்தங்களாகத் தொடர்வதுண்டு. தெற்கு சுடானில், பிலிப்பைன்சில், காஷ்மீரில், பொஸ்னியாவில், குரோசியாவில், தீபேத்தில், செச்னியாவில், சிறீலங்காவில், கிழக்குத் திமோரில் ஆயிரமாயிரம் அப்பாவிப் பொதுமக்கள் கொன்றொழிக்கப்பட்டிருக்கிறார்கள்.

நாகரீகங்கள் மத்தியிலான முரண்பாடும் மோதலுமாகவே இனப் போர்கள் வெடிக்கின்றன. வேறுபட்ட நாகரீகங்களைச் சேர்ந்த இனங்கள் மத்தியிலான போர் தீவிரமடையும் போது அவை தமது நாகரீகத்தைச் சார்ந்து

நிற்கும் நாடுகளினதும் இனங்களினதும் உதவியையும் ஆதரவையும் நாடுவது இயல்பு. நேரடியாகவோ மறைமுகமாகவோ அல்லது வேறு வழியிலோ நிதியுதவியாக, இராணுவ உதவியாக, அரசியல் இராஜதந்திர ஆதரவாக ஒரே இனத்தைச் சார்ந்தவர்கள் தமது இன உறவுகளுக்குக் கைகொடுப்பதுண்டு. குறிப்பாக முஸ்லிம் இனங்கள், வேறுபட்ட நாகரீகங்களைச் சார்ந்த சமூகங்கள் அல்லது நாடுகளுடன் நெருக்கடிக்குள் சிக்குப்படும்பொழுது முஸ்லிம் அரசுகள் தமது இனத்துவ உறவுகளுக்கு உதவுகின்றன. உதாரணமாக காஷ்மீர் முஸ்லிம்களுக்கு பாகிஸ்தானும், பாலஸ்தீனர்களுக்கு அரபு நாடுகளும், செச்னியா முஸ்லிம்களுக்கு ஈரானும் என்ற ரீதியில் இஸ்லாமிய நாகரீக உலகம் தனது முஸ்லிம் இனத்தவர்களுக்குக் கைகொடுத்து உதவி வருகிறது. இப்படியாக ஒரு இனத்திற்கு அதே இனத்தைச் சார்ந்த இன்னொரு நாடோ இனமோ உதவி வழங்கும் பொழுது அந்த நெருக்கடி மேலும் விரிவடைந்து நாகரீகங்கள் மத்தியிலான பெரும் மோதலாக வெடிக்கலாம். உதாரணமாக, காஷ்மீர் முஸ்லிம்களுக்குப் பாகிஸ்தான் வழங்கிய இராணுவ உதவிகள் இந்தியாவுடனான போருக்கு வழிகோலியது. அதாவது இஸ்லாமிய - இந்து நாகரீகங்கள் மத்தியிலான மோதலுக்குக் காரணமாக அமைந்தது. ஒட்டுமொத்தத்தில், மனித இனங்கள் ஒவ்வொன்றும் ஏதோ ஒரு நாகரீக மையத்துடன் பிணைந்து இருப்பதால் இன நெருக்கடிகள், சில சமயங்களில் நாகரீகங்கள் மத்தியிலான மோதலுக்கு வழிகோலும் வாய்ப்புண்டு என்பது ஹண்டிங்ரனது நிலைப்பாடு.

இப்படியாக, பண்பாட்டு மையங்களாகவும் பலதரப்பட்ட நாகரீகங்களாகவும் உலகைச் சித்தரிக்கும் ஹண்டிங்ரன், உலக நாகரீகங்களின் தன்மைகளையும், அவற்றின் அபிலாசைகளையும் அவை மத்தியில் நிலவும் முரணியங்களையும் அதனால் எழக் கூடிய பேரபாயங்களையும் விளக்குகின்றார். இவரது பார்வையில் வல்லரசுகளும், வலிமை பெற்ற நாடுகளும் உலக



ஒழுங்கை நிர்ணயிக்கப் போவதில்லை. இன்றைய உலக நாடகத்தில் அரசுகள் முக்கியமான கதாபாத்திரங்களாக நடித்த போதும் அரசுகளும் நாடுகளும் இனங்களும் வெவ்வேறான நாகரீக உலகங்களுடன் சங்கமித்து நிற்பதால் நாகரீகங்களின் வளர்ச்சியும் எழுச்சியும் அவை மத்தியில் நிலவும் உறவு முறைகளுமே எதிர்கால உலக ஒழுங்கமைப்பையும் மனித வரலாற்றின் போக்கையும் நிர்ணயிக்கும் என்பது ஹண்டிங்ரனது வாதம்.

ஹண்டிங்ரனது நாகரீகக் கோட்பாட்டின் அடிப்படையில் இன்றைய உலக அரசியலையும் சர்வதேச உறவுகளையும் ஆழமாகத் தரிசித்துக் கொள்ள முடியுமா? உலகப் பேரரசுகளையும் நாடுகளையும் தேசிய இனங்களையும் ஒரு குறிப்பிட்ட சில பண்பாட்டு மையங்களுக்குள் உள்ளடக்கி, அவற்றின் உறவுகளையும் பிணக்குகளையும் போராட்டங்களையும் முழுமையாக விளங்கிக் கொள்ள முடியுமா? ஈராக் மீதான அமெரிக்கப் படையெடுப்பை கிறீஸ்தவ - இஸ்லாமிய நாகரீக மோதலாக எடைபோட முடியுமா? ஈராக் அமெரிக்க யுத்தத்தின் போதும் அதன் பின்னரும் அமெரிக்காவுக்கும் சில ஐரோப்பிய வல்லரசுகளுக்கும் மத்தியில், அதாவது மேற்குலக கிறீஸ்தவ நாகரீகத்தைச் சேர்ந்த நாடுகள் மத்தியில் எழுந்த முரண்பாடுகளை எவ்விதம் புரிந்து கொள்வது? இஸ்லாமிய நாகரீகத்தின் மையமான மத்திய கிழக்கில் அமெரிக்காவினதும் ஐரோப்பிய கிறீஸ்தவ நாடுகளதும் பிரதான நலன்கள் எவை? கிறீஸ்தவப் பண்பாட்டு விழுமியங்களை முஸ்லிம் சமூகங்களிடையே திணிப்பதா அன்றி எண்ணெய் வளங்களைச் சுரண்டுவதா? இஸ்லாமிய நாகரீகத்தைச் சார்ந்த நாடுகள் ஒரே பண்பாட்டு உலகமாக ஒன்றுபட்டு நிற்காது, பிளவுபட்டு முரண்படுவதேன்? ஒன்றோடு ஒன்று மோதிக் கொள்வது ஏன்? மிகவும் கொடூரமானதாக நீடித்த ஈரான் - ஈராக் போரையும் குவேய்த் மீதான ஈராக்கின் படையெடுப்பையும் எவ்விதம் புரிந்து கொள்வது? சீன தேசத்தை மேற்குலக கிறீஸ்தவ நாகரீகத்திற்கு விரோதமான ஆபத்தான சக்தியாக எடைபோடுவது சரியா?

கம்யூனிச ஆட்சிமுறையோடு மேற்குலகின் முதலாளிய உற்பத்தி முறையை தனது நாட்டின் புறநிலைக்கு ஏற்றவாறு பிணைத்து, புதிய பரிசோதனை செய்து, சீனம் பிரமாதமாக முன்னேற்றம் காணவில்லையா? பழைய மரபுகள், சிந்தனைகளுக்கு எதிராகச் சீனாவில் பண்பாட்டுப் புரட்சி நிகழவில்லையா? அமெரிக்காவுக்கும் இஸ்லாமிய தீவிரவாதத்திற்கும் மத்தியிலான முரண்பாட்டை வெறும் பண்பாட்டு மோதலாகக் கொள்வது சரியா? இஸ்லாமிய உலகிலுள்ள மன்னர் ஆட்சிகளுக்கும், சர்வாதிகார ஆட்சியாளருக்கும் காலம் காலமாக முண்டுகொடுத்து, எண்ணெய் வளங்களைச் சுரண்டி, அமெரிக்காவும் ஐரோப்பிய நாடுகளும் முஸ்லிம் சமூகங்களை ஏழ்மைக்கும் ஒடுக்குமுறைக்கும் ஆளாக்கவில்லையா? பாலஸ்தீன மக்களின் சுதந்திரப் போராட்டத்திற்கு எதிரான இஸ்ரேலிய அரசின் அடக்குமுறைக் கொள்கைகளுக்கு அமெரிக்கா ஆதரவளிக்கவில்லையா? முஸ்லிம் உலகத்திற்கு எதிரான அமெரிக்காவின் தலையீடுகளையும் ஆதிக்கப் போக்கையும் சுரண்டலையும் இவற்றை ஆட்சேபித்து முஸ்லிம்கள் தெரிவிக்கும் எதிர்ப்பையும் இஸ்லாமிய - கிறீஸ்தவ பண்பாட்டு மோதல் என்ற போர்வைக்குள் மறைத்துவிட முடியுமா?

ஹண்டிங்ரனின் நாகரீகக் கோட்பாடு பல குறைபாடுகளைக் கொண்டது. அவரது வரையறுக்கப்பட்ட பார்வையின் அடிப்படையில் மிகவும் சிக்கலான உலக நெருக்கடிகளையும் உலக நாடுகளின் உறவுகளையும் புரிந்து கொள்வது சாத்தியமல்ல. இன்றைய உலகத்தின் அரசியல் அரங்கில் இனப் போர்களும் இன நெருக்கடிகளுமே பிரதான இடத்தைப் பிடித்துள்ளன என அவர் கருதுவது சரியானதே. ஆயினும் இன விடுதலைப் போராட்டங்களை பண்பாட்டுத் தனித்துவத்திற்கான போராட்டமாக மட்டும் வரையறுத்துப் பார்க்க முனைவது தவறு. அந்நிய அடக்குமுறைக்கும் ஆக்கிரமிப்புக்கும் எதிராக தேச சுதந்திரம் வேண்டி நடைபெறும் விடுதலைப் போராட்டங்களின் ஆழமான பரிமாணங்களை அவர் கண்டு கொள்ளவில்லை.

ஹண்டிங்ரனின் பார்வையில் மனித வரலாறு நாகரீகங்களின் வளர்ச்சிப் போக்குடன் பின்னிப் பிணைந்து செல்கிறது. இன முரண்பாடுகளால் எழும் உள்நாட்டு யுத்தங்களாகவும் நாகரீக மோதல்களால் எழும் உலக நெருக்கடிகளாகவும் மனித வரலாறு தொடரும் என்பது அவரது கருத்து. ஒவ்வொரு நாகரீகமும் தனக்கே உரித்தான தனித்துவப் பண்புகளைக் கொண்டிருப்பதால் நாகரீகங்கள் மத்தியில் ஒத்திசைவு ஏற்படப் போதில்லை. அத்துடன் ஒரு உயர்நிலைப் பண்பாட்டு மையம் நோக்கி நாகரீகங்கள் வளர்ச்சி பெறப் போவதில்லை என்பதும் அவரது கருத்து. மனித குலமானது வேறுபட்ட பண்பாட்டு மையங்களாக நிரந்தரமாகப் பிளவுபட்டு இருக்குமென்றும், நாகரீக மோதல்களும் பேரழிவுகளும் தவிர்க்க முடியாத வரலாற்றுப் போக்காக அமையுமென்றும் ஒரு எதிர்மறையான எதிர்காலத்தையே அவர் எதிர்வு கூறுகின்றார்.

பிளவுபட்டு நிற்கும் பண்பாட்டு உலகங்கள் மனித குலத்திற்குப் பொதுவான ஒரு பண்பாட்டு மையத்தை உருவாக்கப் போவதில்லை என்று ஹண்டிங்ரன் கருதுவது தவறு. ஏற்கனவே, ஐ.நா சபை நிறுவனம் வாயிலாக மானிடத்திற்குப் பொதுவான பண்பாட்டு விழுமியங்கள் தொகுக்கப்பட்டு ஐ.நாவின் சாசனங்களாகப் பிரகடனம் செய்யப்பட்டு உள்ளன. அடிப்படை மனித உரிமைகள், மனித சுதந்திரங்கள், அரசியல் உரிமைகள், குடியுரிமைகள், பெண் உரிமைகள், சிறார் உரிமைகள், தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமைகள் போன்ற உரிமைப் பிரகடனங்களாகவும் சர்வதேச மனிதாபிமானச் சட்டங்களாகவும் மானிடத்திற்குப் பொதுவான பண்பாட்டு விழுமியங்களை அடிப்படையாகக் கொண்டு ஐ.நா செயற்பட்டு வருகிறது. இந்த அறநெறிக் கோட்பாடுகளை ஐ.நாவில் அங்கம் வகிக்கும் உலக நாடுகள் அனைத்துமே ஏற்றுக் கொண்டுள்ளன. மானிடத்திற்கான பொதுவிழுமியங்களை மேலும் செழுமைப்படுத்தி, விரிவுபடுத்தவும் ஐ.நா முயன்று வருகிறது. ஒரே தார்மீக

ஒழுங்கில் மனித குலத்தை ஒன்றுபடுத்தி நெறிப்படுத்த இந்த உலக நிறுவனம் ஆக்கபூர்வமான முயற்சிகளை எடுத்து வருகிறது.

மனித குலமானது நாகரீக மையங்களாக பிளவுபட்டு நிற்கவில்லை என்பதும் பொருளிய வளர்ச்சியின் அடிப்படையில் அதிகார மையங்களைக் (Centers of Power) கொண்டதாக உலக ஒழுங்கு அமையப் பெற்று வருகிறது என்பதும் சில அறிஞர்களது கருத்து. 21ஆம் நூற்றாண்டின் புதிய உலக ஒழுங்கில் ஆறு வல்லரசுகளை அதிகார மையங்களாக இனம் காட்டுகிறார் ஹென்றி கிசின்யர் (Henry Kissinger). அமெரிக்கா, ஐரோப்பா, ரஷ்யா, சீனா, யப்பான், இந்தியா ஆகிய வல்லரசுகளும் பல்வேறு நடுத்தர அரசுகளும், சிறிய நாடுகளுமாக எதிர்கால சர்வதேசக் கட்டமைப்பு அமையப் பெறும் என்பது அவரது கருத்து. கம்யூனிச பூதம் என்ற ஒரு பொது எதிரி இல்லாத காரணத்தினால், காலப் போக்கில் ஆயுதப் போட்டி தணிந்து அமெரிக்காவின் இராணுவ வல்லாதிக்கம் படிப்படியாக வீழ்ச்சியடையும். புதிய வல்லரசுகள் மத்தியில் இராணுவச் சமநிலை தோன்றும். நாடுகள் மத்தியிலான உறவுகள் உலகமயமாகும். தீவிரமாக வளர்ந்து வரும் தகவல் தொடர்பு தொழில்நுட்பமும் தங்குநிலைப் பொருளாதாரமும் கண்டங்களையும் நாடுகளையும் ஒத்திசைவான ஒரே உலக ஒழுங்கில் இணைத்துவிடும் என்கிறார் ஹென்றி கிசின்யர்.

உலக அரசியலையும் உலக வரலாற்றுப் போக்கையும் மனித சமூகங்களின் பண்பாட்டு வாழ்வின் வரையறுக்கப்பட்ட வட்டத்திற்குள் பார்க்க முனைவது தவறு. மனிதர்களின் சமூக வாழ்வில் பண்பாடு முக்கியமானதே. பண்பாடானது சமூகங்களின் ஆன்மாவாக, சமூக உறவுகளுக்கு ஆதாரமாக, சமூக ஒழுங்கிற்கு அத்திவாரமாகத் திகழ்கிறது. எனினும் மனித அபிலாசைகளின் பரிமாணம் அகன்றது. அவற்றைப் பண்பாட்டு உலகிற்குள் முடக்கிவிட முடியாது. தனி மனிதர்களும் சரி, சமூகங்களும் சரி, நாடுகளும் சரி, வாழ்நிலையை மேம்பாடு செய்வதையே நோக்கமாகக் கொண்டு இயங்குகின்றன.



ஏழ்மையும் வறுமையும், அடக்குமுறையும் அநீதியும் அகன்ற சமூக சூழலில் சுதந்திரமாக, கௌரவமாக சகல உரிமைகளுடனும், சகல வாய்ப்புகள் வசதிகளுடன் நிறைவாக வாழ்வதையே மனிதர்கள் விரும்புகிறார்கள். வாழ்நிலையை மேம்பாடு செய்து முன்னேற வேண்டும் என்பதே பொதுவாக எல்லா மனித சமூகங்களதும் அபிலாசையாகும். சுதந்திரமாக வாழவேண்டும் என்ற விடுதலை வேட்கையும், வாழ்நிலையை மேம்பாடு செய்து முன்னேற வேண்டும் என்ற அபிலாசையுமே மானிடத்தின் பிரதான உந்துசக்தியாக விளங்குகின்றன. மனித சுதந்திரத்தையும் முன்னேற்றத்தையும் (Human Freedom and Progress) நோக்கிய மானிட சமூகத்தின் உயர்நிலை வளர்ச்சிப் போக்காகவே மனித வரலாறு அசைந்து செல்கிறது.

# பழமைக்கு எதிரான பண்பாட்டுப் புரட்சி

சீனாவில், அறுபதுகளில் அந்தப் புரட்சி நிகழ்ந்தது. புரட்சிக்குப் பின் ஒரு புரட்சியாக, தொடர் புரட்சியாக, பழமையை மாற்றியமைக்கும் பண்பாட்டுப் புரட்சியாக அந்தப் பூகம்ப நிகழ்வு இடம்பெற்றது. அது விளைவித்த பேரனர்த்தம் பயங்கரமானது. நாடு முழுவதுமே ஒரு வன்முறைப் பிரளயத்தில் மூழ்கி எழுந்தது. அந்தப் புரட்சிப் பெருவெள்ளத்தில் அள்ளுப்பட்டுச் சென்றவர்களின் எண்ணிக்கையோ எண்ணிலடங்காது. அது சீனக் கம்யூனிச இயக்கத்தை ஒரு உலுப்பு உலுக்கியது. வேர் அறுந்து விழுந்த விருட்சங்கள் போல கட்சியின் பழம் பெரும் தலைவர்கள் தூக்கி எறியப்பட்டனர். சீன சோசலிச நிர்மாணம் ஒரு இருண்ட யுகத்தினுள் தள்ளப்பட்டது. முன்னோக்கி நகர்ந்து வந்த செஞ்சீனம், இந்தக் காலகட்டத்தில் ஒரு பெரிய பின் நோக்கிய பாய்ச்சலை நிகழ்த்தியது.

இந்த ஊழிக் கூத்தை நடத்தி முடித்தவர் மாவோ. எதற்காக இந்தப் புரட்சியை அவர் கட்டவிழ்த்து விட்டார்? தான் கட்டி வளர்த்த கட்சியையே அவர் எட்டி உதைத்ததன் காரணமென்ன? தேசிய விடுதலைப் போரில் தோளாடு தோள் நின்ற தோழர்கள் பலரை அவர் இம்சைப்படுத்தியதன் நோக்கமென்ன? பெரும் புயலாக எழுந்து பேரழிவைத் தோற்றுவித்த இந்த அரசியற் கொந்தளிப்பை பண்பாட்டுப் புரட்சி என அவர் வர்ணித்தது ஏன்?

நீண்ட காலமாகவே சோசலிச சிந்தனை உலகில் பெரும் சர்ச்சையை எழுப்பிய வினாக்கள் இவை.

'முன்னோக்கிய பெரும் பாய்ச்சல்', 'பண்பாட்டுப் புரட்சி', என்பன மாவோ நிகழ்த்திய சமூகப்

பரிசோதனைகள். இந்தப் பரிசோதனைகளின் போது பெரும் தவறுகள் இழைக்கப்பட்டன என்பதும், இவற்றினால் சீனச் சமூகம் பெரிதும் பாதிக்கப்பட்டது என்பதும் வரலாற்று உண்மைகள். இன்றைய சீனத் தலைமை மாவோவின் இந்தப் பரிசோதனைகளை விமர்சித்து, கண்டித்தும் இருக்கிறது. ஆனால் மாவோவை நிராகரிக்கவில்லை. நவ சீனத்தின் உருவாக்கத்தில் மாவோவின் பங்கு அளப்பரியது. தேசிய விடுதலையிலும், சமூகப் புரட்சியிலும் அவர் கணிசமான தொண்டாற்றியிருக்கிறார். சீனாவின் சிற்பி என வர்ணிக்கப்பட்ட இந்த மாபெரும் வரலாற்று மனிதர், ஏன் இந்தப் பாரிய தவறுகளை இழைத்தார்?

மாவோவின் இலட்சியங்கள் உன்னதமானவை. ஆனால் இந்த இலட்சியங்களை அடைவதற்கு அவர் கையாண்ட அணுகுமுறைகள்தான் தவறானவை என்பது சீன ஆய்வாளர்கள் பலரது கருத்து. அவர் முற்றுமுழுதாக மனித சக்தியைப் பயன்படுத்தி தனது இலக்குகளை அடைய முனைந்தார். ஆனால் இதனை ஒரு ஒழுங்கான முறையில், நடைமுறைச் சாத்தியமான செயற்திட்டத்தின் அடிப்படையில் செய்யவில்லை. இதனால் சீன சமூகம் பெரும் துன்பத்திற்கு ஆளாகியது. பொருண்மிய வளர்ச்சியும் பாதிக்கப்பட்டது.

கலாச்சாரப் புரட்சியை அவர் தொடக்கி வைத்ததற்கும் காரணங்கள் இருக்கத்தான் செய்தன. கொள்கையளவில், இந்தப் பரிசோதனை உயரிய நோக்குகளைக் கொண்டிருந்தது. ஆனால் நடைமுறை எதார்த்தம் வேறு. நடைமுறையில் அது பேரழிவைத் தோற்றுவித்தது.

மாவோ ஒரு இலட்சியவாதி. பெரிய கனவுகளைக் கண்டவர். சீனத்தை ஒரு சோசலிச சுவர்க்கமாக மாற்ற விளைந்தவர். சோவியத் யூனியனின் சோசலிசப் பாதையில் அவர் செல்ல விரும்பவில்லை. அந்தப் பாதை கட்சிச் சர்வாதிகாரத்தை கட்டி வளர்த்தது. மக்கள் சனநாயகத்தை மறுத்தது. பொருளுலகிற்கு முதன்மை கொடுத்தது. மனித உறவுகளை மலினப்படுத்தியது. அந்தப் பாதை ஒரு உன்னதமான பொதுவுடமைச் சமூகத்தை நோக்கிச்





*மாசேதுங்*

செல்லவில்லை என மாவோ கருதினார். சீனத்தை ஒரு புதிய பாதையில், ஒரு புதிய யுகத்தை நோக்கி நகர்த்திச் செல்ல அவர் விரும்பினார்.

பொதுவுடமைச் சமுதாய மாற்றம் என்பது ஒரு நீண்ட பயணம். ஒரு தடவை நிகழ்த்தப்படும் சமூகப் புரட்சியுடன் அந்த இலக்கை எட்டிவிட முடியாது. ஒரு புரட்சியுடன் சமூகத்தில் நிலவும் எல்லா முரண்பாடுகளையும் களைந்துவிட முடியாது. படிப்படியாகக் கட்டவிழ்ந்து செல்லும் தொடர்ச்சியான புரட்சி மூலமே கம்யூனிச சமூகத்தை கட்டியெழுப்ப முடியும் எனக் கருதினார் மாவோ. இந்தத் தரிசனத்தின் அடிப்படையில் புதிய சமூகப் பரிசோதனைகளை அவர் நிகழ்த்த விரும்பினார். மக்களை விழிப்புறச் செய்து, மனித உறவுகளை மேம்பாடு செய்து, மக்கள் சனநாயகத்தைக் கட்டி வளர்க்கும் புதுமையான

வழிமுறைகளாகவே இந்தப் பரிசோதனைகளை அவர் முன்னெடுத்தார். அவரைப் பொறுத்தவரை, சீனப் பண்பாட்டுப் புரட்சியானது பொதுவுடமைச் சமூகக் கட்டமைப்பை நோக்கிய ஒரு புதிய நகர்வு.

பொருண்மியக் கட்டமைப்பை மாற்றியமைத்தால், மனவுலக மாற்றத்திற்கும் அது வழி வகுக்கும் என்ற வைதீக மாக்சியக் கருத்தை மாவோ ஏற்கவில்லை. பொருளுலகம் கருத்துலகை முற்றாக நிர்ணயிப்பதல்ல. காலம் கலமாக மனவுலகில் வேர் பதிக்கும் கருத்துக்கள், நம்பிக்கைகள் சமூகப் புறநிலை மாற்றத்தால் மறைந்து விடுவதல்ல. கருத்துக்களை மாற்றுவதற்குக் கருத்துலகில் ஒரு புரட்சியை நிகழ்த்த வேண்டும். சிந்தனைப் புரட்சி மூலமே புரட்சிகரப் பிரக்ஞையைத் தோற்றுவிக்க முடியும் எனக் கருதினார் மாவோ. சீனாவில் சமூகப் புரட்சி நிகழ்ந்தது. பொருண்மியக் கட்டமைப்பில் மாற்றம் ஏற்பட்ட போதும், மக்களின் மனவுலகில் மாற்றம் நிகழவில்லை. பழமைவாதக் கருத்துக்கள், பிற்போக்கான பார்வைகள், மூட நம்பிக்கைகள் மக்களிடம் செறிந்து கிடந்தன. கொன்பூசியஸின் ஆதிகால அடிமைவாதச் சித்தாந்தம் சீனச் சமூக வாழ்வில் ஆதிக்கம் செலுத்தி நின்றது. இந்தப் பழமைவாத சமூகப் பிரக்ஞையுடன் புதிய சமூக உலகைக் கட்டி எழுப்புவது கடினம். பொருளிய புற வளர்ச்சிக்கு ஒத்திசைவாக அக வளர்ச்சியும் ஏற்பட வேண்டும். புதிய யுகத்தை நோக்கி முன்னேறும் ஒரு சமூகம், புரட்சிகரமான அறிவியற் பார்வையைக் கொண்டிருக்க வேண்டும். பண்பாட்டுப் புரட்சி மூலம் இந்த நோக்கை அடையலாம் என மாவோ கருதினார்.

சோவியத் யூனியன் போன்று, சீனாவிலும் கட்சிச் சர்வாதிகாரம் விஸ்வரூபப் பரிமாணம் பெறுவதை மாவோ விரும்பவில்லை. மக்களுக்குப் புறம்பாக, மக்களிடமிருந்து அந்நியப்பட்ட சக்தியாக அரச நிர்வாக இயந்திரம் உருவாக்கம் பெறுவதை அவர் விரும்பவில்லை. அது, கட்சிக்கும் மக்களுக்குமிடையே பெரியதொரு முரண்பாட்டைத் தோற்றுவிக்கும். இந்த முரண்பாட்டைக்



களைவதானால், அதிகார பீடத்திலுள்ள கட்சிக்காரர்களை மக்கள் அரங்கில் இறக்கி விடவேண்டும். மக்கள் மீது அதிகாரம் செலுத்துவதல்ல, மக்களுக்குச் சேவை புரிவதுதான் கட்சியின் இலட்சியம் என்பதை உணர்த்த வேண்டும். இந்த நோக்கிலும் பண்பாட்டுப் புரட்சியை முடுக்கி விட்டார் மாவோ.

இளைய நெஞ்சங்கள் மிகவும் செழிப்பான நிலம். புரட்சியின் விதைகளை அங்குதான் விதைக்க வேண்டும். இளைஞரிடம் புரட்சியுணர்வு இருக்கிறது. புதுமையைக் காணும் உத்வேகம் இருக்கிறது. துணிவு இருக்கிறது. தூய்மை இருக்கிறது. எந்த ஒரு போராட்டத்திலும் வலுவான சக்தியாக, துணிவாக நின்று போராடுவது இளம் சமூகமே. எனவேதான், இளம் பரம்பரையை அணிதிரட்டி, அவர்களுக்கு ‘செம்படை’ எனப் பெயரிட்டு, அவர்களுக்கு சகல அதிகாரங்களையும் வழங்கி, பழமைக்கு எதிராக, பழமையில் புதைந்து கிடக்கும் கட்சியின் பழம் பரம்பரைக்கு எதிராக பண்பாட்டுப் புரட்சியை அரங்கேற்றி வைத்தார் மாவோ.

மாவோவின் இலட்சிய நோக்கு உயர்ந்ததாக இருக்கலாம். ஆனால், பண்பாட்டுப் புரட்சி இந்த நோக்குகளை நிறைவு செய்யவில்லை. மாறாக, பேரழிவையே விளைவித்தது.

சீனப் பண்பாட்டுப் புரட்சி பற்றி பல நூல்கள் எழுதப்பட்டிருக்கின்றன. மாக்சிய தத்துவாசிரியர்கள் பலர் மதிப்பாய்வுக் கட்டுரைகளை எழுதியிருக்கிறார்கள். பல கோணத்தில் இந்த மாபெரும் வரலாற்று நிகழ்வு விமர்சிக்கப்பட்டிருக்கிறது. இவை எல்லாம் சீனாவுக்கு வெளியேயிருந்து சீனம் பற்றிப் பார்க்கப்பட்ட பார்வைகள். உள்ளார்ந்த அனுபவமின்றி நிகழ்த்தப்பட்ட புறநிலை நோக்குகள். ஆனால் சீனாவிலிருந்து, சீன வரலாற்றுத் தரிசனத்துடன் எழுதப்பட்ட நூல்கள் மிகவும் சொற்பம். இந்த வகையில், யுங் சாங் எனப்படும் சீனப் பெண்மணி எழுதியுள்ள ‘காட்டு அன்னங்கள்; சீனாவின் மூன்று புதல்விகள்’ (Wild Swans; Three Daughters of China) என்ற

நூல், சீனப் பண்பாட்டுப் புரட்சியின்போது நிகழ்ந்த அனர்த்தங்களை, சுய அனுபவப் பார்வையில் தத்ரூபமாக சித்தரிக்க முனைகிறது.

இருபதாம் நூற்றாண்டின் சீன வரலாறு மிகவும் சிக்கலானது. நீண்டது. மிகவும் கொந்தளிப்பானது. ஜப்பானின் ஆதிக்கப் பிடிக்குள் சிதைந்து கிடந்த சீனம், நிமிர்ந்து எழுந்து போராடி, மிகவும் பலம் பொருந்திய பொதுவுடமை சமூகமாக தன்னை நிலைநிறுத்திக் கொண்ட ஒரு யுக வரலாறு. இப்படியானதொரு நீண்ட, புரட்சிகர நிகழ்வுகளைக் கொண்ட சிக்கலான வரலாற்றுப் பின்புலத்தில் மூன்று பெண்களின் சுயசரிதம் பதியப்படுகிறது. தனது பாட்டி, தனது தாய், தன்னுடையதாக, மூன்று பரம்பரையை உள்ளடக்கி, தனது குடும்பத்தின் வாழ்வனுபவத்துடன் பின்னிப் பிணைத்து இந்த சுயசரித ஆக்கத்தைப் படைத்திருக்கிறார் நூலாசிரியர்.

எழுநூறு பக்கங்களைக் கொண்ட பெரிய நூல். நீண்டதொரு சமூக நாவல் போன்று கதை நகர்த்தப்படுகிறது. சீன சமூக வாழ்வும், அதில் இழையோடும் சமூக உறவுகளும், அந்த உறவுகளைத் தாங்கி வரும் பாத்திரங்களும், அந்தப் பாத்திரங்கள் வெளிப்படுத்தும் நுண்ணிய மனவுணர்வுகளும், ஏக்கங்களும் மிகவும் நுட்பமாகச் சித்தரிக்கப்படுகிறது. ஒரு தேசத்தின் வரலாற்றுப் பின்புலத்தில் ஒரு குடும்பத்தின் கதை சொல்லப்படும் பாங்கு சிறப்பாக அமைகிறது.

சீனப் பண்பாட்டுப் புரட்சி இந்த நூலின் மையமாக அமைகிறது. இந்தக் கலாச்சாரக் கிளர்ச்சி விளைவித்த அனர்த்தங்களையும் அதனால் சீன சமூகம் சந்தித்த அவலங்களையும் உண்மைச் சம்பவங்கள் வாயிலாக மிகவும் உணர்வுபூர்வமாக வரைந்து காட்டுகிறார் யுங் சாங்.

காட்டுத் தீ போல பண்பாட்டுப் புரட்சி நாடெங்கும் பரவுகிறது. அதன் தீ நாக்குகள் யுங் சாங்கின் குடும்பத்தையும் தீண்டுகின்றன.

நூலாசிரியையின் தந்தை ஒரு கம்யூனிஸ்ட் உயர்





யுங் சாங்

அதிகாரி. நீண்ட, கடின உழைப்பால் உயர்ந்தவர். கெரில்லா வீரனாக ஆயுதமேந்தி தேசிய விடுதலைக்காக போரிட்டவர். கட்சியின் விசுவாசி. மாவோவை சீனத்தின் கடவுளாக வரித்துக் கொண்டவர். தாயாரும் ஒரு புரட்சிவாதி. கட்சிப் பிரமுகர். யுங் சாங்கின் குடும்பம் ஒரு கம்யூனிஸ்ட் குடும்பம்.

கம்யூனிஸ்ட் உயர் அதிகாரிகளையும் பண்பாட்டுப் புரட்சி விட்டு வைக்கவில்லை. யுங் சாங்கின் பெற்றோர்கள் மீது 'எதிர்ப் புரட்சியாளர்' எனக் குற்றம் சுமத்தப்படுகிறது. முதலில் தந்தையும், பின்னர் தாயாரும் கைதாகின்றனர்.

இரகசிய விசாரணைகளில் இழிவுபடுத்தப்பட்டு, கண்டனக் கூட்டங்களில் அவமதிக்கப்பட்டு, தடுப்பு முகாம்களில் வதைபட்டு, பெற்றோர்கள் கொடுமைக்கு ஆளாக யுங் சாங்கின் குடும்பம் சிதைகிறது. தாய் மனமுடைந்து நோயாளியாக, தந்தைக்குப் பைத்தியம்

பிடிக்கிறது. இந்த அவலமான சூழ்நிலையில் செம்படையில் சேவையாற்ற நிர்ப்பந்திக்கப்படுகிறார் யுங் சாங். அந்த இளைஞர் பட்டாளம் நிகழ்த்திய அனர்த்தங்கள் அவரைத் திகைக்க வைக்கிறது. தனிப்பட்ட சோகமும் சமூகத்தின் அவலமும் தன்னைச் சூழ நிகழ்ந்து கொண்டிருக்கும் அராஜகமும் - எல்லாமே அபத்தமாக, அர்த்தமற்ற கேலிக் கூத்தாக அவருக்குத் தென்பட்டது.

கட்டுக்கடங்காத காட்டாறு போல சீற்றம் கொண்டு பாய்ந்த புரட்சி வெள்ளம் நாடெங்கும் பேரழிவை ஏற்படுத்தியது. இலக்கற்ற, நோக்கற்ற இளைஞர் வன்முறையால், எத்தனையோ அப்பாவிகள் பழிவாங்கப் படுகின்றனர். யுங் சாங்கின் கண் முன்னே இந்தக் கொடுமை நடக்கிறது. பழமைவாதிகள் என்றும் துரோகிகள் என்றும் எதிர்ப் புரட்சியாளர் என்றும் முதலாளித்துவப் போக்காளர் என்றும் பிற்போக்குப் புத்திஜீவிகள் என்றும் பலர் வேட்டையாடப்பட்டு இம்சைப்படுத்தப்பட்ட சோக நிகழ்வுகளை அவர் மிகவும் உருக்கமாக எழுதுகிறார். பண்பாட்டுப் புரட்சி, மனிதர்களை மட்டுமன்றி, உடமைகளையும் விட்டு வைக்கவில்லை. நூல்கள், சிற்பங்கள், ஓவியங்கள், அரும் பழம் பொருட்கள் என்ற வகையில் பழமையைச் சித்தரித்த பண்பாட்டுச் சின்னங்கள் அனைத்துமே நாசமாக்கப்பட்டன. கலையம்சம் பொருந்திய பல புராதனக் கட்டிடங்கள் கூட இடித்துத் தகர்க்கப்பட்டன. மாக்சிய நூல்கள், மாவோவின் எழுத்துக்கள் தவிர்ந்த ஏனைய படைப்புகள், பழம் பெரும் இலக்கியங்கள், தத்துவங்கள், சாஸ்திரங்கள், மேலைநாட்டு நூல்கள் எல்லாமே பண்பாட்டுப் புரட்சித் தீயில் பொசுக்கப்பட்டதாகக் கூறுகிறார் நூலாசிரியை. புத்தகங்கள் மலை மலையாகக் குவிக்கப்பட்டு எரிக்கப்பட்ட கோரக் காட்சிகள் யுங் சாங்கின் ஆன்மாவைச் சுட்டு விடுகிறது. பண்பாட்டுப் புரட்சி, சீனக் கலாச்சாரப் பொக்கிஷங்களையே அழித்து விட்டதாக அவர் மனம் வெந்து எழுதுகிறார். இந்தக் கோரத் தாண்டவத்தை நிகழ்த்திய சீனத் தலைமை மீது அவருக்கு கோபாவேசம் பொங்குகிறது. மாவோ மீது முழுப் பழியையும் சுமத்துகிறார்.



பண்பாட்டுப் புரட்சியைத் தொடக்கி வைத்தவர் மாவோ. அதனை இயக்கி வைத்தவரும் அவரே. எனவே, இந்தப் புரட்சியால் நிகழ்ந்த அராஜகம் அனைத்திற்கும் அவரே பொறுப்பாளர் ஆவார். மாவோ சாதிக்க விரும்பியது வேறு. ஆனால் நிகழ்ந்தது வேறு. அந்த நிகழ்வுகளை அவரால் கட்டுப்படுத்த முடியவில்லை. மிகவும் கட்டுப்பாடான கட்சி அமைப்பிற்கு எதிராக, கட்டுப்பாடற்ற இளைஞர் சேனையை கட்டவிழ்த்து விட்டது அவர் புரிந்த மாபெரும் வரலாற்றுத் தவறு. கடிவாளம் அறுந்த குதிரைபோல திசைமாறி ஓடியது செம்படை. அதனை நெறிப்படுத்த அவரால் முடியவில்லை. பழமைவாத சிந்தனையைக் களைந்தெறிய மாவோ விரும்பினார் என்பது உண்மை. ஆனால் நூல்களை எரிக்கவோ, அன்றி பழைய பண்பாட்டுச் சின்னங்களை அழிக்கவோ அவர் உத்தரவு பிறப்பிக்கவில்லை. ஆனால் செம்படையோ, மாவோவின் பிர-கடனங்களைத் தவறாகப் புரிந்து கொண்டு, தான்தோன்றித் தனமாக நடந்தது. ஆயினும் அணைகளைக் கட்டாமல் வெள்ளத்தை ஓடவிட்டது மாவோ இழைத்த தவறு.

சீன சோசலிச நிர்மாணம் பற்றிய ஒரு பரந்த, தெளிந்த பார்வையுடன் யுங் சாங் இந்த நூலைப் படைக்கவில்லை. அவர் தனது குடும்பத்தின் சுவர்களுக்குள் நின்று, தான் கண்டவற்றையும், கேட்டவற்றையும் எழுதுகிறார். அந்த எழுத்தில் ஒரு புறம் ஆழமான சோகமும், மறுபுறம் வக்கிரமான கோபமும் தொனிக்கிறது. துயரம் தோய்ந்த வாழ்வனுபவமும், கனவுகள் உடைந்த விரக்தியும் அவருக்கு கம்யூனிசத்தின் மீது வெறுப்பை ஏற்படுத்துகிறது. அந்தக் கசப்புணர்வு சீனச் சமூகம் மீது திரும்புகிறது. செஞ்சீனத்தின் முகம் அவருக்கு அசிங்கமாகத் தென்படுகிறது. போராலும், புரட்சியாலும், கொந்தளிப்பான அரசியலாலும் சீர்குலைந்த ஒரு சமுதாயமாக அவர் சீனத்தைக் காண்கிறார். இந்தப் பார்வையின் அடிப்படையில் சீன வரலாற்றை ஒரு நீண்ட, முடிவில்லாத துன்பியல் நாடகமாக அவர் சித்தரிக்க முனைகிறார்.

ஆன்மாவை இழந்த மனிதர்களாக, எதற்கும் பணிந்து கொடுக்கும் பொம்மைகளாக, சீன விவசாயிகளை அவர் விபரிக்கிறார். இது மிகவும் தவறான கணிப்பு. ஒரு அபத்தமான பார்வை. சீன விவசாய வர்க்கமானது நவசீனத்தின் முதுகெலும்பு. ஜப்பானிய ஆதிக்கத்திற்கு எதிராக, சீனப் பிரபுத்துவ கொடுமைக்கு எதிராக, தேச விடுதலை வேண்டிப் போரிட்ட மாபெரும் மக்கள் சக்தியை யுங் சாங் இழிவுபடுத்த முயல்வது அவரது முதிர்ச்சியற்ற பார்வையை எடுத்துக் காட்டுகிறது. நகரப் புற வாழ்வும் உயரதிகார வர்க்கப் பின்னணியும் இப்படியானதொரு தீட்சண்யமற்ற நோக்கிற்கு காரணமாக அமைந்திருக்கலாம்.

சீனாவை ஒரு நரகமாகவும் மேற்குலகை ஒரு சுவர்க்கமாகவும் அவர் வர்ணிக்கிறார். மேற்குலகில் அழகான ஆடைகள் இருக்கின்றன. வாசிப்பதற்கு நிறையப் புத்தகங்கள் இருக்கின்றன. பார்த்து ரசிக்கப் பூக்கள் இருக்கின்றன. பொழுதுபோக்கிற்குக் களியாட்டங்கள் இருக்கின்றன, என்றெல்லாம் மிகவும் சிறுபிள்ளைத்தனமாக எழுதுகிறார். மேற்குலக நாகரீகம் உயர்ந்தது என்று சொல்கிறார். மேற்குலகில் பண்பு இருக்கிறது, அன்பு இருக்கிறது, வன்முறை அகன்ற மென்முறை இருக்கிறது, அமைதி இருக்கிறது, வர்க்க வேறுபாடற்ற சகோதரத்துவம் இருக்கிறது என்றெல்லாம் அவர் எழுதுவதைப் பார்க்கும் பொழுது வேடிக்கையாக இருக்கிறது. மேற்குலகில் நிலவும் சமூக முரண்பாடுகளையும், சீர்கேடுகளையும் வன்முறைகளையும் அவர் கண்டு கொள்ளாதது வியப்பாக இருக்கிறது. அத்துடன் உலக காலனித்துவ வரலாற்றையும், இந்த நூற்றாண்டின் ஐரோப்பிய வரலாற்றையும் அவர் செம்மையாகப் படிக்கவில்லை எனத் தோன்றுகிறது. சீனம் ஒரு பெரிய பூதம். ஆபத்தான பூதம். அதனை நிரந்தர தூக்கத்தில் வைத்திருப்பது அவசியம் என மேற்குலகம் சீன மக்களிடையே அபின் போதையை ஊக்குவித்த வரலாற்று நிகழ்வுகள் எதுவும் அவருக்குத் தெரியாது போல. குருட்டுத்தனமான மேற்குலக மோகம் நாட்டுப் பற்றை அவரிடம் மழுங்கடித்து விட்டிருக்கிறது. பதினைந்து



ஆண்டுகளுக்கு முன்னரே அவர் நாட்டை விட்டு ஓடி லண்டனில் தஞ்சம் புகுந்திருக்கிறார். நாடு பெயர்ந்திருக்கும் அவருக்கு லண்டன் சுவர்க்கமாகத் தெரிகிறது போலும். அவரது இன்றைய சீமை அனுபவங்கள் எமக்குத் தேவைப்படாது. ஆனால் அவரது அன்றைய சீன அனுபவங்கள் எமக்கு பயன்தரக்கூடியவை. எனினும் மேற்குலகமே திகைக்கும் வகையில் பொருளியப் புதுமைகள் படைத்து நவீன மயமாகிவரும் இன்றைய நவசீனம் பற்றி அவர் அறியாதிருப்பது துரதிர்ஷ்டவசமானது.

# அதிகாரத்தின் அரூப கரங்கள்

## I

மிஷேல் பூக்கோ (Michel Foucault, 1926-1980) ஒரு பிரஞ்சு தத்துவாசிரியர். ஒரு புதுமையான சமூகச் சிந்தனையாளர். சமூக உலகத்தையும் மனித உறவுகளையும் ஒரு புதிய பரிமாணத்தில் வித்தியாசமாக நோக்கியவர். அறிவுலகங்களை அகழாய்வு செய்தவர். அவற்றின் ரிஷி மூலங்களைக் கண்டுபிடித்துக் காட்டியவர். அதிகார உறவுகளின் சிலந்தி வலைக்குள் மனித வாழ்வு சிக்குண்டு கிடப்பதை மிகவும் நுட்பமாக எடுத்து விளக்கியவர். அறிவுலகமும் அதிகார உலகமும் கூட்டுச் சேர்ந்து மனித அடக்குமுறைக்கு ஒத்துழைக்கும் தந்திரோபாயங்களைப் பிட்டுக்காட்டியவர். மேற்குலகின் அரச அதிகார நிறுவனங்களான காவற்துறை, நீதித்துறை, சிறைச்சாலைகள், நிர்வாகத்துறை, படைத்துறை ஆகியன எவ்வாறு தனிமனிதர்களைச் சமூகப் பொம்மைகளாக வனைந்து இறுக்கமான சமூகக் கட்டுப்பாட்டை பேணி வருகின்றன என்பதை மிகவும் ஆழமாகவும் துல்லியமாகவும் விளக்கியவர். அவர் நிறைய எழுதினார். பல துறைகள் பற்றி எழுதினார். பைத்திய வைத்தியம் பற்றியும் பாலியல் வரலாறு பற்றியும் தார்மீக தத்துவங்கள் பற்றியும் சிந்தனை உலகங்களின் படிநிலை வளர்ச்சி பற்றியும் பல்வேறு துறைகளை ஆழமாக ஆய்வு செய்து எழுதினார். அவரது எழுத்துக்கள் மேற்குலக சிந்தனைப் பாரம்பரியத்தில் என்றுமில்லாத புதிய தாக்கத்தை ஏற்படுத்தியது. அவரது எழுத்தில் புதுமையும், பார்வையில் அபாரமான கூர்மையும் இருந்தது. அதனால் அவர், பிற்கால நவீனத்துவத்தின் (Post-Modernism) பிதாமகர் எனப் போற்றப்பட்டவர்.

மிஷேல் பூக்கோவின் ஆய்வுலகம் பரந்தது. அதனை ஒரு கட்டுரையில் முழுமையாக விளக்குவது கடினம். அவரது புதுமையான சமூக தரிசனத்தைச் சுருக்கமாக விளக்கும் அறிமுகக் குறிப்பாகவே இதனை எழுதுகிறேன்.

தத்துவப் போதனாசிரியராகப் பிரஞ்சு அறிவுலகத்தில் பிரவேசித்த பூக்கோ, ஆரம்பத்தில் மாக்சிய சிந்தனையால் ஈர்க்கப்பட்டார்.

ஐம்பதுகளின் முற்பகுதியில், இரண்டாம் உலகப் பெரும்போரின் இடிபாடுகளிலிருந்து விரக்தியுடன் வெளிவந்த ஐரோப்பிய இளம் பரம்பரை ஒரு புதிய யுகத்தைக் கனவு கண்டது. அநீதியும் வன்முறையும் ஒழிந்த ஒரு புதிய சமூக ஒழுங்கைத் தேடியது. அந்தத் தேடுதலில் ஈடுபட்ட இளம் அறிவுஜீவிகளுக்கு மாக்சிய சிந்தனை புதிய வெளிச்சத்தைக் காட்டியது. மாற்று உலகத்திற்காக ஏங்கிய பூக்கோ மாக்சியத்தை தழுவினார். பிரஞ்சு கம்யூனிச இயக்கத்தில் இணைந்து கொண்டார். இந்த ஈடுபாடு சொற்ப காலத்திற்கே நீடித்தது.

பிரஞ்சு கம்யூனிச இயக்கம் வைதீக மாக்சிய கோட்பாடுகளை இறுக்கமாகப் பற்றி நின்றது. புதிய விசாரணைகளுக்கு இடைவெளி கொடுக்க மறுத்தது. புதிய பார்வைகளை ஏற்க மறுத்தது. எல்லா உறவுகளையும், எல்லாப் புறநிலைகளையும் விளக்கும் பொதுவுண்மையாக, எல்லாக் காலத்திற்கும் பொருந்தும் மெய்யுண்மையாக மாக்சியத்தை வழிபட்டது. இயற்கையினதும், வாழ்க்கையினதும், வரலாறினதும் மாற்ற முடியாத நியதிக-ளாக, விஞ்ஞான விதிகளாக, இயங்கியலை வரித்துக் கொண்டது. அந்த விதிகளின் தவிர்க்க முடியாத நிர்ப்பந்தத்தால், மனித வரலாறு ஒரு புதிய யுகத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருப்பதாக எண்ணியது. இத்தகைய மரபுவாதத்தை, குருட்டுத்தனமான தத்துவ வழிபாட்டை பூக்கோவால் ஜீரணிக்க முடியவில்லை. "மாக்சியம் புதிதாக சுவாசிக்க விரும்பவில்லை. அது பத்தொன்பதாம் நூற்றாண்டின் பழமையில் புதைந்து கிடக்கிறது" எனக் கண்டித்தார் பூக்கோ. மூன்றாண்டு கால ஈடுபாட்டுடன்





மிஷேல் பூக்கோ

கம்யூனிச இயக்கத்திலிருந்து விலகிக் கொண்டார். மாக்சிய தத்துவத்தைப் புதுப்பிப்பதற்கு அவர் முனையவில்லை. முற்றிலும் வித்தியாசமாக, புதிதாக அவர் சமூக உலகத்தை விசாரிக்க முனைந்தார்.

மேற்குலக தத்துவாசிரியர்களில் ஜேர்மானிய சிந்தனையாளரான நீச்சேயின் எழுத்துக்கள் பூக்கோவை வெகுவாக ஆகர்ஷித்துக் கொண்டன. நீச்சேயின் படைப்புகளில் ஒரு விசித்திரமான புதுமையை அவர் கண்டார். ஏனைய தத்துவாசிரியர்கள் போன்று, கருத்துலகக் கோட்டைகளை நீச்சே கட்டியெழுப்ப விழையவில்லை.

பிரபஞ்சத்தின் இரகசியம் பற்றியும் மனித வாழ்வின் அர்த்தம் பற்றியும் தேடுதல்களை நடத்தவில்லை. கடவுளையோ மனிதனையோ மையப் புள்ளியாக வைத்து வாழ்விற்கு விளக்கம் அளிக்கவில்லை. நீச்சே எல்லாவற்றையும் எள்ளி நகையாடினார். எல்லாவற்றையும் ஈவிரக்கமின்றி விமர்சித்தார். எல்லாவற்றையும் நிராகரித்தார். அவரது எழுத்துக்கள் மேற்குலக மனிதனின் நீண்ட காலக் கனவுகளைக் கலைத்தது. கிறீஸ்தவ நாகரீகத்தின் தார்மீக முகமூடிகளைக் கிழித்துக் காட்டியது. நீச்சேயின் கண்டனத் திறனாய்வும் அவரது மரபு மூல (Geneological) விசாரணை முறைமையும் பூக்கோவை வெகுவாகக் கவர்ந்தது. பொய்மைகளைப் போர்த்தியவாறு, மறைபொருளாகப் புதைந்து கிடக்கும் மெய்மைகளைக் கண்டு கொள்வதற்கு மூலங்களைத் தேடும் விசாரணையே சிறந்ததாக அவருக்குத் தோன்றியது. நீச்சேயின் வழி தழுவி, வேர்களைத் தோண்டும் தனது ஆய்வு முறைமையை 'அகழாய்வு' என வர்ணித்தார் பூக்கோ. தனது ஆய்வு முறைமை பற்றி எழுதிய நூலுக்கு 'அறிவின் அகழாய்வு' (The Archaeology of Knowledge) எனத் தலைப்பிட்டார். அறிவுலகங்களை 'அகழாய்வு' செய்யும் நுட்பமான ஆய்வு முறைமையை அறிமுகப்படுத்தியதால் அவரை 'சிந்தனைப் பாரம்பரியங்களின் வரலாற்றாசிரியர்' என அழைப்பதுண்டு.

பூக்கோவின் பார்வையில் அறிவுலகங்கள் பலரகமானவை. விஞ்ஞானம், மருத்துவம், பொருளியல், சமூகவியல், சட்டவியல், அரசியல் என்ற ரீதியில் சிந்தனையுலகங்கள் பல பிரிவுகளாக வகைப்படுத்தப்பட்டு, நெறிப்படுத்தப்பட்டுள்ளன. இவை ஒவ்வொன்றும் தனக்கே உரித்தான கட்டமைவு விதிகளையும் செயல்நெறிகளையும் கொண்டவை. காலத்திற்கு ஏற்ப, சமூகப் பண்பாட்டு புறநிலைகளுக்கு ஏற்ப, சிந்தனையுலகங்கள் மாற்றங்களைச் சந்திக்கின்றன. இந்த மாற்றங்களாகக் கட்டவிழும் வரலாறு சிக்கலானது. காலச்சீர் அற்றது. முறிவுகளையும் முரண்பாடுகளையும் கொண்டது. இந்த அறிவுலகங்கள் தனியுலகமாக சமூக வாழ்விற்குப் புறம்பாக இயங்கவில்லை.



அவை சமூக உலகத்தை ஊடுருவி நிற்கின்றன. சமூக நிறுவனத் தளத்திலிருந்து செயற்படுகின்றன. சமூக உறவுகளோடு பின்னிப் பிணைந்து கிடக்கின்றன. இந்தச் சிந்தனை உலகங்களின் உருவாக்கம், அவற்றின் கட்டமைவு, அவற்றின் செயல்நெறிகள், அவற்றின் நிறுவனமயமாக்கல், அவற்றின் சமூக உறவுநிலைகள், அவற்றின் மாற்றம், வளர்ச்சி பற்றிய வரலாறு ஆகிய பன்முக விசாரணைகளைக் கொண்டதாக பூக்கோவின் 'அகழாய்வு' அமைகிறது. இந்தச் சிக்கலான ஆய்வுமுறைமை பற்றியோ அதன் சாதக பாதக அம்சங்கள் பற்றியோ எடுத்து விளக்குவது இந்தக் கட்டுரையின் நோக்கமல்ல. பூக்கோவின் ஆய்வு புலப்படுத்திக் காட்டும் சில சமூக உண்மைகள் பற்றியே நாம் இங்கு விளக்கிக் கூற விரும்புகிறோம்.

அறிவுலகத்தை சமூக வாழ்வியக்கத்தின் ஆழத்தில் அலசிப் பார்த்த பூக்கோவுக்கு ஒரு விசித்திரமான உண்மை புலப்பட்டது. அறிவுலகமானது தனியுலகமாக நின்று, மனித விமோசனத்திற்கு வெளிச்சம் காட்டவில்லை. மாறாக, அது அதிகார உலகத்துடன் கைகோர்த்து நின்று மனிதர்களை விலங்கிட்டு வைத்திருக்கிறது என்ற கசப்பான உண்மையை அவர் கண்டு கொண்டார்.

தற்கால சமூக உலகம் ஒரு விபரீதமான வளர்ச்சிப் பாதையில் செல்கிறது. சாதாரண மனித உறவுகள் அசாதாரண அதிகார உறவுகளாக மாறி வருகின்றன. அதிகாரமானது சமூக வாழ்வின் சகல மட்டங்களிலும் ஊடுருவி நிற்கிறது. சகல சமூக அமைப்புகளிலும், சகல சமூக உறவுகளிலும் மையம் கொண்டிருக்கிறது. அதிகாரத்தின் இந்த மேலாதிக்கத்திற்கு அறிவு துணை போகிறது. அறிவும் அதிகாரமும் ஒன்றோடு ஒன்று கூட்டுச் சேர்ந்து, ஒன்றுக்கொன்று முண்டுகொடுத்துச் செயற்படுகின்றன. இந்த எதிர்மறையான கூட்டுறவு ஆதிக்க உறவுகளை மேலும் வலுப்படுத்துகிறது. அறிவும் அதிகாரமும் ஒன்றிணைந்து, மிகவும் நுட்பமான முறையில், புலன்களுக்கு புலப்படாத வகையில், மனித உறவுகளை

நெறிப்படுத்தி, ஒழுங்கமைத்து, கட்டுப்படுத்தி, மனித வாழ்வுமீது என்றுமில்லாத ஆதிக்கத்தைச் செலுத்தி வருகிறது. அறிவும் அதிகாரமும் கூட்டாக பின்னிவிட்ட ஆதிக்க வலைக்குள் தற்கால மனிதன் மீளமுடியாதவாறு சிக்குப்பட்டுக் கிடக்கிறான் என்ற மையக் கருத்தையே பூக்கோவின் ஆய்வுகள் புலப்படுத்திக் காட்டுகின்றன.

அதிகாரம் பற்றியும் அதன் தோற்றுவாய் பற்றியும் அது மையம் கொள்ளும் நிறுவனங்கள் பற்றியும் காலம் காலமாக நம்பப்பட்டு வந்த கருத்துக்களை பூக்கோவின் விசாரணைகள் தகர்த்து விட முனைகின்றன.

அதிகாரமானது சமூகப் படிநிலையின் சிகரத்தின் மீது குவிந்து கிடக்கவில்லை. அல்லது அரசின் நிர்வாகச் சிம்மாசனத்திலிருந்து ஆட்சி புரியவில்லை. அன்றி, அது ஆளும் வர்க்கத்தின் அசையாச் சொத்துமல்ல. அதிகாரமானது எந்தவொரு மையத்திலிருந்தும் பிரவாகம் எடுக்கவில்லை. அது எங்கும், எல்லா இடங்களிலும் வியாபித்து நிற்கிறது. எங்கெங்கெல்லாம் மனிதர்கள் உறவுகொண்டு, கூட்டாக, குழுவாக அமைப்பாக இயங்குகிறார்களோ, அங்கெல்லாம் அதிகார உறவுகள் இருக்கத்தான் செய்கிறது. அதிகாரம் மையம் கொள்ளும் நுண் தளங்கள் (Micro-Centers of Power) பல ரகமானவை. அது குடும்பத்திலும் இருக்கிறது. கோவில் நிர்வாகத்திலும் இருக்கிறது. அதிகாரம் என்பது அரசியலுக்குச் சொந்தமானதல்ல. அதன் வீச்சு பரந்தது. அது சிறிய அளவிலும் பெரிய அளவிலும் எல்லா சமூக நிறுவனங்களிலும் பரந்து செறிந்து கிடக்கிறது என்கிறார் பூக்கோ.

தற்கால சமூக வாழ்வில் அதிகாரம் எவ்வாறு மேலாண்மை செலுத்துகிறது? அது எவ்விதம் செயற்படுத்தப்படுகிறது? அதிகாரத்தை வலுப்படுத்தி, நிலைப்படுத்தி, செயற்படுத்துவதில் அறிவுலகங்களும் அவை சார்ந்த நிறுவனங்களும் எவ்வாறு துணை போகின்றன? இந்தக் கேள்விகளுக்கு விடை காணும் வகையில், குற்றவியல், பாலியல், மனநோயியல், போன்ற துறைகளில் ஆழமான அகழாய்வை நிகழ்த்திப் பல



உண்மைகளைத் தோண்டி எடுத்திருக்கிறார் பூக்கோ. இந்த 'அகழாய்வு' சமூகத்தின் அடித்தளத்திற்கும் அடியிலுள்ள பாதாள உலகத்திற்கும் அவரை இட்டுச் சென்றது. அங்கு வசித்த 'மனிதப் பேய்களின்' இருண்மையான வாழ்க்கை அனுபவம் அவரை வெகுவாகக் கவர்ந்தது. கொலைகாரர்கள், குற்றவாளிகள், பைத்தியக்காரர்கள், காமுகர்கள் என்ற முத்திரைகள் குத்தி இவர்களை வேண்டாதோராக, தீண்டாதோராகச் சமூகம் விலக்கி வைத்திருந்தது; ஒதுக்கி வைத்திருந்தது. இவர்கள் சமூகம் வரித்து விட்ட ஒழுக்க நெறிக்குள் வாழ மறுத்தவர்கள். சமூகத்தின் கட்டுப்பாடுகளை மீறியவர்கள். சமூகம் எண்ணியபடி சிந்திக்க மறுத்தவர்கள். சமூகத்தின் நியமங்களை நிராகரித்தவர்கள். இந்த அந்நியமானவர்களின் அனுபவக் கிடங்கிற்குள் இருப்பின் உண்மைகள் பல ஒளிந்து கிடந்தன. இந்த அனுபவக் கிடங்குகளை அகழாய்வு செய்தார் பூக்கோ.

நூலக நிலவறைகளின் இருளுக்குள் நீண்ட காலமாக மறைந்திருந்த பழைய குற்றவியல் ஆவணங்களைத் தோண்டிப் பார்த்த பொழுது அந்தக் கொலைச் சம்பவத்தை அவர் கண்டு பிடித்தார். 1835இல் நோர்மண்டியிலுள்ள ஒரு கிராமத்தில் அந்தக் குடும்பக் கொலை நிகழ்ந்தது. பியர் ரிவியே (Pierre Riviere) என்ற 20 வயது நிரம்பிய ஒரு இளம் விவசாயி, கர்ப்பிணியான தனது தாயாரையும் 18 வயதுடைய தனது சகோதரியையும் 17 வயதுடைய தனது சகோதரனையும் கொலை செய்தான். கைக் கோடாரி ஒன்றால் மண்டைகளைப் பிளந்து மிகக் கோரமான முறையில் இந்தக் கொலைகளைப் புரிந்துவிட்டு தலைமறைவாகிய அவனை, சில நாட்களின் பின்னர் காவற்துறையினர் கைது செய்தனர். அன்று, பிரான்ஸ் நாட்டில் இந்தக் கொலைச் சம்பவம் மிகவும் பரபரப்பை ஏற்படுத்தியது. நீதிமன்றத்தில் நீண்ட விசாரணை நடந்தது. அவனைப் பைத்தியக்காரனாக நீதிமன்றம் கண்டது. இறுதியில், பியர் ரிவியேக்கு ஆயுட் தண்டனை விதிக்கப்பட்டது. சிறையில் நான்கு ஆண்டுகளைக் கழித்த

பின்னர் அவன் தற்கொலை செய்து கொண்டான்.

இந்தக் கொலை வழக்கில் ஒரு விடயம் பூக்கோவின் கவனத்தை ஈர்ந்தது. கொலையாளியான பியர் ரிவியே, வழக்கு விசாரணை நிகழ்ந்து கொண்டிருந்த காலகட்டத்தில் தனது சுயசரிதையைச் சுருக்கமாக எழுதியிருந்தான். கையெழுத்தில் நாற்பது பக்கங்களைக் கொண்ட இந்த ஆவணத்தில், ரிவியே தனது குடும்ப வாழ்வனுபவத்தைத் துல்லியமாக விபரித்திருக்கிறான். தனக்கும் தனது பெற்றோருக்கும் மத்தியிலான சிக்கலான உறவு பற்றியும் தனது மனவுலகச் சலனங்கள் பற்றியும் தாய் சகோதரர்கள் மீது தான் கொண்டிருந்த வக்கிர உணர்வுகள் பற்றியும் கொலைகள் செய்வதற்குத் தன்னைத் தூண்டிய காரணிகள் பற்றியும் மிகவும் துலக்கமாக, விளக்கமாக, சித்தத் தெளிவுடன் அவன் எழுதியிருக்கிறான். உண்மை விளக்கமாக, ஒப்புதல் வாக்குமூலமாக அமைந்த இந்த முக்கிய ஆவணம் வழக்கு விசாரணையின்போது இருட்டடிப்புச் செய்யப்பட்டமை பூக்கோவுக்கு வியப்பைக் கொடுத்தது. ரிவியேயின் சொந்தக் கதை கேட்பார் எவருமின்றி சட்டத்தின் இருட்டறைக்குள் புதைக்கப்பட்டது ஏன்? அவனது விபரீத செயலுக்கு அவன் கொடுத்த விளக்கத்தை நீதியுலகம் கருத்தில் எடுக்காதது ஏன்? அவனது ஆன்மாவின் உண்மைக் குரலை மறைத்து விட்டு, மற்றவர்களின் மதிப்பாய்விலிருந்து அவனுக்குப் பைத்தியப் பட்டம் வழங்கப்பட்டது ஏன்? இவை பற்றி 'அகழாய்வு' செய்த பூக்கோ இந்தச் சமூக நிகழ்வின் முழுப் பரிமாணத்தையும் விளக்கும் நோக்கில் 1973ஆம் ஆண்டு ஒரு சிறு நூலை வெளியிட்டார். இவ்வழக்குத் தொடர்பான முக்கிய ஆவணங்களை இந்நூல் தொகுத்துத் தருகிறது. இந்தத் தொகுப்பில், அரச தரப்பு வழக்கறிஞரின் குற்றப்பத்திரிகை, சட்டவாளரின் வாதங்கள், சாட்சிகளின் வாக்குமூலங்கள், மருத்துவரின் மதிப்பாய்வுகள், மனவியல் நிபுணரின் கருத்துரைகள், நீதிபதியின் குறிப்புகள், பத்திரிகைகளின் செய்தி அறிக்கைகள் எனப் பல ஆவணங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. நூலின் மையப்



பகுதியில் பியர் ரிவியேயின் சுயசரிதை, அவன் எழுதியபடியே திருத்தமின்றிப் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. நூலின் பிற்பகுதி பூக்கோவினதும் வேறு சிலரதும் கருத்துரைகள் கொண்டதாக அமைகிறது.

நீதிமன்றத் தீர்ப்பு பற்றியோ குற்றவாளியின் குற்றச்செயல் பற்றியோ இந்த நூலில் எவ்வித விமர்சனங்களோ வியாக்கியானங்களோ தரப்படவில்லை. அது தமது நோக்கமில்லை என்கிறார் பூக்கோ. ஒரு சம்பவத்தை, ஒரு சமூக நிகழ்வை, ஒரு மனிதன் புரிந்த குரூரச் செயலை, அந்தச் செயலோடு சம்பந்தப்படாத மற்றவர்கள், பல்வேறு துறைசார்ந்த நிபுணர்கள், அறிஞர்கள், அதிகாரிகள் எவ்வாறு அணுகுகிறார்கள், எவ்வாறு பார்க்கிறார்கள், எவ்வாறு மதிப்பாய்வு செய்கிறார்கள் என்பதை இந்நூல் சூசகமாகச் சுட்டிக் காட்ட விழைகிறது. இந்த நிகழ்வில் பல்வேறு அறிவுலகங்கள் சங்கமிக்கின்றன. சட்டம், மருத்துவம், மனவியல், மனநோயியல், குற்றவியல் போன்ற பல்வேறு அறிவுலகங்களின் கருத்தாடல் களமாக இந்த நிகழ்வு அமைகிறது. இந்த அறிவுலகக் கருத்தாடலில் இச் செயலுக்குப் பொறுப்பாளியான, இந்நிகழ்வின் கதா நாயகனான பியர் ரிவியேயின் கருத்தை எவருமே கருத்தில் எடுக்கவில்லை. அவனது கருத்தைக் கருத்தாகவும் கருதவில்லை. அவனது செயலை வைத்தே அவனை ஒரு பித்தனாக, சித்தக் கோளாறு பிடித்தவனாக அறிவுலகங்கள் தீர்மானித்து விடுகின்றன. ஆனால் ரிவியே மௌனியாக நிற்கவில்லை. சாவின் விளிம்பில் நின்றபடி, அவன் தனது சரித்திரத்தை எழுதியிருக்கிறான். தனது எண்ணங்களை எழுத்தில் வார்த்து, தனது செயலுக்குக் காரணம் கற்பித்திருக்கிறான். அந்தச் சுயசரிதையில் தனது தாயை ஒரு கொடியவளாகச் சித்தரித்திருக்கிறான். நல்ல மனிதரான தனது தந்தையை முழுக் குடும்பமும் சேர்ந்து வதைத்து வந்ததாகச் சொல்லியிருக்கிறான். "நான் எனது தந்தையை மிகவும் ஆழமாக நேசித்தேன். அவர் அனுபவித்த துன்பம் எனது மனதை புண்படுத்தியது. கடைசி நாட்களில் அவர்

பட்ட துயரமும் சோதனையும் என்னை ஆழமாகப் பாதித்தது. இது பற்றிய எண்ணங்களே என்னை முழுமையாக ஆட்கொண்டது. ஒரு மாதத்திற்கு முன்னரே அந்தப் பயங்கரத் திட்டம் பற்றி நான் எனது மனதில் ஒரு படத்தை வரைந்து கொண்டேன். எனது தாய், சகோதரன், சகோதரி மீது நான் அன்பும் மதிப்பும் கொள்ள வேண்டும் எனக் கூறும் அறப் பண்புகள் எனது மனதிலிருந்து மறைந்து கொண்டன. விசர் நாய்களின், கொடிய விலங்குகளின் அதிகாரப் பிடிக்குள் சிக்கி அவலப்பட்டு வரும் எனது தந்தைக்காக ஆயுதம் ஏந்த வேண்டும் என நான் நினைத்தேன். இப்படியான கொடும் செயலை மதமானது தடைசெய்திருக்கிறது என்பதும் எனக்குத் தெரியும். ஆனால் மதத்தின் நெறிகளை நான் கருத்தில் எடுக்கவில்லை. என் மூலமாக தனது தெய்வீக நீதியை நிறைவு செய்ய இறைவன் விதித்திருக்கலாம் என்றும் கூட எண்ணினேன். மனிதர்களின் தர்மம் பற்றியும் சமூக ஒழுங்கமைப்பின் விதிகள் பற்றியும் நான் அறிவேன். மனிதர்கள் மானம் கெட்டவர்கள்; இழிசனர்கள். இவர்களை விட நான் புத்திசாலி... நான் மனித சட்டங்களை மறுதலிக்கத் துணிந்தேன். எனது தந்தைக்காக எனது உயிரையும் அர்ப்பணிப்பதில் நான் அழியாப் புகழையும் இறவா நிலையையும் அடையலாமென நினைத்தேன்... ஒரு அரசனுக்காக, ஒரு நாட்டிற்காக எத்தனையோ போர் வீரர்கள் மடிந்து போகிறார்கள்... மன்னனைத் தெரியாதவர்கள் மன்னனின் இலட்சியத்திற்காக மடியும் பொழுது, நான் நேசித்து வழிபடும் என் தந்தைக்காக, என் தந்தையின் விடிவிற்காக எனது உயிரை மாய்த்துக் கொள்ளக் கூடாதா?... இப்படியான எண்ணங்கள் எனது மனத்திரையில் ஓடி, எனது செயலுக்குத் தூபமிட்டன..." என்று எழுதியிருக்கிறான் ரிவியே.

இது ஒரு பைத்தியக்காரனின் அர்த்தமற்ற பிதற்றலல்ல என்கிறார் பூக்கோ. ரிவியேயின் எழுத்துகளில் ஒரு தர்க்கீகம் இழையோடுகிறது. காரண காரியத் தொடர்புடையதான ஒரு உள்நோக்கம் இருக்கிறது. அவனது



எழுத்துகளில் ஒரு விபரீதமான ஆசை புதைந்து கிடக்கிறது. அந்த விபரீதமான ஆசைக்கும், எழுத்துக்கும், செயலுக்கும் மத்தியில் பிரிக்கமுடியாத ஒரு தொடர்பு இருக்கிறது. இவற்றிற்கெல்லாம் கதாநாயகன் அவனேதான். அந்தக் கதாநாயகனின் குரலை, தனது செயலுக்கு அர்த்தம் கற்பிக்கும் தர்க்கீகத்தை, சமூக உலகமானது கருத்தில் கொள்ளவில்லை என்கிறார் பூக்கோ. சமூகத்திற்கு ஒரு தர்க்கீகம் இருக்கிறது. நியாயப்பாடு இருக்கிறது. நியமம் இருக்கிறது. அந்தத் தர்க்கீகத்திற்கும் நெறிகளுக்கும் பொருந்தாத குரல்களை, பைத்திய உலகத்தின் இருளறைக்குள் மூடிவிடுகிறது சமூகம். அப்படியான ஒரு மனிதக் குரலையே வரலாற்றின் புதைகுழியிலிருந்து மீட்டெடுக்க முனைந்திருக்கிறார் பூக்கோ.

வழக்காடல் என்ற சமூக நிகழ்வில் சொல்லாடல் நிகழ்கிறது. அறிவுலக நிபுணர்களின் கருத்துப் போர் நிகழ்கிறது. அறிவுலகங்கள் ஒன்றோடு ஒன்று பலப்பரீட்சை நடத்தி அதிகார உலகத்திற்கு சேவையாற்றும் ஒரு விந்தையான நிகழ்வே இங்கு இடம்பெறுகிறது. நீதிதேவன் குடியிருக்கும் கோவிலல்ல நீதிமன்றம். அது அதிகாரம் கோலோச்சும் நிறுவனம். இங்கு அறிவுலக நிபுணத்துவம் அதிகாரத்தை நியாயப்படுத்தி, அதிகாரத்தின் கரங்களை வலுப்படுத்த முனைகிறது. அறிவும் அதிகாரமும் கூட்டுச் சேர்ந்து அரங்கேற்றும் ஒரு சமூக நாடகமாகவே பியர் ரிவியேயின் கொலை வழக்கை சித்தரிக்கிறார் பூக்கோ. இது கதாநாயகனின் கருத்தாடல் நிகழாத ஊமை நாடகம் என்பது அவரது கருத்து.

நீதிமுறை பற்றியும் குற்றவியல் பற்றியும் தொடர்ந்து ஆய்வுகளை நிகழ்த்திய பூக்கோ, 1975இல் 'ஒழுங்கும் தண்டனையும்: சிறையில் பிறப்பு' (Discipline and Punish: The Birth of the Prison) என்ற நூலை வெளியிட்டார். ஆரம்பத்தில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்திய இந்த ஆய்வு நூல் ஈற்றில் பூக்கோவுக்கு அனைத்துலகப் புகழை ஈட்டிக் கொடுத்தது.

தண்டனையின் சகல பரிமாணங்களையும் இந்த

நூல் அகழாய்வு செய்கிறது. தண்டனை என்பது அதிகார வெளிப்பாட்டின் ஒரு வடிவம். மனிதர்கள் மீது ஆதிக்கம் பிரயோகிக்கும் உத்தி. சமூகத்தைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் ஒரு நடைமுறை. தண்டனையானது எல்லாக் காலங்களிலும், எல்லாச் சமூகங்களிலும் இருந்து வருகிறது. அன்றொரு காலம் உடலை வதைக்கும் உத்தியாக கையாளப்பட்ட இந்நடைமுறை, இன்று 'ஆன்மாவை' சீர்திருத்தும் ஒழுங்குமுறைகளைக் கொண்டதாக புதிய பரிணாமம் எடுத்திருக்கிறது. இன்று தண்டனையின் முகம் மாறியிருக்கிறது. தண்டிக்கும் உத்திகள் மாறியிருக்கின்றன. தண்டனை என்ற போர்வையில், அதிகார உலகமானது மிகவும் நுட்பமான முறையில் மனிதர்களை நெறிப்படுத்தி, கட்டுப்படுத்தி சமூகப் பொம்மைகளாக மாற்றி வருகிறது. அதிகாரத்தின் இந்தச் செயல்நுட்ப வளர்ச்சிக்கு அறிவுலகங்கள் துணைபோகின்றன. இந்த மையக் கருத்தையே இந்நூல் மிகவும் திறம்பட எடுத்து விளக்குகிறது. இது பற்றி இனி விபரமாகப் பார்ப்போம்.

## II

உடலை வதைசெய்யும் கொடூரத்திலிருந்து உள்ளத்தை வனையும் ஒழுங்குமுறை நுட்பமாக தண்டனையின் தந்திரோபாயம் மாற்றம் கண்டிருக்கும் வரலாற்றுக் கதையை 'ஒழுங்கும் தண்டனையும்' எடுத்துரைக்கிறது. அன்றைய காலத்து ஒரு கோரமான மரண தண்டனையை விவரணம் செய்து தனது நூலை ஆரம்பிக்கிறார் பூக்கோ.

1757ஆம் ஆண்டு, மார்ச் மாதம் பிரான்ஸ் நாட்டில் நிகழ்ந்த சம்பவம் அது. லூயி மன்னனைக் கொலை செய்ய முயற்சித்ததாக டேமியன் என்ற பொதுமகன் மீது குற்றம் சுமத்தப்படுகிறது. ஒரு பேனாக் கத்தியால் தாக்கி பிரஞ்சு மன்னனுக்கு சிறிய காயத்தை ஏற்படுத்தியிருந்தான் டேமியன். ஆயினும், அரச கொலை முயற்சி எனக் குற்றம் சுமத்தப்பட்டு அவனுக்குப் பகிரங்க மரண தண்டனை



விதிக்கப்பட்டது. இம்மரண தண்டனை எவ்விதமான உடல்வதையுடன் நிறைவு செய்யப்பட வேண்டும் என்பதை அன்றைய அரச கட்டளை கீழ்க்கண்டவாறு விதித்தது:

"வெந்தணலில் வேகிய குறடுகளைக் கொண்டு அவனது மார்பிலிருந்தும், புயத்திலிருந்தும், தொடையிலிருந்தும் தசைகள் பிய்த்து எடுக்கப்படவேண்டும். தசைகள் கிழிக்கப்பட்ட காயங்கள் மீது உருக்கிய ஈயமும், கொதிக்கும் எண்ணெய்யும் ஊற்றப்பட வேண்டும். மன்னனை கொலைசெய்யும் நோக்குடன் கத்தியேந்திய அவனது வலது கரத்தை கந்தக அமிலத்தால் எரிவூட்டிப் பொசுக்க வேண்டும். பின்னர், அவனது கைகளையும் கால்களையும் நாற்கோணமாக, நான்கு குதிரைகளில் கட்டியிழுத்து, நான்கு துண்டங்களாக அவனது உடலைப் பிய்த்தெறிய வேண்டும். ஈற்றில் துண்டாடப்பட்ட சதைப்பிண்டங்களை ஒன்று குவித்து அதனைத் தீ மூட்டி எரிக்க வேண்டும்."

இந்தக் கோரமான சித்திரவதை எவ்வாறு நிகழ்த்தப்பட்டது என்ற விபரத்தையும் அந்தக் கொடுமைக்கு ஆளான மனிதன் கூச்சலிட்டுக் குளறி அழுது துடி துடித்து இறந்த கோரத்தையும் அந்தச் சம்பவத்தை நேரில் கண்டவர்கள் எழுதிய குறிப்புகளிலிருந்து விபரிக்கின்றார் பூக்கோ. உடல் வதையைத் தாங்கமுடியாது, "கடவுளே, என் மீது இரக்கம் காட்டும். யேசுவே என்னைக் காப்பாற்றும்" என அவன் வானதிரக் கத்தியபோது அங்கு நின்ற ஒரு வயோதிபக் குருவானவர் கூட அவனுக்கு ஆறுதல் கூறத் துணியவில்லை. இறுதியில் நான்கு கோணத்திலுமாக நான்கு குதிரைகள் நிறுத்தப்பட்டு, அவன் கைகளிலும் கால்களிலும் கயிற்றினால் கட்டி இழுக்கப்பட்டபோது அவனது கைகால்கள் கிழிபடவில்லை. நீண்ட நேரமாக பல தடவைகள் குதிரைகளைக் கொண்டு முயன்றும் முடியவில்லை. இறுதியில் அவனது கை கால்களைக் கத்தியால் வெட்டித் துண்டித்து, துண்டாடப்பட்ட சதைப் பிண்டங்கள் மீது விறகுகள் குவித்து தீ மூட்டி எரிக்கப்பட்டதாம். இந்தப் பகிரங்க மரண தண்டனையை நிறைவு செய்ய பல மணிநேரம் சென்றதாம்.

உடல் உபாதையின் உச்சமாக இந்த மரண தண்டனை அமைந்தது. குற்றத்தை மிஞ்சியதாக டேமியனுக்கு இக்கொடூர தண்டனை வழங்கப்பட்டதற்குக் காரணம் இல்லாமல் இல்லை. அக்காலத்தில், பழைய ஐரோப்பிய ஆட்சியமைப்பில், தண்டனையானது மனுநீதியின் அளவுகோலால் தீர்மானிக்கப்படவில்லை. மாறாக அது ஒரு அரசியல் யுக்தியாக, அரச ஆட்சியின் அதிகாரத்தை குறியீடு செய்வதாக அமைந்தது என்கிறார் பூக்கோ. அன்றைய கருத்துலகமும் அரச ஆட்சியை அலாதியான முறையில் நியாயப்படுத்தி நின்றது. அரசன் என்பவன் ஆண்டவனின் பிரதிநிதி என்றும், அவனது ஆளும் அதிகாரம் அவனுக்கு அருளப்பட்ட தெய்வீக உரிமை என்றும், முடியாட்சி என்பது பூமியில் நிகழும் இறையாட்சி என்றும் கருத்துகள் விதையூன்றிய காலமது. எனவே, அரசனை எதிர்ப்பது மகாபாதகமான குற்றம். அது ஆண்டவனை எதிர்ப்பதற்கு நிகர். தெய்வீகத் திருவருளால் நிகழும் முடியாட்சியை மறுப்பதற்கு நேர். இது மரண தண்டனைக்குரிய குற்றம். இம் மரண தண்டனை குடிமக்களுக்கு குலைநடுக்கத்தைக் கொடுப்பதாக அமைய வேண்டும். கடும் எச்சரிக்கையாக அமைய வேண்டும். அத்தோடு, அரச அதிகாரத்தை, மேலாதிக்கத்தை குறியீடு செய்வதாக இருக்க வேண்டும். இதற்கு இரு வழிமுறைகள் கையாளப்பட்டன. ஒன்று மிகக் கொடூரமான உடல் வதையாகத் தண்டனை நிறைவேற்றுவது, மற்றது தண்டனையைப் பகிரங்கமான முறையில் வெகுசனக் கண்காட்சியாக நிகழ்த்துவது. இந்த வகையில் பகிரங்க மரண தண்டனை என்பது ஒரு சூசகமான அரசியல் நாடகம் என்கிறார் பூக்கோ. ஒரு குறியீட்டு அரசியல் நாடகம். இதன் கதா நாயகன் மரணத்தை சுமந்து நிற்கும் குற்றவாளியல்ல. வெகுசனமே இந்த நாடகத்தின் பிரதான பாத்திரம். இங்கு பொதுமக்கள் சாட்சிகளாக மட்டும் நிற்கவில்லை. அவர்களும் இப்பகிரங்க நாடகத்தில் பங்குகொள்கிறார்கள். உணர்ச்சிவசப்பட்டு, ஆவேசப்பட்டு, குரலெழுப்பி மக்களும் இந் நாடகத்தில் பாத்திரம் ஏற்கிறார்கள் என்பது



பூக்கோவின் வாதம்.

இந்தத் 'தூக்கு மேடை நாடகங்கள்', சில சமயங்களில், விபரீதமான திருப்பங்களையும் எடுப்பதுண்டு. அவை, மக்களின் நீண்டகால அரசியல் தூக்கத்தைக் கலைத்து அவர்களைக் கிளர்ச்சிக்கு தூண்டி விடுவதுண்டு. பிரஞ்சுப் புரட்சிக்கு அண்மிய காலத்தில் இவ்வித பூகம்ப நிகழ்வுகள் இடம்பெற்றதாக கூறுகிறார் பூக்கோ.

மரண மேடையைச் சூழ மக்கள் கூட்டம் திரள்கிறது. மரணிக்கப்போகும் ஒரு மனிதனின் மரண அவலத்தைக் கண்டுகளிக்க மக்கள் இங்கு கூடவில்லை. குற்றவாளியாக நிற்பவன் ஒரு புரட்சிவாதி. முடியாட்சியோடு முண்டிய கிளர்ச்சிக்காரன். அடக்குமுறைக்கு எதிராகக் குரல்கொடுத்த ஒரு பொதுமகன். சருகாக நசுக்கப்பட்ட வெகுசனத்தில் ஒருவன். சத்தியத்திற்காக அவன் சாவைச் சந்திக்க மேடையேறுகிறான். சாவு நிச்சயம் என்பதால், அதிகாரத்தை எதிர்க்கும் அபாரத் துணிவு அவனுக்கு ஏற்படுகிறது. மரண மேடையில் நின்று மக்களுக்கு குரல் கொடுக்கிறான். அரசுக்கு எதிரான தனது ஆத்திரத்தைக் கொட்டுகிறான். உண்மையைச் சொல்கிறான். சாவின் விளிம்பில் தொங்கி நிற்கும் அந்த ஒரு கணத்தில் மக்களின் ஆன்மாவை அவன் ஆழமாகத் தொட்டு விடுகிறான். மன்னனின் விரோதியாக மரணத்தை தழுவும் அவன் மக்களின் தியாகியாக மாறிவிடுகிறான். அவனது சாவுடன் தூக்குமேடை புரட்சியின் மையமாக மாறுகிறது. அரசனின் அதிகார வன்முறைக்கு எதிராக மக்களின் கிளர்ச்சிகர வன்முறை வெடிக்கிறது.

பிரஞ்சுப் புரட்சிக்குப் பிந்திய காலத்தில், மக்களாட்சி யுகத்தில், தண்டனை வடிவத்தில் மாறுதல்கள் ஏற்படத் தொடங்கியது என்கிறார் பூக்கோ. கொடூரமான சித்திரவதைகளும் பகிரங்க மரண தண்டனைகளும் நிறுத்தப்பட்டன. இரக்க சிந்தையால், காருணியத்தால், மனிதவதை அகல வேண்டும் என்ற மனித நேயத்தால் இம்மாற்றம் நிகழவில்லை. உடலை வதைக்காமல், உயிரைப் பறிக்காமல், மனிதர்களைத் தண்டிக்கும் புதிய வழிகளை அறிவுலகம் காட்டியது. உடலை வதைக்கும்

அநாகரீக முறைக்குப் பதிலாக 'ஆன்மாவைத்' தண்டிக்கும் 'நாகரீகமான' முறைகள் நடைமுறைக்கு வந்தன. மனதை வனைந்து, மனிதனை சீர்திருத்தி, அவனைக் கண்காணித்து, கட்டுப்படுத்தி, சமூக ஒழுங்கமைப்பிற்கு ஒத்திசைவாக நெறிப்படுத்தும் புதிய உபாயங்கள் நடைமுறைக்கு வந்தன. அக்கால அரசர்களின் தண்டனை முறையைவிட இக்கால அரசியல்வாதிகளின் தண்டனை முறை அடிப்படையில் வித்தியாசமானது, நுட்பமானது என்கிறார் பூக்கோ.

"அதிகாரத்தின் இரும்புச் சங்கிலியால் இறுகப் பிணைத்து குடிமக்களை அடிமைகளாக நடத்தினான் அக்காலத்து மூட அரசன். ஆனால் இக்காலத்து அரசியல்வாதிகளோ, தமது அறிவுநுட்பத்தால் மக்களை அடிமை கொண்டு விடுகிறார்கள். கருத்துகளின் ஆதிக்கச் சங்கிலியால் அவர்கள் மக்களை விலங்கிட்டு வைத்திருக்கிறார்கள். அரசனின் அதிகாரப் பிணைப்பை விட அரசியல்வாதிகளின் ஆதிக்கப்பிடி இறுக்கமானது, வலுவானது. மக்களை விலங்கிட்டு வைத்திருக்கும் ஆதிக்கச் சங்கிலியின் மறுமுனை அரசியல்வாதிகளின் கையில்தான் இருக்கிறது. இந்த ஆதிக்கப் பிடியின் சூட்சுமமான தன்மையை நாம் இலகுவில் புரிந்து கொள்ள முடியாது... இரும்புச் சங்கிலியின் இறுக்கமான பிடி காலத்தால் சிதையுண்டு போகலாம். ஆனால் கருத்து விலங்குகளின் அதிகாரப் பிணைப்பிலிருந்து மீளுவது கடினம்... மூளையத்தின் மென்மையான நூலிழைகள் மீதுதான் வல்லாதிக்கப் பேரரசுகளின் வன்மையான அடித் தளங்கள் கட்டப்படுகின்றன" என்று பிரஞ்சு குற்றவியல் அறிஞன் ஒருவன் எழுதியதை மேற்கோள் காட்டுகிறார் பூக்கோ.

அதிகாரத்தின் அழியாத கோடுகளை மனதின் ஆழத்தில் பொறித்துவிடுவது எப்படி? குற்றவாளிகள் எனப்படும் சமூக ஒழுங்கை மீறும் மனிதர்களை மனவிலங்கிட்டு கட்டுப்படுத்துவது எப்படி? குற்றத்திற்கு பழிவாங்கும் செயலாகத் தண்டனையை வழங்காமல் குற்றத்தைத் தடுக்கும் நோக்கில் தண்டனையைக்



கையாளுவது எப்படி? இந்தக் கேள்விகளுடன் குற்றவாளிக-ளின் மனவுலகை மாற்றியமைப்பது பற்றி அறிவுலகங்கள் ஆராயத் தொடங்கின. இதன் பயனாக புதிய கோட்பாடுகள் பிறந்தன. புதிய தண்டனை உத்திகள் கண்டுபிடிக்கப்பட்டன. சிறைகள் தோன்றின. சிறைவாழ்வில் கடுமையான ஒழுங்குமுறைகளும் கட்டுப்பாடுகளும் நடைமுறைக்கு வந்தன. பத்தொன்பதாம் நூற்றாண்டின் பின்பகுதியில், ஐரோப்பிய உலகில் தண்டனையின் வடிவம் மாறியது என்கிறார் பூக்கோ.

ஒழுங்குமுறைதான் (Dicipline) இப்புதிய தண்டனை வடிவத்தின் மையக் கோட்பாடு. ஒழுங்கு என்பது கட்டுப்பாடான நடத்தை. அதாவது, அதிகாரம் விதித்த விதிகளுக்குப் பணிந்து நடப்பது. அதிகாரம் வரித்த நியதிகளுக்கு ஒட்டி ஒழுகுவது. மனித மனதை ஒருநிலைப்படுத்தி, கட்டுப்படுத்தி, சமூக ஒழுங்கமைப்பிற்கு ஒத்திசைவாக நெறிப்படுத்துவதற்கு ஒழுங்கு இன்றியமையாதது. சமூக ஒழுங்கை மீறி, ஒழுங்கீனமாக நடக்கும் அசாதாரண மனிதர்களை, ஒழுக்கமான, 'சாதாரண' மனிதர்களாக மாற்றியமைப்பதற்கு இது சாலச் சிறந்த வழி. மனிதர்கள் மீது ஆதிக்கம் செலுத்தி, அவர்களைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்குக் கையாளப்படும் நவீன உத்தி. இந்த ஒழுங்கு முறைதான் சிறைநிர்வாக உலகின் புதிய தண்டனை வடிவமாக உருவாக்கம் பெற்றிருக்கிறது என்கிறார் பூக்கோ.

பாரிஸ் நகரச் சிறையொன்றில் ஒழுங்கு எவ்வாறு பேணப்படுகிறது என்பதைச் சுட்டிக் காட்ட கீழ்க்கண்ட உதாரணத்தைத் தருகிறார் பூக்கோ.

மாரி காலத்தில், சிறைக் கைதிகள் காலை ஆறு மணிக்கு எழுந்து கொள்ள வேண்டும். கோடை காலத்தில், காலை ஐந்து மணிக்கு எழுந்து கொள்ள வேண்டும். கைதிகள் தினமும் ஒன்பது மணிநேரம் வரை வருடம் பூராகவும் வேலை செய்ய வேண்டும். அவர்களுக்கு தினமும் இரண்டு மணிநேரம் அறிவுரை வகுப்புகள் நடத்தப்படும்.

காலையில் முதலாவது தடவையாக முரசு முழங்க

கைதிகள் தூக்கத்திலிருந்து எழுந்து மௌனமாக ஆடைகளை அணியவேண்டும். அப்பொழுது சிறைக்காவலர்கள் சிறைக்கூட அறைகளை திறந்துவிடுவர். இரண்டாவது தடவையாக முரசு முழங்கும் பொழுது கைதிகள் ஆடைகளை அணிந்து கொண்டு தமது படுக்கைகளை சீர் செய்து முடிக்க வேண்டும். மூன்றாவது தடவையாக முரசு முழங்கும் பொழுது அவர்கள் வரிசை யாக அணிவகுத்து காலை வணக்கத்திற்காக கோவிலுக்குச் செல்ல வேண்டும். ஐந்து நிமிடங்கள் இடைவெளியுடையதாக இம் முரசொலி முழங்கும்.

இப்படியாகக் காலையில் எழுவது தொடங்கி இரவு படுக்கைக்குச் செல்லும் வரை, கைதிகளின் சாப்பாட்டு நேரம், வேலை நேரம், வகுப்பு நேரம், வணக்க நேரம் எனக் காலம் ஒடுக்கப்பட்டுள்ளது.

சிறைகளில் ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் பேணுவதற்குப் பொதுவான விதிகள் வகுக்கப்பட்டுள்ளன என்கிறார் பூக்கோ. இதில் முக்கியமானது கால அட்டவணை. அது நேரத்தை வகுத்து, காலத்தை சீரொழுங்கு செய்து மனித செயற்பாடுகளை காலவரிசையில் நெறிப்படுத்த உதவுகிறது. வீண் காலம் கழிப்பதைத் தவிர்க்கவும், கட்டுப்பாடான நடத்தையை வளர்க்கவும் துணைபுரிகிறது. அடுத்தது உடற்பயிற்சி. தினமும் ஒழுங்காக, ஒரு குறிப்பிட்ட நேரத்திற்கு உடலுக்குப் பயிற்சி கொடுப்பது உடல் நலனைப் பேணுவது மட்டுமன்றி, உடல் வாயிலாக மனதைப் பயிற்றுவிக்கவும் உதவுகிறது. அடுத்ததாக கூட்டுச் செயற்பாடு. மற்றவர்களுடன் ஒன்றிணைந்து, ஒழுங்காக கூட்டாக செயற்படுவது கட்டுப்பாடான சமூக நடத்தைக்கு தனிமனிதர்களைப் பயிற்றுவிப்பதாக அமையும். அதிகாரத்திற்குப் பணிந்து, கூட்டாக ஒழுகும் ஒழுங்குமுறைக்கு இது இன்றியமையாதது.

சிறைகளில் கட்டுப்பாட்டை நிறுவுவதற்கு கண்காணிப்பு முக்கியமானது. இது ஒழுங்கு முறையின் மறுமுகம் என்கிறார் பூக்கோ. இங்கு கண்காணிப்பு என்பது மற்றவர்களுக்குத் தெரியாதவாறு மற்றவர்களை



அவதானிக்கும் நடைமுறையைக் குறிக்கிறது. ஒவ்வொரு மனிதனும் எப்படி நடந்து கொள்கிறான், மற்றவர்களுடன் எப்படி உறவு கொள்கிறான் என்பதைக் கூர்மையாக அவதானித்து ஒவ்வொருவனது போக்கையும், நடத்தையையும், ஆளுமையையும் மதிப்பீடு செய்ய இந்த மேற்பார்வை அவசியமானது. ஒழுங்கு விதிகள் பேணப்படுகிறதா அன்றி மீறப்படுகிறதா என்பதை அறிந்து கொள்வதற்கு சிறை நிர்வாகத்தினருக்கு இது தேவையானது. இந்த நோக்கில் சிறைக் கட்டிட அமைப்புகளும் உருவாகின. ஒரே இடத்திலிருந்து சகலரையும் கண்காணிக்கும் நோக்கத்துடன் வட்ட கோண வடிவான (Panopticon) சிறைக் கூடங்கள் அக்காலத்தில் கட்டப்பட்டது என்கிறார் பூக்கோ. கைதிகளின் வசதிக்காக இக் கட்டிடங்கள் எழுப்பப்படவில்லை. இவை அதிகார நுண்நோக்கின் குறியீட்டு வடிவங்கள் என்கிறார் பூக்கோ.

இந்த ஒழுங்கு விதிகள், கட்டுப்பாடுகள், கால அட்டவணைகள், கண்காணிப்புகள் எல்லாம் சிறையுலகத்து சடங்குகள் மட்டுமல்ல. இவை அதிகார உலகத்தின் அரூப கரங்கள் என்பதால் அவை பல்வேறு சமூக நிறுவனங்களிலும் ஊடுருவி நிற்கின்றன. கால நிரல் தொடங்கி கண்காணிப்பு வரை கட்டுப்பாட்டு ஒழுங்கு விதிகள் பாடசாலைகள், பல்கலைக் கழகங்கள், தொழிற்சாலைகள், மருத்துவமனைகள், படைத்துறை முகாம்களாகப் பல்வேறு பொது நிறுவனங்களில் நடைமுறையில் உள்ளன. இவற்றின் தன்மைகள், இயல்புகள் வேறுபட்டாலும், எங்கும் எல்லா இடங்களிலும் அதிகாரத்தின் அகற்சியாக ஒழுங்கும், கட்டுப்பாடும் சமூக உலகத்தை ஆட்கொண்டு நிற்கின்றன என்கிறார் பூக்கோ.

அதிகார மேலாதிக்கத்தைப் பேணுவதற்கு சமூக ஒழுங்கு அவசியமானது. இதனால் இன்று உலகின் எல்லா ஆட்சியமைப்புகளும் சமூக ஒழுங்கிற்கு முதன்மை கொடுக்கின்றன. ஆயினும், 'ஒழுங்கமைவான சமூகம்' என்ற கருத்துருவம் மேற்கு ஐரோப்பிய முதலாளியத்துடன் தோற்றம் கொண்டதாகச் சொல்கிறார் பூக்கோ. பிரபுத்துவ

ஆட்சிமுறையானது அப்பட்டமான வன்முறையைப் பிரயோகித்து சமூக ஒழுங்கை நிறுவ முனைந்தது. ஆனால் முடியவில்லை. பிரபுத்துவத்தின் வன்முறையை, மக்கள் வன்முறையால் எதிர்கொண்டனர். இதனால் சமூக ஒழுங்கு சிதைந்தது. பிரபுத்துவம் வீழ்ந்தது.

ஆனால் முதலாளியம், மிகவும் சூட்சுமமான முறையில், மிகவும் நுணுக்கமான ஆதிக்க உத்திகளைப் பிரயோகித்து சமூக ஒழுங்கை நிலைநாட்டியது. கால அட்டவணை, கட்டுப்பாடு, கண்காணிப்பு என்ற ரீதியில், இறுக்கமான ஒழுங்குமுறையை தொழிற்சாலைகளில் செயற்படுத்தியது. உற்பத்தி முறையை மட்டுமன்றி, சமூக உலகையும் படிப்படியாக இயந்திர மயமாக்கியது. சனநா யகம், மக்களாட்சி, பிரதிநிதித்துவ அரசு என்ற கருத்துருவத் திரையின் பின்னால், முதலாளியத்தின் 'அடக்குமுறைத் தொழில்நுட்பம்' சூசகமாக செயற்படுகிறது. ஒரு சீரான, ஒழுங்கமைவான, கட்டுப்பாடான சமூகமும், ஒரு நிலையாகப் பலமான ஆட்சியும், முதலாளியத்தின் வளர்ச்சிக்கும் எழுச்சிக்கும் இன்றியமையாதவை.

'ஒழுங்கும் தண்டனையும்' என்ற பூக்கோவினது நூலின் கடைசிப் பக்கங்கள், குற்றமும் சிறையும் பற்றிய கோட்பாடுகளைக் கடுமையாக விமர்சிக்க முனைகிறது.

மனிதர்களது சுதந்திரத்தைப் பறித்து, அவர்களது சமூக வாழ்வைத் துண்டித்து, நான்கு சுவர்களுக்கு மத்தியில் அவர்களைத் தடுத்து வைத்து, அவர்களது நடத்தை மீது ஒழுங்கை விதித்து, கட்டுப்பாடுகளைத் திணித்து, அவர்களைக் கண்காணிக்கும் தண்டனை முறையால் குற்றங்கள் ஒழியவில்லை. குற்றவாளிகளும் குறையவில்லை. மாறாக, குற்றங்கள் பெருகி வருகின்றன. குற்றவாளிகளும் பெருகி வருகிறார்கள். சிறைகளும் பெருகி வருகின்றன. சிறை முறையை சீர்திருத்தம் செய்வது பற்றி காலம் காலமாக விவாதங்கள் நடக்கின்றன. விசாரணைகள் நடக்கின்றன. விஞ்ஞான ஆய்வுகளும் நடக்கின்றன. ஆனால் சிறைமுறையை ஒழித்துக் கட்டுவது பற்றி யாருமே சிந்திப்பதில்லை. அன்றுதொட்டு இன்று வரை சிறைகள்



இருக்கவே செய்கின்றன. கட்டிட அமைப்புகளும் கட்டுப்பாடுகளும் மாற்றம் கண்டபோதும், மனிதர்களை சிறை வைக்கும் கோட்பாட்டில் மாற்றம் எதுவும் நிகழவில்லை. அறிவியல் நிபுணர்களும், 'ஆன்ம வைத்தியர்களான' மன இயல் நிபுணர்களும் குற்றவியல் துறைக்குப் புதிய வெளிச்சத்தைக் காட்டியிருக்கிறார்கள். குற்றவாளிகளின் மனக்குகை மர்மங்களை துலக்கியிருக்கிறார்கள். சமூகப் பின்புலத்தை ஆய்வு செய்திருக்கிறார்கள். இந்த வெளிச்சத்தால் குற்றங்கள் பல வகைகளாக தொகுக்கப்பட்டுள்ளன. குற்றவாளிகளும் பல ரகத்தினராக வகுக்கப்பட்டுள்ளனர். குற்றங்கள் பற்றிய அறிவு வளர்ந்திருக்கிறது. ஆனால் குற்றங்களை ஒடுக்கும் மார்க்கங்கள் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. குற்றமானது ஒரு சமூக நோய் எனக் கூறப்படுகிறது. இது ஒரு வர்க்கத்தைச் சார்ந்த நோய் எனவும் சொல்லப்படுகிறது. சமூகத்தின் அடிமட்டத்திலிருந்தே இந் நோய் மேற்கிளம்புவதாகவும் சில ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். மேற்தட்டு வர்க்கத்தினரின் சதி முயற்சியாகவும் குற்றத்திற்கு விளக்கம் கொடுக்கப்படுகிறது. இது அதிகார வர்க்கத்தின் பயத்திலிருந்து பிறக்கும் விசித்திரமான கண்டுபிடிப்பு. அதிகார வர்க்கத்தின் இந்தப் பயம்தான் சிறை என்ற நிறுவனத்தைக் கட்டிக் காத்து வருகிறது என்கிறார் பூக்கோ.

'பைத்தியமும் நாகரீகமும்' (Madness and Civilisation) என்ற தலைப்பில் பூக்கோ எழுதிய ஆய்வு நூல் மிகவும் சுவாரஸ்யமானது. மன மருத்துவத்தின் வரலாற்று வளர்ச்சியை இந்நூல் அகழாய்வு செய்கிறது.

அன்றொரு காலத்தில் ஐரோப்பிய நாகரீகம் பைத்திய மனிதனை ஒரு மனிதப் பிறவியாகப் பார்க்கவில்லை. அவனை ஒரு விபரீதமான விலங்காகவே கண்டது. நாகரீக மனிதர்களுக்கு, அதாவது பகுத்தறிவு பிறழாத மனிதர்களுக்கு அவன் ஒரு அச்சுறுத்தலாகவே காணப்பட்டான். பைத்தியம் ஒரு மனோ வியாதியாக முற்காலத்தில் கருதப்படவில்லை. அதனைக் குணப்படுத்த

மருத்துவ முறைகளும் இருக்கவில்லை. பைத்தியக்காரன் நோயின் உபாதையால் புலம்பும் போது, ஆவேசமடைந்து கதறும்போது, குழப்பத்தில் பிதற்றும் போது, பித்தலாட்டம் ஆடும்போது அவனது நடத்தையை விபரீதமான விலங்காடித்தனமாகவே அன்றைய சமூகம் கருதியது. மனிதமற்ற மனிதப் பண்புகள் செத்துப் போன ஒரு ஆபத்தான பிராணியாகவே மற்றவர்கள் அவனைக் கண்டனர். ஐரோப்பிய ஆளும் வர்க்கம் பைத்தியக்காரனைக் கண்டு பயந்தது. அவனை நாகரீக சமூகத்திலிருந்து ஒதுக்கி வைக்க விரும்பியது. அதனால் அவன் மிருகம் போல வேட்டையாடிப் பிடிக்கப்பட்டான். பைத்திய இல்லங்களில் அடைத்து வைக்கப்பட்டான். இருண்ட பாதாள அறைகளில், சங்கிலியால் விலங்கிடப்பட்டு தனிமையில் ஒதுக்கப்பட்டான். அவன் ஒரு மிருகமாகக் கருதப்பட்டதால் உடையோ, உணவோ, உறங்கும் வசதிகளோ அவனுக்கு வழங்கப்படவில்லை. நிர்வாணமாக, பசியின் உபாதையுடன், குளிரில் நடுங்கியபடி, சுவரோடு கட்டுண்டு கிடந்து மௌன-மாகக் கண்ணீர் வடித்த அந்த அப்பாவி மனிதனின் ஆழமான துன்பத்தை அன்றைய நாகரீக மனிதர்கள் கண்டுகொள்ளவில்லை. பைத்திய மனிதன் ஒரு சபிக்கப்பட்ட மனிதனாகவே கருதப்பட்டான்.

இன்றைய நாகரீக உலகம், பைத்தியத்தை ஒரு மன நோயாகக் கண்டுபிடித்த போதும், பண்டைய அணுகுமுறையிலேயே இந் நோயாளர்களுக்கு சிகிச்சை அளிக்கப்படுவதாக குற்றம் சுமத்துகிறார் பூக்கோ. அன்றுபோலவே இன்றும் பைத்திய நோயால் பீடிக்கப்பட்ட மனிதர்கள் மனநோயாளர் காப்பு மனைகளில் அடைத்து வைக்கப்படுகிறார்கள். அன்றைய சமூகம் பைத்தியக்காரனை ஒரு மிருகமாகவும் அவனது நடத்தையை மிருகத்தனமாகவும் கருதியது. இன்றைய மருத்துவமும் நோயின் மூலத்தை மனித இயல்பின் பிறழ்ச்சியால் ஏற்படும் மனக் கோளாறாக கருதி வருவதாகக் கூறுகிறார் பூக்கோ.



# தனிமனித தத்துவம்

மனிதனிலிருந்து தொடங்குகிறது இந்தத் தத்துவம். எல்லாவற்றிற்கும் மேலாக, மனித இருப்பிற்கு அது முதன்மை கொடுக்கிறது.

இது மனித உலகம். மனிதன் வாழும் உலகம். மனிதனால் படைக்கப்பட்ட உலகம். மனித உறவுகளால் பின்னப்பட்ட உலகம். இந்த உலகில் சகலதற்கும் அவனே அடிப்படை. மனிதனே இவ்வுலகின் மெய்ப்பொருள். சகலதற்கும் அவனே கோல். அவனிலிருந்தே சகலதும் அர்த்தம் பெறுகிறது.

எனது இருப்பே எனக்கு முதன்மையான உண்மை. எனது இருப்பு நிலையிலிருந்தே நான் என்னையும் இந்த உலகத்தையும் இனம் கண்டுகொள்கிறேன். நானே எனக்கு வெளிச்சம். நானே எனது வழிகாட்டி. நானே எனது இருப்பிற்கு ஆதாரம். என்னிலிருந்தே எல்லாம் எனக்குத் தோற்றப்பாடு கொள்கிறது. நான் வாழும் இந்த உலகமும், நான் உறவு கொள்ளும் மற்றவனும், என்னைச் சூழ இருப்புக் கொள்ளும் எல்லாமே எனது அனுபவ தரிசனத்தால் அர்த்தம் பெறுகிறது.

மனித வாழ்வு பற்றிய விசாரணைகள் அனைத்தும் மனிதனிலிருந்தே தொடங்க வேண்டும் என்கிறது இந்தத் தத்துவம். மனித அனுபவத்திற்கு அது முக்கியத்துவம் கொடுக்கிறது.

மனிதனுக்கு புறம்பாக நின்று, மனித உலகத்திற்கு அப்பால் நின்று, மனிதனைக் கண்டு கொள்ள முடியாது. மனித மெய்யுண்மையை மனிதனிடமிருந்து, மனித அனுபவத்திலிருந்து, மனித வாழ்நிலையிலிருந்தே கண்டு கொள்ள முடியும்.

மனிதன் என்பவன் வானத்திலிருந்து பூமியில் விழுந்த அற்புதம் அல்ல. அன்றி இயற்கையால் வனையப் பெற்ற பொம்மையும் அல்ல. மனித இயல்பு என்பது

இயற்கையின் பரிணாம விதியால் மனிதனிடம் திணிக்கப்பட்ட பண்பு அல்ல. மனித இருப்பிலிருந்தே மனிதனின் இயல்பு தோன்றுகிறது. மனிதனே தன்னைப் படைக்கிறான். தன்னை உருவாக்கம் செய்கிறான். மனிதனே மனிதனின் சிருஷ்டி கர்த்தா.

மனித இயல்பிற்கு முன்னோடியானது மனித இருப்பு (Human existence proceeds human essence) என்கிறது இந்தத் தத்துவம்.

பிறப்புடன் இந்த உலகிலே பிரவேசம் செய்யும் மனிதன், தான் பிறந்த கணத்திலிருந்து தனது இருப்பையே முதலில் உணர்ந்து கொள்கிறான். ஜீவானுபவமே எல்லாவற்றிற்கும் முதன்மையானது. தனது இருத்தலை உணர்ந்து கொண்ட பிரக்ஞையுடன், மனிதன் முதலில் தன்னை எதிர்கொள்கிறான். தன்னைச் சூழவுள்ள மனித உலகத்தை எதிர்கொள்கிறான். தொடக்கத்தில் மனித இயல்பு என்று எதுவும் இருப்பதில்லை. ஆரம்பத்தில் மனிதன் ஒரு வெறுமையாகப் பிறப்பு எடுக்கிறான். காலப் போக்கிலேயே தனது வெறுமையை நிறைவு செய்து கொள்கிறான். மனித இயல்பு என்பது இருப்பின் வாயிலாக, வாழ்வனுபவத்தினால் மனிதன் தானாக சிருஷ்டித்துக் கொள்ளும் மாண்பு.

மனிதனின் இருப்பு நிலையை ஆழமாகத் தரிசிக்க விழையும் இந்தத் தத்துவம் தனி மனிதனுக்கும் தனி மனித வாழ்வனுபவத்திற்கும் முக்கியத்துவம் கொடுக்கிறது.

வாழ்வனுபவ நிலையில், எல்லா மனிதர்களும் தனி மனிதர்கள். அனுபவம் அகவயமானது; அகநிலை தனித்துவமானது; தனிமனிதம் சார்ந்தது. எனவே, மனிதானுபவம் என்பது தனி மனிதனிடமிருந்து, தனி மனிதக் கூறுகளாகப் பிராவகம் எடுக்கிறது.

இந்த உலகத்தில் நான் ஒரு தனி மனிதப் பிறவி. இனம், மதம், தேசம், சமூகம் என்ற முழுமையில், மொத்தத்தில், கூட்டுறவில் நான் கட்டுண்டு கிடந்த போதும் நிதர்சன வாழ்வில் நான் தனித்துவமானவன். முழுமை என்ற பெருவெள்ளம் என்னை அடித்துச் சென்றபோதும், நான்



என்னை நானாக, ஒரு தனித்துவ ஜீவனாக, ஒரு சுதந்திரப் பிறவியாக, நானே எனக்குப் பொறுப்பானவனாக, நானே எல்லாவற்றையும் தெரிவு செய்பவனாக, தீர்மானிப்பவனாக, எனது வாழ்வனுபவத்திற்கு நானே உரித்தானவனாக, நான் என்னை, எனது தனித்துவத்தை உணர்கிறேன். மீள முடியாதவாறு, தனிமனிதம் என்ற சிலுவையில் நான் அறைபட்டுக் கிடக்கிறேன்.

தனி மனிதத்துவத்தை இந்தத் தத்துவம் வலியுறுத்துகிறது. ஆயினும், அதே வேளை கூட்டு வாழ்வின் நிதர்சனத்தை அது மறுதலிக்கவில்லை.

மனிதன் தனிமனிதப் பிறவியாக வாழ்ந்த போதும் மனித உறவுகள் என்ற சங்கிலித் தொடர்பில் பிணைக்கப்பட்டிருக்கிறான். தனிமனித இருப்பு சமூக இருப்பு என்ற சமுத்திரத்துடன் சதா சங்கமிக்கிறது.

இந்த உலகம் என்பதே, மானிடத்தைக் குறிக்கிறது; மற்றவர்களைக் குறிக்கிறது. இந்த மனித உலகில் நான் தனித்து நின்றபோதும் மற்றவர்களுடன் இணைந்து வாழ நிர்ப்பந்திக்கப்படுகிறேன். எனது இருப்பின் எண்ணற்ற தேவைகளை நிறைவு செய்ய மற்றவர்களின் உறவு எனக்குத் தேவை. நான் தனித்தவனாக, தனிமனிதனாக, சமூக உறவுகளை அறுத்துக் கொண்டு தனிச் சீவியம் நடத்த முடியாது. நான் வாழ, மற்றவர்களுடனான கூட்டு வாழ்வு எனக்கு அவசியம். நான் மட்டும் எனக்கு பொறுப்பாளி அல்ல. நான் மற்றவர்களுக்கும் பொறுப்பாளியாக இருக்கிறேன். சமூகத்தின் சட்டம், சமூகத்தின் கட்டுப்பாடுகளிலிருந்து நான் தப்பிவிட முடியாது. எனது செயற்பாடுகளும் நான் எடுக்கும் முடிவுகளும் மற்றவர்கள் சம்பந்தப்பட்டதால், நான் எனக்கு மட்டுமல்ல, உலகத்தாருக்கும் பொறுப்புள்ளவனாக இருக்கிறேன். அன்பையும், ஆதரவையும், அரவணைப்பையும் நான் மற்றவர்களிடமிருந்து வேண்டி நிற்கிறேன். எனது உடற்பசிக்கும், உளப் பசிக்கும், எனது ஆசைக்கும் அவாவிற்கும் மற்றவர்களின் உறவு அத்தியாவசியமாகிறது. நான் எனக்காக, என் குறிக்கோளுக்காக, என்

திருப்திக்காக, என் நிறைவுக்காக, என் வாழ்வுக்காக, என் இருப்பிற்காக மற்றவர்களை நாடி நிற்கிறேன். நானும் மற்றவர்களும் என்ற உறவு, என் இருப்பின் தவிர்க்க முடியாத நிர்ப்பந்தமாக என்னையும் மற்றவர்களையும் பிணைத்து வைத்திருக்கிறது. என்னைப் புரிந்து கொண்டவர்களுடன், எனது போக்கிற்கும், பார்வைக்கும் ஒத்திசைவான மற்றவர்களுடன் நான் உறவு கொள்ளும் போது, அந்தக் கூட்டுறவு எனது தனித்துவத்தைப் பேண ஏதுவாக அமைகிறது. இந்த உறவில் நானும் மற்றவனும் அவரவர் தனித்துவ அடையாளங்களை இனம் கண்டு, அதைப் புரிந்து கொண்டு, அந்தப் புரிந்துணர்வால் எழும் பற்றுறவால் பிணைந்து கொள்ளும் பொழுது எனது தனித்துவத்தின் சுதந்திரம் மேம்பாடு கொள்கிறது.

மற்றவர்களுடனான உறவு ஒத்திசைவாக அமையும்போது, தனிமனித வாழ்வு நிறைவுடையதாக அமைகிறது. கூட்டு வாழ்வு இசைவாக அமைந்து, எனது மனிதத்துவத்தையும் சுதந்திரத்தையும் மேம்பாடு செய்யுமானால், எனது இருப்பு ஆக்கபூர்வமானதாக, அர்த்தபூர்வமானதாக (Authentic Existence) அமைகிறது. ஆனால் அதே வேளை, சமூகக் கூட்டுவாழ்வு எனது தனித்துவத்தை நசுக்கிவிடும் எதிர்மறைத் தன்மைகளைக் கொண்டது. தனிமனிதனுக்கு விரோதமானதாக, தனிமனித சுதந்திரங்களை ஏப்பம் விடும் அதிகாரப் பூதமாக சமூகக் கட்டமைப்பு உருவாக்கம் பெறும் பொழுது எனது இருப்பு அர்த்தவீனமாக மாறிவிடுகிறது. இந்தச் சூழ்நிலையில், அரூபமான, அனாமதேயமான ஒரு முகமற்ற சக்தியாக சமூகத்தை நான் எதிர்கொள்கிறேன். எனக்குப் புறம்பாக, எனக்கு முரணாக, எனக்கு விரோதமாக சமூகம் இருப்புக் கொள்கிறது. ஆன்மாவை இழந்தவர்களாக, அடையாளம் அற்றவர்களாக, வெற்று மனிதர்களாக நான் மற்றவர்களை எதிர்கொள்கிறேன். இப்படியான சமூகச் சூழலில், எனக்கும் மற்றவர்களுக்குமான உறவு அர்த்தமற்றதாகிறது. அபத்த மாகிறது.

அபத்தமான வாழ்நிலைபற்றியும், அபத்தத்திலிருந்து



அர்த்தத்தைத் தேடும் மனிதனின் முனைப்புகள் பற்றியும் இந்தத் தத்துவம் ஆழமாக விசாரணைகளைச் செய்கிறது.

இந்தத் தத்துவம் இருப்பியம் (Existentialism) எனப்படும்.

இந்த தத்துவார்த்த சிந்தனை 19ம் நூற்றாண்டுகளில் ஐரோப்பாவில் தோற்றம் கொண்டது. இந்தக் கருத்துலகைச் சிருஷ்டித்த தத்துவாசிரியர்கள் பலர். ஒவ்வொருவரும் வித்தியாசமாக எழுதினார்கள். ஒவ்வொருவரது வாழ்க்கைப் பின்னணியும் வரலாற்றுச் சூழ்நிலையும் வேறுபட்டிருப்பினும், தாம் வாழ்ந்த காலத்தை உருவகப்படுத்தி, அக்காலத்தில் வாழ்ந்த மனிதனின் வாழ்நிலை அனுபவத்தை முதன்மைப்படுத்தி எழுதினார்கள்.

ஐரோப்பிய முதலாளியத்தின் வளர்ச்சி, ஏகாதிபத்தியத்தால் எழுந்த ஆதிக்கப் போட்டி, ரஷ்ய கம்யூனிஸ்ட் புரட்சி, நாசிசத்தின் எழுச்சி, உலக மகா யுத்தங்கள் - இப்படியான வரலாற்று நிகழ்வுகளால் ஐரோப்பிய மனிதனின் வாழ்விலும் பார்வையிலும் பாரதூரமான பாதிப்புகள் விழுந்தன. மனித நாகரீகத்தின் சிகரத்தில் நின்று கொண்டு உலகத்திற்கு ஒளி விளக்காக இருப்பதாக ஐரோப்பிய மனிதன் கண்டு வந்த கனவு, இந்த நிகழ்வுகளால் தகர்ந்து போனது. கிறீஸ்தவ அறத்தில் கேள்விக் குறி எழுந்தது. கடவுட் கோட்பாட்டில் நம்பிக்கை தளர்ந்தது. சர்வாதிகார சமூகக் கட்டமைப்பில் வெறுப்புத் தட்டியது. விஞ்ஞானத்தின் அழிவு நோக்கிய அசுர வளர்ச்சியில் பயம் எழுந்தது. இந்தப் புறநிலைப் பாதிப்புகளால் ஐரோப்பிய சிந்தனையாளர் சிலர், ஐரோப்பிய சிந்தனைப் பாரம்பரியத்தை உடைத்துக் கொண்டு வித்தியாசமாகச் சிந்தித்தனர். மனிதத்துவத்தின் இயல்பையும், வாழ்க்கையின் அர்த்தத்தையும் கண்டு கொள்ள விழைந்த இந்தச் சிந்தனையாளரின் தேடுதலாக இருப்பியக் கருத்துலகம் தோற்றம் எடுத்தது.

இருப்பியல் கருத்துலகைப் படைத்த தத்துவாசிரியர்கள் வரிசையில் சோரன் கைகேகார்ட் (Soren Kierkegaard), நீச்சே (Nietzsche), மார்டின் கைடேகர்

(Martin Heidegger), கார்ள் ஜாஸ்பர்ஸ் (Karl Jaspers), ஹுசேள் (Husserl), ஜோன் போல் சாத்தர் (John Paul Satre), ஆகியோரை முக்கியமாகக் குறிப்பிடலாம். டொஸ்தோவஸ்கி (Dostoyevsky), காவ்கா (Kafka) போன்ற எழுத்தாளர்களின் படைப்பிலக்கியங்களும் இருப்பியத் தரிசனங்களாகக் கொள்ளப்படுவதுண்டு.

வித்தியாசமான காலத்தில், வித்தியாசமான சூழலில், வித்தியாசமான வடிவத்தில், வித்தியாசமான நடையில், வித்தியாச்மான பார்வையில், இவர்களது எழுத்துக்கள் அமைந்த போதும், பொதுப்படைக் கருப்பொருளாக மனித நிதர்சனம் பற்றியும் மனித இருப்புநிலை பற்றியும் மனித வாழ்வனுபவம் பற்றியும் மிகவும் தீட்சண்யமான கூர்நோக்குடன் இவர்கள் எழுதினார்கள்.

சோரன் கைகேகார்ட் (1815-1855) இருப்பிய தத்துவத்தின் தந்தையாகக் கருதப்படுபவர். இவர் டென்மார்க் நாட்டைச் சேர்ந்த சிந்தனையாளர்.

ஐரோப்பிய பாரம்பரியம் தனிமனிதனின் ஆழமான உணர்வுகளை தொட்டு நிற்கவில்லை. மாறாக, மனித வாழ்வனுபவத்திற்குப் புறம்பாக நின்று, புரியாத மொழியில், பூடகமான தத்துவக் கோட்டைகளை கட்டியெழுப்பியது என விமர்சித்தார் கைகேகார்ட். இந்தத் தத்துவ தரிசனங்களில் சிறப்புப் பிரதிநிதியாக விளங்கிய ஹேகலை அவர் கண்டித்தார். மனித இருப்பு நிலைக்கு அப்பால், புலனாகாத பிரபஞ்ச விசாலத்தில் மனித வாழ்விற்கு அர்த்தம் தேடும் ஹேகலின் தத்துவத்தில் எவ்வித அர்த்தமும் இல்லை என்கிறார். சிந்தனை உலகத்தில் உண்மையைக் கண்டு கொள்ள முடியாது. உண்மை என்பது அகவயமானது; அது மனிதனின் உள்ளார்த்த இரகசியமாக, மனிதனின் உள்ளுணர்வில் மறைந்து கிடக்கிறது என்றார். வாழ்நிலையில் மனிதன் எதிர்கொள்ளும் மன அவலங்களை, அங்கலாய்ப்புகளை அவரது எழுத்துகள் மிகவும் துல்லியமாக விபரிக்கிறது. நிலையாமையை, நித்தியமின்மையைச் சந்தித்து நிற்கும் தனிமனிதன், இருப்பின் அர்த்தத்தைப் புரியாது தடுமாறும் தவிப்பையும்



துயரத்தையும் மிகவும் ஆழமான ஆன்ம சோதனையாக அவர் சித்தரிக்கிறார். அவரது எழுத்துகள் மனித இருத்தலையும், மனித உணர்வுகளையும் முதன்மைப்படுத்தி நிற்பதால் இருப்பிய தத்துவத்தின் முன்னோடியாக அவர் கருதப்படுகிறார்.

நாஸ்திக இருப்பியவாதிகளின் குருநாதராகக் கருதப்படுபவர் நீச்சே. "கடவுள் மரணித்துவிட்டார்" என்ற செய்தியை இவர் மானிடத்திற்கு எடுத்துச் சொல்கிறார். நீச்சே சொல்கிறார்;

"கடவுளின் மரணத்துடன் ஆன்மீக உலகமும் அஸ்தமித்து விடுகிறது. நரகம் என்றும், சுவர்க்கம் என்றும், பாவம் என்றும், புண்ணியம் என்றும், கர்மம் என்றும், தர்மம் என்றும், கடவுட் கோட்பாட்டின் கீழ் கட்டியெழுப்பப்பட்ட அறநெறிகள் அனைத்தும் அர்த்தமிழந்து போகின்றன. நிரந்தரமான ஆன்மாவைக் கற்பித்து, நித்திய சீவியத்திற்கு ஆசைகொண்ட மானிடத்தின் கனவும் கடவுளின் மரணத்துடன் செத்துப் போய்விடுகிறது. மனித வாழ்வும் அர்த்தமிழந்து போகிறது. அபத்தமாக மாறுகிறது. நித்தியமானது செத்துப் போனதால் நிலையாமையானது இருப்பின் பேருண்மையாகிறது. சாவின் இருள் பூமி மீது நிரந்தரமாகக் கவிந்து கொள்கிறது. மரணத்தின் குகைக்குள் வாழ மானிடம் நிர்ப்பந்திக்கப்படுகிறது."

நீச்சே, மனிதனின் கனவுகளைக் கலைத்துவிட முனைந்தார்; மனித இருப்பின் மிகவும் கசப்பான உண்மைகளை எடுத்துரைத்தார்; பூமியில் கடவுளின் ஆட்சியைக் கவிழ்த்து, அந்தச் சிம்மாசனத்தில் மனிதனை இருத்திவிட முனைந்தார் என்பது அவரைக் குருவாக வரித்துக் கொண்டவர்களின் கூற்று.

கடவுள் இல்லாத உலகமும் அறமில்லாத வாழ்வும் நிலையில்லாத சீவியமுமே மனத இருப்பின் துயரமான, அவலமான நிதர்சனமான நிலை என்பதை அவரது எழுத்துகள் அழுத்தமாகச் சொல்கின்றன.

காலத்தில் முகிழ்கிறது வாழ்வு. பிறப்பிற்கும் இறப்பிற்கும் இடையே விரியும் காலத்தில் நிலைக்கிறது

வாழ்வு. இந்தக் காலம்தான் மனித இருப்பின் எல்லைக் கோட்டை இடுகிறது. இருத்தலின் எல்லைக்கு அப்பால் இல்லாமை இருக்கிறது. இல்லாமையை, அதாவது இருத்தலிலிருந்து இல்லாமல் போவதை, சாவு என்று சொல்கிறான் மனிதன்.

காலமும், நிலையாமையும், சாவும் மனித இருத்தலின் மெய்யுண்மைகள். இவை பற்றிய ஆழமான தரிசனத்தைத் தருகிறார் கைடேகர். இருப்பிய தத்துவாசிரியர்களில் இவர் மிகவும் முக்கியமானவர்.

இருப்பு என்பது காலத்தின் பாதையால் நடைபெறும் பயணம். இந்தப் பயணத்தில் நான் ஒரு கணமும் தரித்து நிற்க முடியாதவாறு காலம் என்னை நகர்த்திச் செல்கிறது. நான் காலத்தில் மிதந்து கொண்டு பயணிக்கிறேன். நடந்து முடிந்தது இறந்த காலமாகவும், நடக்கப் போவது எதிர்காலமாகவும், நடந்து கொண்டிருப்பது நிகழ்காலமாகவும் எனக்குத் தென்படுகிறது. இறந்த காலம் செத்துப்போனாலும், எனது அனுபவத்தின் நிழலாக அது என்னை சதா பின்தொடர்கிறது.

எனது வாழ்வனுபவம் எப்பொழுதுமே நிகழ்காலமாகவே கட்டவிழ்கிறது. எதிர்காலமானது, இறந்த காலமாக மாறும் நொடிப் பொழுதுகளாக நான் நிகழ்காலத்தை அனுபவிக்கிறேன்.

நிகழ்கால அனுபவமே நிதர்சனமானது. மெய்மையானது என்கிறார் கைடேகர். ஆனால் மனிதன் நிகழ்காலத்தில் வாழாமல், எதிர்காலம் பற்றியே சிந்திக்கிறான். மனித ஆசைகளும், எதிர்பார்ப்புகளும், திட்டங்களும், எதிர்காலத்தில் நிறுத்தப்பட்டிருப்பதால், மனித மனமானது எதிர்காலத்தை நோக்கியதாக, எதிர்காலத்தில் நிலைத்துப் போகிறது. செத்துப் போன காலத்தில் புதையுண்டு போகாமலும், எதிர்காலத்தையே சதா எண்ணிக் கிடக்காமலும், நிகழ்காலத்தில் வாழ்வதுதான் அர்த்தபூர்வமானது என்கிறார் அவர்.

காலத்தில் நிகழும் எனது பயணம் சாவுடன் முடிவடைகிறது.



நிலையற்ற இந்த உலகில், நிலையான ஒன்று உண்டு என்றால் அதுதான் சாவு. எனது உயிர்ப்பின் கணத்திலிருந்து சாவும் என்னோடு உடன்பிறப்பு எடுத்திருக்கிறது. எனது இருத்தலின் ஒவ்வொரு கணத்திலும் இல்லாமை என்ற சூன்யத்தை நான் எதிர்கொண்டு வாழ்கிறேன். எனது சாவை நான் பட்டறிந்து கொள்ள முடியாது. இந்த உலகில் அதுமட்டும் எனது அனுபவத்திற்கு அப்பாலானது. எனது அனுபவத்தின் முடிவாக, எனது இருத்தலின் முடிவாக, நான் இல்லாமல் போகும் இறுதிக் கணமாகச் சாவு என்னை எதிர்கொண்டு நிற்கிறது.

என்னைச் சூழ எங்கும் சாவு நிகழ்கிறது. மற்றவர்களது சாவை நான் நித்தமும் சந்திக்கிறேன். எனக்கு வேண்டியவர்கள், நான் பற்றுக் கொண்டவர்கள் மடியும் போது, துயரத்தின் சுமை என் ஆன்மாவை அழுத்துகிறது. மனித இருப்பின் மிகவும் சோகமான, துன்பமான நிகழ்வாக சாவு சம்பவிக்கிறது.

எந்த நேரத்திலும், எந்தச் சூழ்நிலையிலும் நான் சற்றும் எதிர்பாராத சந்தர்ப்பத்தில், சாவு எனது கதவைத் தட்டலாம். திடீரென, இருப்பிலிருந்து இல்லாமை என்ற சூன்யத்திற்குள் நான் தூக்கி வீசப்படலாம். எனது இருப்பின் நிலையாமை எனக்குத் தெரிந்தும், சாவின் நிச்சயத்துவத்தை நான் உணர்ந்தும், நான் அதுபற்றி சிந்திக்கத் துணிவதில்லை. மனித பயங்கள் எல்லாவற்றிற்கும் மூலபயமாக, தலையான பயமாக, மரண பயம் எனது ஆழ்மனக் குகைக்குள் ஒளிந்து கிடக்கிறது. நான் அதை அடக்கி, ஒடுக்கி, என் நனவு மனதிலிருந்து ஒதுக்கி வைத்திருக்கிறேன்.

சாவு என்பது மனித இருப்புநிலையின் தவிர்க்க முடியாத உண்மை என்கிறார் கைடேகர். அதை மறுப்பதும், அதற்கு அஞ்சுவதும், அதிலிருந்து ஓடி ஒளிந்து கொள்ள முயல்வதும் அபத்தமானது. சாவின் பிடியிலிருந்து எவருமே தப்பிவிட முடியாது. அது வாழ்வின் ஒரு நிகழ்வாக என்றோ ஒரு நாள் எதிர்கொள்ளப்பட வேண்டியது. சாவைச்

சந்திப்பதற்கு மனிதன் துணிய வேண்டும். அந்தத் துணிவிலும் தெளிவிலும் விழிப்பிலுமே மனித வாழ்வு அர்த்தமுள்ளதாக, நிறைவானதாக அமையும் என்கிறார் கைடேகர்.



# அர்த்தமும் அபத்தமும்

பிரஞ்சு இருப்பியவாதிகளில் அல்பேர்ட் கம்யூ (Albert Camus, 1913-1960) ஒரு வித்தியாசமான மனிதர். அவரது உலகப் பார்வையும் வித்தியாசமானது. தான் ஒரு இருப்பியவாதி என்பதை அவர் மறுத்து வந்தார். ஆயினும் இருப்பியத் தத்துவத்தின் சிறப்பு பிரதிநிதியாகவே அவர் கருதப்பட்டார்.

கம்யூவை ஒரு தத்துவாசிரியர் எனச் சித்தரிக்க முடியாது. இருப்பியத் தத்துவம் பற்றி அவர் கனமான நூல்களை எழுதவில்லை. சொற்பமாக, சுருக்கமாக இரு மெல்லிய நூல்களில் தனது தத்துவப் பார்வையை விளக்கினார்.

அவர் ஒரு எழுத்தாளர். இலக்கியப் படைப்பாளி. நாவல்கள், நாடகங்கள், சிறு கதைகளாகத் தனது வாழ்வனுபவத்தை எழுத்தில் வடித்தார். இளம் வயதில், 44ஆவது வயதில் இலக்கியத்திற்கான நோபல் பரிசு அவருக்குக் கிடைத்தது.

அபத்தமான உலகில், அர்த்தமற்று வாழும் அபத்த நாயகனாக (Absurd Hero) அவர் மனிதனைக் கண்டார். இந்த அபத்த மனிதனின் அவலமான, அர்த்தமற்ற வாழ்வுபற்றி ஆக்ரோஷத்துடன் எழுதினார்.

கடவுள் இல்லாத உலகத்தில், நிச்சயமற்றதான வாழ்வில் மனித இருப்பிற்கு அர்த்தமென்ன? வாழ்வின் அர்த்தத்தைக் கண்டு கொள்ளாமல் வாழ்வதில் என்ன அர்த்தமுண்டு?

இந்தப் பிரபஞ்சம் மனிதனைப் படைத்திருக்கிறது. ஒரு விந்தையான பிராணியாக, விழிப்புள்ள ஜீவனாக, எதையும் விசாரித்தறியும் விவேகமுடையவனாக மனிதனை சிருஷ்டித்திருக்கிறது. இந்த அற்புதமான மனிதன் எதற்காகப் படைக்கப்பட்டான்? இந்தப் படைத்தலின்

குறிக்கோள் என்ன? பிரபஞ்சத்திற்கும் மனிதனுக்கும் மத்தியிலான உறவு எப்படியானது?

மனிதன் விடைதேடி அலைகிறான். தெளிவுபெற விழைகிறான். ஆனால் மனிதனால் எதையும் புரிந்து கொள்ள முடியவில்லை. அறிய, அறிய, அறியாமை மேலோங்குகிறது. அபத்தத்தின் அலங்கோலம் தெரிகிறது. புரியப் புரிய, உலகம் புதிராக மாறுகிறது. தத்துவத் தேடல்களும், விஞ்ஞான விசாரணைகளும் மனிதனுக்கு உண்மையைக் காட்டவில்லை. வாழ்வின் அர்த்தத்தை விளக்கவில்லை. பொய்மையின் சிதைவுகளாக, எங்கும் எல்லாம் அபத்தத்தின் அசிங்கமான முகம்தான் தெரிகிறது.

நான் தொட்டுணர்ந்து, பட்டறிந்து கொள்ளும் இந்த உலகம் எனக்குப் பரீட்சயமானது. இந்த மலையும், மரமும், கடலும் அலையும், நீலவானமும், நிலவும் நான் சதா சந்தித்துக் கொள்பவை. இந்தப் பூமி என்னைத் தோள் மீது சுமந்து திரிகிறது. நான் இந்த உலகத்தின் கனிகளைப் புசித்து வாழ்பவன். கணத்திற்குக் கணம் நான் விழுங்கும் இந்தக் காற்றில் எனது உயிர் தொங்கி நிற்கிறது. இந்த உலகம்தான் எனது இருப்பிற்கு ஆதாரம். நான் இருப்பாக உயிர்த்து நிற்கிறேன். வாழ்வின் தீயாக எரிந்து கொண்டு இந்த உலகத்தின் மீது இச்சை கொண்டு நிற்கும் என்னை இந்த உலகம் ஒதுக்கிவிடுகிறது. எனக்குப் பாராமுகம் காட்டுகிறது. பற்றற்றதாக நிற்கிறது. என்னிலிருந்து அந்நியப்பட்டதாக மௌனமாக நிற்கிறது. நான் வேர் அறுபட்டவனாக விழுந்து கிடக்கிறேன். எனது தேடுதல் பற்றியும், தடம் தெரியாது நான் எழுப்பும் அவல ஓலம் பற்றியும் இந்த உலகம் எவ்வித அக்கறை கொண்டதாகவும் தெரியவில்லை.

உணர்வற்ற, இலக்கற்ற, அர்த்தமற்ற உலகமும், உணர்வுள்ள, அறிவுள்ள, அர்த்தம் தேடும் மனிதனும், இரு துருவங்களாக, உறவு முறிந்து, ஒத்திசைவு இழந்து, முரண்பட்டு நிற்கும் இந்த வாழ்வு அர்த்தமற்றது.

விடிகிறது. தினமும் விடிகிறது. திங்கள், செவ்வாய், புதன், வியாழன் என்று மாறி, மாறி, தொடர்ச்சியாக



விடிகிறது. விடியலுடன் நானும் விழித்துக் கொள்கிறேன். தினமும் தூங்குவதும், விழிப்பதும் வேலைக்கு ஓடுவதுமாக முடிவில்லாமல் நானும் விரைகிறேன். அதே வேலை. பழக்கப்பட்ட, வழக்கமான அதே வேலை. சலிப்புத் தட்டத்தட்ட, இயந்திரமாக இயங்கி, இயங்கி, அதே வேலை. என்னோடு சேர்ந்து மற்றவனும் என்னைப் போல உழல்கிறான். அதே காலை, அதே பாதை, அதே வேலை. திரும்பத் திரும்பப் பார்த்து அலுத்துப் போன அதே முகங்கள். நாட்கள் ஓடுகின்றன. நானும் ஓடுகிறேன். அர்த்தமில்லாமல், மீண்டும், மீண்டும், அதே வினையில், அதே விளைச்சலில் நான் ஓடிக் கொண்டே இருக்கிறேன்.

இயந்திர உலகில் வாழும் நவயுக மனிதனின் அலுப்புத் தட்டும் உழைப்பும், அவசர வாழ்வும் அபத்தமானது என்கிறார் கம்யூ. கிரேக்க இதிகாசத்துப் பாத்திரமான சிசைப்பஸை (Sisysphus) இந்த அசட்டுத்தனமான உழைப்பின் குறியீட்டுச் சின்னமாக சித்தரித்துக் காட்டுகிறார்.

தெய்வங்களின் கோபத்திற்கு ஆளாகிறான் சிசைப்பஸ். சாபம் கிடைக்கிறது. தண்டிக்கப்படுகிறான். மலையடிவாரத்திலிருந்து மலையுச்சிக்கு ஒரு கற்பாறையை தள்ளிச் செல்லும் கடுழியத் தண்டனை. பாறையை மேல்நோக்கி அவன் தள்ளிச் செல்ல, அந்தப் பாறை அதன் பழுவில் கீழ்நோக்கி உருண்டு விழுகிறது. தொடர்ச்சியாக, முடிவில்லாமல் முயற்சிக்கிறான். அவனது பகீரத முயற்சி, பயனற்ற முயற்சியாக மாறுகிறது. அர்த்தமற்ற, அசட்டுத்தனமான ஊழியம் செய்ய அவனுக்கு விதிக்கப்பட்டிருக்கிறது. சோர்ந்து போகாமல், இடிந்து போகாமல், தெய்வங்களை சினந்தவாறு, அவன் முடிவில்லாமல் முயற்சிக்கிறான். இந்த சிசைப்பஸ் கம்யூவின் அபத்த நாயகன். தற்கால மனிதனின் அபத்தத்தைக் குறியீடு செய்யும் அக்காலத்து இதிகாச மனிதன்.

அபத்த நாயகனாகச் சித்தரிக்கப்படும் சிசைப்பஸிடம் ஒரு அபூர்வமான குணவியல்பைக் காண்கிறார் கம்யூ.

தாங்கமுடியாத துயரிலும் தளர்ந்து போகாத உறுதிப்பாடு அவனிடம் இருக்கிறது. தனக்குக் கிட்டிய விபரீத வாழ்வு பற்றியும் விசித்திரமான தண்டனை பற்றியும் அவன் விரக்தி கொள்ளவில்லை. கலங்கவில்லை. தெய்வத்தின் சாபமாக, விதியாக, தவிர்க்க முடியாத நிர்ப்பந்தமாக தன் மீது சுமத்தப்பட்ட பழுவை, அபாரமான பொறுமையுடன் அவன் சுமந்து செல்கிறான். தனது வாழ்நிலையை ஏற்றுக் கொள்ளும் விழிப்புணர்வு அவனுக்கு ஏற்படுகிறது. துயரத்தின் அழுத்தத்தால் அவன் நசிபட்டுப் போகவில்லை. உறுதி தளராது தனது ஊழியத்தைத் தொடர்ந்தான். எட்டமுடியாத சிகரத்தை நோக்கிய போராட்டத்திலும் அவனுக்கு ஒரு ஆன்ம திருப்தி இருந்தது என்கிறார் கம்யூ.

இந்தப் புராண காலத்து புனைக் கதையிலிருந்து நவீன யுக மனிதனுக்கு ஒரு அறநெறியை வரித்துக் காட்ட முனைகிறார் நூலாசிரியர்.

மனித வாழ்வு அபத்தமானது; துன்பம் நிறைந்தது; நிலையற்றது. இதுதான் இருப்பின் மெய்நிலை. இந்த இருப்பு நிலையிலிருந்து எவரும் தப்பித்துக் கொள்ள முடியாது. இந்த வாழ்நிலையை மனிதன் துணிவுடன் எதிர்கொள்ள வேண்டும். தளர்ந்து போய் விழுந்து விடாமல் எழுந்து நின்று வாழவேண்டும். வாழ்வில் அர்த்தமில்லை எனக் கண்டுகொள்ளும் போது சிலர் உயிரை மாய்த்துக் கொள்கிறார்கள். வாழ்க்கையில் அர்த்தமில்லாத போதும் வாழக்கையை வாழத்தான் வேண்டும். வாழ்க்கையை முடித்துக் கொள்ளக் கூடாது. அபத்தத்திலிருந்து தப்பிக் கொள்ள தற்கொலையை நாடுவது பேடித்தனம். அது எவ்வகையிலும் நியாயமாகாது. கடவுள் இல்லாத உலகத்தில் மனிதன்தான் கடவுள். கடவுளிடமிருந்தோ, சுவர்க்கத்திலிருந்தோ மனித வாழ்வின் அர்த்தத்தைக் கண்டுகொள்ள முடியாது. மனித வாழ்வுக்கு மனிதனே அர்த்தத்தைக் கற்பிக்க வேண்டும். மனித செயலுக்கு மனிதனே அர்த்தத்தைக் கொடுக்க வேண்டும். ஒவ்வொரு மனிதனும் தனது அறிவுக்கு எட்டிய பார்வையுடன், தனக்குக் கிட்டிய வாழ்நிலையை ஏற்று அதில் திருப்தி கொண்டு,



எட்டமுடியாத எதிலும் இச்சை கொள்ளாது வாழ முடியுமாயின் அந்த வாழ்வு அவனுக்கு அர்த்தமுடையதாக அமையும் என்கிறார் கம்யூ. அபத்தத்திலும் அர்த்தமின்மையிலும் அர்த்தத்தைக் காண்பதுதான் அர்த்தமான வாழ்வாக அமையும் என்பது அவரது கருத்து. Myth of Sisyphus என்ற அவரது தத்துவ நூல், மானிடத்திற்கு இந்தத் தரிசனத்தையே தருகிறது. வரண்டுபோன பாலைவனத்தின் மத்தியிலும் மனிதன் வாழ வேண்டும், உழைக்க வேண்டும், படைக்க வேண்டும் என்பதே இந்த நூலின் மையக் கருத்து என்கிறார் கம்யூ.

உருவகக் கதைகளாக அவர் நாவல்களைப் படைத்தார். குறியீட்டுப் புனைக்கதைகள் மூலம் தனது தத்துவக் கருத்துகளை அழுத்திச் செல்வது அவரது தனித்துவ வித்துவம். கதாபாத்திரங்களும் இரத்தமும் சதையுமுள்ள மனிதர்கள் அல்லர். முகமற்ற கருத்துருவச் சித்திரங்கள்.

அந்நியன் (Stranger) என்ற அவரது முதலாவது நாவல் பெரும் சர்ச்சையைக் கிளப்பியது. அது ஒரு அபத்த மனிதனின் கதை.

வாழ்க்கையில் விரக்தி கொண்டு, தன்னில் வெறுப்புக் கொண்டு, சமூகத்தில் ஒரு அந்நியனாக அலைகிறான் அந்த இளைஞன். உணர்ச்சிகள் அவனிடம் செத்துப் போயிருந்தன. ஒரு தடவை, கடற்கரையோரம் ஒரு அரபு மனிதனை அவன் சுட்டுக் கொலை செய்கிறான். எதுவித காரணமுமின்றி, எதுவித நோக்கமுமின்றி, எதுவித உணர்வுமின்றி இந்தக் கொலையைச் செய்து விடுகிறான். காவல் துறையினர் அவனைக் கைது செய்து விசாரிக்கின்றனர். நடந்ததை ஒப்புக் கொள்கிறான். ஆனால் அந்த அர்த்தமற்ற செயலுக்கு அவனால் விளக்கம் கொடுக்க முடியவில்லை. இதனால் அவன் ஒரு பயங்கர கொலைகாரனாகக் காணப்படுகிறான். அவனுக்கு மரண தண்டனை விதிக்கப்படுகிறது.



அல்பேர்ட் கம்யூ

சிறையில், மரணத்திற்காகக் காத்திருக்கும்போது ஒரு குருவானவர் அவனைச் சந்திக்கிறார். குருவானவர் அவனை மனம் மாற்ற முனைகிறார். அழியாத ஆன்மா பற்றியும், அடுத்த உலகம் பற்றியும் சொல்கிறார். விசுவாசத்தால் அடுத்த உலகத்தில் விமோசனமுண்டு என்கிறார். அவனுக்கு ஆத்திரம் எழுகிறது. முதற் தடை-வயாக உணர்ச்சி வெளிப்படுகிறது. அந்த ஆவேச உணர்வுடன் அவனுக்கு ஒரு வெளிச்சம் ஏற்படுகிறது. அந்த வெளிச்சத்தில் சாவு பற்றிய தெளிவு பிறக்கிறது. சாவுடன் மனித வாழ்வு முற்றுப் பெறுகிறது என்ற ஞானோதயம் பிறக்கிறது. அந்த விழிப்புடன் வாழவேண்டும் என்ற தீவிர ஆசையும் பிறந்துவிடுகிறது. தூக்குக் கயிறு அவனுக்காகக் காத்திருக்கும்போது, சாவு கதவைத் தட்டும் போது, அவனுக்கு வாழ்வில் பற்று ஏற்படுகிறது. வாழவேண்டும் என்ற துடிப்பு ஏற்படுகிறது.

சாவு நிஜமானது. அடுத்த உலகமோ ஆதாரமற்றது. இந்த உலகமோ அபத்தமானது. ஆனால் வாழ்வுக்கு அர்த்தமுண்டு. வாழ்க்கையை வாழ்வதில்தான் அந்த அர்த்தமிருக்கிறது. இந்தக் கருத்தையே இந்த நாவலில் அழுத்திச் சொல்கிறார் கம்யூ.

இரண்டாவது உலக யுத்தத்தின் போது பிரான்ஸ் நாடு ஜேர்மனியின் ஆதிக்கத்திற்கு உட்படுகிறது. நாசிச ஆக்கிரமிப்பிற்கு எதிராகக் கிளர்ந்த பிரஞ்சு தலைமறைவு இயக்கத்தில் இணைந்து கொள்கிறார் கம்யூ. தலைமறைவு இயக்கத்தால் வெளியிடப்பட்ட Combat எனும் பத்திரிகையின் ஆசிரியராகப் பணிபுரிந்தார். போரும், சாவும், சிதைவும் அந்நியப் படையெடுப்பும் அதற்கு எதிரான போராட்டமுமாக அவர் பட்டுணர்ந்த அனுபவத்திலிருந்து Plague என்ற உருவக நூலையும், Rebel என்ற தத்துவ நூலையும் எழுதினார்.

கொள்ளை நோய் (Plague) போரையும், சாவையும் குறியீடு செய்கிறது. சாவை எதிர்க்கும் மனிதனின் அர்த்தமற்ற எத்தனிப்பையும் உருவகப்படுத்துகிறது. ஓரான் என்ற அல்ஜீரிய கரையோரப் பட்டினத்தை கொள்ளை நோய் திடீரெனத் தாக்குகிறது. பட்டின வாசல்கள் அடைத்து மூடப்படுகின்றன. சாவின் முற்றுகைக்குள் பட்டினம். நோயை எதிர்த்துப் போராட பட்டினவாசிகள் அணிதிரட்டப் படுகின்றனர். மனிதனுக்கும் சாவைப் பரப்பும் எலிகளுக்கும் போராட்டம் நிகழ்கிறது. ஒருவரோடு ஒருவர் தொடர்பற்று, உறவற்று, தனித்திருந்த பாத்திரங்கள் ஒரு பொதுவான பேரழிவில் ஒன்று சேர்கின்றனர். பிரதான பாத்திரமாக ஒரு வைத்தியர், மற்றும் ஒரு பத்திரிகையாளர், ஒரு தீவிரவாதி, ஒரு அதிகாரி என்ற ரீதியில் வேறுபட்ட பார்வையுடைய வேறுபட்ட மனிதர்கள் ஒரு நாசகார சக்தியை

எதிர்கொள்கின்றனர். மற்றவர்களைவிட வைத்தியர் மிகவும் அவதானமாக நடந்து கொள்கிறார். சாவைத் தடுத்து விட முடியாது; ஒத்திப் போடலாம். தப்பிப் பிழைப்பவர்கள் மீண்டும் சாவைச் சந்தித்துதான் ஆகவேண்டும் என்ற பிரக்ஞையுடன் பற்றற்றவராகப் பணி புரிகிறார். கொள்ளை நோயைக் கடவுளின் தண்டனையாக காண்கிறார் பாதிரியார். அசிங்கமான மனிதனைத் தூய்மைப்படுத்தும் திருக்கூத்தாக சாவு சம்பவிக்கிறது எனப் பிரசங்கம் செய்துவந்த அவரைச் சாவு தீண்டிவிடுகிறது. நாவலில் கதையில்லை. ஒரு நெருக்கடி நிகழ்கிறது. மனிதர்கள் சந்திக்கிறார்கள். வார்த்தைகள் பரிமாறப்படுகிறது. அவற்றில் எண்ணங்கள் தெறிக்கிறது. 'கடவுள் இல்லாமல் ஒருவன் புனிதனாக முடியுமா? இதுதான் இன்று என்னை அழுத்தும் முக்கிய பிரச்சினை' என்று ஒரு பாத்திரம் கேட்கிறது. ஆன்மீகமற்ற உலகில் அறம் சாத்தியமா என்ற கேள்வியை எழுப்புகிறார் கம்யூ. இறுதியில் நோய் தடுக்கப்படுகிறது. ஆனால் நோய்க் கிருமிகள் சாகவில்லை. அக் கிருமிகள் மீண்டும் மனித ரைத் தாக்கலாம். இரண்டாம் உலகப் போர் முடிந்துவிட்டது. ஆனால் போருக்குக் காரணமான விஷக்கருத்துகள் சாக வில்லை. நாசிசமாகவோ, பாசிசமாகவோ அல்லது வேறு எந்தச் சித்தாந்தமாகவோ அந்தக் கருத்துக் கிருமிகள் மானிடம் மீது பேரழிவை ஏற்படுத்தலாம். இதுதான் மானி டத்தின் துயரமான இருப்பு நிலையாக இந்த உருவக நாவலில் சித்தரிக்கப்படுகிறது.

கிளர்ச்சிக்காரன் (The Rebel) என்ற கம்யூவின் தத்துவ நூல் அரசியல் உலகத்தை விசாரணை செய்கிறது.

கம்யூ ஒரு சமூக சீர்திருத்தவாதி. அநீதிக்கு எதிராக கிளர்ச்சி செய்வதை அவர் ஆதரித்தார். கற்பனாவாதக் கருத்துக்களாக, சித்தாந்தத்திற்காக புரட்சி செய்வதை அவர் எதிர்த்தார். மதங்களையும், சர்வாதிகார அரசியற் சித்தாந்தங்களையும் அவர் கண்டித்தார்.

கடவுட் கோட்பாட்டில் எழுந்த மத நம்பிக்கைகள் ஒன்றோடு ஒன்று முரண்பட்டு மோதுகிறது. மதத்தின் பெயரால் மனிதன் மனிதனை அழித்து வருகிறான்.



கலவரங்கள் வெடிக்கின்றன. தெய்வத்தின் பெயரால் யுத்தங்கள் நிகழ்கின்றன. நீண்ட நெடுங்காலமாக, மத யுத்தங்களால் இந்தப் பூமியின் மடியில் இரத்த ஆறுகள் ஓடியிருக்கின்றன. நித்தியத்துவம் என்ற கற்பனாவாதக் கருத்திற்காக மானிடம் பிளவுபட்டு மோதித் தன்னையே சிதைத்துக் கொள்கிறது.

அரசியற் கருத்துலகிலும் வன்முறை வெடிக்கிறது. ஒரு கற்பனாவாதக் கருத்துக்காகப் புரட்சி வெடிக்கிறது. கருத்துப் போர் வர்க்கப் போராகி சமூகப் பிரளயங்கள் நிகழ்கின்றன. சித்தாந்தங்கள் யுத்தங்களில் முடிகின்றன.

கம்யூவின் இந்தத் தத்துவ நூல் மத சித்தாந்தங்களை மட்டுமன்றி, அன்றைய கம்யூனிச உலகையும் கடுமையாகச் சாடியது. இதனால் கம்யூனிஸ்ட் தோழர்கள் பலரது நட்பை அவர் இழக்க வேண்டி நேர்ந்தது. நீண்ட கால நண்பராக இருந்த சாத்தர் கூட கருத்து முரண்பாட்டால் நட்பை முறித்துக் கொண்டார்.

அநீதிக்கு எதிராக, மனிதன் சுதந்திரம் வேண்டிப் போராடுவதையும் கிளர்ச்சி செய்வதையும் கம்யூ வரவேற்றார். அவர் குறிப்பிடும் கிளர்ச்சிக்காரன் அநீதிக்கு எதிரான சுதந்திரப் போராளி. அவன் அதர்மத்துக்கு எதிரான தர்மத்தின் தளத்தில் நிற்கிறான். மற்றவர்களது துன்பம் அவனைத் தீண்டுகிறது. அந்தத் துன்பத்தைக் காணும்போது அவனிடம் விழிப்புணர்வு ஏற்படுகிறது. அந்த விழிப்புணர்வால் துன்பப்படும் மற்றவர்களோடு தன்னை இனம் கண்டு கொள்கிறான். மனித ஆன்மத்திற்கு பொதுவான ஏதோ ஒன்று, மனித அவலத்தில் பிறக்கும் புலனாகாத ஒன்று, அவனையும் மற்றவர்களையும் ஒன்றிணைத்து விடுகிறது.

அநீதிக்கு எதிராக மக்கள் ஐக்கியப்பட்டு எழுச்சி கொள்வதைக் கிளர்ச்சி என்றும், ஒரு கருத்திற்கு வசப்பட்டு மக்கள் அணி சேர்ந்து எழுவதை புரட்சி என்றும் வேறுபடுத்தி, வகைப்படுத்திக் காட்டுகிறார் கம்யூ. முன்னதில் நீதி இருக்கிறது. தர்மம் இருக்கிறது. பின்னதில் உன்னதமானது ஒன்றுமில்லை என்பது அவரது வாதம்.

மனித சுபீட்சத்திற்காக மனிதன் போராட வேண்டும். அது அர்த்தமுடையது. அரூபமான, பூடகமான கருத்துகளுக்காக மனிதர்கள் போராடுவதும் மடிவதும் அபத்தமானது என்கிறார் கம்யூ.

இந்தத் தத்துவ நூலில் நீச்சேயை அவர் கண்டிக்கிறார். நீச்சேயின் தத்துவார்த்த கருத்துக்கள் சர்வதிகார சித்தாந்தங்களுக்குத் தூபமிட்டிருப்பதாக அவர் குற்றம் சாட்டுகிறார். கடவுள் இல்லாத ஒரு உலகத்தை சிருஷ்டிக்க முனைந்த நீச்சே, மனித அறங்களும் செத்துவிட்டதாகச் சொல்கிறார். இது தப்பு. இந்தக் கோட்பாடு அராஜகத்திற்கு வழிகோலும். கடவுள் இல்லாத உலகில், மனிதனே அறநெறிகளை வரித்துக் கொள்ள வேண்டும்; அர்த்தத்தைக் காண வேண்டும் என்கிறார் கம்யூ.

1960ஆம் ஆண்டு ஜனவரி 4ஆம் திகதி பாரிசில் கார் விபத்தில் சிக்கி, அல்பேர்ட் கம்யூ மரணமடைந்தார். சாவு என்பது வாழ்வின் ஒரு அபத்தமான நிகழ்வு என எழுதி வந்த கம்யூ, அந்த அபத்தமான சாவை இறுதியில் சந்தித்தார்.

மானிடத்தின் மனச்சாட்சியை கிள்ளி விட்ட ஒரு மகத்தான கலைஞர் என நோபல் பரிசுக் குழு அவரைப் புகழ்ந்துரைத்தது அவருக்குக் கிடைத்த பொருத்தமான சான்றிதழ்.



# மனிதத்துவம்

## சாத்தர் பற்றிய ஒரு அறிமுகம்

### I

அவர் ஒரு சிறந்த நாவலாசிரியர். பிரபல நாடகாசிரியர். இலக்கிய விமர்சகர். நோபல் பரிசு பெற்ற இலக்கிய கர்த்தா.

அவர் ஒரு அரசியற் சிந்தனையாளர். மனிதத்துவவாதி. மாக்சியவாதி.

அவர் ஒரு தத்துவாசிரியர். தத்துவத்தில் வித்தகர். பிரஞ்சு இருப்பியத்தின் பிரதம குரு.

அவர்தான் ஜோன் போல் சாத்தர் (Jean Paul Satre 1905-1980) அரை நூற்றாண்டுக்கு மேலாக ஐரோப்பிய கருத்துலகை ஆட்டிப் படைத்தவர். பெரும் சிந்தனைப் புயல்களுக்கு மையமாக நின்றவர். தனித்து நின்று, கம்யூனிச உலகத்துடன் கருத்துப் போர் தொடுத்தவர். இருப்பு என்னும் பேரியக்கத்தில் தனி மனித இருப்பிற்கு முதன்மை கொடுத்தவர். தனிமனிதனின் இருப்பும், அவனது வாழ்வனுபவமுமே, பேருண்மைக்குப் பொருளையும் அர்த்தத்தையும் கொடுப்பதாகச் சொன்னவர். சமூக வரலாற்றுக் காவியத்தில் தனிமனிதனின் அடையாளத்தைப் பொறித்துவிட முனைந்தவர்.

சாத்தரின் படைப்புலகம் பெரிது. எழுத்துக் கலையை ஒரு உன்னத சமூகப் பணியாக வரித்து அவர் ஓய்வில்லாமல் எழுதிக் குவித்தார். தத்துவமாக, நாவலாக, நாடகமாக, வாழ்க்கை வரலாறாக, சுயசரிதமாக, கட்டுரையாக செறிந்து கிடக்கும் சாத்தரின் பரந்த சிந்தனையுலகைச் சுருக்கி எழுதுவது சிரமம். மிகவும் கனமான, பூடகமான, சிக்கலான மொழியில் அவர் எழுதினார். அர்த்த பரிமாணங்களின் எல்லைக் கோட்டிற்கு

அப்பால் வார்த்தைகளை நெகிழ்த்திச் சென்று சொற்சிலம்பாடுவதில் அவர் ஒரு விற்பன்னர். இலக்கியத்திலும் தத்துவத்தைப் புகுத்தினார். கருத்துகளின் குறியீடுகளாகக் கதாபாத்திரங்களைப் படைத்தார். விவாத மேடைகளாக நாடகங்களை எழுதினார். உரையாடல்களில் தத்துவ விசாரணைகளை எழுப்பினார். இருப்பிய சிந்தனையின் கலை வடிவங்களாக அவர் இலக்கியத்தைச் சிருஷ்டித்தார்.

மனிதத்துவத்தின் மையத்தில் நின்றபடி சாத்தர் தன்னை ஒரு இருப்பியவாதியாக இனம் காட்டிக் கொண்ட போதும், அவரது உலகப் பார்வையில் பல சிந்தனை உலகங்கள் சங்கமித்து நின்றன. காலத்திற்குக் காலம், வெவ்வேறு தத்துவ தரிசனங்களால் அவர் ஆகர்ஷிக்கப்பட்டார். இதனால், காலத்திற்கு காலம், அவரது உலகப் பார்வை மாற்றம் கண்டது. அத்தோடு அவர் வாழ்ந்த காலமும், இடமும், புறநிலைச் சூழலும், அந்தக் காலத்தில் கட்டவிழ்ந்த வரலாற்று நிகழ்வுகளும் அவரது சிந்தனையோட்டத்தில் திருப்பங்களை நிகழ்த்தின.

சாத்தரை சரிவரப் புரிந்து கொள்வதாயின் சாத்தரை ஆட்கொண்டு நின்ற சிந்தனை உலகங்களைத் தெரிந்து கொள்வது அவசியம். சாத்தரின் சிக்கலான மொழி நடையையும், அவரது ஆழமான தத்துவப் பார்வையையும் கிரகித்துக் கொள்வதற்கு இது முக்கியம். சாத்தரை ஈர்த்த சிந்தனை உலகங்கள் என்ற வரிசையில், ஹுசேளின் உணர்வாய்வுத் தத்துவம் (Husserl's Phenomenological Philosophy), கைடேகரின் இருப்பியம் (Heidegger's Existentialism), ஹேகலின் இயங்கியல் (Hegel's Dialectics), பிராய்டின் மனப்பகுப்பியல் (Freud's Phychoanalysis), மாக்சின் வரலாற்றுப் பொருளியம் (Marx's Historical Materialism) ஆகியனவற்றை குறிப்பிட்டுச் சொல்லலாம்.

ஹுசேளின் சிந்தனைகள் சாத்தரின் ஆரம்பகால எழுத்துகளை ஆக்கிரமித்து நிற்கின்றன. ஹுசேள் ஒரு ஜெர்மானியத் தத்துவாசிரியர். அவரது தத்துவம் மனித





ஜோன் போல் சாத்தர்

புலனானுபவத்தைக் கூர்மையாக விசாரணை செய்கிறது. புலன்களின் வெளிச்சத்தில் புலனாகும் இந்த உலகத்தின் தோற்றப்பாட்டை மிகவும் நுண்ணியமாக ஆராய விழைகிறது. பட்டுணர்வின் பண்புகளை விளக்க முனைகிறது.

எனது அகவுலகம் வாயிலாகவே நான் புறவுலகத்தை பட்டுணர்ந்து கொள்கிறேன். எனது அகமானது ஒரு திட்பநுட்பமான அளவுகோல் அல்ல. அது ஒரு களங்கப்பட்ட கண்ணாடி. கடிவாளம் பூட்டிய குதிரை. அது பழமையில் கட்டுண்டு கிடக்கிறது. மூட நம்பிக்கைகளில் மூழ்கிப் போயிருக்கிறது. ஏற்கனவே திணிக்கப்பட்ட எண்ணற்ற அனுமானங்களில் சிறைப்பட்டுக் கிடக்கிறது. இந்த

மாசுபடிந்த மனதினால் புற உலகின் மெய்யுண்மையைக் கண்டு கொள்ள முடியாது. மனமானது முதலில் தூய்மை பெறவேண்டும். பழமை, பொய்மை என்ற தளைகளிலிருந்து விடுதலை பெறவேண்டும். அனுமானங்களிலிருந்து விடுபட வேண்டும். தூய்மையான பிரக்ஞை மூலமே துல்லியமான பார்வை சாத்தியமாகும். அந்தக் களங்கமற்ற வெளிச்சத்தில்தான் தீட்சண்யமான அறிவைப் பெறலாம். வெறும் தோற்றப்பாட்டின் பின்புலத்திலுள்ள மெய்யுண்மையைக் கண்டு கொள்ளலாம்.

பட்டுணர்வைக் கூர்படுத்தும் நுட்பமான ஆய்வுமுறையாக ஹுசேளின் தத்துவம் அமைகிறது. கருத்துருவங்கள், கற்பிதங்களிலிருந்து மனதைச் சுத்திகரித்து, அந்தக் களங்கமற்ற கண்ணாடியில் காட்சி தரும் மெய்யுலகை, அப்படியே விபரித்துக் கூறும் புதுமையான உத்தி ஒன்றை அவர் விளக்கிக் காட்டுகிறார்.

ஹுசேளின் உணர்வாய்வுத் தத்துவம் இருப்பியல்வாதிகள் பலரைக் கவர்ந்து கொண்டது. மனிதானுபவத்தை, மனிதவுணர்வுகளை ஆழமாக விபரித்துக் கூற இந்தப் பார்வை ஒரு சிறந்த வழிமுறையாக விளங்கிற்று. ஹுசேளின் சிந்தனை, சாத்தரின் ஆரம்பகால எழுத்துகளை ஆக்கிரமித்து நிற்கிறது.

குமட்டல் (Nausea) என்ற சாத்தரின் முதலாவது நாவலும், இருத்தலும் இல்லாமையும் (Being and Nothingness) என்ற அவரது ஆரம்பகால தத்துவ நூலும் ஹுசேளின் தரிசனத்தைத் தழுவி நிற்கும் படைப்புகள்.

Nausea ஒரு பரிசோதனை நாவல். நனவோடை உத்தியில் எழுதப்பட்டது. உணர்வு நிலைகளை படிமங்களில் சித்தரித்துக் காட்ட முனையும் ஒரு வித்தியாசமான படைப்பு.

கதாநாயகன் ஒரு தனியன். வாழ்வோட்டத்திலிருந்து அந்நியப்பட்டு நிற்பவன். வேரற்ற, பற்றற்ற, உறவற்ற மனிதன். வாழ்வை அபத்தமாகக் காண்பவன். மற்றவர்களை வெறுப்பவன். தனது மனக் குகையின் அந்தரங்க மாளிகை யில் வாழ்பவன். முன்பின் தெரியாத அந்தப் பட்டினத்திற்கு



வருகிறான், ஒரு பிரபுவின் வாழ்க்கைக் குறிப்பு எழுதுவதற்கு. எதிலும் மனம் இருப்புக் கொள்ளவில்லை. மனவுளைச்சலில் அலைகிறான். பட்டினத்துப் பூங்கா அவனுக்குத் தஞ்சம் கொடுக்கிறது. பிரமாண்டமான ஒரு விருட்சத்தின் முன்பு அமர்ந்து கொள்கிறான். அதிலிருந்தபடி சிந்தனையில் ஆழ்ந்து போகிறான். அவனது மனம் உலகத்தை அசைபோடுகிறது. அகமும், புறமும் புணர்ந்து கொள்கிறது. அந்தப் புலனானுபவத்தில் திடீரென அவனுக்கு ஒரு புத்துணர்வு பிறக்கிறது.

என்றுமில்லாதபடி மனம் விழித்துக் கொள்கிறது. மனத்திரை விலகிக் கொள்கிறது. பொருட்களில் ஒட்டியிருந்த வார்த்தைகள் கழன்று விழுகின்றன. பூச்சுக்கள் அழிந்து போகின்றன. குறியீடுகள் அர்த்தமிழந்து செத்துப் போகின்றன. மனமானது இயற்கை மீது போர்த்திருந்த ஆடைகள் அவிழ்ந்து விழ, பொருட்கள் பொருளிழந்து விடுகின்றன. அந்தப் பெருமரமும், அதன் பருத்த முறுக்கேறிய வேர்களும், நிலத்தின் மேல் படுத்திருக்கும் அந்தப் புற்தரையும், பூச்செடிகளும், பூங்காவின் கதவுகளும், ஆங்காங்கே குந்தியிருக்கும் ஆசனங்களும், எல்லாமே தத்தம் தனித்துவத்தை இழந்து மறைந்து போக, வெறும் தோற்றப்பாடு மட்டுமே தெரிகிறது. திடீரென, இருப்பானது தனது நிர்வாண தோற்றத்தில் அவனுக்கு காட்சி கொடுத்தது. எங்கும், எல்லாம் அவனைச் சூழ அடையாள மற்ற உருவங்களாக, பொருண்மத் திரள்களாக, பிண்டங்களாக, பூதாகாரத் தோற்றம் கொண்டது. இந்தத் திடீர் வெளிப்பாட்டினால் சாத்தரின் கதாநாயகன் கலங்கிப் போகிறான். இருப்பின் மெய்த்தோற்றம் அவனுக்குப் பயத்தைக் கொடுத்தது. அருவருப்பை ஏற்படுத்தியது. குடல் புரண்டு குமட்டியது. இருப்பின் தரிசனம் அவனுக்கு அங்கலாய்ப்பை ஏற்படுத்துகிறது. அதற்கும் அவனுக்கு என்ன உறவு? அந்த உறவில் என்ன அர்த்தம்? அவனால் ஒன்றும் விளங்கிக் கொள்ள முடியவில்லை.

“இந்த உலகில் இருப்புக் கொள்வதெல்லாம் காரணமெதுவுமின்றித் தோன்றுகிறது. பலவீனத்துடன்

நிலைத்து நிற்க முனைகிறது. தற்செயலாகச் செத்துப் போகிறது. ஏன், எதற்காக, இந்த உலகம் தோற்றம் கொண்டது? இருப்பிற்குப் பதிலாக இல்லாமை இருந்திருக்கலாம் அல்லவா? எதையுமே என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை'' அவன் சிந்திக்கிறான். இருப்பு அபத்தமாகத் தோன்றுகிறது.

இறுதியில் தனது வரலாற்று ஆய்வைக் கைவிட்டு அந்தப் பட்டினத்திலிருந்து வெளியேறுகிறான். புகையிரத நிலையத்தில் தனது எதிர்காலம் பற்றி கவலை கொள்கிறான். அபத்தமான வாழ்க்கையில் அர்த்தம் காண்பது எப்படி எனச் சிந்திக்கிறான்.

சிருஷ்டிப்புக் கலைதான் உன்னதமானது. கலைஞனாக வாழ்வதில்தான் அர்த்தமிருக்கிறது. படைப்புத் தொழிலில் ஒருவன் தனது இருப்பின் அடையாளத்தை நிலை நிறுத்துகிறான். தனது வாழ்வனுபவத்தை மற்றவர்களுக்கு உணர்த்திவிடுகிறான். இறந்த பின்னரும் தனது சுவட்டை இந்த உலகத்தில் விட்டுச் செல்கிறான். ஒரு நாவல் எழுதவேண்டுமென கதாநாயகன் உறுதி செய்து கொள்வதுடன் தனது நாவலை முடிக்கிறார் சாத்தர்.

'குமட்டல்' என்ற இந்த நாவல் சாத்தரை பிரஞ்சு இலக்கிய உலகில் அறிமுகப்படுத்தியது. கலைவடிவத்தில் தத்துவத்தை விளக்கும் பரிசோதனை முயற்சியாக அவர் இந்த நாவலை எழுதினார். கமுவின் 'அந்நியனுக்கும்' சாத்தரின் 'குமட்டலுக்கும்' சில ஒருமைப்பாடுகளைக் காணலாம். ஆனால் அடிப்படையில் வேறுபாடுகள் உண்டு. இரு கதாநாயகர்களும் வாழ்க்கையில் விரக்தி கொண்ட அபத்த மனிதர்கள். கமுவின் கதாநாயகனுக்கு மரணத்தின் வாயிலில் ஞானோதயம் பிறக்கிறது. வாழ்வின் அர்த்தத்தை அவன் உணர்ந்து கொள்கிறான். ஆனால் சாத்தரின் கதாநாயகனுக்கு இருத்தல் அசிங்கமாகத் தெரிகிறது. இருத்தலின் வெளிப்பாடு அருவருப்பைத் தோற்றுவிக்கிறது. வாழ்வு அபத்தமாக இருப்பினும் எழுத்தில் அர்த்தத்தைக் காணலாம் என்ற முடிவுக்கு வருகிறான். இருப்பு பற்றிய ஒரு எதிர்மறையான சித்தரிப்பை இங்கு சாத்தர் தருகிறார்.



ஆனால் நாவலின் மையக்கருத்து வேறு. மனித மொழிக்கும், அந்த மொழியால் மனிதன் உருவகப்படுத்த முனையும் மெய்யுலகத்திற்கும் மத்தியில் பெரிய விரிசல் உண்டு. சொற்களால், கருத்துருவங்களால் மனிதன் கட்டியெழுப்பும் உலகம் வேறு, மெய்யுலகம் வேறு. வார்த்தைகளுக்கு அப்பாலான தூய்மையான பிரக்ஞையில் இருத்தலின் மெய்மையைக் கண்டு கொள்ளலாம். ஹுசேளிடம் உள்வாங்கிய இந்தத் தத்துவமே நாவல் வடிவம் எடுத்திருக்கிறது.

பிந்திய ஒரு காலகட்டத்தில், அதாவது 26 ஆண்டுகளுக்குப் பின்னர், சாத்தர் தனது முதலாவது நாவலை கடுமையாக விமர்சித்திருக்கிறார். "உலகம் பற்றிய அன்றைய பார்வையில் எனக்குத் தெளிவு இருக்கவில்லை. இன்று மெய்யுலகின் உண்மை நிலையை என்னால் உணர்ந்து கொள்ள முடிகிறது. குழந்தைகள் பசியினால் மடிந்து போவதை நான் கண்டிருக்கிறேன். செத்துக் கொண்டிருக்கும் ஒரு குழந்தையின் அவலத்திற்கு எனது நாவல் ஈடாக முடியாது'' என்று அவர் எழுதியிருக்கிறார்.

1943ஆம் ஆண்டு பாரிஸ் நகரை ஜெர்மானியர் ஆக்கிரமித்திருந்த காலத்தில், இருத்தலும் இல்லாமையும் (Being and Nothingness) என்ற சாத்தரின் பிரபல தத்துவ நூல் வெளியாகியது. ஆயிரம் பக்கங்களைக் கொண்ட இந்த நீண்ட, கனமான தத்துவப் படைப்பு மனித பிரக்ஞையின் பல்வேறு உணர்வுநிலைகளை மிகவும் நுணுக்கமாக அலசிப் பார்க்கிறது. ஹுசேளின் உணர்வாய்வுத் தத்துவத்தைத் தழுவி நின்றபோதும், சாத்தரின் இருப்பியக் கருத்துக்கள் இந்த நூலில்தான் அறிமுகம் செய்யப்படுகிறது.

மனவுலகத்தையும் பொருளுலகத்தையும் இருப்பின் இரு முகங்களாக, இரு முரண்பட்ட சக்திகளாக விளக்கிக் காட்ட முனையும் சாத்தர், அகத்தினதும் புறத்தினதும் சிக்கலான உறவு பற்றி மிகவும் நீண்ட தத்துவார்த்த வியாக்கியானங்களைத் தருகிறார். இந்த உறவு பற்றிய ஆய்வில் மனித மனம் முதன்மை பெறுகிறது. தனித்துவம்

பெறுகிறது. எல்லா நிர்ணய சக்திகளுக்கும் அப்பால் சுயாதீனம் கொண்டதாக, சுதந்திரம் பெற்றதாக சித்தரிக்கப்படுகிறது.

மெய்யுலகம் எனக்குப் புறம்பாக இருக்கிறது. என்னைச் சூழ இருக்கிறது. எனது புலனுக்கு எட்டிய தூரத்தில் எங்கும், எல்லாவிடமும் வியாபித்து நிற்கிறது. எனது தோற்றத்திற்கு முன்பே அது இருந்தபடியே இருக்கிறது. ஏற்கனவே, எப்படியோ, ஏதோ ஒரு வழியில், அது உருவாக்கம் பெற்று நிற்கிறது. இருப்பாக இருந்து கொண்டே இருக்கிறது. அதற்கு வடிவமில்லை; உருவமில்லை; பண்புகளில்லை; இயல்புகளில்லை; அவை எல்லாம் மனித மனதால் சிருஷ்டிக்கப்பட்டவை. மனமே இந்த உலகிற்கு பொருளைக் கொடுக்கிறது; பண்பைக் கொடுக்கிறது; அர்த்தத்தைக் கொடுக்கிறது. காலம் என்றும், வெளி என்றும் காரண காரியம் என்றும், தேவை என்றும், இயல்பு என்றும், பண்பு என்றும், நாம் பாவிக்கும் பதங்கள் இந்த உலகத்தைத் தரம்பிரித்து, வகைப்படுத்த நாம் கையாளும் கருது கோள்கள்; அளவுகோல்கள்.

மனித மனமே இந்த உலகத்திற்கு ஆடைகளை அணிந்து அழகுபடுத்தியிருக்கிறது. பூச்சுக்களைப் பூசி விட்டிருக்கிறது. அர்த்தங்களைப் பிதுக்கி விட்டிருக்கிறது. தான் விரும்பியவாறு, தனது இயல்புகளிலிருந்து, தனது அளவுகோல்களிலிருந்து, இந்த உலகத்தை மனமே சிருஷ்டித்துள்ளது. ஆனால் இந்த உலகமானது மனித கணிப்புகளுக்கு அப்பால், மனித அனுமானங்களுக்கு அப்பால், மனித கற்பிதங்களுக்கு அப்பால், மனிதனுக்குப் புலனாகாத மெய்ப்பொருளாய், மெய்யுண்மையாய் இருப்புக் கொண்டு இருக்கிறது. நாம் காணும் இந்த நிஜவுலகம், நாம் பட்டுணர்ந்து கொள்ளும் இந்தப் புறவுலகம் மனிதனின் உலகம்; மனிதனால் வனையப்பட்ட உலகம்.

சாத்தரின் இந்தத் தத்துவார்த்த விளக்கம், பொருளுலகத்தை, புலனானுபவத்திற்கு அப்பாலான மாயப் பொருளாக, மறைபொருளாக சித்தரிக்க முனைகிறது. அகத்திலிருந்து புறத்தை துண்டித்துவிட விழைகிறது. மனித



மனதிற்கு அலாதியான முக்கியத்துவத்தைக் கொடுக்கிறது.

சாத்தரின் பார்வையில் மனித மனமானது ஒரு சுதந்திரப் பறவை. அது சுயமாகச் சிந்திக்கிறது, உணர்கிறது, முடிவுகளை எடுக்கிறது, தெரிவுகளைச் செய்கிறது, திட்டங்களைப் போடுகிறது, சுயவுணர்வு கொள்கிறது, ஞாபகமீட்டுகிறது, உலகத்தைக் கிரகிக்கிறது, உலகத்தாரோடு உறவு கொள்கிறது, சொற்களில் கருத்துகளைச் செதுக்குகிறது, படைக்கிறது.

இவ்வாறாக மனித பிரக்ஞை (Human Consciousness) செயற்படுகிறது; இயங்குகிறது. இந்த மன இயக்கத்தை சுதந்திரத்தின் வெளிப்பாடாக, சுயாதீனத்தின் செயற்பாடாகக் கற்பிக்க முனைகிறார் சாத்தர். இங்கு அவர் மன இயக்கத்தை விபரித்துச் சொல்வதுடன் நின்றுவிடவில்லை. மனித பிரக்ஞையை முழு மனிதனாக உருவகித்து, மனிதன் ஒரு பூரணமான சுதந்திரப் பிறவி எனப் பிரகடனம் செய்து விடுகிறார். அதாவது, எவ்வித நிர்ப்பந்தங்களுக்கும், நிர்ணய சக்திகளுக்கும் அப்பாலான ஒரு சுதந்திர ஜீவனாக மனிதனை சித்தரித்து விடுகிறார். சாத்தரின் தத்துவ வித்தையில் மனமானது முழு மனித னாக மாற்றப்படுகிறது; எண்ணத்தின் அசைவியக்கம் மனிதனின் சுதந்திர இயக்கமாக மாற்றப்படுகிறது. இப்படியான ஒரு கற்பனாவாதக் கருத்து நிலையில் நின்று கொண்டு, மனிதன் சுதந்திரமாக வாழ விதிக்கப்பட்டிருக்கிறான் (Man is condemned to freedom). அது அவனது தவிர்க்க முடியாத தலைவிதி என அறைகூவல் விடுக்கிறார். மானசீகமான ஒரு சுதந்திரத்தைக் கற்பித்து அதை மனித இருப்பின் மையத்தில் நிறுவி விட முனைகிறார் சாத்தர்.

சாத்தரின் இந்தத் தத்துவப் படைப்பில் புரிந்து கொள்ள முடியாத புதிர்கள் பலவுண்டு. முரண்பாடுகள் பலவுண்டு. மெய்யுலக யதார்த்தத்திற்குப் புறம்பான கற்பிதங்கள் பலவுண்டு. உலகத்திலிருந்தும் உறவுகளிலிருந்தும் அந்நியப்பட்டு நிற்கும் ஒரு அலாதியான அகவுலகத்தைப் படைத்து, அதைச் சுதந்திரத்தின்

ஆன்மாவாகச் சித்தரித்து, அதன் அத்திவாரத்தில் தனது இருப்பியக் கருத்துலகைக் கட்டியெழுப்புகிறார் சாத்தர். உலகத்தின் தளைகளிலிருந்து விடுபட எத்தனிக்கும் ஹுசேளின் 'தூய பிரக்ஞை' (Pure Consciousness) சாத்தரின் சுதந்திர புருஷனாக மறு அவதாரம் எடுத்திருக்கிறது.

இந்தத் தத்துவ நூலை எழுதிய அன்றைய காலகட்டத்தில், சாத்தரின் சிந்தனைகள் நிஜத்தின் நிலத்தில் கால் பதிக்கவில்லை. வாழ்வுக் கடலில் நங்கூரம் தரிக்கவில்லை. வரலாற்று ஓட்டத்தைக் கண்டு கொள்ளவில்லை. சமூக வாழ்விற்கும் வரலாற்றிற்கும் புறம்பாக நின்று, நிஜவுலக நிர்ப்பந்தங்களை நிராகரித்துவிட்டு, மனவுலகச் சுவர்களுக்குள் மனிதனைத் தேட அவர் முயற்சித்தார். இயற்கையால் படைக்கப்பட்ட மனிதனை, இயற்கையோடு இணைந்து வாழும் மனிதனை, சமூக உறவுச் சங்கிலியால் பிணைக்கப்பட்ட மனிதனை, வரலாறு படைக்கும் மனிதனை, இரத்தமும் சதையுமான உயிருள்ள மனிதனை, மெய்யான மனிதனை அவர் கண்டுகொள்ளவில்லை. விலங்கிடப்பட்டிருக்கும் அடிமை யிடம், சிறையில் வதைபடும் கைதியிடம், பசியால் செத்துக் கொண்டிருக்கும் மனிதனிடம் சாத்தர் சொல்லும் சுந்திரம் செல்லுபடியாகாது. அது மனித மெய் நிலைக்குப் புறம்பானது. அகவயமானது.

பிந்திய ஒரு காலத்தில், முந்திய படைப்புகளை சுயவிமர்சனம் செய்யும் போது தனது ஆரம்ப கால கற்பனாவாதத்தை அவர் கண்டிக்கத் தவறவில்லை. உளவி யல் நிலவறைக்குள் நின்று, முழு உலகத்தையும் விளக்க முயன்றது தவறு என்பதை அவர் ஒப்புக் கொண்டார்.

ஐரோப்பாவை அதிர வைத்த இரண்டாம் உலகப் போர் சாத்தரின் கனவுலகத்தைக் கலைத்தது. நிஜவுலகின் யதார்த்தத்தைப் புரிய வைத்தது.

நாசிச யுத்த பூதம் ஐரோப்பிய நாடுகளை விழுங்கியது. நகரங்களை அழித்தது. கோடிக் கணக்கில் மனிதர்களைக் கொன்று குவித்தது. நெப்போலியனின் நாடு,



சாத்தரின் தாய்நாடு, ஹிட்லரின் காலடியில் மிதிபட்டது.

அந்நிய ஆக்கிரமிப்பால் எழுந்த அடிமைப்பட்ட வாழ்வும், அவலமான சூழ்நிலைகளும் சாத்தருக்கு சுதந்திரம் பற்றிய தெளிவை ஏற்படுத்தியது. சுதந்திரம் என்பது மனவுலகத்தின் மானசீகப் பொருளல்ல; அது சமூக வாழ்நிலையோடு சம்பந்தப்பட்டது. அடிமைத் தளைகளிலிருந்து விடுபடுவதைக் குறிக்கிறது. மனித மேம்பாட்டைக் குறிக்கோளாகக் கொண்டது. புறநிலைகள் சாத்தருக்கு இந்த உண்மையைப் புலப்படுத்தியது. நாசிச ஆதிக்கத்திற்கு எதிரான பிரஞ்சு எதிர்ப்பியக்கத்தில் இணைந்து செயலாற்றிய வேளையில், சுதந்திரம் போராடிப் பெறவேண்டியது என்ற ஞானோதயம் அவருக்கு ஏற்பட்டது.

இரண்டாம் உலக யுத்தத்தை அடுத்து, அரசியலிலும், இலக்கியத்திலும் தீவிரமாக ஈடுபட்டார் சாத்தர். மாக்சிய சிந்தனை அவரை வெகுவாகக் கவர்ந்தது. சமத்துவமும் சமூக நீதியும் தழைத்தோங்கும் சமூகத்தில் தனிமனிதனின் சுதந்திரம் மேம்பாடு பெறுமெனக் கருதினார். ஒடுக்கப்படும் மனிதனின் விடுதலைக்காக குரல் கொடுத்தார். அரசியல் நாடகங்களை அரங்கேற்றினார். நாவல்களை எழுதினார். அரசியல் ஈடுபாடு கொண்ட படைப்பிலக்கி யத்தை வலியுறுத்தினார்.

எழுத்து என்றால் என்ன? ஒரு எழுத்தாளன் ஏன் எழுத வேண்டும்? அவன் யாருக்காக எழுத வேண்டும்? என்ற வினாக்களுக்கு விடையளித்து 'இலக்கியம் என்றால் என்ன?' (What is Literature) என்ற நூலை எழுதி வெளியிட்டார். 1948இல் பாரிசில் பிரசுரமான இந்த நூல் பிரஞ்சு இலக்கிய உலகில் பெரும் சர்ச்சையைக் கிளப்பியது.

இலக்கியம் ஒரு சமூகக் கலை; ஒரு சமூகச் செயற்பாடு; அதற்கு ஒரு சமூகப் பங்கு இருக்கிறது. சமூக உலகத்தின் மீதும், சமூக இயக்கத்தின் மீதும் அது தாக்கத்தை விளைவிக்கிறது. சமூக மாற்றத்திற்கு உந்து சக்தியாக விளங்குகிறது. மனித விழிப்புணர்விற்கும் விடுதலைக்கும் பாதை அமைத்துக் கொடுப்பதே

இலக்கியத்தின் உன்னதமான இலட்சியமாக அமைய வேண்டும். ஒரு குறிப்பிட்ட சமூகத்தில், குறிப்பிட்ட காலகட்டத்தில், ஒரு குறிப்பிட்ட வரலாற்றுச் சூழலில் எழுத்தாளன் வாழ்கிறான். தான் வாழும் சமூகத்தையும், அந்தச் சமூகத்தின் வாழ்நிலைப் பிரச்சினைகளையும், போராட்டங்களையும் எழுத்தாளன் உதாசீனம் செய்ய முடியாது. வரலாற்றிலிருந்து அவன் ஒளிந்துக் கொள்ள முடியாது. அவன் எழுத வேண்டும். அவனது எழுத்து அந்த சமூகத்தின் வாழ்நிலையை ஊடுருவி நிற்க வேண்டும். சமூகத்தாரை சிந்திக்கத் தூண்டி, செயற்பட வைக்க வேண்டும். சமூக விடுதலையை இலக்காகக் கொண்டிருக்க வேண்டும். இந்த வகையில் எழுத்தாளனுக்கு சமூகப் பற்றுணர்வு அவசியம், அர்ப்பணிப்பு அவசியம், ஈடுபாடு அவசியம். எழுத்து, அரசியல் ஈடுபாடு உடையதாக இருக்க வேண்டும் என்பதை இந்த நூலில் வலியுறுத்துகிறார் சாத்தர்.

சொற்களுக்கு அபாரமான சக்தியுண்டு. அவை வாசகனின் ஆன்மாவைப் பற்றிக் கொள்கிறது. அவனது இருண்ட மனக் குகைக்குள் வெளிச்சத்தைக் காட்டுகிறது. மாயைகளைப் போக்கிவிடுகிறது. கனவுகளைச் சிதைத்துவிடுகிறது. எழுத்துக் கலையானது அரசியல் விழிப்புணர்வைத் தூண்டி, மனித விடுதலைக்கு வழிசமைத்துக் கொடுக்கிறது. சமூகப் பிரக்ஞையுடன் எழுதுபவன், சமூக விடுதலைக்காக எழுதுபவன் தனது இருப்பிற்கும் மற்றவர்களது வாழ்விற்கும் அர்த்தத்தைக் கொடுக்கிறான் என்கிறார் சாத்தர்.

மனித இருப்பு நிலைக்கு அப்பால், சமூக வாழ்நிலைக்கு அப்பால், அழகுணர்விற்காக, கலையுணர்விற்காக, நித்திய விழுமியங்களைத் தேடி எழுதுவதில் அர்த்தமில்லை. அது சமூகத்தின் ஒடுக்குமுறையாளர்களை, அதிகார வர்க்கத்தினரை திருப்திப்படுத்தும் படைப்புகளாகும். அந்த எழுத்துக்கள் சமூகத்தின் ஒடுக்குமுறையை நியாயப்படுத்துவதாக அமையும் என்கிறார் சாத்தர்.



## II

இரண்டாவது உலகப் போர் முடிவுக்கு வந்தது. இரண்டாவது தடவையாக, உலகத்து மனிதர்கள், தமக்குள் பெரும் போர் செய்து, பெருமளவு இரத்தம் சிந்தி, தமக்குத் தாமே பேரழிவை ஏற்படுத்தி, அந்தப் பெரும் சிதைவுகளிலிருந்து ஒரு புதிய உலக ஒழுங்கைக் கட்டினார்கள். பூமியை ஆளுவதற்கு ஆசைகொண்ட நாசிச அரக்கன் களத்தில் மடிந்து போனான். அவனது புதைகுழியிலிருந்து இரு பெரும் வல்லாதிக்க பூதங்கள் பிறப்பு எடுத்தன. புதிய உலக அமைப்பு இந்தப் பூதங்களின் கையில் வீழ்ந்தது. இந்த இருபெரும் வல்லாண்மை சக்திகள் மத்தியில் பிடுங்குப்பட்டு, இரண்டாகப் பிளவு கண்டது ஐரோப்பிய கண்டம்.

கிழக்கு ஐரோப்பாவை ரஷ்ய கம்யூனிசம் விழுங்கிக் கொண்டது. அமெரிக்க முதலாளியத்தின் கைப்பொம்மை ஆக மாறியது மேற்கு ஐரோப்பா. உலகத்தை உலுப்பிய உலக யுத்தம் முடிந்தபோதும் ஐரோப்பிய மனிதனின் அடிமை வாழ்வு முடியவில்லை. அவன் ஒரு சிறையிலிருந்து மீட்கப்பட்டு இன்னொரு சிறைக்குள் தள்ளப்பட்டான்.

யுத்தம் முடிந்த காலகட்டத்தில், அன்றைய ஐரோப்பிய அரசியல் சூழ்நிலையை இப்படித்தான் எடைபோட்டார் சாத்தர். ஐரோப்பிய கண்டத்திற்குள் அவரது பார்வை அன்று முடங்கிக் கிடந்தது.

ஐரோப்பிய மனிதனை வரலாறு இன்னும் விடுதலை செய்யவில்லை. அவனைச் சூழ, நாலாபுறமும் ஆதிக்கச் சுவர்கள் எழுந்து நின்றன. அதன் நடுவே, நகர முடியாதபடி, அவன் விலங்கிடப்பட்டுக் கிடந்தான். முதலாளியமும் கம்யூனிசமும் ஐரோப்பிய மனிதனை அடிமை கொண்டு நின்றன. முதலாளியம் மனிதத்துவத்திற்கு விரோதமானது. அது மானிடத்தின் இரத்தத்தைக் குடித்து வளர்கிறது. மனித படைப்பாக்க சக்தியை பண்டமாக்கி, பணமாக்கி வாழ்கிறது. மனிதத்தின் சாரத்தை பொருளுலகில் புதைத்து விடுகிறது.

கம்யூனிசம் என்ற எண்ணக் கரு, ரஷ்ய மண்ணில் வேதாள வடிவம் எடுத்திருக்கிறது. மாக்சின் சமத்துவ தத்துவம், ஸ்டாலினிச சர்வாதிகாரமாக பிறழ்ச்சி கண்டிருக்கிறது. அது மனித சுதந்திரங்களை ஏப்பம் விட்டு வருகிறது. ரஷ்ய கம்யூனிசத்தையும், அமெரிக்க முதலாளியத்தையும் கடுமையாகச் சாடினார் சாத்தர்.

ஒரு புதிய ஐரோப்பாவை சாத்தர் கனவு கண்டார். ஆதிக்க சக்திகளின் அதிகாரப் பிடியிலிருந்து ஐரோப்பிய சமூகம் விடுதலை பெறவேண்டும். ஒரு சுதந்திரமான, சமத்துவமான, உண்மையான சோசலிச சமூகமாக ஐரோப்பா மாற வேண்டும். ஒரு புதிய வரலாற்றுப் பாதையில், புதிய யுகத்தை நோக்கி ஐரோப்பிய மனிதன் முன்னேறிச் செல்ல வேண்டும். இப்படியான ஒரு இலட்சியக் கனவைக் கண்டார் சாத்தர். உலகப் போர் ஓய்வு கண்ட அன்றைய காலகட்டத்தில், சாத்தரின் அரசியல் ஈடுபாடும், எழுத்தும் இந்த இலட்சியத்தின் அடிப்படையில் அமைந்தது.

தனது புதிய பார்வைக்கு களம் அமைக்க விரும்பிய சாத்தர், நவயுகம் (Les Temps Modernes) என்ற பத்திரிகையை ஆரம்பித்து அதன் ஆசிரியராகப் பணிபுரிந்தார். அத்துடன் 'சர்வதேச புரட்சிகர சனநாயக மக்கள் சபை' என்ற அரசியல் இயக்கத்தையும் ஆரம்பித்தார். சாத்தரின் அரசியல் இயக்கம், கருத்து முரண்பாடு காரணமாக சொற்ப ஆயுசுடன் மடிந்து விட்டது. அவரது அரசியல் ஈடுபாட்டிற்கு எழுத்தாற்றல் மட்டும் மிஞ்சி நின்றது. புதிய சோசலிசப் பாதையை வேண்டிநின்ற அவரது அரசியற் தத்துவார்த்த எழுத்துகள் மரபுவாதத்தில் மூழ்கிக் கிடந்த பிரஞ்சு கம்யூனிச இயக்கத்திற்குச் சினத்தை மூட்டியது.

மிகவும் பலம்வாய்ந்த அரசியற் கட்சியாக, பாட்டாளி வர்க்கத்தின் ஏக பிரதிநிதியாக, பரந்து வளர்ந்து நின்ற பிரஞ்சுக் கம்யூனிச இயக்கம் சாத்தரை ஒரு சித்தாந்த விரோதியாகக் கண்டது. மனிதத்துவத்திற்கு முதன்மை கொடுத்த சாத்தரின் சோசலிச தரிசனத்தை 'அபத்தவாதம்' என்றும் பிற்போக்குவாதம் என்றும் கிண்டல் செய்தது. சாத்தரும் பதிலுக்கு சொல் அம்புகளை ஏவினார். சோவியத்



கம்யூனிசத்தின் கைப்பொம்மைகள் எனப் பிரஞ்சு கம்யூனிஸ்டுகளைச் சாடினார். சுதந்திரமாகச் சிந்திக்க மறுக்கும் குருடர்கள் என கம்யூனிச புத்திஜீவிகளைக் கண்டித்தார். முரண்பாடு முற்றியது. பிரஞ்சு கம்யூனிச அறிவுஜீவிகள் மட்டுமன்றி, ரஷ்ய, கிழக்கு ஐரோப்பிய சித்தாந்தவாதிகளும் சாத்தருக்கு எதிராக அணி சேர்ந்தனர். தனி ஒருவனாக நின்று, முழுக் கம்யூனிச உலகத்துடன் கருத்துப் போர் நடத்தினார் சாத்தர். நாற்பதுகளின் நடுப்பகுதியில் தொடங்கிய இந்தக் கருத்துப் போர் தொடர்ச்சியாக ஐந்து ஆண்டுகள் வரை நீடித்தது. இந்தக் கால கட்டத்தில், அரசியற் தத்துவார்த்தக் கட்டுரைகள் மட்டுமன்றி, அரசியல் ஈடுபாட்டை வலியுறுத்தும் நாவல்களையும் படைத்து, நாடகங்களையும் மேடையேற்றினார்.

மரபுவாத கம்யூனிஸ்டுகளுடன் முரண்பட்டு நின்றபோதும், மாக்சிய சிந்தனையின் மையக் கருத்துகளை சாத்தர் ஏற்றுக் கொண்டார். கார்ள் மாக்சின் வரலாற்றுப் பொருளியம் அவரை ஆழமாகப் பற்றிக் கொண்டது.

மாக்சிய வரலாற்றியல் மானிடத்தின் உண்மைக் கதையைச் சொல்கிறது. மனித குலத்தின் சமூக வரலாற்றிற்கு உண்மை விளக்கத்தைக் கொடுக்கிறது. மனிதனை மையமாகக் கொண்டு மனித வரலாற்றைத் தரிசிக்க முனைகிறது. மனித உழைப்பிலிருந்து, அந்த உழைப்பால் எழும் உறவுகளிலிருந்து, அந்த உறவுகளின் பிணைப்பால் பிறக்கும் பொருளிய வாழ்விலிருந்து மனிதனின் கதையைச் சொல்கிறது. மனிதனின் இருண்ட வரலாற்றுக் குகைக்குள் வெளிச்சத்தைக் காட்டினார் மாக்ஸ். அந்த, வெளிச்சத்தில், கற்பித நிழல்கள் கலைந்து போக மனிதனின் உண்மையான வரலாற்று முகம் தெரிந்தது. இந்த வகையில் வரலாற்றுப் பொருளியம் ஒரு புதுமையான தத்துவம் என்றார் சாத்தர்.

மனிதன் பற்றிய ஒரு புரட்சிகரமான பார்வையில் சோசலிச சமூகம் நிர்மாணிக்கப்பட வேண்டும். மனிதத்துவத்தை மேம்பாடு செய்வதே சோசலிசத்தின்

உண்மையான இலட்சியமாக அமைய வேண்டும். இந்தக் கருத்தை மையமாகக் கொண்டு 1946இல் பொருளியமும் புரட்சியும் (Materialism and Revolution) என்ற நூலை வெளியிட்டார் சாத்தர். இந்தப் படைப்பில் மனிதாபிமான சோசலிசத்தை அவர் வலியுறுத்தினார்.

ஒரு புதிய மனிதனை, சுதந்திரமான மனிதனை, முழு மனிதனை உருவாக்கம் செய்வதே சோசலிசப் புரட்சியின் குறிக்கோளாக இருக்க வேண்டும். பாட்டாளி வர்க்க விடுதலை என்ற வரையறைக்குள் சோசலிச எல்லைக் கோடுகளை நிர்ணயிக்கக் கூடாது. வர்க்க முரண்பாடுகள் நீங்கிய சமூகத்தில், சகல மனிதர்களும் சமத்துவமாக வாழவேண்டும். சகல மனித உறவுகளும் ஒத்திசைவாக அமைய வேண்டும். அதிகார உறவுகள் அற்றுப் போக வேண்டும். ஒருவனது சுதந்திரத்தையும் தனித்துவத்தையும் மற்றவன் மதிக்க வேண்டும். தனிமனிதனது அகவாழ்வும் ஆற்றலும் ஆளுமையும் தளைத்தோங்க வழிசெய்ய வேண்டும். சோசலிசப் புரட்சியானது இந்தக் குறிக்கோள்களைக் கொண்டதாக அமையுமானால், ஒரு உன்னதமான சமத்துவ சமூகம் உருவாகும். அது மனிதத்துவத்தை மேம்பாடு செய்யும் என எழுதினார் சாத்தர்.

மனிதத்துவத்தின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்து, மனிதாபிமான தர்மத்தை வேண்டி, சாத்தர் வலியுறுத்திய சோசலிசத் தத்துவத்தைக் கம்யூனிச உலகம் நிராகரித்தது. முதலாளிய அறநெறியை (Bourgeois ethic) பிரதிபலிக்கும் இருப்பிய கற்பனாவாதக் கருத்துகளை 'விஞ்ஞான சோசலிச சிந்தனையில்' திணிக்க முயல்கிறார் எனப் பிரஞ்சு கம்யூனிஸ்ட் கட்சி சாத்தரைக் கண்டித்தது.

இருப்பிய தத்துவத்தின் அடிப்படைகளைப் புரியாது, அதனைப் பிற்போக்குவாதம் என்றும் அகவயமான கருத்தியக் கோட்பாடு என்றும் (Subjective Idealism) கம்யூனிஸ்டுகள் சித்தரிக்க முனைவது சிறுபிள்ளைத்தனமானது என்றார் சாத்தர். இந்த விமர்சனங்களுக்கு விளக்கம் அளிக்கும் வகையில்



இருப்பியமும் மனிதத்துவமும் (Existentialism and Humanism) என்ற தலைப்பில் அவர் நிகழ்த்திய சொற்பொழிவு, 1946இல் சிறு நூலாக வெளிவந்தது.

இந்தச் சிறிய நூலில் இருப்பிய தத்துவத்தின் அடிப்படைக் கோட்பாடுகளை விளக்க முனைகிறார் சாத்தர்.

இருத்தலிலிருந்துதான் ஒருவனது வாழ்வு தொடங்குகிறது. முதலில் மனிதன் இருப்புக் கொள்கிறான். அந்த இருப்பு நிலையிலிருந்து சுயவிழிப்புக் கொள்கிறான். உலகத்தை அறிகிறான். உலகத்தோடு உறவு கொள்கிறான். அந்த உலகானுபவத்திலிருந்து தன்னைத் தானே உருவாக்கிக் கொள்கிறான். மனிதமாக, மனித அகமாக, சுயமாக, ஆளுமையாக, 'நானாக' உருவாக்கம் பெறும் மனித இயல்பை மனிதனே படைக்கிறான். இருப்பே எல்லாவற்றிற்கும் முன்நிலையானது, அடிப்படையானது. இருப்பிலிருந்துதான் மனித இயல்பு தோன்றுகிறது. இதுதான் இருப்பியத்தின் அடிப்படைத் தத்துவம் என்கிறார் சாத்தர்.

மனிதர்களுக்குப் பொதுவான பண்பு என்று எதுவுமில்லை. தெய்வமோ, விதியோ, மனிதனுக்கு அப்பாலான மறுவுலக சக்திகளோ, மனிதனைப் படைக்கவில்லை. மனிதனே தனது சித்தத்தால், செயலால், தன்னைத் தானே படைத்துக் கொள்கிறான்.

தனிமனிதன் என்பவன் சமூகப் பெருவெள்ளத்தில் அள்ளுப்பட்டுச் செல்லும் நிலையற்ற நீர்க்குமிழி அல்ல. அன்றி அவன் ஒரு உணர்வற்ற, உயிரற்ற, அசைவற்ற சடப் பொருளுமல்ல. மனிதன் என்பவன் வாழ்வுலகின் பேருண்மை. இருப்பியக்கத்தின் மையம். அவன் சுயவுணர்வுடன் சீவிப்பவன். சிந்திப்பவன். சுயமாக முடிவுகளை எடுப்பவன். விருப்புக்கேற்ற தெரிவுகளைச் செய்பவன். எதிர்காலத்தை நெறிப்படுத்தி வாழ்பவன். பொறுப்புணர்வுள்ளவன். மற்றவர்களுக்கும் பொறுப்பானவன். தனக்குக் கிட்டிய வாய்ப்புகளைக் கொண்டு, தனது சித்தத்திற்கு ஏற்றவாறு தன்னை உருவாக்கிக் கொள்பவன். அவனது ஒட்டுமொத்தமான செயற்பாடுகளே அவனது தனித்துவத்தையும், சுயத்தையும், வாழ்நிலையையும்

நிர்ணயித்து விடுகிறது. ஒரு தனி மனிதனானவன் மானிடத்தின் பொதுப்படிமம். அந்தத் தனிமனிதன் தன்னை உருவாக்கம் செய்யும்போது மானிடமும் உருவாக்கம் பெறுகிறது.

மனிதன் அகநிலையில் வாழ்பவன். மனித உறவுகளுக்கு எல்லாம் அகநிலைதான் ஆதாரம். எனக்கும் மற்றவனுக்கும் ஏற்படும் உறவு அகவயமானது. அகநிலையில் தான், நான் மற்றவனை தெரிந்து கொள்கிறேன், புரிந்து கொள்கிறேன், உறவாடிக் கொள்கிறேன். அகநிலை உறவுகளே மனித உறவாக, சமூக உறவாக, கூட்டுறவாகப் பரிணமிக்கிறது. அகநிலையில் தான், தனிமனிதன் ஒருவன் சமூக உலகில் சங்கமித்துக் கொள்கிறான். "மனித உலகத்தைத் தவிர வேறு உலகம் எதுவுமில்லை. அந்த மனித உலகம் அகவயமானது" என்கிறார் சாத்தர்.

மனிதன் தனக்காக வாழாமல், தன் நலனுக்காக வாழாமல், தனக்கு அப்பால், தனது சுயத்திற்கு அப்பால், மற்றவர்களுக்காக, மற்றவர்களின் நலனுக்காக, மானிடத்தின் நல்வாழ்விற்காகத் தன்னை அர்ப்பணித்து வாழும் மாண்பினை மனிதத்துவம் என்கிறார் சாத்தர். தன்னை விஞ்சி வாழ்பவன், சுயத்தின் எல்லைகளைக் கடந்து மற்றவர்களுக்காக வாழ்பவன், மானிடத்தின் உயர்ச்சிக்காக வாழ்பவன், உண்மையான மனிதனாக வாழ்கிறான். மனிதத்துவம் அவனிடம் நிறைவு பெறுகிறது. இதுதான் இருப்பியம் வேண்டி நிற்கும் மனிதாபிமானம் என்கிறார் சாத்தர்.

ஐம்பதுகளில் படைப்பிலக்கியத்துடன் நின்று விடாமல், மூன்றாம் உலகத்து மக்களுக்காகவும் குரல் கொடுத்தார் சாத்தர். பிரஞ்சு காலனித்துவத்திற்கு எதிராக நிகழ்ந்த வியட்னாமிய, அல்ஜீரிய விடுதலைப் போராட்டங்களையும் ஆதரித்தார். அல்ஜீரிய விடுதலை இயக்கத்திற்கு மறைமுகமாக உதவிகளைச் செய்தார். பிரஞ்சுக் காலனிய கொடுமைகளை அம்பலப்படுத்தினார். அல்ஜீரிய மக்களுக்கு ஆதரவாக ஆர்ப்பாட்டங்களையும்



முன்நின்று நடத்தினார். இதனால் பிரஞ்சு ஆட்சியாளர் அவரைத் தேச விரோதியாகக் கண்டனர். கொலை முயற்சிகளும் நடந்தன. பாரிசிலுள்ள அவரது வாசத்தலம் குண்டுவெடிப்புகளுக்கு இலக்காகியது. உலக சமாதான இயக்கத்திற்கு தலைமை தாங்கி நின்றதால் அவரைக் கைது செய்து சிறையில் தள்ளிவிட பிரஞ்சு அரசு துணியவில்லை.

மேற்குலக காலனித்துவத்திற்கு எதிராகப் போர் தொடுத்து நிற்கும் உலகப் புரட்சி இயக்கங்களை சாத்தர் ஆதரித்தார். மேற்குலக வல்லரசுகளை மட்டுமன்றி, மேற்குலக மக்களையும் காலனித்துவ சுரண்டல்காரர்கள் என வர்ணித்தார். ஐரோப்பிய மனிதன் ஒவ்வொருவனதும் அந்தரங்க ஆன்மாவினுள் காலனித்துவ பிசாசு குடிகொண்டிருக்கிறது என அவர் எழுதியது ஐரோப்பியருக்கு அதிர்ச்சியைக் கொடுத்தது.

பிராங்ஸ் பனன் எழுதிய 'பூமியின் இழிநிலைப்பட்டோர்' (Wretched of the Earth) என்ற நூலுக்கு அவர் எழுதிய அறிமுகக் கட்டுரை மிகவும் பிரபல்யமானது. அதில் காலனித்துவ முக மூடியை கிழித்துக் காட்டினார்.

பூமியின் முகத்தைக் காலனித்துவம் சிதைத்து விட்டிருக்கிறது. தேசங்களைப் பிரித்து, சமூகங்களை உடைத்து, பண்பாடுகளைச் சீர்குலைத்து விட்டிருக்கிறது. ஒன்றுபட்டு வாழ்ந்த சுதேசிய மக்களை வர்க்கங்களாக பிளவுபடுத்தி, நீங்காத முரண்களைத் தோற்று வித்திருக்கிறது. மேற்குலக மனிதர்கள் எல்லோருமே காலனித்துவ சுரண்டலால் இலாபமடைந்திருக்கிறார்கள். இந்த வகையில், மேற்குலக மனிதர்கள் எல்லோருமே காலனித்துவவாதிகள். காலனித்துவம் புரிந்துவரும் பொல்லாத பாவங்களுக்கு எல்லோருமே பொறுப்பாளிகள். ஒடுக்கப்படும் மனிதர்களின் ஆத்திரமும், ஆவேசமும், ஆழமான வெறுப்புணர்வும் வன்முறைப் புயலாகக் கிளம்பும். ஐரோப்பியனுக்கு எதிராக வன்முறையைக் கையாண்டே அடக்கப்படுபவன் தனது மனிதத்துவத்தை நிலைநாட்டிக் கொள்வான். இது தவிர்க்க முடியாத வரலாற்று நிர்ப்பந்தம்.

"முன்பு, கடந்த காலத்தில், நாம் வரலாறு படைத்தோம். இனி எமக்காக வரலாறு படைக்கப்படும்." என்று எழுதினார் சாத்தர்.

1964ஆம் ஆண்டு, இலக்கியத்திற்கான நோபல் பரிசு சாத்தருக்கு கிட்டியது. அந்தப் பரிசை ஏற்றுக் கொள்ள அவர் மறுத்தார். மேற்குலகின் நலனைப் பேணும் ஒரு முதலாளிய நிறுவனத்திடமிருந்து 'கலாச்சாரப் பிரமுகர்' என்ற பட்டத்தை சூட்டிக் கொள்ள தாம் விரும்பவில்லை என அவர் பகிரங்கமாக அறிவித்தார். "அல்ஜீரிய நாடு விடுதலை பெறுவதற்கு முன்னராக அல்ஜீரியப் போராட்டத்தில் நான் தீவிரமாக ஈடுபட்ட காலத்தில் இந்தப் பரிசு எனக்கு வழங்கப்பட்டிருந்தால் நான் அதை ஏற்றுக் கொண்டிருப்பேன். அது எனக்குக் கிடைத்த தனிப்பட்ட மதிப்பாக அல்லாமல், அல்ஜீரிய சுதந்திரப் போராளிகளுக்கு கிடைத்த கௌரவமாக அதனைக் கருதியிருப்பேன்." என்று குறிப்பிட்டார் சாத்தர்.

## III

உண்மையைத் தேடும் தத்துவார்த்த விசாரணைகள் அனைத்தும் மனிதனிடமிருந்தே தொடங்க வேண்டும் என்பது சாத்தரின் நிலைப்பாடு. ஏனெனில் மனிதனே வாழ்வியக்கத்தின் மையமாக நிற்கிறான். அவனே இருப்பின் மெய்ப்பொருளாகவும் இருக்கிறான். அவனிடமிருந்தே வாழ்வின் அர்த்தங்கள் அவிழ்கின்றன. அவனே அறிவியக்கத்திற்கும் ஆதாரமாக நிற்கிறான். அவனே தன்னையும் படைத்து, வரலாற்றையும் படைக்கிறான். அவனே தன்னையும் தேடி, சத்தியத்தையும் தேடுகிறான். இந்த அபூர்வமான மனிதனை, அவனது முழுமையில் தரிசித்துக் கொள்வது சாத்தியமா? அகநிலையிலும் புறநிலையிலும் உருவாக்கம் பெறும் மனிதனை, முழு மனிதனாகக் கண்டு கொள்வது எப்படி?

சாத்தரை உறுத்தி வந்த கேள்வி இது. பிரஞ்சு இருப்பியத்தின் பிரதம குருவாகவும், நவ மாக்சியத்தின் தத்துவ வித்தகராகவும், ஒரே சமயத்தில் இரு வேறுபட்ட கருத்து நிலைகளில் காலூன்றி நின்றபடி, மனிதனை அவனது ஆழத்தில் தரிசிக்க விழைந்தார் சாத்தர்.

இருப்பியம் மனிதனை ஒரு பரிணாமத்தில் விசாரணை செய்கிறது. இந்தத் தத்துவம் மனிதனைத் தனி-மனிதனாகக் காண்கிறது. தனிமனிதனின் வாழ்நிலைக்கு முக்கியத்துவம் கொடுக்கிறது. தனிமனிதனின் அகவய வாழ்வை, அவனது உலகத்தை ஆழமாகப் பார்க்கிறது. எனவே, இருப்பியம் காணும் மனிதன் அகமனிதன். இந்த அகமனிதன் முக்கியமானவன். ஆனால் அவன் முழு மனிதனில்லை.

மனித வாழ்வின் சமூகப் பரிமாணத்தை இருப்பியம் செம்மையாகப் பார்க்கவில்லை. சமூக உலகத்தில், அதன் அசைவியக்கத்தில் மனிதனை நிலைநிறுத்திப் பார்க்கவில்லை. இதனால் சமூகத்தைப் படைக்கும் வரலாற்று மனிதனை இருப்பியம் கண்டு கொள்ளவில்லை. இதுதான் இருப்பிய தத்துவத்தின் பிரதான குறைபாடு இந்தக் குறைபாட்டை மாக்சியம் நிவர்த்தி செய்து விடுகிறது. இந்த வகையில், மாக்சியம் ஒரு புதுமையான சமூக - வரலாற்றியல் நோக்கு என்பது சாத்தரின் கருத்து.

மாக்சியம் சமூக உலகத்தின் நிதர்சனத்தை வலியுறுத்துகிறது. சமூக வாழ்விற்கும், சமூக உறவுகளுக்கும் முக்கியத்துவம் கொடுக்கிறது. மனிதனைத் தனி மனிதனாகக் காணாமல், சமூக உறவுகளைச் சுமந்து நிற்கும் சமூகப் பிறவியாகக் காண்கிறது. எனவே, மாக்சியம் காணும் மனிதன் சமூக மனிதன். மனிதனை சமூக மனிதனாகக் கண்டு, அவனை சமூக உற்பத்தி உறவுகளில் நிலைநிறுத்தி, அந்த உறவுகளை வர்க்க உறவுகளாகப் பார்த்து, அந்த வர்க்க உறவுகளால் எழும் முரணியப் போராட்டத்தை வரலாற்றின் அசைவியக்கமாக விளக்கி, மனிதனை வரலாற்றுப் படைப்பாளியாகச் சித்தரிக்கிறது மாக்சியம். எனினும், மாக்சியம் புலப்படுத்திக் காட்டும் சமூக மனிதனும் முழு மனிதன் அல்ல என்பது சாத்தரின் வாதம்.

மாக்சிய மனிதனுக்கு சமூக முகம் இருக்கிறது;

வரலாற்று முகம் இருக்கிறது; ஆனால் மனித முகம் இருக்கவில்லை என்பது சாத்தரின் கருத்து. சாத்தரின் பார்வையில் இந்த மனித முகம் என்பது மனிதத்தைக் குறிக்கிறது. மனிதா சாரத்தைக் குறிக்கிறது. இந்த மனிதா சாரம் என்பது மானிடத்தின் பொதுவுடமையல்ல. அது மனிதர்களின் தனியுடமை. ஒவ்வொரு தனி மனிதனும் தனது வாழ்வனுபவத்திலிருந்து சுயமாகத் தேடிக் கொள்ளும் தனியியல்பு. அகவயமான அனுபவத்திலிருந்து பெறப்படும் இந்தத் தனிமனிதத்துவத்தை மாக்சியம் மறுதலிக்கிறது என்பது சாத்தரின் நிலைப்பாடு. மனிதனானவன் தனது தேர்வுகள், தீர்மானங்கள், செயற்பாடுகளிலிருந்து, ஒட்டுமொத்தத்தில் தனது உலகானுபவத்திலிருந்து உருவாக்கிக் கொள்ளும் தனிமனிதத்துவத்தை நிராகரிப்பதால், மாக்சியம் முழு மனிதனைத் தரிசித்து நிற்கவில்லை என்பது அவரது வாதம்.

பொருளுற்பத்தியை ஆதாரமாகக் கொண்ட பொருளிய வாழ்விற்கு மாக்சியம் முதன்மை கொடுக்கிறது. பொருளியல் புறநிலைகளின் நிர்ணயத் தன்மையை வலியுறுத்துகிறது. பொருளிய வாழ்வும் வரலாற்றுச் சூழலும் சமூகத்தின் கருத்துலகை நிச்சயித்து விடுவதாகக் கூறுகிறது. மனித மனமானது வாழ்க்கையை நிர்ணயிப்பதல்ல; பொருளிய வாழ்வே மனித மனதை நிர்ணயித்து விடுகிறது என்ற கருத்தை முன் வைக்கிறது. இந்தப் பார்வையின் அடிப்படையில், அகநிலையை நிர்ணயிப்பது புறநிலைகள்; மனவுலகத்தை நிர்ணயிப்பது பொருளுலகம்; தனிமனிதத்தை நிர்ணயிப்பது சமூகம்; இவ்விதம் காலம், இடம், சமூக சூழல் என்ற ரீதியில் புறவுலக நிர்ணய சக்திகளின் ஆதிக்க அழுத்தத்திற்கு உட்பட்டதாக மனித மனம் வரையறுக்கப்படுகிறது.

மாக்சியத்தின் இந்தப் பார்வையை 'பொருளிய நிர்ணயத் தத்துவம்' என விமர்சிக்கிறார் சாத்தர். இது முற்று முழுதாக மனித மனதையும், மனிதனின் அகவாழ்வையும் புறநிலை நிர்ப்பந்தங்களுக்குள் சிறைபடுத்தி விடுகிறது; மனித பிரக்ஞையின்



சுயாதீனத்தையும் சிருஷ்டித்தன்மையையும் இது மறுதலிக்கிறது என்பது சாத்தரின் குற்றச்சாட்டு.

காலம், இடம், சூழல் என்ற ரீதியில் புறநிலைகள் மனிதனின் அகநிலையில் பாதிப்புகளை விழுத்துகின்றன என்பதை சாத்தர் மறுக்கவில்லை. சமூகப் பொருளிய வாழ்வும், சமூக உறவுகளும் மனிதனின் சிந்தனையுலகை நிச்சயித்து, நெறிப்படுத்தி விடுகிறது என்பதையும் அவர் மறுக்கவில்லை. ஆயினும், மனவுலக வாழ்வை, தனிமனித இயல்பை முற்றுமுழுதாகப் புறவுலக நிர்ப்பந்தங்களுக்கு ஆட்படுத்த முனைவது தவறு என்கிறார் சாத்தர். மனித மனமானது புறவுலக நிர்ப்பந்தங்களுக்கு அப்பால், நிர்ணய அழுத்தங்களுக்கு அப்பால், விஞ்சி எழும் விழிப்புத் தன்மை கொண்டது; சிருஷ்டித்தன்மை கொண்டது; சுயாதீனமுடையது என்பது சாத்தரின் வாதம்.

மனித மன இயக்கத்தை முற்றுமுழுதாகப் பொருளுலக நிர்ப்பந்தங்களுக்குள் முடக்கி விட முடியாது. மனவுலகத்தை பொருளுலகம் முற்றுமுழுதாக நிர்ணயிப்பதாயின் இந்த உலகத்தில் புரட்சிகரமான மாற்றம் எதுவும் நிகழ்வது சாத்தியமில்லை என்கிறார் சாத்தர். ஆனால் உலகம் சதா மாறிக்கொண்டே இருக்கிறது. ஒரு வளர்ச்சிப் பாதையில் முன்னேறிக் கொண்டிருக்கிறது. இந்த மாற்றமும் முன்னேற்றமும் நிகழ்வது எப்படி? சிந்தனை வளர்ச்சியும், சிருஷ்டி ஆற்றலும் இல்லாமல் மனித நாகரீகங்கள் தோன்றுவது எப்படி? மனித சிந்தனைக்கு சிறகுகள் இருக்கின்றன. அதனைப் பொருளுலகச் சிறைக்குள் பூட்டி வைக்க முடியாது. பொருளுலக நிர்ப்பந்த விலங்குகளை உடைத்துக் கொண்டு வெளியில் வரும் ஆற்றல் மனித பிரக்ஞைக்கு இருக்கிறது என்கிறார் சாத்தர்.

மனித மனமானது ஆழமான விழிப்புணர்வைப் பெறும் அபாரமான தன்மையைக் கொண்டது. விழிப்புணர்வு கொள்ளும் மனதில் வெளிச்சம் பிறக்கிறது. அந்த வெளிச்சத்தால் புறவுலக நிர்ப்பந்தங்கள் பிரக்ஞைக்குப் புலனாகிறது. இந்தப் புரிந்துணர்வால் நிர்ணயத்தின் பிடியிலிருந்து மனமானது விடுதலை பெற்றுக் கொள்கிறது.

இவ்விதம் விடுதலை பெறும் மனம்தான் புரட்சிகர மனம். இந்தப் புரட்சிகரப் பிரக்ஞைதான் புரட்சிகரமாகச் சிந்திக்கும்; செயற்படும்; புரட்சியையும் செய்யும்.

அகவாழ்வும் புறவாழ்வும் புணர்ந்து பிரவேசிப்பதுதான் முழு மனிதத்துவம். இருப்பியம் மனிதனின் அகவாழ்வையும், மாக்சியம் மனிதனின் புறவாழ்வையும் ஆழமாகத் தரிசித்து நிற்கும் தத்துவங்கள். எனவே, இருப்பியமும் மாக்சியமும் இணைந்து கொண்டால் முழு மனிதனைக் கண்டு கொள்வது சாத்தியமென சாத்தர் எண்ணினார். 1960இல் அவர் எழுதிய Critique of Dialectical Reason என்ற தத்துவார்த்த நூல் மாக்சியத்தையும் இருப்பியத்தையும் இணைக்க முனைகிறது.

'மாக்சின் வரலாற்றுப் பொருளியமானது மனித சமூகங்களின் வரலாற்றிற்கு விளக்கத்தைக் கொடுக்கிறது. அதே சமயம் இருப்பியம் தனிமனித வாழ்வின் நிதர்சனத்தை வலியுறுத்துகிறது. இந்த இரு பார்வைகளையும் கோட்பாட்டு ரீதியாக ஒன்றிணைப்பதன் மூலம் சமூக வரலாற்று இயக்கத்தில் தனிமனிதனின் இருப்பை நிறுவி விடுவதே இந்த ஆய்வு நூலின் நோக்கம்' என்கிறார் சாத்தர்.

சாத்தரின் தத்துவ விசாரணை தனிமனிதனிலிருந்து, தனிமனிதனின் செயற்பாட்டிலிருந்து தொடங்குகிறது.

தனிமனிதன் தனிமையில் வாழவில்லை. அவன் சமூக உலகத்தில் வாழ்கிறான். சமூக உலகமானது தனிமனிதனுக்குப் புறம்பான, தனித்துவமான மெய்யுண்மையாக இயங்கவில்லை. தனிமனிதர்கள் என்ற அத்திவாரக் கற்களிலிருந்தே சமூக உலகம் கட்டப்பட்டிருக்கிறது. தனி மனிதர்களைக் கொண்டதாகவே சமூகம் அமையப் பெற்றிருக்கிறது. தனி மனிதர்கள் இல்லாமல் சமூகம் என்பது இருக்க முடியாது என்கிறார் சாத்தர்.

சமூக உலகத்தை ஒரு தன்னியக்க சக்தியாக, தனித்துவ விதிகளைக் கொண்டதாக, தனி மனிதர்களுக்கும் புறம்பானதாக, தனி மனிதர்களை வனைந்து விடும் ஒரு பூதாகர இயந்திரமாகச் சித்தரித்துக் காட்டுவது தவறு. தனி



மனிதர்கள்தான் சமூகத்தின் மூலப் பொருள். அந்த மையப் புள்ளியிலிருந்தே சமூக உலகத்தை விசாரணை செய்ய வேண்டும் என்பது சாத்தரின் வாதம். தனிமனிதனிலிருந்து சமூக உலகத்தைக் கண்டு கொள்வது எப்படி? இந்தக் கேள்விக்குப் பதிலளிக்கும் வகையில், மனித செயற்பாடு (Human Praxis) என்ற கருத்துருவத்தை அறிமுகப்படுத்துகிறார் சாத்தர்.

மனித செயற்பாடுதான் தனிமனிதனையும் சமூக உலகத்தையும் பிணைக்கிறது. வாழ்க்கையின் தேவைகளை நிறைவு செய்து கொள்ள மனிதர்கள் செயற்பாட்டில் ஈடுபடுகிறார்கள். ஒவ்வொருவனும் ஏதோ முயற்சியில் ஈடுபடுகிறான்; செயற்படுகிறான்; உழைக்கிறான். இந்தச் செயற்பாடு ஆக்கமானது. படைப்பாற்றல் கொண்டது. எதிர்காலத்து நிறைவையும், முழுமையையும் தேடுவது. ஒவ்வொருவனது செயற்பாடும் மற்றவனுடன் தொடர்புடையதாக இருக்கிறது. தனி மனிதர்களது ஒட்டுமொத்தமான செயற்பாடுகளின் முழு வடிவமாகவே சமூக உலகம் உருவாக்கம் பெறுகிறது என்கிறார் சாத்தர். தனிமனிதச் செயற்பாட்டில் நோக்கமும் ஆக்கமும் அர்த்தமும் இருக்கிறது.

இந்த நூலில், சாத்தர் நடத்தியுள்ள சமூக விசாரணை, முதலாளிய சமூக உலகத்தின் முரண்பாட்டு முடிச்சுகளை கட்டவிழ்த்துக் காட்டவில்லை. திண்ணியமான சமூக மெய்யுண்மைகளை ஆழமாகப் பார்க்கவில்லை. அவரது ஆய்வு, சமூக அறிவியல் தளத்தில் நிலைகொள்ளாது, மனித வாழ்நிலை அவலங்களை மட்டும் சித்தரிக்கும் இருப்பிய விசாரணைகளாகவே அமைகிறது. பற்றாமையின் (Scarcity) கோரத் தாண்டவமும், அதனால் எழுந்துள்ள அநீதியும், அராஜகமும், பண்ட உலகத்தின் அழுத்தமும், அதன் அழிவுப் போக்குமாக சாத்தர் வரைந்து காட்டும் மனித உலகம் கொடுமையும் துன்பமும் நிறைந்தது. இந்த உலகத்தில், மனித முனைப்புகளுக்கு அப்பால், பொருளிய எதிர்மறை சக்திகளின் ஆதிக்கமே மேலோங்கி நிற்கிறது. இந்த இருண்ட உலகத்திலிருந்து மானிடத்திற்கு

விடிவு இருப்பதாகத் தெரியவில்லை. மனித விமோசனத்திற்கான நம்பிக்கைகளையும் சாத்தரின் எழுத்து தகர்த்து விடுகிறது.

சமூக உலகத்தில், தனி மனிதன் இருப்பு நிலைக்கு இடம் தேடும் இந்தப் பரிசோதனை முயற்சி தோல்வியில் முடிகிறது. இதுபற்றி இனிப் பார்ப்போம்.

சாத்தரின் நூல், பற்றாமை என்ற இருப்புநிலையை வரலாற்று இயக்கத்தின் புறநிலைத் தளமாகக் கொண்டு சமூக உலகத்தை ஆய்வு செய்ய முனைகிறது. எல்லா ஆய்வுகளும் வேரிலிருந்து தொடங்க வேண்டும் என்பது சாத்தரின் நிலைப்பாடு. சமூகம் என்ற விருட்சத்தைத் தாங்கி நிற்கும் வேர்களாக தனி மனிதர்களை அவர் கருதினார் போலும். ஆகவேதான் சாத்தரின் சமூக விசாரணை தனி மனிதர்களிலிருந்து தொடங்கி சமூக உலகத்தினுள் பிரவேசிக்கிறது. 'மனித செயற்பாடு' என்ற சாத்தரின் கோட்பாடு, தனிமனிதனையும் சமூகத்தையும் இணைக்கிறது. தனிமனித செயற்பாடு மற்றவர்களது செயற்பாடுகளுடன் சங்கமிக்கும் பொழுது, அது கூட்டு மனித உறவாக, சமூக உறவாக பரிணமிக்கிறது. இந்தக் கூட்டுறவிலிருந்து சமூகக் குழுக்கள் தோன்றுகின்றன. இந்தச் சமூகக் குழுக்கள் பல்வேறு வடிவங்களில், சிறிதும் பெரிதுமாக பல்வேறு அமைப்புகளாக இயங்குகின்றன. இவ்விதம் தனி மனிதர்களது செயற்பாடுகள் அனைத்தும் ஒன்றோடு ஒன்று தொடர்புடையதாகப் பின்னப்பட்டு ஒட்டுமொத்த முழுமை பெறும் பொழுது, அது சமூகம் என்ற வடிவத்தைப் பெறுகிறது. இந்த வகையில், தனிமனிதர்களைக் கொண்ட கூட்டமாகவே சமூகத்தைக் காண்கிறார் சாத்தர்.

சமூகம் பற்றிய சாத்தரின் வரையறையில் சமூகத்திற்கு மேலாக தனிமனிதனுக்கு முதன்மை கொடுக்கப்படுகிறது. தனிமனிதனை சமூகத்தின் அச்சாணி யாக நிறுவிவிட வேண்டும் என்ற முனைப்பில் சமூக உலகத்தின் தனித்துவமான மெய் நிலையை சாத்தர் மறுதலித்து விடுகிறார். அத்துடன் தனிமனித செயற்பாடுகளின் கூட்டுவடிவமாகவோ, அல்லது



தனிமனிதர்கள் கூடிவாழும் கூட்டுக் குடும்பமாகவோ, அன்றி தனிமனிதர்கள் அணிசேர்ந்து கொள்ளும் மக்கள் திரளாகவோ சமூகத்தை சித்தரித்துக் காட்ட முனைவதும் தவறானதாகும். சமூகமானது தனிமனிதர்களின் சேர்க்கையால் உருவாக்கம் பெறுவதல்ல. தனிமனிதர்களை உள்ளடக்கியதாக சமூகம் அமையப் பெற்ற பொழுதும், அது தனிமனிதர்களுக்குப் புறம்பான, தனித்துவமான மெய்நிலையைக் கொண்டது. சிக்கலான சமூக உறவுகளால் பின்னப்பட்ட கட்டமைவாக, வரையறுக்கக் கூடிய சில பண்புகளைக் கொண்ட ஒழுங்கமைவாக, சமூக உலகம் அமையப் பெற்றிருக்கிறது. இந்தச் சமூக மெய்யுலகைத் தனி மனிதனிலிருந்து, தனிமனிதச் செயற்பாடுகளிலிருந்து தரிசித்துக் கொள்ள முடியாது.

சாத்தரின் சமூக தத்துவம், மாக்சிய வரலாற்றுப் பொருளியத்தின் அறிவியற் தளத்திலிருந்து எழுதப்படவில்லை. அவரது சமூகப் பார்வை மாக்சிய சமூகவியலின் அடிப்படைகளுக்கு முரணானதாகவே அமைகிறது. மாக்ஸ், சமூக உலகத்தை தனிமனிதர்களின் ஒன்றியமாகக் காணவில்லை. மனிதர்களின் பொருளிய வாழ்விலிருந்தும், உறவுகளிலிருந்தும் சமூக உலகத்தைக் கட்டியெழுப்புகிறார் மாக்ஸ். மனிதர்களின் பொருளிய வாழ்விற்கு பொருளுற்பத்தியே ஆதாரமானது. பொருளுற்பத்தியின் மையமாக பொருண்மிய அமைப்பு அமைகிறது. எனவே, பொருண்மிய அமைப்பையே சமூகத்தின் திண்ணியமான அடித்தளமாகக் கொள்கிறார் மாக்ஸ். அவரது ஆய்வில், சமூகமானது, பொருண்மிய அடித்தளத்தையும், அந்த அடித்தளத்தின் மீது நிலைகொண்டு நிற்கும் பல்வேறு சமூக அலகுகளையும் கொண்ட கட்டமைப்பாக உருவாக்கம் கொள்கிறது. இந்தக் கட்டமைப்பை முழுமையுடையதாக, இயங்கு நிலையுடையதாக அவர் காண்கிறார். பொருளுற்பத்தித் தளத்தில் எழும் முரணியங்கள் சமூக அசைவியக்கத்தின் உந்து சக்தியாக இயங்கி, சமூக மாற்றத்தை நிகழ்த்தி, மனித வரலாற்றை நகர்த்துகிறது. மாக்சிய தரிசனமானது,

மனித பொருளிய வாழ்வின் மையத்திலிருந்து மனித வரலாற்றிற்கு விளக்கமளிக்கும் சமூகப் பார்வையைக் கொண்டது. மாக்சிய சமூகவியல் மனிதர்களைத் தனிமனிதர்களாகக் கொள்ளாமல், சமூக உறவுகளைத் தாங்கி நிற்கும் சமூகப் பிறவிகளாகவே காண்கிறது.

மாக்சிய சமூகவியல் தளத்தில் நின்று காலம், இடம், சூழல் என்ற புறநிலைகள், எவ்விதம் தனிமனித சுயத்தின் உருவாக்கத்திற்கு ஏதுவாக அமைகின்றன என்பது பற்றி சாத்தர் விசாரணை செய்யவில்லை. மாறாக, சமூகப் புறநிலை நிர்ப்பந்தங்களுக்கு அகப்படாத, சுயாதீனமுடைய தனிமனிதனைச் சமூக உலகில் நிலைநிறுத்திக் காட்டுவதே சாத்தரின் நோக்கம். இந்த நோக்கில் அவர் வெற்றி பெறவி ல்லை. ஒட்டுமொத்தத்தில், சாத்தர் சித்தரிக்கும் மனிதன் சமூக மனிதன் அல்ல. சமூகக் குழுவில் ஒருவனாக, சமூகத் திரளில் ஒருவனாக, தனி மனிதனை, சமூக உலகத்தில் அவர் சஞ்சரிக்கவிட்ட போதும், சமூகப் பொருளிய வாழ்வில் காலூன்றி நிற்காதவனாக, சமூக உறவுகளில் சிக்குப்படாதவனாக, சமூகத்திற்கு அந்நியனாக, தனியனாகவே அவர் மனிதனைச் சித்தரிக்கிறார். ஆகவே, மாக்சியமும் இருப்பியமும் இணைந்து, அகநிலையும் புறநிலையும் புணர்ந்து, உருவாக்கம் பெறும் சாத்தரின் இலட்சிய மனிதனை, முழு மனிதனை, வரலாற்று மனிதனை இந்தத் தத்துவார்த்த நூலில் நாம் காணமுடியாது.



தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தின் ஆரம்பகால வளர்ச்சிக்கும் எழுச்சிக்கும், முன்னாள் தமிழக முதலமைச்சர் திரு. எம்.ஜி. இராமச்சந்திரன் அவர்கள் ஆற்றிய பங்களிப்பு மகத்தானது. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. எந்த வழிவகைகளில், எப்படியான சிக்கலான சூழ்நிலைகளில், எத்தகைய எதிர்விளைவுகளையும் பொருட்படுத்தாது, எம்.ஜி.ஆர். அவர்கள் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு கைகொடுத்து உதவினார் என்ற வியப்பூட்டும் வரலாற்று நிகழ்வுகளை இத்தொகுதியிலுள்ள கட்டுரை ஒன்றில் தமது சொந்த அனுபவம் வாயிலாக சுவைபடச் சொல்கிறார் திரு.அன்ரன் பாலசிங்கம்.

1987 ஜூலையில், புதுடில்லியில் நிகழ்ந்த சந்திப்பின் போது, முன்னாள் இந்தியப் பிரதமர் திரு. ரஜீவ் காந்தி அவர்களுக்கும், விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் திரு. வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களுக்கும் மத்தியில் ஒரு இரகசிய ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டது. இதுவரையும் வெளிவராத தகவல்களைக் கொண்ட இந்த இரகசிய உடன்பாடு பற்றிய விபரங்களை இன்னொரு கட்டுரையில் விபரிக்கிறார் திரு. பாலசிங்கம்.

திரு. அன்ரன் பாலசிங்கத்தின் இக்கட்டுரைத் தொகுதியில், மனித வாழ்வு பற்றியும், மனித வரலாறு பற்றியும், மனித விடுதலை பற்றியும் புதுமையான, புரட்சிகரமான சிந்தனைகள் அறிமுகம் செய்யப்படுகிறது. ஒட்டுமொத்தத்தில் முழு மனித விடுதலை பற்றிய ஒரு ஆழமான தரிசனத்தை இந்த எழுத்துக்களில் நாம் சந்திக்க முடிகிறது. இது அனைவரும் வாசித்துப் பயன்பெறக்கூடிய ஒரு சிறந்த படைப்பு.

பதிப்பாளர்

ISBN 1-903679-04-4
9 781903 679043 >

£9.50 UK
15 €
20 S.Fr
16 USD

FAIRMAX PUBLISHING LTD